# தமிழரசு

திங்கள் இருமுறை

அக் 1 1971 35 காசு



# அரசு சிமெண்ட்

## வலிவும் வனப்பும் வாய்ந்தது




நீண்டகாலம் மங்காத அழகுடன் விளங்க வேண்டுமென்றே தயாரிக்கப்படுகிறது, புதிய **அரசு** போர்ட்லண்ட் சிமெண்ட், வெகு அருமையான மூலப் பொருள்களும் அதி நவீன தொழில் நுட்பமும் ஈடுபடுத்தி உற்பத்தி செய்யப்படுவதால், **அரசு** சிமெண்ட் மிக மிகச் சன்னமாக விளங்குகிறது. கட்டிடம் கட்டுபவர்களில் பெரும்பாலோர் **அரசு** போர்ட்லண்ட் சிமெண்ட்தான் வேண்டும் என்று கேட்டு வாங்குகிறார்கள். நீங்களும் ஏன் கூடாது?

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)

TIDCO

(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)

150-A, மவுண்ட் ரோடு, எல்.எல்.ஏ. கட்டிடம்,

3வது மாடி, தபால் பை நெ. 5205, சென்னை-2.

தொழிற்சாலை: தமிழ்நாடு சிமெண்ட்ஸ்,

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

AC-11

# தமிழரசு

மலர் 2 ] 1-10-1971 [ இதழ் 7

## இந்த இதழில்

அண்ணலைப் பற்றி அண்ணா
இனிமைத் தமிழில் இறைவழிபாடு
பாலை சோலையாகிறது
எதிர்ச் சுவரில்
பரிசு பெற்ற சிற்றூர்
பயணத்தில் வந்த நண்பர்
ஐ.ஆர். 22
தமிழ் நாட்டில் இளைஞர் படை
சிற்றூர் செழிக்க ....
கண் நோய்
தமிழ்த் தட்டச்சைக் கண்டுபிடித்தவர்
தமிழகத்தே காந்தி அண்ணல் (கவிதை)
ஏன் இந்தக் காதல்? (தொடர் கதை)
வெண்பாப் போட்டி

முதல்வரின்

திங்களுக்கு ஒரு தொழிற்சாலை

அரசுத்துறை ஒப்பந்தப் புள்ளி, வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

57-ஆம் பக்கத்திலிருந்து ....






# திங்களுக்கு ஒரு தொழிற்சாலை

மிக விரைவாகத் தொழில் வளர்ச்சி அடைந்து வரும் மணலிப் பகுதியில் கமானி நிறுவனத்தின் கார்பன் பிளாக் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டிடச் சென்ற திங்கள்தான் நான் வந்திருந்தேன்.

இந்தத் திங்கள் ஐந்தரைக் கோடி ரூபாய் மூலதனத்தில் உருவாகியுள்ள நாக்பால் அம்பாடி பெட்ரோ கெமிகல் தொழிற்சாலையைத் திறந்து வைக்க வந்துள்ளேன்.

அடிக்கல் நாட்டு விழாவாக இந்த விழா இல்லாமல் ஆலையைத் திறந்து வைக்கும் விழாவாக இது இருப்பதில் எனக்குத் தனி மகிழ்ச்சி ஏற்படுகிறது. இங்குக் குழுமியுள்ள ஆற்றலும் செயல் திறனும் மிக்க தொழில் அதிபர்களின் மனமுவந்த ஒத்துழைப்புடன்—ஒவ்வொரு மாதத்துக்கும் புதிய பெருந் தொழில் ஒன்றைத் தொடங்குவது என்ற குறிக்கோளை முன் வைத்துச் செயல் பட முடியும் என்று நம்புகிறேன்.

இந்த மாநிலத்தில் உள்ள நாம், மக்கள் வாழ்வில் செழிப்பு மிகுந்தோங்கத் தொழில் வளர்ச்சியையே நம்பியிருக்கிறோம்.

நமது மாநிலத்தில் தங்கமோ—பூமிக்கடியில் எண்ணெய்யோ, பிற உயர் ரகக் கனிப் பொருள்களோ கிடைப்பதில்லை. ஆனால் இங்கே திறமையும்—பிறர்கண்டு பொறாமைப்படத்தக்க அளவுக்கு வாய்ப்புகளும் ஏராளமாக உள்ளன. மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு எளிதான வகையில் நம்மிடம் நல்ல துறைமுகங்கள் உள்ளன. இவற்றின் மூலம் நாம் ஏற்றுமதியினையும், பெருக்க முடியும். விரைவில் தூத்துக்குடித்துறைமுக வேலைகள் முற்றுப் பெறும்.

அதன் வாயிலாகத் தென்பகுதி மாவட்டங்கள் உலக ஏற்றுமதிக்கு உதவிட இயலும். தமிழ் நாட்டில் சாலை வசதியும், போக்குவரத்து வசதிகளும் சிறப்புடன் விளங்குகின்றன. இவை எல்லாவற்றையும் விட இந்த மாநிலத்தில் தொழில் நுணுக்க அறிவு படைத்தோரின் உதவி ஏராளமாகக் கிடைக்கும், சிறப்பான ஆற்றலுடன் இவையனைத்தையும் ஒரு சேரத் திரட்டி இயல்பான தொழில் நிபுணத் தன்மையுடன் சேர்ந்து பணியாற்றினால்—தமிழ் நாட்டைச் செழிப்புள்ளதாக்க நமக்குத் தங்கமோ—பூமிக்கடியில் உள்ள எண்ணெய்யோ தேவைப்படாது.

மணலி, தொழில் வட்டாரத்தில் ''பெட்ரோலை அடிப்படையாகக் கொண்ட ரசாயனத் தொழில்கள் விரைவாக வளர்ந்து வருகின்றன. பெட்ரோல்—ரசாயனத் தொழில் ஆலைக் கூட்டம் (Petro chemical complex) ஒன்றை இந்தப் பகுதியில் தொடங்கிட வேண்டும் என்ற தமிழக அரசு மத்திய அரசை நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறது.

இந்த நியாயமான வேண்டுகோளை மத்திய அரசு ஏற்று பெட்ரோல் ரசாயனத் தொழில் கூடம் ஒன்றை இங்கே அமைத்திடுவதற்கு நமக்கு அனுமதி வழங்கும் என்று நான் நம்புகிறேன். நாப்தா கிராக்கர் தொழிற்சாலை ஒன்றை இங்கே அமைக்க வேண்டும். இதற்கான மூலப் பொருள் இறக்குமதி செய்வதாக இருப்பினும் கூடக் கவலையில்லை என்று நாம் வலியுறுத்தி வருகிறோம்.

ஏனெனில், இறக்குமதியாகும் மூலப் பொருளைக் கொண்டு உற்பத்தியாகும் பொருள்களை நாம் ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். இறக்குமதிக்குச் செலவழிக்கும் அந்நியச் செலாவணியை விடப் பன்மடங்கு அதிகமான அந்நியச் செலாவணியை நாம் ஏற்றுமதி மூலம் சம்பாதிக்க முடியும்.

மூலப் பொருளை இறக்குமதி செய்ய வேண்டுமே என்று அச்சப்பட்டுக் கொண்டு புதிய தொழில்கள் தொடங்குவதை நாம் தள்ளி விடக்கூடாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். தங்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை இறக்குமதி செய்ய விரும்பும் தொழில்களுக்கு அனுமதி வழங்க மத்திய அரசு இன்று தயக்கம்

காட்டுகிறது. இது நல்ல வாய்ப்பாகாது. ஜப்பான், அமெரிக்கா போன்ற மிகவும் முன்னேறிய நாடுகள் கூட மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதாக நான் அறிகிறேன்.

பெட்ரோலிய ரசாயனப் பொருள்கள்—பல வகையான தொழில் திட்டங்களுக்கு அடிப்படையான தன்மை படைத்தவை. பிளாஸ்டிக் முதல், பூச்சித் தடுப்பு வரை பல வகையான தொழில்களுக்குப் பெட்ரோலிய ரசாயனப் பொருள்கள் ஆதாரமாக அமைவதாகும்.



தொழிற்கூட இயந்திரங்களின் ஒரு பகுதி

எனவே, இங்கு நாப்தா கிராக்கர் தொழிற்சாலை அமைந்திட மத்திய அரசு அனுமதி வழங்கிடுமானால், அந்த ஆலையிலிருந்து வெளியேறும் பொருள்களைக் கொண்டு—இந்த வட்டாரத்தில் பல வகைத் தொழில்கள் பெருகக் கூடும். அதன் விளைவாகத், தொழில்களின் கூட்டம் பல்கிப்—பெருகிப்—பொருளாதார வளம் அதிகரிக்கும்.

மத்திய தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் அண்மையில் சென்னை வந்திருந்தார். அவரோடு நான் நீண்ட நேரம் விவாதம் நடத்தினேன். தொழில் துறை குறித்து அவர் கொண்டுள்ள புதிய அணுகும் முறை என்னைக் கவர்ந்தது. என்னோடு நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது, அவர் தொழில்களுக்கு அனுமதி வழங்கும் முறையை எளிதாக்குவதாகக் கூறினார். 1970 முதல் கவனிக்கப்படாமல் இருக்கிற விண்ணப்பங்களை இன்னும் மூன்று மாதங்களுக்குள்—அதற்கு முன்னரே கூட—கவனித்து மறு மொழி அனுப்புவதாக அவர் உறுதியளித்தார். இதன் மூலம் நமது மாநிலத்துக்குச் சில புதிய தொழில்கள் தொடங்கிட அனுமதி கிடைக்கக் கூடும். தொழில்களுக்கு அனுமதி வழங்கும் முறையை ஒழுங்குபடுத்துவதானாலும் கூட, அனுமதி வழங்கும் முறை இன்னும்சிக்கல் நிறைந்ததாகவே இருப்பதை நாம் ஒதுக்கிவிட முடியாது. எனவே, இந்த முறையை எப்படி எளிதாக்குவது என்று நாம் சிந்தித்தாக வேண்டும்.

தொழில்களுக்கு அனுமதி வழங்கும் முறையை எளிதாக்க வேண்டும், என்கிற நமது கோரிக்கையை அண்மையில் மத்திய அரசு ஏற்றது கண்டு நான் மகிழ்கிறேன். இப்போதுள்ள உற்பத்தித் திறன்—எதிர்காலத் தேவை இவை பற்றி ஆழமான ஆராய்ச்சியில் இப்போதெல்லாம் மத்திய அரசு ஈடுபடுவதில்லை என்று நான் நினைக்கிறேன். எதிர்காலத் தேவைகள் பற்றிய மத்திய அரசின் மதிப்பீடுகள் உண்மை நிலைக்குப் பொருந்துவதாக இருப்பதில்லை.

சிமெண்ட் உற்பத்தி அளவு மீறிவிட்டது என்று ஒரு ஆண்டிலும் சிமெண்ட் பற்றாக் குறை ஏற்பட்டு விட்டது என்று அடுத்த ஆண்டிலும் மத்திய அரசு கூறுகிறது. இதுபோலவே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எஃகு உற்பத்தியில் உபரி கண்டதாகச் சொன்னார்கள். இப்போது எஃகுப் பற்றாக் குறை என்று கூறுகிறார்கள். எனவே வருங்காலத் தேவைகளை நிர்ணயிக்கும் பொறுப்பை மூலதனம் போடுகிற நிறுவனங்கள் வசமே ஒப்படைத்து விடலாம். அப்போது அனுமதி வழங்கும் முறை, மேலும் எளிதாகி விடக் கூடும். மூலதனம் போடுகிறவர்கள் இயல்பாகவே, கவனத்துடன் இருப்பார்களல்லவா?

இன்று நான் தொடங்கி வைக்கிற இந்தத் தொழில் உள்நாட்டுத் தொழில் திறமை, அயல் நாட்டுத் தொழில் நுணுக்கம் இரண்டும் இணைந்த நலமான கூட்டுறவை இங்கே காண்கிறேன். எந்தத் திசையிலிருந்து வருவதாக இருப்பினும்—இன்னும் சில காலத்துக்கு வெளிநாட்டுத் தொழில் நுட்ப அறிவு வருவதற்கு நாம் கதவுகளைத் திறந்தே வைத்திருக்க வேண்டும். தொழில் துறையில் மிகவும் முன்னேறியுள்ள ஜப்பான் கூட இன்னும் வெளிநாட்டுத் தொழில் நுட்பத்தை வரவேற்று—கடைப்பிடித்து—முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொள்கிறது என்று நான் அறிகிறேன். நாம் என்ன செய்யவேண்டும் என்றால்; வெளிநாட்டுத் தொழில் நுட்ப அறிவை நாம் மேலும் விசாலப்படுத்தி—நமது தொழில் நுட்ப அறிவைக் கொண்டு நடத்தும் ஆராய்ச்சிகளின் பயனை வெளிநாடுகளுக்குச் சொல்லக்கூடிய ஆற்றலை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தொழில் துறை வளர்ச்சி, மற்றும் ஒழுங்குபடுத்தும் சட்டத்தை முழுவதும் மறு பரிசீலனை

**முதல்வர் டாக்டர் கலைஞர்**

செய்ய ஓர் உயர்மட்டக் குழுவை அமைக்க வேண்டும் என்று நான் வெளிப்படையாக யோசனை கூற விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டும் பல முக்கிய தொழில்கள் இந்தச் சட்டத்தின் ஆட்சிக்குள் கொண்டு வரப்படுகின்றன. இந்தச் சட்டத்தின் எல்லைக்குள் வராத தொழில்கள் மிகக் குறைந்த அளவினதாகும். அடிப்படையான சில தொழிற்சாலைகள் மட்டுமே இந்தச் சட்டத்தின் எல்லைக்குள் கொண்டு வரப்படும் என்பது தான் முதலில் சொல்லப்பட்ட விளக்கம். ஆனால் நாளடைவில் ஒவ்வொரு தொழிலும்அடிப்படைத் தொழிலாக — ஆதாரத் தொழிலாகக் கருதப்பட்டு அதன் மூலம் இந்தத் தொழில்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மத்திய அரசிடம் குவித்து வைக்கப்படுகிறது.



தொழிற்சாலையின் ஒரு தோற்றம்

தொழில்களை, அமைப்பதற்கு இது திறமை வாய்ந்த வழியல்ல என்பதை மாநில அரசு என்கிற முறையில் நாங்கள் பல முறை வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

இந்த அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கேட்டு வருகிறோம். மத்திய அரசின் அதிகார வரம்பில் அதிகமான தொழில்கள் சேர்க்கப்படுவதால் தொழில் துவங்க அனுமதி வழங்குவதில் தாமதமும் அதிகமாகிறது. எனவே, அனுமதி வழங்கும் பிடியிலிருந்து பல தொழில்களுக்கு விலக்கு அளிக்கவேண்டும். இப்போது இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுள்ள அமைச்சர் நான் கூறுகிற கருத்தை அதன் உண்மையான பொருளில் ஏற்று, முழு அடிப்படையினையும் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனுமதி வழங்கும் முறையை மறுபரிசீலனை செய்ய மத்திய-மாநில அரசுகளின் பிரதிநிதிகள் கொண்ட உயர் மட்டக் குழுவை அமைத்திடவேண்டும். அனுமதி வழங்கும் முறையால் பாதிக்கப்படுபவை மாநில அரசுகள்தான். எனவே, மாநில அரசுகளின் பிரதிநிதிகள் அந்த உயர் மட்டக் குழுவில் இடம் பெற வேண்டும்.

“தொழில் அனுமதி வழங்கும் கொள்கை முழுவதுமே சிக்கலாக இருக்கிறது. எனவே, தீவிரமான நடவடிக்கைகள் தான் நிலைமையைச்சீர்படுத்த முடியும்”.

(நாகபால் அம்பாடி பெட்ரோல் ரசாயனத் தொழிற்சாலை திறப்பு விழாவில் முதல்வர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.)

## புதிய தொழில் யுகம்

மணலியில் 1971 செப்டம்பர் திங்கள் 18-ஆம் நாள் நாக்பால் அம்பாடி பெட்ரோலிய ரசாயனத் தொழிற்கூடம் துவக்கப்பட்டது.

ஐந்து கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தத் தொழிற் கூடம் சென்னையிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு அருகில் அமைந்துள்ளது. 55 ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்டுள்ள இந்தத் தொழிற் கூடம் ஒரு காலத்தில் நீரில் மூழ்கிக் கிடந்த வெறும் தரிசு நிலமாகும். பள்ளத்தைச் சமன்படுத்த ஒரு லட்சத்து இருபதாயிரம் கன மீட்டர் மண்ணைக் கொட்டி அதன்மீது தொழிற்கூடத்தை அமைத்திருக்கிறார்கள், நாக்பால் அம்பாடி நிறுவனத்தார். இன்று எங்கும் பிரம்மாண்டமான எண்ணெய்த் தொட்டிகள்—அதனை எடுத்துச் செல்லும் பாம்பு போன்று வளைந்து நெளிந்து செல்லும் குழாய்கள் தோற்றமளிக்கின்றன. தூங்கிய மணலி தொழில் நகராகிறது என்ற முதல்வரின் சொல்லுக்குப் பொருத்தமான காட்சிகள்இவை.

அமெரிக்க ‘‘விட்கோ’’ ரசாயனக் கழகத்தின் தொழில் நுணுக்க உதவியுடன் துவக்கப்பட்டுள்ள இந்தப் புதிய தொழிற்கூடத்தில் தயாராகும் பெட்ரோலியம் தொழில்கள் மூலம் ஆண்டு தோறும் 4 கோடி ரூபாய் மதிப்புள்ள அந்நியச் செலாவணி கிடைக்கும்.

இந்தத் தொழிற் கூடத்தில் ஆண்டு தோறும் 15 ஆயிரம் டன் டிரான்ஸ்பார்மர் எண்ணெய்யும், எட்டாயிரம் டன் தனித் தன்மையுள்ள எண்ணெய்கள் (Speciality Oils ), (மருந்துகள் தயாரிக்க, வேளாண்மைக்கான மற்றும் பலதரப்பட்ட எண்ணெய்கள்), பதினாயிரத்து ஐந்நூறு டன் ‘ஒலியம்’ ஆகியவை தயாரிக்க உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் டிரான்ஸ்பார்மர் எண்ணெய், மின் கருவிகளுக்கு மிகவும் தேவையானது ஆகும். தனித்தன்மையுள்ள எண்ணெய்கள் பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கவும், உணவுப் பொருட்கள் தயாரிக்கவும், துருப்பிடிக்காதபடி இயந்திரங்களைப் பாதுகாக்கவும் பயன்படும்.

இங்குத் தயாரிக்கப்படும் பெட்ரோலட்டம்ஸ் ( Petrolatums ) களிம்புகள் (மருந்து) தயாரிக்கவும் மற்றும் பல தொழில்களுக்கும் பயன்படத் தக்கது.

இவை மட்டுமல்ல. இந்தப் பொருட்கள், மேலும் பல்வேறு புதிய தரமான பொருட்கள் தயாரிக்க மிகவும் உதவும்.

# அண்ணலைப் பற்றி அண்ணா

உலக உத்தமர் காந்தியடிகளின் பிறந்த நாள், நாடெங்கும் நன்னுளாகக் கொண்டாடப் படுகிறது, அவரவர் தத்தமக்கு விருப்பமான முறையில் காந்தியடிகளுக்குத் தமது அன்பினைக் காணிக்கையாக்கி அளிக்கின்றனர்.

அவருடைய திருவுருவப் படத்திற்கு மாலைகளிட்டும்—அவர் புகழ் பற்றிய பாடல்களை இசைத்தும்—பஜனை நடாத்தியும், நூற்புத் தொண்டாற்றியும், சேரிகளைத் திருத்தும் பணிபுரிந்தும் இந்நாளைக் கொண்டாடுகின்றனர்

அவர் ஓர் தூயவர். நமது மார்க்கத்தின் மாசு துடைத்திட வந்த மகான்—என்பாரும்,

அவர் ஓர் விடுதலை வீரர், நமது நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சா நெஞ்சினர் என்பாரும்;

அவர் ஓர் சமதர்மவாதி, ஏழைபங்காளர், ஏழைகள் புது வாழ்வு பெற வழிவகுத்தவர் என்பாரும்;

அவர் கிராம ராஜ்யம் அமைத்திட முனைந்தவர், என்பாரும், இதுபோல, அவரிடம் அவரவர் கண்டவற்றினைக் கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவோர் பல்வேறு வகையினர் உளர். இவர்களில் எவருடைய பார்வையில் முழு காந்தி அடிகள் தெரிகிருர் என்பது, காலமெல்லாம் ஆராய்ந்தறிந்து கொள்ள வேண்டிய ஒரு பிரச்சினையாகும். காரணம், ஒரு மனிதர் என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியவர் அல்லர்; அவர் காலத்தின் சின்னம், ஓர் எழுச்சியின் அடையாளம், ஒரு மறுமலர்ச்சியின் உருவகம்.

அவர் எல்லாத்துறைகளிலும் தமது முத்திரையைப் பொறித்துச் சென்றவர்; எல்லாத் துறையினரும், எமக்காகவே காந்தி அடிகள் வாழ்ந்தார், எமக்காகவே பணிபுரிந்தார் என்று சொந்தம் கொள்ளத்தக்க முறையிலே அவருடைய வாழ்க்கையும், தொண்டும் அமைந்திருந்தன.

இன்று, அவருடைய பிறந்தநாள், எல்லாத் துறைகளிலே உள்ளவர்களாலும் கொண்டாடப்படுவதற்கான காரணம் இதுவே. அவர் ஒரு நாட்டின் காலம்! ஒரே ஒரு துறைக்கு அல்ல; எல்லாத் துறைகளுக்கும் ஒரு திருப்பத்தை, ஒரு புதிய பொலிவை, வலிவைக் கொடுத்தவர்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் ஏதோ ஒரு துறையிலே மட்டும் பெறப்படுகிற வெற்றியைப் பொறுத்தது அன்று. எல்லாத் துறைகளிலும் வெற்றி காணவேண்டும். அவைகளின் ஒட்டு மொத்தத்தைக் கொண்டே அந்நாடு முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்ற கணக்குப் பார்க்கவேண்டும்.

ஒரு நாட்டின் வரலாற்றிலே அவ்விதமான ஒரு கணக்கு அடிக்கடி கிடைக்காது; ஒரு நூற்றுண்டுக்கு ஒரு முறை கிடைக்கும் என்றும் கூறிவிட முடியாது. அந்தக் கணக்கு இந் நாட்டுக்குக் காந்தியடிகளின் வடிவத்திலே கிடைத்தது. எனவேதான் காந்தியடிகளின் பிறந்த நாள் ஒரு மாபெரும் தலைவரின் பிறந்த நாளாகமட்டுமின்றி, ஒரு நாட்டுக்குக் கிடைத்த நற்காலம், என்ற முறையிலே சிறப்புப் பெறுகிறது.

அந்த—அரை ஆடை மனிதர் கோடானுகோடி மக்களுக்குமானமுள்ள வாழ்வு பெற்றுத் தந்ததைவிட ''அற்புதம்'' வேறுஎன்ன இருக்க முடியும்?

இன்று நடத்திடும் திருநாளின் மாண்பு, நாளையும் மறுநாளும், பிற நாட்களிலும் நமது எண்ணத்திலும் செயலிலும் ஒளிவிடவேண்டும். அதற்கே இந்நாள்! அவர் புகழ் பாடி மகிழ்ந்திட மட்டுமல்ல—அவர் வழி நடந்திட, அவர் காண விரும்பியதைக் கண்டிட, அவர் தந்து சென்றதை உருக்குலைக்காதிருந்திட, அவர் ஊட்டிய உணர்ச்சிகளை உயிருள்ளவை யாக்கிட! மாலையின் மாண்பு மணத்தில்! விளக்கின் பயன் ஒளியில்! விழாக்களின் பலன் நமது செயலிலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது!

# தமிழரசு

## வெள்ளி விழா மலரில்

### மணம்பரப்புவோரில் சிலர்

ஆளுநர் கே. கே. ஷா.
முதல்வர் டாக்டர் கலைஞர்
கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன்
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன்
தொழிலாளர் நல அமைச்சர் என். வி. நடராசன்
அரிசன நல அமைச்சர் சத்தியவாணிமுத்து
உணவு வேளாண்மை அமைச்சர் ப. உ. சண்முகம்
தொழில் அமைச்சர் செ. மாதவன்
பொதுப்பணி அமைச்சர் எஸ். ஜே, சாதிக்பாட்சா
கூட்டுறவுத் துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனார்
உணவு உற்பத்தி அமைச்சர் அன்பில் தருமலிங்கம்
பிற்பட்டோர் நல அமைச்சர் க. இராசாராம்
மின்துறை அமைச்சர் ஓ. பி. ராமன்
அறநிலைய அமைச்சர் மு. கண்ணப்பன்

தந்தை பெரியார்
திரு. நெ. து. சுந்தரவடிவேலு
பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார்
டாக்டர் மெ. சுந்தரம்
டாக்டர் தா. ஏ. ஞான மூர்த்தி
பெரும்புலவர் மே. வீ. வேணுகோபாலர்
கோவை இளஞ்சேரன்
சிலம்பொலி சு. செல்லப்பன்
டாக்டர் பா. நடராசன்
தொழிலதிபர் நா. மகாலிங்கம்
இரா. நாகசாமி
அமிர்தலிங்கம்
வேங்கடசாமி
குருமூர்த்தி

நாமக்கல் கவிஞர்
கவிஞர் கருணானந்தம்
கவிஞர் சுரதா
கவிஞர் வாணிதாசன்
கவிஞர் சாமிபழனியப்பன்
கவிஞர் ஈரோடு தமிழன்பன்
கவிஞர் நா. காமராசன்
கவிஞர் தமிழ்ப்பித்தன்
புலவர் மு. சிக்கந்தர்
பாசொலி
மறைமலையான்
சோம. மகாதேவன்
திருநாவுக்கரசு

மூவண்ணங்களில்
குடும்ப நலத்துறை அளிக்கும்
சிறப்புப் பகுதி!

மின்துறை வழங்கும்
சிறப்புப் பகுதி!

செய்தித்துறைத்
தோற்றத்தையும்
வளர்ச்சியையும் விளக்கும்
கட்டுரைக் குவியல்கள்!



ஏராளமான
படத்தொகுப்பு

நான்கு வண்ணங்களில்
நானிலத்தின் ஓவியம்

பல்கலைக் கழகங்களில்
திருக்குறள் ஆராய்ச்சி பற்றிச்
சிறப்புச் செய்திகள்

இவை மட்டுமல்ல....
இன்னும் ஏராளமான பகுதிகள் உண்டு!

மொத்தத்தில்....
வண்ணக்களஞ்சியமாய்
எண்ணக் கருவூலமாய்த்
தயாராகிறது!

அக்டோபர் திங்களில் நடைபெறும்
செய்தி விளம்பரத் துறை
வெள்ளி விழாவை ஒட்டி வெளிவரும்

**விலை ரூ. 2-50 தான்**

# தமிழகத்தே காந்தியண்ணல்





தமிழகத்தே காந்தியண்ணல் தாள்பதித்த அந்நாளில்
அமிழ்தான உண்பொருள்கள் ஆக்குகிற நல்உழவர்
கோவணத்துத் திருக்கோலம் கொண்டுழைத்தல் நோக்கிவிட்டு
மேலணிந்த தலைப்பாகை, மிகநீண்ட வேட்டிவிட்டுத்
துண்டெடுத்து வரிந்துகட்டத் தொடங்கிவிட்டார் ; துணிந்துவிட்டார் !
பண்டங்கள் படைக்கின்ற உழவனையே போற்றிவிட்டார் !
சீர்பசுமைப் புரட்சியினால் தென்னகமே ஓங்குவதைப்
பார்வையிட்டால் அடிகளவர் பரவசத்துக் கண்ணீரைப்
பயிர்பச்சை வயல்களிலே பாய்ச்சிடுவார் ; உண்மையன்றோ ?
உயிர்மூச்சாய்த் தன்தேவை தான்நிறைத்தல் ஓம்பியவர்
சேலத்தின் நல்லிரும்பை ஞாலத்தின் நாடுகட்கு
மூலத்துப் பொருளாக முகந்தளித்தல் போற்றுவரா ?
தொழிற்சாலை பற்பலவும் தோற்றுவிக்க வேண்டுமன்றோ ?
கத்தியுடன் எந்திரமும் ககனத்தைச் சாடுகின்ற
அத்தனைநற் பொறிகளையும் ஆக்கிடுக, என்றிடுவார் !
நீர்கடந்து செல்வதுவும் நிறைபாபம் என்றிருந்த
ஆர்வமிலா அந்நாளில் அனைத்துவிதி உடைத்தெறிந்து
சட்டங்கள் பயின்றுவந்தார் ; தளையவிழ்த்து வாழ்வளித்தார் !
எட்டாத திங்களிலும் இணையடிகள் பதிக்கின்ற
இன்றவரே இருந்திட்டால் இல்லாமை பறந்தோட
நின்றுயர்வை நிலைகுலைக்கும் தடைக்கற்கள் நீக்கிவிட்டு
நெறியான வளர்ச்சியினை நிறுத்துகிற இயற்கைநிலை,
அறியாமை வறுமைமற்றும் அலைக்கழிக்கும் சக்தியெலாம்
பூண்டோடு போக்கிடவே ஆணைசெய்வார், அடிகளவர் !
நீண்டுயர்ந்த அசோகத்தின் நிமிர்ந்தமரம் இரண்டங்கே
காந்தியண்ணல் நட்டதென வேலூரில் விளங்குவதை
மாந்தர்நாம் கண்டிடுங்கால் மரம்போலத் தலைநிமிர்வோம் !
பிள்ளைகளும் இரண்டேதான் போதுமெனப் பெற்றுயர
வெள்ளையுள்ளத் தந்தையங்கே சொல்லாமல் சொல்லுகிறார் !
உழைப்பாளர் தமிழர்நாம் உயர்வாளர் ஆகிடவே
தழைப்பித்த காந்தியைப்போல் தளையகற்றித் தலைநிமிர்வோம்!









மனசை ப. கீரன்





# இனிமைத் தமிழில் இறை வழிபாடு

கோவை. இளஞ்சேரன்.

“இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெருமறைப்பையும் போதுபோக்கையும் உண்டுபண்ணுகின்ற ஆரியம் முதலிய பாசைகளில் எனக்கு ஆசை செல்ல ஒட்டாது, பயிலுதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய்ப் பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி ஒன்றினிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென்மொழிகளாற் பலவகைத் தோத்திரப் பாடல்களைப் பாடுவித்தருளினீர்''.

மேற்காணப்படுவது கருத்துரை நல்க வேண்டும் எனும் எண்ணத்தில் எழுதப்பட்டதன்று. இறைவனிடமே பேசும் உணர்வில் எழுந்தது. ஒரு பட்டறிவின் அடிப்படைக் கருத்து இது.

இவ்வாறு எழுதியவர் தான் வெளிப்படுத்தும் கூற்றின் தன்மையை,

'' வாய்மட்டிற் சொல்லுகின்ற வார்த்தையன்று ;
இது என் மனமொத்துச் சொல்லிய வாய்மை''—

என்று விளக்கியவர். இவர் மொழித்துறையில் ஊக்கங் கொண்டவர் அல்லர். இறை அருளில் தோய்ந்தவர். அருளையும் பட்டறிவையும் குழைத்து ஆயிரக் கணக்கில் பனுவல் தீட்டியவர். தம் பாடல்களில் அருள் என்னுஞ் சொல் 3,738 இடங்களில் இயல்பாக அமையப் பாடியவர். அதன் இயைபாகத் தம் பாடல்களுக்கு ''அருட்பா'' எனப் பெயர் சூட்டியவர். ஆம்; வள்ளலார் இராமலிங்க அடிகளாரது உள்ளம் வழங்கிய கருத்து இது. அதனை உணர்ச்சியின் சொற்றொடர் உருவம் எனலாம்.

மேலே காணப்பட்ட கருத்துரை வள்ளலார் இராமலிங்க அடிகளாரது என்ற உணர்வில் மீண்டும் ஒருகால் அன்பர்கள் படித்து மேலே செல்லலாம்.

வள்ளல் இராமலிங்க அடிகளார் இறைவன் அருளைப் பெறுதற்குத் துணையாகக் கொண்டது இனிமைத் தமிழ் மொழியையே. அவர்க்கு முன்னர் திகழ்ந்த சமயச் சான்றோர்களும் தமிழ் கொண்டே இறைவனை அணுகினர்.

## மொழிகளும் இறைவனும்

மொழிகள் யாவும் இறைவனால் ஒலிக்கப்பட்டவை என்பது சமயத் துறையினரது ஒருவகைக் கருத்து. அவை சான்றோரால் வழங்கப்படுங்கால், இறைவனது அறத்தைச் சொல்லவே பயன்படுத்தப்பட்டன என்பதும் சமயத் துறைக் கருத்தே. இதனைச் சைவப் பெருநூலாம் திருமந்திரத்தை வழங்கிய திருமூலர்,

''பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலான் அறம்சொன்ன வாறே''

என்று ஆகமச் சிறப்பை விளக்கும் பகுதியில் பாடினார். பதினெட்டு மொழியும் அண்ட முதல்வனாகிய இறைவனது அறத்தைக் கூறின. அறம் சொல்வதாவது வழிபாட்டு மந்திரமாகக் கூறுவதையும் உட்கொண்டதாகும். இப்பதினெட்டுள்ளும் தேர்ந்த மொழிகள் தமிழும் ஆரியமும். இவ்விரண்டும் இறைவனால் வெளிப்படுத்தப்பட்டவை என்பர் சமயத்துறையினர். இறைவன் தமருகம் என்ற தனது தோற் கருவியின் ஒருபுறத்தில் ஒலியெழுப்பித் தமிழையும், மறுபுறத்தில் ஒலியெழுப்பி ஆரியத்தையும் வெளிப்படுத்தினன் என்பர். இவ்விரண்டு மொழிகளையும் சிவபெருமான் உமையம்மைக்கு அருளினர் என்பதாகத் திருமூலர் திருமந்திரம்,

''ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே''

என்று பேசுகிறது. இவ்விரண்டு அடிகளும் ஆகமச் சிறப்பைக் கூறும் பகுதியில் உள்ளவை. இதன்மூலம் தமிழும் ஆரியமும் ஆகம மொழிகளே என்பதனைத் திருமூலர் உணர்த்தியுள்ளார். ஆகமம் என்பது முதல்வனது மொழி என்றும், சான்றுக்குரிய அறமொழி என்றும் பொருள்படும். எனவே, தமிழும் ஆரியமும் முதல்வனது மொழிகள் ; சமயத் தொடர்பில் சான்றுக்குரிய மொழிகள் என்றாகின்றன. சமயத்

துறையினர் ஒரு படி மேலே சென்று இவ்விரண்டு மொழிகளும் இறைவனது இரு கண்கள் என்பர். அதனினும் மேலே சென்று இறைவன் இவ்விரு மொழிகளாகவே உள்ளான் என்று சமயச் சான்றோர் பாடியுள்ளனர்:

இறைவன்;

‘‘ஆரியம் தமிழோடு இசையானவன்’’
—என்றும்,

‘‘வானவன்காண் வானவர்க்கும் மேலானான் காண்

வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்

ஆனவன்காண்’’

என்றும் திருநாவுக்கரசர் உள்ளம் குழைந்து அறிவிக்கின்றார்.

‘‘செந்திறந்த தமிழோசை வடசொல்லாகி’’ என்று நம்மாழ்வாரும் தம் திருவாய்மொழியில் அறிவித்துள்ளார்.

இவ்வாறே இவ்விருமொழிகளையும் இணைத்தும் தனித்தும் இறைவனோடு தொடர்பு படுத்திப் பல அருமறை ஆன்றோரும், சமயச் சான்றோரும் சிற்றிலக்கிய நூலாரும், தனிப் பாடல் தந்தாரும் பாடியுளர். இவை கொண்டு தமிழும் ஆரியமும் இறைவனுக்கு உகந்த மொழிகள் என்பது அறியப்படும். இரண்டும் பாடிப் பரவுதற்குரிய தகுதி வாய்ந்தவை; போற்றித் தொழுதற்குரிய ஏற்றங் கொண்டவை ; அருச்சித்து வழிபடற்குரிய மந்திரமானவை ஆகும். இரண்டும் தெய்வ மொழிகளே எனலாம்.

இவ்வாறிருந்தும், ‘இவ்விரு மொழிகளிலும் ஆரிய மொழி ஒன்றுமே மறைமொழி ; அதன்கண் உள்ளனவே மந்திரங்கள்; அஃதொன்றே அருச்சனை செய்து வழிபடற்கு உரியது; எனவே, ஆரிய மொழியே தெய்வ மொழி தேவபாடை’ என்று தமிழர்களே நம்பும் நிலை வந்தது. கோயில்களில் இறைவன் திருமுன் அணுக்க மொழியாய் ஆரியமாம் வடமொழியே நடைமுறை மொழியாயிற்று.



அசைக்க முடியாமல் நிலை பெற்றது. தமிழர்தம் குறைபாட்டால் நேர்ந்த வியப்புகளில் இஃதும் ஒன்று.

தமிழ்நாட்டில், தமிழர் எழுப்பிய கோயில்களில், தமிழர் வழிபடுதற்குத் தமிழ் இல்லை என்பதை வியப்பு என்று குறிக்க வேண்டும் ; அல்லது

‘‘காற்செருப்பைப் பிறனொருவன்
கழிவிடத்தில் தள்ளிடினும்
பொறுத உள்ளம்
மேற்படுத்தும் எவற்றினுக்கும்
மேற்பட்ட தன்மொழியைத்
தமிழைத் தீயோர்
போற்றுவதற் குரியதொரு
பொதுவினின்று நீக்கிவைத்தால்
பொறுப்ப துண்டோ?’’

—என்று பாவேந்தர் உணர்வில் பொறுக்க இயலா நிலை என்று கூற வேண்டும்.

இவ்வியப்பு எவ்வாறு நேர்ந்தது ? இவ்வகையில் வினா எழ எவ்வகை நிகழ்ந்தது !

## கோயிலும் வழிபாடும்

மிகத் தொன்மை நாளில் இறைவனுக்குக் கோயில் இல்லை. இயற்கை மரத்தின் அடியிடமே இறைவன் அமரும் இடமாக இருந்தது. ஆலமரத்தின் கீழிருந்து அரன் ஐயந் தீர்த்தான். அரச மரத்தின் அடியில் அமர்ந்து புத்தன் அறம் கண்டான். அசோக மரத்தின் அரும் நிழலில் அருகன் அறம் உரைத்தான். இவற்றின் குறிப்பாகவே மக்கள் மரத்தின் கீழ் இறைவனை அமர்த்தி வழிப்பட்டனர். இதன் அறிகுறியாக இன்றும் ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வொரு மரம் ‘‘தலவிருட்சம்’’ என்னும் பெயரில் திருமரமாக அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

காலப் போக்கில் இறைவன் உருவைத் தூய்மையாகப் பேண விரும்பிச் சிறு குடில்களாக-சிறு இல்லங்களாக அமைத்தனர் இறைவனும் கோ அமரும் இல் கோவில் ஆகியது. படிப்படியாகக் கதைகள் பிறந்தன; கரணங்கள் தோன்றின; புராணங்கள் எழுந்தன. ஆயினும், மக்கள் தாமே நீரும் பூவும்கொண்டு சென்று இறைவனை வழிபட்டனர். பூ, நீரோடு படைக்கும் அமுதாம் பலிப்பொருளும் இணைந்தது. இறையன்பர்கள் தாமே இறைவனை நீராட்டினர். மலர்களை இறைவன் திருவடியில் குவியலாகப் படைத்தனர். பலிப்பொருளையும் திருமுன் வைத்தனர். தம் குறை சொல்லியும், குறையற்ற இறைவனின் நிறைகுணம் பேசியும் போற்றினர். தம் உள்ளத்து உணர்வைத் தம் வாயால்-வாய்மொழியாம் தாய்மொழியால் வெளியிட்டு ஏத்தினர். மலரை இரு கை நிறைய ஏந்திக் குவியலாகப் படைக்கும் வழிபாடே தமிழர்தம் வழிபாடாக இருந்தது.

மலர்ப் படைப்பையும் ஏத்துதலையும் இணைத்து ஒவ்வொரு போற்றுதலுக்கு ஒவ்வொரு மலராக இடும் பழக்கத்தை உண்டாக்கினர் பிறர். இஃதே அருச்சனை எனலாயிற்று. அருச்சனை என்ற வடமொழிச் சொல்லே இம்முறை வடமொழியாளர் ஏற்படுத்தியது என அடையாளம் கூறி நிற்கிறது.

இந்நிலையில் தமிழில் மந்திரம் சொல்லி வழிபடுவதற்குத் துணையாகப் போற்றிகள் உருவாயின.

''மந்திரம் கொண்டு வழிபடு வோர்க்குச்
சுந்தர நாதன் சொல்லிய மந்திர'' மாம்

''மந்திரம் முந் நூறு'' என்னும் நூல் எழுந்தது. சுந்தரநாதன் என்னும் இயற்பெயருடைய திருமூலர் இந்நூலை உரைத்தார் என்பதை,

''மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்'' —என்று திருமந்திர இறுதிப் பாடல் அறிவிக்கிறது. இவ்வாறு ஒரு நூல் உருவானதைக் கொண்டு இறைவழிபாட்டில் வடமொழி ஆட்சிக்கு மாற்றாக அக்காலத்திலேயே உணர்வு எழுந்ததாகவும் கொள்ளலாம்.

மக்கள், தாமே நீராட்டி, மலர் படைத்து ஏத்தும் முறை தேவார மூவர், திருவாதவூரர், திருமூலச் சான்றோர் காலத்திலும் இருந்ததை அவர்களது வாய்மொழிகள் பேசுகின்றன.

''பூவும் நீரும் பலியும் சுமந்து புகலூரரையே
நாவினாலே நவின்று ஏத்தல் ஓவார்''
—திருஞானசம்பந்தர்.

''பூவோடு நீர்சுமந்து ஏத்திப் புகுவார்''
—திருநாவுக்கரசர்.

''குடம் எடுத்து நீரும் பூவும் கொண்டு''
—சுந்தரர்.

''பரந்துபல் ஆய்மலர் இட்டு முட்டாது
அடியே இறைஞ்சி,
இரந்தஎல்லாம் எமக்கே பெறலாம் என்
னும் அன்பர்
— மாணிக்கவாசகர்.

''சிறப்பொடு பூ நீர் திருந்த முன் ஏந்தி''
—திருமூலர்.

இவர்கள் காலத்தில் மக்கள் தாமே வழிபாடியற்றும் வழக்கத்தோடு வடமறை மந்திரமும் ஓதி அருச்சிக்கும் பழக்கமும் ஆங்காங்கு தலையெடுத்தது.

''மறைகலந்த மந்திரமும் நீரும் கொண்டு
வழிபட்டா
வான் ஆளக் கொடுத்தி அன்றே'
—என்கிறார் அப்பரடிகள்.

பல்லவர் ஆட்சி தமிழகத்தில் தலையெடுத்தபோது வடமொழிக்கும் வடமொழியாளர்க்கும் ஏற்றம் கிடைத்தது. பல்லவ மன்னர்கள் வடமொழியைப் போற்றி வளர்க்க இயலுவன செய்தனர். வடமொழியாளரை மிக மதித்து வந்தனை செய்தனர். பல்லவர்களது பேராதரவோடு இறைவனது திருக்கோயில்களில் வடமொழி ஒன்றே ஆட்சிபெறும் நிலை வேரூன்றியது. வடமொழி ஒன்றே தெய்வமொழி—தேவ பாடை எனும் கருத்து நிலைத்தது.

வடமொழி ஆட்சி இறைவனது அணுக்கத்தில் திகழ்ந்தது. ஆயினும், கோயிலில் தமிழுக்ும் இடமிருந்தது. கருவறையில் அன்று; அதற்கு இப்பாற்பட்ட எல்லையில் இடம் ஒதுக்கப்பட்டது. இறைவனின் திருவுலாவில் வடமொழியே இறைவனுக்கு அணுக்கமாய் ஒலித்தது. தமிழ் ஒரு கோடியில் இசைத்தது.

இந்நிலையில்தான் நாம், இறைவழிபாட்டிற்கும் தமிழ்மொழிக்கும் உள்ள தொடர்பைக் காண வேண்டியவர்கள் ஆகின்றோம். இறைவனுக்கும் தமிழ் மொழிக்கும் இயைபு என்ன? தமிழ்ச் சான்றோர் இறைவன் தொடர்பில் தமிழுக்கு எத்தகுதியைக் கண்டனர்? சமயத் துறையினர் கொண்ட தமிழ் உளப்பாங்கு எத்தகையது? இவ்வினாக்களின் விடைகளில் தான் தமிழ்வழிபாட்டு முறை இயற்கையாகவே வலுப்பெறுகின்றது.

## தமிழின் தகுதி

''இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்'' —என்று பிங்கலநிகண்டு தமிழுக்குப் பொருள் கூறுகின்றது. தமிழ் இனிமை என்னும் பொருளது. நீர்மைஎன்றபொருளால் நீரின் தன்மையாகிய தண்மையைக் கொண்டது.

மாணிக்கவாசகரும், ''தண்ணார் தமிழ்''—என்றார். நீர்மை என்னும் சொல் பல பொருளைக்கொண்டது. அப்பொருள்களில் தமிழோடு இயைந்து வரும் பொருள்களில் இயல்பு என்னும் பொருளும் ஒன்று. இப்பொருளால் தமிழ் இயல்பான மொழி என்பது உணரப்படும். எனவே, தமிழ், இனிமைத் தமிழ்; தண்மைத் தமிழ்; இயல்பு மொழி.

## தமிழ் தெய்வமொழி

கழாரம்பர் என்னும் தொல்லாசிரியர் தமிழின் தனிப் பொருளைக் கூற எழுந்தவர்,

''தமிழ் சிவம் இனிமை எனும்
தனிப்பொருளாம்''—என்று தம் ''பேரிசை'' நூற்பாவில் குறித்தார். அவர் கருத்தில் இனிமைத் தமிழுக்கு முன்னர் சிவத் தமிழ்—தெய்வத் தமிழ்—இறைத்தமிழ் எழுகின்றது. தமிழே இறைவனாய், இறைவனே தமிழாகிறான். தமிழ்ச் சான்றோர் தமிழுக்குத் தந்த இயல்பான தகுதி இறை. இறைவனேயாகும் தகுதியுடையது தமிழ். தமிழும் தெய்வ மொழியே. வடமொழி

தான் தேவபாடை என்பதன்று. தென் மொழியும் தெய்வத் தமிழே.

இதனைச் சேக்கிழார் சொல்லிக் காட்டு கின்றார்.

''ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்'' சேக்கிழாரது இந்த உண்மைப் பேச்சில் தமிழ் தெய்வத் தமிழ் மட்டும் அன்று மேன்மைத் தமிழ், மேன்மைத் தெய்வத் தமிழ்; உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையாது உலகத்தை அளந்து நிற்கும் தமிழ். ஞாலம் அளந்த தகவால் தமிழ் மன்பதை மொழி. மன்பதை மொழியே தெய்வத் தமிழ் ஆகும் தகுதி உடையது.

சுந்தரரும்,

''பண்ணார் இன்றமிழாய்ப் பரமாய பரஞ்சுடர்''—என்று பரமனைப் பாட்டுத் தமிழ் ஆனவன் என்கின்றார். அவரே,

''பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்''—என்று பாட்டுடைத் தமிழை இறைவனுக்கு ஒப்புக் கூறி உயர்த்தினார்.

## தமிழ் அருள்மொழி

இத்தெய்வத் தமிழால் போற்றியே சமய குரவர் நால்வரும், இறையடியார் பலரும் வியத்தகு அருட்செயல்களை இறைவன் அருளால் செய்தனர்; பெற்றனர் என நூல்களில் காண்கின்றோம்.

**தமிழ்ப்பாட்டு** வியத்தகு செயல்களை விளைவித்தது.

**தமிழ்** எழுதப்பட்ட ஏடு நீரில் ஏறி, நெருப்பில் நின்றது. மறைக்காட்டுக் கதவு திறந்தது; அடைத்தது. ஆண்பனை பெண்பனை ஆகியது. எலும்பு பெண்ணாகியது. நஞ்சு நீங்கியது. நஞ்சு அமுதாகியது. சுடு காளவாய் சுரும்புத் தடாகம் ஆனது. யானை பணிந்தது. கடலில் கல் மிதந்தது. நெல்லும் பொன்னும் சோறும் வந்தன. ஆரூர்த் தெருவில் இறைவனே நடந்தான். இழந்த கண்கள் மீண்டன. முதலையுண்ட குதலை மீண்டான். வெள்ளை யானை வந்தது. நோய்கள் தீர்ந்தன. பகைகள் முறிந்தன. இவ்வாறு பட்டியல் நீண்டது. யாவும் தமிழ்ப்பாடலால் என்று காண்கின்றோம்.

வள்ளலார் இவையெல்லாம் கூட்டி,

''வடிக்குறும் தமிழ் கொண்டு அன்பருக்கு அருளும் வள்ளல்''—என்றார். தமிழ் இறைவனது அருளைப் பெறும் தகுதி உடையது ஆகிறது.

## தமிழ் இறைவன் உணவு

தமிழ்ப்பாட்டு இறைவனுக்கு உவப்பானது; அவனது அருளைச் சுரக்கவைப்பது மட்டும் அன்று, இறைவனுக்கு உணவாகவும் அமைந்தது.

இறைவனை வந்திக்கும் முறைகளுள் வெந்தழல் வளர்த்து வேள்வி செய்யும் முறை; வடவரால் உண்டாக்கப்பட்டுத் தமிழகத்தில் புகுத்தப்பட்டது. திருவள்ளுவப் பெருந்தகையார்.

''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்து உண்ணாமை நன்று''—

என்று மாற்று முறையால் வேள்வியைக் குறிப்பாகக் கண்டித்தார். இக்குறளில் குறிக்கப்படும் ''அவி'' இறைவனுக்கு உரிய உணவு என்னும் பொருளது. இறைவனுக்குரிய உணவாகப் பலிப் பொருள்களை வேள்வி வேள்வியின் தீக்குழியில நெய் சொரிந்து இடுவர். அஃது அவி எனப்படும். தீயில்வெந்து ஆவியாய் அவிவதால்—ஆவியாவதால் (அவி-ஆவி-அவி) அவி எனப்பட்டது. வேள்வித் தீ இல்லாமலே--வேள்வி செய்ய மாட்டாராய்—தமிழ்ப்பாட்டை அவியாக இறைவனுக்கு ஊட்டினார் திருமூலர். காலையில் பாடி ஊட்டினார். மாலையில் பாடி ஊட்டினார். அதைப் பாடுகிறார்:

வேட்டுஅவி உண்ணும் விரிசடை நந்திக்குக்
காட்டவும் யாமிலம்; காலையும் மாலையும்
ஊட்டு அவி யாவன உள்ளம் குளிர்விக்கும்
பாட்டு அவி காட்டுதும், பால் அவியாமே''

—என்பது அவர் காட்டும் பாட்டு. இதன்கண் உள்ளம் குளிர்விக்கும் பாட்டை அவி என்கின்றார். தீக்குழி வழியாகச் செல்லாத அவியன்றோ? அதனால் அது குளிர்ந்து பால் போன்ற சுவையான உணவு ஆயிற்றாம்.

வெந்தழல் வளர்க்கும் வேள்வி முறை செந்தமிழ்த் திருமூலர்க்கு ஒத்தது இல்லை போலும். அதனால்தான் ''காட்டவும் யாம் இலம்'' என்று இப்பாடலிலும் குறித்தார் பின்னரும்,

நன்னெறி செல்வார்க்கு ஞானத்தின் ஏகலாம்'
புன்னெறி யாகத்திற் போக்கில்லை தானே'

—என்றார். வேள்வி முறை தாழ்வானது என்பதைப் ''புன்னெறி யாகம்'' என்பதால் குறித்தார்.

இப்பாடல் [வேட்டு அவி பாடல்] ''சிவ பூசை''யை விளக்கும் பகுதியில் அமைந்த பாடல் என்பதைக் குறிக்க நேர்கின்றது. வழிபாட்டு—பூசை முறையாகத் தமிழ்ப் பாட்டைப் படைத்தலைக் கூறினார் என்பதை இவ்விடத்தில் நினைவிற் கொள்ளவேண்டும்.

## அருச்சனை தமிழ்ப்பாட்டே

இவற்றையெல்லாம் உளத்துக்கொண்டே சேக்கிழார், ''அருச்சனை பாட்டே ஆகும்'' என்றார். அதனையும் தாம் கூறுவதாக இல்லாமல் இறைவனே சுந்தரமூர்த்தியிடம் ஏவல் இடுவதாக,

''அருச்சனை பாட்டே யாகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக'' என்றார்

தூமறை பாடும் வாயார்''—என்று பாடினார். தூமறை பாடும் வாயை உடைய வரையே 'தமிழ்ப்பாட்டே அருச்சனை ஆகும்' என்று பேச வைத்துள்ளார் சேக்கிழார். இதில் சேக்கிழாரின் உள்ளெண்ணம் புலனு கின்றது. இறைவன் ''சொற்றமிழ் பாடுக'' என்று சுந்தரரைப் பணித்தான். ஒரு வரைத் தமிழில் பாடுவதற்குப் பணித்தவன் மற்றொருவரைத் தமிழ் மந்திரம் பாடுவதற் காகப் படைத்தானும். அவ்வாறு படைக்கப் பட்டவர் திருமூலர். அவரே பேசுகின்றார்:

''என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே''

தன்னை நன்றாகத் தமிழால் போற்ற வேண்டுமென்பது இறைவனது பேரவா. அதனால் நன்றாகவே படைத்துள்ளானும். இறைவனே பெரும் புகழ் விரும்பிதான். அந்தப் புகழையும் தமிழால் கேட்பதில் பெருவிருப்பினன். அப்பெருவிருப்பில் இறைவன் தன்னைத் தானே தமிழிற் பாடிக் கொண்டவன். வைணவப் பெரியார் நம்மாள்வாரைக் கருவியாகக் கொண்டு பாடிக்கொண்டான். இதனை, நம்மாள் வாரே,

''அன்றைக் கன்று என்னைத் தன்னாக்கி
இன்றமிழ் பாடிய ஈசன்''—என்று பாடிப் பூரித்துள்ளார். அங்கு நன்றாகப் படைத் தான். இங்கு தானே அடியவராகி நாளுக்கு நாள்—அன்றைக்கு அன்று—ஆக்கிக்கொண் டான். தன் புகழைத் தானே புதிது புதிதாகத் தமிழில் சுவைத்துள்ளான் இறை வன்.

இதுவரை கண்ட சான்றுகளால் தமிழி னது தகுதிப்பாடு பல முனைகளில் மிளிர் வதைக் காணலாம். தமிழ் தெய்வமொழித் தகுதி உடையது. அருள்மொழியாம் தகுதி கொண்டது. இறைவற்கு உணவாகும் தகுதி கொண்டது. இறைவற்கு மிக உவப்பாகும் தகுதி கொண்டது. இறைமைக் குரிய இத்துணைத் தகுதிப்பாடுகள் இருந்தும் தமிழ் எவ்வாறு கோயிலில் கருவறைக்கு வெளியே நிறுத்தப்பட்டது? வழிபாட்டு—அருச்சனை—போற்றி மொழியாக வடமொழி எவ்வாறு முடிசூடிக்கொண்டது? எவ்வாறு கருவறைக்குள் தனியாட்சி செலுத்தி வரு கின்றது? இந்நிலை தமிழருக்கு ஒரு மானக் கேடான நிலையே. இந்த அளவுக்குத் தமிழரின் சூழல் நெடுங்காலத்திற்கு முன்னரே கெடத் துவங்கிவிட்டது. இக்கேட்டின் துவக்கத்திற்குத் தமிழ்ச் சமயச் சான்றோரும் அறிந்தோ அறியாமலோ ஓரளவில் துணை போயினர் எனலாம்.

## வடமொழிக்கும் இடம்

தேவார மூவர் காலத்தின் தமிழ்நாட்டு ஊர்ப்பெயர்கள் யாவும் தமிழ்ப் பெயர்




களாகவே இருந்தன. அவர்களது பாடல் களில் இதனைத் தெள்ளத் தெளிவாகக் காண் கின்றோம். ஆனால், பிற்காலச் சமயத் துறையினர் தேவார மூவர்க்கு வேறுபட்டு வடமொழியில் பெயர்களை மாற்றி வழங்க இடம் தந்தனர்; தாமும் வழங்கினர். இடைக்காலத்தில் சிறுகச் சிறுக வடமொழிப் பெயர்கள் செருகப்பட்டன. இதுபோன்றே சிறுகச் சிறுக வடமொழி மந்திரங்கள் தமி ழோடு இடம் பெற்று 'ஒண்ட வந்த பிடாரி ஊர்க் கடாரியை விரட்டிய' தாய், 'இடத்தைக் கொடுத்தால் மடத்தையே பிடுங்கிய' துறவிக் கதையாய் ஆகிவிட்டது.

இந்நிலைக்கு முற்காலச் சமயச் சான்றோ ரின் பெருந்தன்மையே காரணமாயிற்று. நந்தம் செந்தமிழோடு வடமொழியும் இறை வனின் அணுக்க மொழியாய் இடம்பெற்றது. இவ்வாறு இடம்பெறச் சான்றோர் தம் பெருந் தன்மையாலும் பரந்த உளப்பாங்காலும் இசைந்தனர்; ஏற்றனர்; போற்றினர்.

ஞானசம்பந்தராம் ஆளுடையபிள்ளை,

''தம் மலரடியொன்று அடியவர் பரவத்
தமிழ்ச்சொலும் வடசொலும் தாள்நிழல்
சேர''

—என்று பாடினார். இவ்விரு அடிகளும் கூர்ந்து நோக்கத்தக்கன. முன் அடி, அடிய வர்கள் பாடலாலும் தொழுகையாலும் பரவுதலைக் குறிப்பது. பின் அடி, இறைவ னது நிறை குணப் புகழைப் போற்றியாகச் சொல்லி, அப்போற்றியை இறைவன் தாளில் படைக்கும் அறிகுறியாய், மலரைத் தூவி வழிபாடு இயற்றும்—அருச்சனையைக் குறிப் பது. அப்புகழ்மொழி தமிழ்ச் சொற் போற்றியாகவும், வடசொற் போற்றி யாகவும் தனித்தனியே அமைந்ததைக் குறிக் கிறது. வழிபாட்டில் தமிழ் வழக்கோடு வட மொழியும் இடம்பெற்றுப் புகுந்துள்ளதை உணரலாம்.

''முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்''—என்று பாடிய திருநாவுக்கரசர் அவ்விரு மொழி நிலைக்கும் ஏற்ப இறைவனை யும் இருநிலையில் கண்டவராய்,

''ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்'' —என்று பாடினர். இறைவனை ஆரியனைக் காணும்போது செந்தமிழோடு ஒட்டிய ஆரியனைக் கொண்டு,

''செந்தமிழோடு ஆரியனைச் சீரியனை''—என்று பாடினர். 'செந்தமிழ் ஆரியனை' என்று குறிக்காமல் 'ஓடு' சேர்த்துச் ''செந்தமிழோடு'' என்று குறித்ததில் ஒரு தனிக்கருத்து உண்டு.

'ஓடு' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு, உயர்ந்த பொருளையே சாரும். ''ஒரு வினை ஓடுச்சொல் உயர்பின் வழித்தே'' என்கிறது தொல்காப்பியம். 'ஆசிரியனோடு மாணாக்கன் வந்தான்' என 'ஓடு'வை உயர்ந்த ஆசிரியனோடு சேர்த்தே கூறவேண்டும். 'மாணாக்கனோடு ஆசிரியன் வந்தான்' என்று கூறக்கூடாது. இவ்வகையில் ''செந்தமிழோடு ஆரியன்'' என்னும் தொடரில் செந்தமிழ் ஆரியநிலைக் கடவுளுக்கு உயர்வாய்க் கூறப்பட்டது. இக்குறிப்பால் செந்தமிழில் வழிபாடியற்றல் தனியாகக் குறிக்கப்பட்டதாகக் கொள்ளலாம். அவரவர் தம் தம் மொழியில் பூசித்தனர் என்பதை நம்மாள்வாரும்,

''உலகர்கள் எல்லாம்

தங்கள் அன்பு ஆரத் தமது சொல்வலத்தால்

தலைத்தலை சிறந்து பூசிப்ப''—என்றார்.

இவ்விடத்துப் பகவத் கீதையில் கண்ணன் கூறியதையும் காணல் இயைபாகும்.

''யார் என்னை எப்படி வழிபடுகிறார்களோ அவர்களுக்கு நான் அப்படியே அருள்புரிகின்றேன்.'' வடமொழி நூலிலும் அவரவர் விருப்பப்படி அவரவர் மொழியிலே வழிபடல் விலக்கப்படவில்லை என்பதை உணரலாம்.

திருமூலர்,

''தமிழ்ச்சொல் வடசொல் எனுமிவ்
விரண்டும்

உணர்த்தும், அவனை உணரலும் ஆமே''—

என்று பாடியது கூர்ந்து நோக்கத்தக்கது. இவ்விரண்டு அடிகளுக்கு முன் இரண்டு அடிகள் உள. அவற்றில், ஆன்மா பற்றால் பிணிக்கப்படுவதும், விடுபடுவதும், முடிவில் போதலும் குறிக்கப்படுகின்றன. இங்குள்ள 'உணர்த்தும்' என்னும் சொல் 'ஆன்மாவின் நடப்பை உணர்த்தும் என்றும், பின்னுள்ள 'அவனை-இறைவனை-உணர்த்தும்' என்றும் இயைந்து பொருள்படும். ''உணரலும் ஆம்'' என்பது தமிழ்ச் சொல்லாலும், வடசொல்லாலும் இறைவனை உணர முடியும். என்பதை வலியுறுத்துவது. 'தமிழ்ச்சொல், வடசொல்' என்று சொல்லைக் குறித்திருப்பதால் இது போற்றி வழிபடும் அருச்சனையைக் குறிப்பதாகும். 'தேவபாடை வடமொழி தான், அதுதான் இறைவனை உணர்த்தும்' என்று கூறும் இக்காலத்துப் பெருமக்களுக்கு இவ்வடிகள் தக்க குறிப்பைத் தருவன. தமிழ்ச் சொல்லோடு வடமொழிக்குத் தமிழரால் பெருந்தன்மையோடு கூடிய பரந்த மனப் பாங்கோடு இடமளிக்கப்பட்டது என்பதைத் ''தமிழ்ச்சொல்'' முன்னே அமைந்து அறிவிக்கின்றது.

திருமூலர் காலத்தில் போற்றிக்கு இரு மொழிகளையும் காட்ட வேண்டிய சூழல் இருந்தது. ஆயினும், அப்பர், ''செந்தமிழோடு ஆரியனை'' என்றது போன்று திருமூலரும் மற்றோரிடத்தில் செந்தமிழ் வழக்கை வலியுறுத்தியுள்ளார்:

''செந்தமிழ்ஆதி தெளிந்து வழிபடு

நந்தி இதனை நவம் உரைத்தானே''—இது 'வயிரவி மந்திரம்' என்னும் பகுதியில் வருவது. இதில் நந்தியாம் தலைவனே உரைத்ததாகக் கூறினர். 'செந்தமிழ் முதலியவற்றால் இறைவியின் நிலையைத் தெளியலாம். அவ்வாறு தெளிந்து வழிபடு' என்று ஆணையிடுகிறது இவ்வடி. இங்கேயுள்ள 'வழிபடு' என்னும் சொல்லை நினைக்கவேண்டும். இப்பாடல் அமைந்த பகுதி மந்திரம் (வயிரவி மந்திரம்) என்ற சொல் இணைந்து இருப்பதையும் இணைக்க வேண்டும். இந்நினைப்பாலும் இணைப்பாலும் வழிபாட்டுக் கருத்து அறிவிக்கப்பட்டுள்ளதை உணரலாம். வடமொழி, ஆதி (முதலிய) பட்டியலில் அடக்கப்பட்டதும் ஒரு குறிப்பே.

சமயச் சான்றோர் ஆங்காங்குக் குறித்துள்ள கருத்துக்களைக் கொண்டு,

மக்கள் தாமே (குருக்கள் இன்றி) வழிபட்டனர்;

அருச்சனை வெய்யும் வழிபாட்டுமுறை புகுத்தப்பட்டது;

அஃதும் தமிழ்ச் சொற்போற்றியாகவே நிகழ்ந்தது;

காலப்போக்கில் வடசொற்போற்றியும் ஒட்டி இடம்பெற்றது;

காலப்போக்கில் வழிபாடியற்றிவைக்கக் குருக்கள்—பூசாரிகள் அமைந்தனர்.

குருக்கள் வடமொழியாளராய் வடமொழியைப் புகுத்தினர்.

தமிழ்ப் போற்றிமுறை தள்ளப்பட்டது.

''ஓசை ஒலியெலாம் ஆன'' இறைவன் தமிழ் ஒலியை மட்டும் நீக்கியவனாக ஆக்கப்பட்டுள்ளான்.

## தமிழில் வைதாலும் வாழ வைப்பான்

நம் காலத்துப் பாரதியாருக்கும் தமிழ் வழிபாட்டு எண்ணம் தோன்றியது. எந்தச் சொல்லால் இறைவனை விரைவில் வரவழைக்க முடியும் என்று நினைத்தார். அந்நினைப்பைச் ''சொல்'' என்னும் தலைப்பிட்டுச் சில பாடல்

களால் வெளியிட்டார். தொடக்கப் பாடல்,

''தேவர் வருக என்று சொல்வதோ?—ஒரு
செம்மைத் தமிழ்மொழியை நாட்டினல்
ஆவல் அறிந்து வருவீர்கொலோ?—உம்மை
அன்றி ஒரு புகலும் இல்லையே''—என்பது

தமிழ் மொழியால் போற்றினல் இறைவன் ஆவல் அறிவான் என்ற கருத்தின் வெளிப்பாடு இது. தொடர்ந்து பல தமிழ்ச் சொற்களைச் சொல்லிப் பாடியவர் இறுதியில்,

''அமிழ்தம் அமிழ்தம் என்று கூறுவோம்—
நித்தம்
அனலைப் பணிந்து மலர் தூவுவோம்;
தமிழில் பழமறையைப் பாடுவோம் —
என்றும்
தலைமை, பெருமை, புகழ் தேடுவோம்''

—என்று முடித்துள்ளார். இறைவனைப் போற்ற அமிழ்தம் என்ற தமிழ்ச் சொல்லைக் கூறினர். ''மலர் தூவி'' என்று குறித்திருப்பதைக் கொண்டு அருச்சனை செய்தற்குப் போற்றியாகத் தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தலாம் என்று குறித்தார் எனக் கொள்ள முடிகிறது. தமிழர் பாடுவதுதான் தமிழர்க்குத் தலைமை; தமிழர்க்குப் பெருமை; தமிழர்க்குப் புகழ் என்ருர்.

தமிழ்ச்சொல்லைக் கூறினல் இறைவன் ஆவலறிந்து வருவாரோ என்று பாரதியார் கருதினர். ஆயினும், ''ஆவலறிந்து வருவீர்கொலோ'' என்று தொடங்கியதில் 'வாராமலும் இருந்துவிடுவீரோ' என்ற ஐய உணர்வு ஒலிக்கிறது.

ஆனல், முருகன் அடியார் ஒருவர் இந்த ஐயம் இன்றி உறுதிக் குரல் கொடுத்தார்.

''மொய்தார் குழல் வள்ளியை வேட்டவன்
முத்தமிழால்
வைதாரையும் இங்கு வாழவைப்பான்''

—என்று பாடினர்.

தமிழில் புகழ்ந்து பாடும் வாழ்த்துக்கும் அருள்செய்வான்; வசைக்கும் அருள் செய்வான். இயற்றமிழால் ஓர் ஏச்சு; இசைத் தமிழால் ஒரு வசை; நாடகத் தமிழால் ஒரு திட்டு, என்று முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் முருகன்' என்றன்ருே இப்பாடல் பேசுகின்றது. முருகன் புகழைத் திருப்புகழாகப் பாடிய அருணகிரியாரது கருத்து இது. இது நயம் தோய்ந்த கருத்தாயினும், இதில் முருகன் தமிழைக் கேட்டால் உள்ளம் குளிர்பவன்



என்ற கருத்து நிறைவாக விளங்குகிறது. முருகன் தமிழ்க் கடவுள் அன்ருே? அதனல் தான் தமிழால் வைதாலும் வாழவைப்பவனுகின்ருன்.

## முற்காலத் தமிழர் உணர்வு

இவ்வாறு தமிழருமையை உண்மையாக அறியாதவர்கள் எக்காலத்திலும் இத்தமிழ் மண்ணில் வாழ்ந்திருக்கிருர்கள். அவர்களை எண்ணி ஒரு புலவர் (யாரென்று அறிதற்கில்லை) சினங்கொண்டார். சிறிது வன்மையாகவே சாடிப் பாடினர்.

''பேயறிவார் முழுமூடர் தமிழருமை
அறிவாரோ பேசுவாரோ?
நாயறியா தொருசந்திச் சட்டிபானையும்
இந்த ஞாயந்தானே''

—என்பது அப்பாட்டு. இது தண்டலையார் சதகம் என்னும் நூலில் உள்ளது. 'மூடர், பேய் அறிவார்; நாய் போன்றவர்' என்னும் சொற்கள் மிகக் கடுமையானவை என்ருலும் ''வேண்டும் இவர்களுக்கு'' என்று சொல்லச் சிலருக்காகிலும் தோன்றும்.

இந்த ஏச்சையும் மீறிய வன்செயலாக நக்கீரர் நடந்துகொண்ட கதையும் வழங்கப்படுகிறது. ''ஆரியம் நன்று; தமிழ் தீது'' என்று கூறிய குயக்கொண்டான் என்பவனை எதிர்த்துச் சாகடிக்கவும் நக்கீரர் எழுந்தாராம்'' இது வேண்டாத ஒன்ருகிலும், அப்படி ஓர் உணர்வு முன்காலத்திலேயே நக்கீரருக்கோ எவருக்கோ எழுந்தது நினைக்கத் தக்கதே.

இவற்றிற்கெல்லாம் பின்னரும் இறைவனை அண்ட இயலாமல் தமிழ் தள்ளித் தடுக்கப்பட்டிருப்பதை உணர்ந்தும் உணராதவர்போல் 'சிவனே' என்றிருக்கும் தமிழர்களைப் பார்த்தார் பாவேந்தர் பாரதிதாசனர்.

''உயிர்போன்ற உங்கள்தமிழ்
கடவுளுக்கே உவப்பாதல் இல்லை
போலும்;
உயிர்போன்ற உங்கள்தமிழ்
உரைத்தக்கால் கடவுள் அதை ஒப்பார்
போலும்''

—என்று பாடித் தமிழுணர்வைக் கெல்லப் பார்த்தார். அசையாத தமிழர்களை எண்ணி நொந்து, தமிழையே பார்த்துத் தமிழன்னய் !

'' . . . . . . . .வன்பு
தொடுத்துமகிழ் நெஞ்சுடையார்
துறைதோறும் நின்னெழிலைத் தோன்ருவண்ணம்
தடுத்துவரல் நினைக்கையிலே
நெஞ்சுபதைக்கும் சொல்ல வாய்
பதைக்கும்''

—என்று பதைத்து நின்ருர். அவர் அத்துடன் நிற்பவர் அல்லர்; நின்றவர் அல்லர்.

''சொற்கோவில் நற்போற்றித்
திருஅகவல் செந்தமிழில் இருக்கும்போது
கற்கோயில் உட்புறத்தில்
கால்வைத்த தெவ்வாறு சகத்திர நாமம்?''

—என்று விடை காண முடிந்த வினவை எழுப்பினர். இவ்வினவிற்குரிய விடையைத் தமிழர்க்கு உணர்த்தத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் முனைந்தார். இன்றையத் தமிழ்நாட்டுத் தமிழ் நெஞ்ச அரசு விடையைப் பெருந்தன்மையோடு (வடமொழிக்கும் இடம் தந்து) செயற்படுத்துகின்றது. இதுகருதியும் தமிழ்ப்பெருமக்கள் தமிழ்நாட்டு அரசை—அதன் முதல்வர் டாக்டர் கலைஞரை—அமைச்சரவையை உள்ளம் நிறைந்த மகிழ்வுடன் பாராட்டக் கடமைப்பட்டவர்கள்.

## தமிழ் மந்திரம் எது ?

தமிழின் பேரிலக்கண நூல் தொல்காப்பியம் மறையையும் மந்திரத்தையும் பின்வருமாறு விளக்குகின்றது :

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப''—

என்று இந்நூற்பா குறிக்கின்றது. இந்நூற்பாவின் ஈற்றில் உள்ள 'என்ப' என்னும் சொல் 'என்று முன்னோர் சொல்லுவார்கள்' என்னும் பொருளைக் கொண்டது. இது கொண்டு இக்கருத்து தொல்காப்பியத்திற்கு முற்பட்ட தொன்மைக்காலத்திலேயே உள்ளது என்பது விளங்கும். தமிழ்ப் புலமை சான்ற சான்றோர் யாவரும் நிறைமொழி மாந்தர்களே. அவர்கள் வலியுறுத்திக் கூறும் யாவும் மறைகளே. அம்மறைகளே மந்திரங்கள் என்பதை ''மறைமொழி தானே மந்திரம் என்ப'' எனும் அடியில் உள்ள ''தானே'' எனும் சொல் உறுதிப்படுத்துகின்றது. இங்குக் குறிக்கப்படும் மந்திரம் தமிழ் மந்திரமே. இதற்கு உரை எழுதிய பேராசிரியர் என்னும் உரையாசிரியர்,

''தானே என்று பிரித்தார், இவை
தமிழ் மந்திரம் என்றற்கு''—என்றார்.

எனவே, தமிழ்ப்பெருஞ் சான்றோர்களது நூல்களாம் தமிழ் மறைகளிலிருந்து இறைவன் புகழ் தோய்ந்த பெயர் அமைந்த தொடர்களைத் தொகுத்துப் போற்றியாக்க வேண்டும். அருச்சனை—வழிபாடு என்பதைப் போற்றி என்றே வழங்கலாம்.

## முடிவுரை ஒன்றே

தமிழ் வழிபாட்டிற்கு—போற்றிக்கு விரிவான விளக்கம் கூறுதலும், சமயச் சான்றோரைச் சான்றுக்கு அழைத்தலும் இலக்கண இலக்கியங்களிலிருந்து சான்றுகள் காட்டுதலும் இவைபோன்ற எவையும் ஒரு தொடருக்கு முன் வேண்டாதனவே. அத்தொடர் பின்வருவது. இத்தொடரே முடிவுரை.

## தமிழ் நாட்டில் தமிழ்


தங்கபஸ்பம் சிட்டுக்குருவி லேகியம்



DR. S. K.

கலந்து சாப்பிடுங்கள். அதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கைப் பிரச்சனை. இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள், முதலியவற்றைக் குறைப்படுத்திப்புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.-யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்.

டாக்டர் S. காளிமுத்து, R.M.P.(IND),V.V.C.,A.M.I.H
பழனி சித்தர் வைத்தியசாலை (REGD) பழனி, S.I.
போன் : 16 தந்தி : சித்தர்

சென்னை கிளை ஆபீஸ் :
41, நைனியப்பன் தெரு, G. T., சென்னை-1.
போன் : 21448


## வெண்பாப் போட்டி—20

ஈற்றடி :
நாளும் வினையும் நலம்

முடிவு நாள் : 15—10—1971

பரிசு :
ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—
ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு : நேரிசை வெண்பாக்களே அனுப்பப்பெற வேண்டும். அஞ்சல் அட்டையிலேயே எழுதி அனுப்புதல் வேண்டும்.

# பாலை சோலையாகிறது



கவிஞர்களின் கனவுகள் பல, காலப்போக்கில் நனவாகிக் கொண்டு வரும் உண்மையினை இந்த உலகம் அறிந்து கொண்டிருக்கிறது.

முதலில், கவிஞர்களின் கனவுகள் பலருக்கு வியப்பாகவும் வேடிக்கையாகவும் இருந்தாலும் கூட அவை நனவாகி வரும் போது, உலகம் அந்த நற்பயனைத் துய்க்க மறுத்ததில்லை.

‘பாலைவனம் சோலைவனம்
ஆக வேண்டும்;
பசுங்கிளிகள் அங்கிருந்து
பாட வேண்டும்’

என்று, கவிமணி தேசிக விநாயகம் அவர்கள் பல்லாண்டுகளுக்கு முன்பு கனவு கண்டார்கள். ‘அன்புடைமை’யின் இன்றியமையாமையை வலியுறுத்த வந்த திருவள்ளுவர் - ‘அன்பின் வழியது உயிர்நிலை’ என்று பாடிய திருவள்ளுவர்—

‘அன்பகத் தில்லா உயிர்
வாழ்க்கை
வன்பாற்கண் வற்றல்
மரந்தளித்தற்று’

என்னும் குறட்பாவின் வாயிலாக, ‘அன்பில்லாத உயிர் வாழ்க்கை, பாலைவனத்தில் பட்ட மரம் தளிர்த்தாற் போன்றது’ என்று கூறுகிறார். பாலைவனத்தில் பசுமரமே தளிர்க்காது என்றால், பட்டமரம் தளிர்ப்பதெங்கே ?

‘பாலை’ எப்படி உருவானது என்பதைப் பழந் தமிழ் இலக்கியங்களிலிருந்து நாம் அறிய முடிகிறது. பழந்தமிழ்ப் புலவர்கள், நிலத்தைக் ‘குறிஞ்சி’, ‘மருதம்’, ‘முல்லை’, ‘நெய்தல்’ என நால்வகையாகப் பிரித்துக் காட்டினர். ஆம். தொடக்கத்தில் ‘பாலை’ யில்லை. பின்னர், காலப்போக்கில் ‘முல்லையும் குறிஞ்சியும் நல்லியல்பிழந்து’, நிலையில் திரிந்து, பாலையாயிற்று என்பர். ‘பாலை’யின் வெம்மையையும், அஃது உயிர்களுக்கு உண்டாக்கும் வெங்கொடுமையையும், அதன் வேறு பல தன்மைகளையும் இலக்கியங்கள் விரிவாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் உணர்த்துகின்றன.

‘கற்றவர் ஏத்தும் கலி’ எனப் போற்றத் தக்க ‘கலித்தொகை’யில் ‘பாலைக்கலி’ என்றே ஒரு ‘பகுதி’யுள்ளது. இப் ‘பாலைக்கலி’ யைப் பாடியவர், ‘பெருங்கடுங்கோ’. இவர், பாலை பாடிய காரணத்தால் ‘பாலை பாடிய பெருங்கடுங்கோ’ என்றே பெயர் பெற்றார். இவர் தவிர, ‘பாலைக் கௌதமனார்’ என்றொரு புலவரும் அந்நாளில் வாழ்ந்து இலக்கியத் தொண்டு புரிந்துள்ளார். ‘பதிற்றுப்பத்து’ என்னும் நூலில் மூன்றாம் பத்துப் பாடியவர் இவரே.

சில இடங்களில் மழை பெய்யாமையாலோ, ஒருகால் மழை பெய்தாலும் மேற்பரப்பு மணற்பாங்காகவோ, பாறையாகவோ இருப்பதால் நீர் சுவறிப் போவதாலோ அந்தப் பகுதி நீர்வளமில்லாமற் போகும்—வறண்டு போகும். இத்தகைய நிலப் பகுதிகளில் பயிர், பச்சைகள் செழித்து வளர மாட்டா.

இது தவிர, மழை மறைவுப் பிரதேசங்களில் மழையின்மையாலும், ‘பாலை’ தோன்றக் கூடும். மழையின்மை அல்லது வறட்சி, வெப்பமண்டலப் பாலைவனத்தின் சிறப்பியல்பாகும். வெப்ப மண்டலப் பாலைவனங்கள் என்றால், அவை முற்றிலும் வறண்டவையல்ல. அப்பகுதிகளில் முறையாக மழை பெய்வதில்லையே தவிர, எப்போதாவது மழை பெய்யும். அப்படிப் பெய்யும் மழை, பயிர் வளர்ச்சிக்குப் பயன்படத்தக்க அளவாக இராது. ஒரு கால், பெரு மழை பெய்தாலும், பெய்யும் மழை அங்கு தேங்கி நிற்பதில்லை. அது, வெள்ளமாகத்திரண்டு, வழிந்தோடி விடும். இதனாலும், அந்தப் பகுதிக்கு, ஆக்கமில்லை.

பொதுவாக, வெப்ப மண்டலப் பாலைகளில் ஆங்காங்குச் சில ‘பசுந்திடர்கள்’ காணப்படும்; அந்தப் பசுந்திடர்களில் ஓரளவு நீர்ப் பாசன வசதியிருக்கும். நீர்ப்பாசன வசதியுள்ள இந்த இடங்களில், கோதுமை, தானியம், பருத்தி, பேரீச்சை, அத்தி ஆகிய மரங்கள் நன்கு வளரும். அந்தப் பாலைவனப் பசுந்திடர்களில் வாழும் மக்கள் பேரீச்சம் பழம், உப்பு, தோல் பொருள்கள் ஆகியவற்றைக் கொண்டு வாணிகம் செய்கின்றனர். கால்நடைகளை வளர்க்கின்றனர். இவர்கள், தங்கள் போக்குவரத்துக்கும் வாணிகப் பொருள்களைக் கொண்டு செல்லவும் ஒட்டகங்களையே பயன்படுத்துகின்றனர். ஒட்டகத்தின் உடல் அமைப்பு, பாலைவனத்தில் பயணம் செய்வதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. அது மட்டுமல்ல—நீர் வசதியற்ற அந்தப் பாலைவனத்தில் — வெப்பம் நிறைந்த அந்தப் பாலைவனத்தில் பயணம் செய்யும் ஒட்டகம், தனக்குப் பல நாட்களுக்கு வேண்டிய குடிநீரை ஆவியாக்காமல் சேகரித்து வைத்துக் கொண்டு, தனக்குத் தேவையானபோது பயன்படுத்திக் கொள்ளத்தக்க ‘இயற்கையமைப்பு’க் கொண்டதாகவும் இருக்கிறது. எனவேதான், ஒட்டகத்திற்குப் ‘பாலைவனக் கப்பல்’ எனும் பெயர் தோன்றியது போலும்!

மழையின்மை அல்லது வறட்சியைச் சிறப்பியல்புகளாகக் கொண்டவை வெப்பமண்டலப் பாலைவனங்கள். ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள சகாராவும் கலகாரியும், ஆசியாவிலுள்ள தார்ப் பாலைவனமும், அரேபி



1-10—3

யாப் பாலைவனமும் ஆஸ்திரேலியாவிலுள்ள மேற்குப் பாலைவனமும், தென் அமெரிக்காவிலுள்ள ஆட்டக்காமா பெருவியப் பாலைவனமும், கலிபோர்னியா அருகிலுள்ள கொலராடோப் பாலைவனமும் வெப்பமண்டலப் பாலைவனங்களாகும்.

இத்தகைய வெப்பமண்டலப் பாலைவனங்களில், நிழல் தரும் மரங்களை வளர்த்துக் கோடையிலே குளிர்தரும் சோலைகள் எழுப்பி அங்கு இளைப்பாறித் திரும்பும் வகையில் சாதனை புரிந்துள்ளது விஞ்ஞான உலகம் என்பது நம்மில் பலருக்கு நம்ப முடியாத செய்தியாக இருக்கலாம். ஆனாலும், அது அப்பட்டமான உண்மையாகும்.

அண்மையில் ஒரு பிரிட்டிஷ் நிறுவனம், இத்தகு வியக்கத்தக்க சாதனையைப் புரிந்துள்ளது. அது, சகாராப் பாலைவனத்தில் 400 ஏக்கர் மணற்பரப்பிற்கு 'மண்சிகிச்சை' யளித்து, மரம் வளர்த்துக் காட்டியிருக்கிறது. கடந்த ஆண்டு, கொதிக்கும் மணல் வெளியாக இருந்த அந்தப் பகுதியில் இப்போது 60,000 யூகலிப்ட்ஸ் மரங்கள் தளதளவென்று ஓங்கி வளர்ந்து நிழல் தருகின்றன. முன்பு வெப்பக் காடாக-கொதிக்கும் மணல் வெளியாக விளங்கிய அந்தப் பகுதியே இப்போது பசுமையாகவும் குளுமையாகவும் மாறிக் காட்சியளிக்கிறது. இதனை நம்மிலே பலர் நம்பாதது—நம்ப முடியாதபடி இருப்பது வியப்பன்று. இம்முறையைக் கையாண்டு வெற்றி கண்டுள்ள பிரிட்டிஷ் நிறுவனம் முதலில் இதைப்பற்றி விளக்கிய போது அந்த நாட்டிலேயே நம்ப மறுத்தவர்கள் இப்போது அந்தக் 'குளிர்மரச்சோலை'க்குச் சென்று மரநிழலில் இளைப்பாறித் திரும்புகின்றனர்.

ரப்பர்க் கூழும், தாது எண்ணெய்யும் கலந்த (யுனிசால்-71) கலவையைத் தெளிப்பதுதான் அவர்கள் செய்த 'மண் சிகிச்சை'. இந்த 'மண்சிகிச்சை', பெரும் புழுதிப் புயல் ஏற்பட்டாலும் மணல் அரிப்பு ஏற்படாமல் காப்பாற்றுகிறது. கலவை தெளித்த மணற் பகுதியில், செடிகள் வேர்விட்டு வளரும் வரை மணல் அரிப்பு ஏற்படாமல் தடுக்கப்படுகிறது. செடிகள் வளர்ந்த பிறகு, அரிப்பு ஏற்பட்டால், அதனால் செடிகள் பாதிக்கப்படுவதில்லை.

இப்படி 'மண் சிகிச்சை', மூலம், சகாரா பாலைவனத்தில் 400 ஏக்கர் மணற் பரப்பில், 'குளிர் தரு நிழற் சோலை'யை உருவாக்கி வெற்றி கண்டிருப்பதால், இப்போது லிபியா அரசு, மேலும் 6,000 ஏக்கர் மணற் பரப்பில் 'மண் சிகிச்சை' யளித்துப் பயிர் செய்யத் திட்டமிட்டிருக்கிறது என்று பிரிட்டிஷ் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள ஒரு செய்தி குறிப்பிடுகிறது.

ஆம்! பல ஆண்டுகளுக்கு முன், கவிமணி கண்ட கனவு நனவாகி வருகிறது! இல்லையா?

—சாமி


# நெய்வேலியும்...நமது நாடும்

**நெய்வேலி யூரியா:**
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரொஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

**யூரியா:** பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

**மின்விசை:**
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.



**சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ**
வீடுகள், ஓட்டல்கள், பல்வேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.

**தார்ப்பொருள்கள்:**
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலினால், பாலிவாலெண்ட் ஃபினல் கலவை.

**நெகோலின்:**
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தர வல்ல இன்ஸுலேட்டர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஐவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது

**நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்.,
நெய்வேலி—1**

FDSNLC945TM

# கேளுங்கள் கொடுக்கப்படும்!

**வேளாண்மை பற்றிய வினுக்களே கேட்கப்படவேண்டும்**

**வினு :** பயிர்களுக்கு நேரடியாக இடும் யூரியாவும், தண்ணீரில் கரைத்துத் தெளிக்கும் யூரியாவும் ஒன்ரு? அல்லது வெவ்வேரு?

கிராம வாஞெலி மன்றம்,
வெள்ளாகுளம்,
திருச்சி மாவட்டம்.

**விடை :** தெளிப்பதற்காகப் பயன்படுத்தும் யூரியாவில் 'பையூரேட்' என்னும் இரசாயனப் பொருள் 0·25 சத அளவுக்குமேல் இருக்கக் கூடாது. மிக நுண்ணிய சிதறல்களாகத் தெளிக்கப்படும் பொழுது அதிகபட்சம் 0·5 சதம் வரை 'பையூரேட்' இருக்கலாம். தற்பொழுது வணிகச் சந்தையில் கிடைக்கும் யூரியாவில் 'பையூரேட்' 0·25 சதத்திற்கும் குறைவாகத்தான் உள்ளது. எனவே, பயிர்களுக்கு நேரடியாக இட, வாங்கும் யூரியாவையே தெளிப்பதற்கும் பயன்படுத்தலாம். ஆனுல் யூரியாவை அதிக வெப்பமான இடத்தில் வைத்திருக்கக் கூடாது. அவ்வாறு வைத்திருந்தால் யூரியாவில் இரசாயன மாற்றம் ஏற்பட்டு 'பையூரேட்' அதிகமாகி விடும். எனவே, அதிக வெப்பமான இடங்களில் வைத்திருந்த யூரியாவைத் தெளிப்பதற்குப் பயன்படுத்தக் கூடாது.

**வினு :** யூரியாவைத் தண்ணீரில் கலந்து மாஞவாரிப் பயிர்களுக்கும் தெளிக்கலாம் என்று கூறப்படுகிறது. ஏக்கருக்கு எவ்வளவு யூரியா, எவ்வளவு நீரில் கலந்து தெளிக்க வேண்டும்?

வெள்ளியங் காட்டுப் புதூர்
உழவர் விவாதக்குழு,
கோவை மாவட்டம்.

**விடை :** மாஞவரிப் பயிர்களுக்கும், இறைவைப் பயிர்களுக்கும் 1 முதல் 2 சதம் யூரியா நீர்க்கரைசலை விசைத் தெளிப்பாஞல் இலைகளின் மேல் தெளிக்கலாம். 1சத யூரியா கரைசல் கிடைக்க, ஒரு கிலோ யூரியாவை 100 லிட்டர் தண்ணீரில் கரைக்க வேண்டும். 2 சத யூரியாக் கரைசல் கிடைக்க, 2 கிலோ யூரியாவை 100 லிட்டர் தண்ணீரில் கரைக்கவேண்டும். ஏக்கருக்கு ஒரு முறை 2 கிலோ யூரியாவை இலைகளின் மேல் தெளிப்பதஞல் பயிர் நல்ல வளர்ச்சியடைகிறது. இவ்வாறு இரு முறைகளோ அல்லது மூன்று முறைகளோ கூட இலைகளின்மேல் தெளிப்பதஞல் பயிரின் வளர்ச்சியைச் செழுமைப்படுத்தி அதிக மகசூல் பெற்றுப் பயனடையலாம். ஆஞல் கலப்படமற்ற தூய்மையான யூரியாவையே பயன்படுத்த வேண்டும்.

**வினு :** கரும்பின் தோகை மீது யூரியாக் கரைசலைத் தெளிக்க எவ்வளவு யூரியாவை எவ்வளவு தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்?

காஞ்சிகோவில்
கிராம வாஞெலி மன்றம்,
கோவை மாவட்டம்.

**விடை :** கரும்பின் தோகை மீது யூரியாக் கரைசலைத் தெளிக்க வேண்டுமாஞல் 2·5 சத யூரியாக் கரைசல் தயாரித்துக் கொள்ளவேண்டும். ஒரு கிலோ யூரியாவை 40 லிட்டர் தண்ணீரில் கரைத்தால் 2·5 சத யூரியாக் கரைசல் கிடைக்கும். ஒரு ஏக்கர் கரும்புக்கு 200 பவுண்டு தழைச் சத்தை முழுமையாக நிலத்தின் மூலமாக அளிப்பதைக் காட்டிலும், 100 பவுண்டு தழைச் சத்தை நிலத்தின் மூலமாகவும், 50 பவுண்டு தழைச் சத்தைத் தோகைகளின் மூலமாகவும் அளிப்பது சிறந்தது. இவ்வாறு செய்வதால் 4·5 சதம் கரும்பு மகசூல் அதிகமாவதுடன் 50 பவுண்டு (23 கிலோ) தழைச்சத்து மீதமாகிறது. இதன் காரணமாக வருமானம் பெருகுவதுடன், உரச்செலவு, உரமிடும் செலவு ஆகியவையும் குறைகிறது.

* * *

**வினு :** ஐ. ஆர். 8 நெல்லிற்கு எந்த அளவுக்கு எப்படி நீர் பாய்ச்ச வேண்டும்?

கபிலமலை
கிராம வாஞெலி மன்றம்,
சேலம் மாவட்டம்.

**விடை :** ஐ. ஆர் 8 நெல் நடவு செய்த முதல் 14 நாட்கள் பயிர் வேர்பிடித்து பச்சை கட்டும் பருவமாவதால் இலேசான உருட்டுத் தண்ணீரே போதுமானது. நட்ட 15-ஆம் நாள் முதல் 30-ஆம் நாள்வரை முன் தூர் கிளைக்கும் பருவமாகும். இப் பருவத்தில் 5 சென்டி மீட்டர் (2 அங்குலம்) தண்ணீர் தேக்கி நிறுத்த வேண்டும்.

நடவு செய்த 31-ஆம் நாளிலிருந்து 35-ஆம் நாள்வரை நிலத்தில் வெடிப்புகள் தோன்ருதவாறு நீரை வடிய

# விவசாயத்திற்கும், வீட்டிற்கும் கிராமகுடிநீர்த்திட்டங்களுக்கும்

## பலவித ஈசன் பம்புகள்




## ஈசன் இன்ஜினீயரிங் கம்பெனி லிட்

5-7 செகண்ட் லைன் பீச், சென்னை-1. தந்தி: EASUN போன்: 293வ

விட வேண்டும். இவ்வாறு செய்வது களையெடுக்கவும் அதிகத் தூர்கள் கிளைக்கவும் உதவும்.

நடவு செய்த 36-ஆம் நாள் முதல் 45-ஆம் நாள்வரை பின்தூர் கிளைக்கும் பருவமாகும். இப்பருவத்தில் 5 சென்டி மீட்டர் (2 அங்குலம்) தண்ணீர் நிறுத்த வேண்டும். இதனால் அதிக தூர்கள் கிளைக்க வழிபிறக்கும்.

நடவு செய்த 46-ஆம் நாளிலிருந்து 50-வது நாள்வரை மீண்டுமொரு முறை நிலத்தில் வெடிப்புகள் தோன்றாத அளவுக்குத் தண்ணீரை வடித்து விட வேண்டும். இது மேலும் தூர் கிளைப்பதைக் கட்டுப்படுத்தி, கிளைத்த தூர்களில் கதிர்கள் உருவாக உதவும்.

நடவு செய்த 51ஆம் நாளிலிருந்து கதிரில் நெல் மணிகள் முதிர்ச்சியடையும் வரை 5 முதல் 10 சென்டி மீட்டர் (2 முதல் 4 அங்குலம்) உயரத்திற்குத் தண்ணீர் தேக்கி வைத்திருப்பது நல்லது. இதனால் கதிர்கள் நன்கு தோன்றவும், தோன்றிய கதிர்களில் பால் பிடித்து நெல் மணிகள் உருவாகவும் உதவும்.

அறுவடைக்கு 7 முதல் 10 நாட்களுக்கு முன்பு தண்ணீரை வடித்துவிட வேண்டும். இவ்வாறு செய்தால் நெல்மணிகள் பழுத்து முதிர்ச்சியடையக் கூடும்.

* * *

**வினா :** களர் நிலத்திற்கேற்ற பி. வி. ஆர். 1 நெல் எப்பட்டத்திற்கு ஏற்றது? நாற்று விட்டு நடுதல் நலமா? அல்லது விதைகால் ஏற்றதா? உர சிபாரிசு எவ்வளவு?

நடராஜன், நரியாப்பட்டு
(வ.ஆ.மா.)

**விடை :** பேராவூரணி-1 (பி.வி. ஆர்.-1) நெல் சம்பா பட்டத்திற்கு (ஜூலை—ஆகஸ்டு முதல் டிசம்பர்—ஜனவரி வரை) ஏற்றது. நாற்று விட்டு நடுவதே நல்லது. ஒவ்வொரு தூருக்கும் 3 பயிருக்குக் குறையாமல் வைத்து நடவு செய்ய வேண்டும். இந்த ரகத்தின் வயது 145 நாட்கள். இந்த ரகம் பயிரிட அடி உரமாக 11 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச்சத்து, 7 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை இட வேண்டும். அந்த அளவுக்கு இரசாயன உரம் இட 55 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 24 கிலோ யூரியா, 90 கிலோ சூப்பர் பாஸ்பேட், 11 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். மேல் உரமாக 7 கிலோ தழைச்சத்தை (35 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 15 கிலோ யூரியா) இரு சம பாகமாகப் பிரித்துக் கொண்டு இரு தடவைகளில் இடவேண்டும். பேராவூரணி-1 என்ற களர் ஒட்டு நெல் ஏக்கருக்கு 1,200 கிலோ மகசூல் கொடுக்க வல்லது.

* * *

**வினா :** தற்பொழுது முந்திரி பயிரிடத் தமிழ்நாடு அரசு கடன் கொடுக்கிறதா? கொடுத்தால் எப்படிப் பெறுவது?

பி.எஸ்.கே. சந்திரன்
பட்டிவீரன்பட்டி

**விடை:** புதிதாக முந்திரித் தோப்பு ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை ஏக்கருக்கு ரூபாய் 150 விதமும், தனிப்பட்ட ஒருவருக்கு ரூ. 3,000 வரையும் நீண்டகாலக் கடன் கொடுக்கிறது. இக்கடனை முந்திரி நட்ட 6-ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுத் தவணைகளில் $5\frac{1}{2}$ சத வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டும். இக்கடன் பெற இதற்கென உள்ள மனுவைப் பூர்த்தி செய்து உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்கள் மூலம், உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களுக்கு அனுப்புங்கள்.

* * *

**வினா :** உயர்ந்தரக நக்குவாரி தென்னம் பிள்ளை எங்குக் கிடைக்கும்? முகவரியுடன் தெரிவிக்கவும்.

திருவாஞ்சியம்,
கோதண்டபாணி,
தஞ்சை மாவட்டம்.

**விடை :** உயர்ந்த ரக நக்குவாரித் தென்னம்பிள்ளைகள் வாங்க உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களின் உதவியை நாடுதல் நல்லது. அல்லது பின் கண்ட முகவரிக்கு எழுதிக் கேட்டு விவரமறிந்து முன்பணம் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

உதவி எண்ணெய் வித்து
நுண்ணறிஞர்,

தென்னை ஆராய்ச்சி நிலையம்,
வேப்பங்குளம் (அஞ்சல்),
தஞ்சாவூர் மாவட்டம்.

மேற் கூறிய முகவரியிலிருந்தும் உயர்ந்தரகத் தென்னம்பிள்ளைகள் கிடைக்க வில்லையானால், கேரள மாநிலத்தில் காயாங்குளம் என்ற இடத்தில் உள்ள மத்திய தென்னை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் அவர்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

* * *

**வினா.** இராமநாதபுரம் மாவட்டத்தில் மண் பரிசோதனை செய்ய மண் மாதிரிகளை எங்கு அனுப்பவேண்டும்? முகவரியைத் தெரிவிக்கவும்.

கா. பாலசுப்பிரமணியன்
விருதுநகர்.

**விடை :** இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பரமக்குடியில் உள்ள மண்பரிசோதனை நிலையத்திற்கு மண் மாதிரிகளை அனுப்ப வேண்டும். மண் மாதிரி எடுக்க உங்கள் ஊர்நல ஊழியர் அல்லது துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்கள் உதவியை நாடினால் அவர்களே முறைப்படி எடுத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலமாகச் சோதனைக்கு அனுப்பி வைப்பார்கள். மண்மாதிரிகளை நீங்களே அனுப்புவதாக இருந்தால் பின்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

உதவி மண் இரசாயன
வல்லுநர்,

மண் பரிசோதனைச்சாலை,
பரமக்குடி (அஞ்சல்),
இராமநாதபுர மாவட்டம்.

இரவின் அமைதியிலே, காற்ருடி சுற்றுகிறது.

அவனும் ஓயவில்லை. இந்தப் பத்தாண்டுக் கால உழைப்பின் முத்திரையாக, அவனது முதுகே வளைந்திருக்கிறது.

கோப்புக்கள், கோவையாக, ஒன்று முடிய—மற்ருென்ருக உருவாகி, அவனைச் சுற்றிலும் அடுக்கடுக்காகக் குவிந்துள்ளன.

தன்னை மறந்து இவற்றிடையே லயித்து விடுவதில் அமைதி இருக்கிறதோ !

"என்ன சார் வீட்டு நினைவு வரலையா ?"

"போகணும் சார்—நாலு நாள் தபால் வந்தமேனிக்கு இருக்கு. பதியணும்".

உடனிருந்த ஒருவரும் போய் விடுகிருர்.

யாருமே இல்லாத தனிமை.

சுழலும் காற்ருடியின் இரைச்சல் மட்டுமே கேட்கிறது.

அவன் ஏறிட்டுப் பார்க்கிருன்.

கொட்டாவி வருகிறது.

வீட்டு நினைவும் இடையில் நுழைகிறது.

இப்போது, மூலைக்கு மூலை, அங்கே என்னென்ன ஆர்ப்பாட்டங்கள் நடந்து கொண்டிருக்கும்? அவள் தனிமையில் நின்று தவித்துக் கொண்டிருப்பாள். வேறு என்ன செய்ய ?

காலையில் புறப்படும்போது, அவள் ஏதோ சொல்லி அனுப்பவில்லையா ?

என்ன சொன்னுள் ?

அவன் முகத்தை அழுத்தித் துடைத்துக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்து கொள்கிருன்.

வீட்டிலே என்ன இல்லை ?

எதிர்க் கேள்வியும் விழுகிறது.

அங்கே என்ன இருக்கிறது ?

அவன் வறட்சியுடன் சிரித்துக் கொள்கிருன்.

அந்த நினைவுகள் தொடரும் போது, அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

அவள் எதையோ வாங்கி வரச் சொன்னுளே!

நினைவுக்கு வரவில்லை.

கதவை இழுத்து அடைக்க வேண்டியவன் எட்டிப் பார்க்கிருன்.

அவனும் புறப்படுகிருன்.

வாசலில் அடியெடுத்து வைப்பதற்குள், 'அப்பா வந்தாச்சு; அப்பா வந்தாச்சு', என்ற அடுக்கடுக்கான குரல், அலைமோதி வரவேற்கிறது.

தனது காலைச் சுற்றிக்கொண்ட நான்காவது மகனைத் தூக்கிக் கொஞ்சிக்கொண்டே, உள்ளே நுழைந்தபோது, வேர்வைக் கோலத்தோடு எதிரே வருகிருள் இல்லத்தரசி.



சென்னையில் அதிசயம் !



ஜே. எம். ரூபஸ்ரீ — புதுவை மாநில முதல்வர் பரூக் மரைக்காயர்

சொன்னது சொன்னபடி நடக்கிறது. உங்களுக்கு எவ்வளவு தீராத சோதனைகள் ஏற்பட்ட போதிலும் எங்களை ஒரு முறை சந்தித்துப் பல நன்மைகளையும், உண்மைகளையும் மிகத் தெளிவாக தெரியலாம். அரசியல் தலைவர்கள், சினிமா நடிகர்கள், மற்றும் பல லட்சகணக்கான மக்களின் கைரேகைகளைப் பார்த்து 25 வருடம் அனுபவம் பெற்று வருபவர்களும் எ. எ. ரவி சங்கர் முதல் நூற்றுக் கணக்கான கைரேகை ஜோதிட சாஸ்திரியர்களை உருவாக்கியவர்களுமான மனோதத்துவ மருத்துவர் டாக்டர் எம். நயினா முகமது, கைரேகை அரசி ஜே. எம். ரூபஸ்ரீ ஆகிய இருவரையும் இன்றே சந்தியுங்கள். முக்கிய கவனிப்பு : நீங்கள் நினைத்த காரியம் எதுவாக இருந்தாலும் வெற்றி அடைய செய்துதரப்படும். நீங்கள் வெற்றி பெற்றபிறகே சார்ஜ்-பணம் வாங்கப்படும். கைரேகையின் தரத்தைப் பொறுத்து சார்ஜ் உண்டு. இன்னும் சென்னையில் ஒரு மாத காலம் தங்குவார்கள்.

ஜே. எம். ரூபஸ்ரீ,
ரூம் நெ. 3,
எக்மோர் லாட்ஜ், சென்னை-8.
எழும்பூர் ரயில்வே ஸ்டேஷன் எதிரில்.

டாக்டர் எம். நயினா முகமது,
ரூம் நெ. 40, துவாரகா லாட்ஜ்,
தென்னந் லேன், சென்னை-8
தொலைபேசி எண் : 27284.


" கையை வீசிக்கிட்டு வந்து நிக்கிறிங்களே! காலையிலே, மெனக்கெட்டு வாசல் வரைக் கும் வந்து சொல்லி அனுப் பலையா ? "

" நினைவுக்கு வரலே. என்ன சொன்னே ? "

" நல்லா மறந்திங்க, பேபிக்கு ராத்திரிக்கி அமுல் இல்லே! அப்புறம் விடிய விடி யப் போராட்டமாத்தான் இருக் கப் போவுது. எனக்கு ஆவி இல்லே"—அவள் சலிப்போடு உள்ளே போகிறாள்.

அவன் அலுப்போடு உட்காரு கிறான்.

சுற்றிலும் செல்வங்கள்.

பாக்கி எங்கே ?

" எங்கே பசங்களைக் காணோமே!"

" பள்ளிக்கூடத்திலே ஆண்டு விழாவாம். போயிருக்காங்க. யாருமே சாப்பிடலே—இனி மேத்தான் " உள்ளிருந்து குரல் வருகிறது.

அவளும் ஓய்ந்துவிட்டாள்.

கணக்குக்கு எத்தனையாகிறது?

இத்தனைக்குப் பிறகும் இப் போதும் எத்தனையாவது மாசம்?

இயந்திரமா என்ன ?

ஒவ்வொரு தடவையும்தான் ' வைராக்கியம் ' பிசுபிசுத்துப் போகிறது.

நினைவு கசப்படைகிறது.

உள்ளிருந்து எந்தக் குழந் தையோ அலறியழும் குரல் வந்து மோதுகிறது.

" பவுடர் டப்பாவை பாப்பா காலிலே போட்டுட்டாள் "—

அவள் என்றைக்கோ பொறு மையை இழந்துவிட்டாள்.

போட்டவளுக்கு அடி விழு கிறது.

அழுகுரல் இரட்டையாகிறது. குழந்தைகள் என்றிருந்தால் சத்தம் இல்லாதிருக்குமா ?

அவள் எட்டிப் பார்க்கிறாள்.

" திரும்பவும் போறிங்களா ?"

" போகாமல் தீருமா ? "

அவன் எழுந்து புறப்படு கிறான் அமுல் வாங்க.

முற்றத்தில் இறங்கியவன் ஏறிட்டுப்பார்க்கிறான்.

எதிர்ச் சுவரில் பெரிய விளம் பரம்.

இரண்டுக்குமேல் எப்போதும் வேண்டாம்.

சிவப்பு முக்கோணம்

ஐந்தாண்டுகளுக்கு முன்பே, நினைத்து, முடிவு செய்திருக்க வேண்டும்.

அவன் திரும்பிப் பார்க் கிறான்.

கதவோரம் நின்று, சோகத் தின் உருவாக, அவளும் அதையே பார்த்துக் கொண் டிருக்கிறாள்.


சிறுசேமிப்பு
இன்றைய சேமிப்பு
நாளைய பாதுகாப்பு!
நாட்டுக்கும் வீட்டுக்கும்
நலந்தரும் திட்டம்
காற்றுள்ளபோதே
தூற்ற வேண்டும்
காசுள்ளபோதே
சேர்க்க வேண்டுமல்லவா?
சிறுசேமிப்பு
இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்க!
இயக்குநர்
சிறுசேமிப்பு நிறுவனம்
சென்னை-9

# பரிசு பெற்ற சிற்றூர்

முக்கடலும் சந்திக்கின்ற சிறப்பினைப் பெற்று நம் இந்தியாவில் தென் கோடியில் அமைந்துள்ள குமரி மாவட்டத்தில் குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் அங்கமாகத் திகழும் சிற்றூர் மணவாளக்குறிச்சி.

ஆழ் கடலில் ஆர்ப்பரிக்கும் அலைக்கரங்கள் தழுவுகின்ற எழில்சிந்தும் இந்தச் சிற்றூர் அரபிக்கடலோரம் அமைந்துள்ளது. நெஞ்சையள்ளும் நீலக்கடல் ஒரு பக்கம், பசுமைப் புரட்சியின் விளைவால் பச்சைப்பசேல் என்று தோன்றும் நெல் வயல் மறு பக்கம், அவற்றின் ஊடே நெடிதுயர்ந்த தென்னையும், கமுகும் நிறைந்த தோப்புகள், அவற்றிற்குத் தண்ணீரைத் தட்டின்றித் தருவதற்கான வளைந்தோடும் வளம் மிகு வள்ளியாறு இவை தான் மணவாளக் குறிச்சியில் காணக் கிடைக்கின்ற மனங்கவர் காட்சிகள். இந்தச் சிற்றூரின் பரப்பளவு 4.70 சதுர மைல்களாகும். மொத்தம் 13,672 மக்கள் தொகையுள்ள இச்சிற்றூரில் 6,939 ஆண்களும் 6,733 பெண்களும் உள்ளனர்.

### வேளாண்மை

பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட அமோக விளைச்சல் திட்டம் இச் சிற்றூர் மக்களைப்பெரிதும் கவர்ந்துள்ளது. இச் சிற்றூர் விவசாயிகள் அனைவரும் அதிசய நெல் ஐ. ஆர். 8 ரகத்தையே பயிரிட்டு வருகின்றனர். அது மட்டுமின்றி வேளாண்மைத் துறையினர் தெரிவிக்கின்ற கட்டுக்கோப்பு, சாகுபடி முறைகளைக் கண்ணுங்கருத்துமாகப் பின்பற்றி வருகின்றனர்.

இச் சிற்றூர் மக்கள் இயற்கை உரம் தயாரிக்கும் திட்டத்தில் போட்டி நடந்த ஆண்டில் 480 எருக் குழிகள் வெட்டி 2,880 மெட்ரிக் டன் இயற்கை எரு உற்பத்தி செய்துள்ளனர். மேலும் இரசாயன உரங்களையும் அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். 196 மெட்ரிக் டன் இரசாயன உரங்களைப் பயன்படுத்தி உள்ளனர். இரசாயன உரங்களைப் பயன்படுத்திய விவசாயிகளின் எண்ணிக்கை 2,672 ஆகும். தழை உரப்பயிர்களைப் பயிரிடும் வழக்கத்தினையும் மேற்கொண்டுள்ளனர்.

### வேளாண்மைச் சிறப்புத் திட்டம்

குமரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட வளர்ச்சி அலுவலர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் ஆகியவர்களின் அரிய முயற்சியால் சேரமங்கலம் பெரியகால்வாயையும், சிறிய கால்வாயையும் இணைத்ததன்மூலம் புஞ்சையாகக் கிடந்த 100 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று, நஞ்சையாகக் காட்சி தருகின்றது. ரூ. 18,000 மதிப்பீட்டுத்தொகையில் தமிழக அரசு மூன்றில் இரண்டு பங்குத் தொகையும் அளித்துள்ளது. இதனால் வேளாண் பெருங்குடி மக்கள் பெரிதும் அரசைப் பாராட்டியுள்ளனர்.

**இந்தியாவிலேயே சிறந்த சிற்றூராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மணவாளக் குறிச்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறது இக் கட்டுரை.**

### தொழில் :—

வேளாண்மைக்கு அடுத்தபடியாகக் கடலோரம் வாழும் மக்களின் முக்கியத் தொழில் மீன் பிடித்தலாகும். மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு நல்ல வகை நைலான் வலைகள் வழங்கப்பட்டுள்ளன. இங்குப் பிடிக்கப்படும் இறால் வகை மீன்கள் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொடுக்கின்றன.

மணல் ஆலை ஒன்று இங்கு இயங்கி வருகிறது. இந்த ஆலையில் 1,500 தொழிலாளிகள் வேலை செய்கின்றனர். கடற்கரையைச் சுற்றியுள்ள சுமார் இரண்டு மைல் தொலைவிலுள்ள கடல் மணலை எடுத்து அந்த மண்ணில் இருந்து இல்மனைட், மோனேசைட், சர்க்கலைட், குட்டைல் கார்னட், ஆகிய உலோகப் பொருட்கள் பிரித்து எடுக்கப்படுகின்றன. இல்மனைட்டிலிருந்து டைட்டானியம் டி ஆக்ஸைடு தயாரிக்கப்படுகின்றது. இப்பொருள் பெயின்ட், ரப்பர் சாமான்கள், டெரிலின் துணிகள் முதலியவைகள் தயாரிக்கத் தேவைப்படுகிறது. டைட்டானியம் உலோகமும் தயாரிக்கப்படுகிறது. இந்த உலோகம் மிகச் சக்தி வாய்ந்ததாகும்.

இந்த மணல் வகைகள் மணவாளக் குறிச்சியில் மிக அண்மையில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க குளச்சல் துறைமுகத்திலிருந்து அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நியச் செலாவணி பெறப்படுகிறது.

தென்னந்தோப்பு மிகுதியாக உள்ள இச்சிற்றூர் மக்களின் இன்னொரு முக்கியத் தொழில் கயிறு தயாரிப்பதாகும். தேங்காய் நார்களை ஊற வைத்துக் கயிறு தயாரிப்பதற்குத் தேவையான உப்புவளம் கொண்ட தண்ணீர் இருப்பதால் இங்கு இத்தொழில் சிறப்புப் பெற்றுள்ளது. பெண்கள் தென்னங்கீற்றுகள் பின்னுதல், பாய் முடைதல், துணி நெய்தல் ஆகிய துறைகளில் ஈடுபட்டுக் குடும்ப வருவாயைப் பெருக்கியுள்ளனர்.

### கல்வி :—

இச்சிற்றூர் மக்கள் கல்வியைக் கண்ணெனக் கருதுகின்ற

ளர். இங்கே 5 துவக்கப் பள்ளிகளும் 1 உயர் துவக்கப்பள்ளியும், 2 உயர்நிலைப் பள்ளிகளும், ஒரு கலைக் கல்லூரியும் கல்விச் செல்வத்தை வாரி வழங்கி வருகின்றன. பள்ளிகளில் நண்பகல் உணவுத் திட்டம் நன்முறையில் செயல்பட்டு வருகிறது.

**கிராம வேலைத் திட்டங்கள் :—**

கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இச்சிற்றூரில், 12 சாலை வேலைகள், ரூ. 35,700 செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இச்சாலைகளின் மொத்த நீளம் 72 கிலோ மீட்டர். குடி தண்ணீர்த் திட்டத்தின் கீழ் 50,000 செலவில் பத்துக் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. இச்சிற்றூரிலுள்ள எல்லாச் சிற்றூர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளதுடன் இணைப்புச் சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. குருந்தங்கோடு ஊராட்சி ஒன்யப் பொது நிதியிலிருந்து ரூ. 5,500 மதிப்பீட்டில் மக்கள் களிப்பதற்காக மூன்று படித்துறைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், புதூர் துறை என்ற இடத்தில் பள்ளிக் கட்டடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தட்டான் விளை என்ற இடத்தில் போக்குவரத்திற்கு மிக இடையூறாக இருந்ததை நீக்கி ரூ. 10,000 மதிப்பீட்டில் ஓடையின் குறுக்கே சிறு பாலம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. சிற்றூர் மனித உழைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 3,000 மதிப்பீட்டில் 3 பர்லாங்கு நீளத்திற்குச் சாலை அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

**மின் வசதி :—**

இச் சிற்றூரிலுள்ள சிற்றூர் பெருஞ் சிற்றூர்கள் அனைத்திற்கும் மின்வசதி அளிக்கப்பட்டு இருள்மண்டிக் கிடந்த இடமெல்லாம் இன்று ஒளிமிக்க தாய்க் காட்சியளிக்கின்றன. 213 தெருவிளக்குகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன.

**கூட்டுறவு :—**

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்று, கொள்கையிலே உறுதிப்பாடு கொண்ட இச்சிற்றூர் மக்கள் மத்தியில், மூன்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன. மூன்று மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், ஒரு கூட்டுறவுப் பண்டகசாலையும், ஒரு நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் இயங்கி வருகின்றன. இச் சிற்றூர் மக்கள் நிலவள வங்கி மூலம் 3 லட்சம் ரூபாய்க்கும் மேலாகக் கடனாகப்பெற்று 12 நீர்ப்பாசனக் கிணறுகள் வெட்டப்பட்டு நீர் இறைக்கும் இயந்திரங்கள் இயக்கப்பட்டுள்ளன.

**குடும்ப நலத்திட்டம் :—**

அளவான குடும்பமே அழகான குடும்பம் என்ற கருத்தினை உள்ளத்திலே கொண்ட இச் சிற்றூர் மக்கள் குடும்ப நலத்திட்டத்தில் பெரிதும் ஆர்வங்கொண்டு குடும்ப நலத் திட்டத்தை ஏற்றுச் செயல்படுத்தி வருகின்றனர். தாய்மார்களுக்கு மகப்பேறு உதவி அளிக்கும் பொருட்டு ஒன்றியத்தின் சார்பில் இரண்டு தாய் சேய் நலவிடுதிகள் இயங்கி வருகின்றன.

**மகளிர் நலன்:—**

குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் செயல்படும் 51 குழந்தைகள் காப்பகங்களில் மணவாளக் குறிச்சி சிற்றூரில் இரண்டு குழந்தைகள் காப்பகங்கள் செயல்படுகின்றன.

இரண்டு வயது முதல் ஐந்து வயதிற்குட்பட்ட 45 குழந்தைகள் இக் காப்பகங்களில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். காலை 9·30 முதல் மாலை 3·00 மணி வரையிலும் வகுப்புகள் நடத்தப்படுகிறது. சிறு பாடல்கள், ஆரம்பக் கல்வி முறை, நல்ல பழக்க வழக்கங்கள் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுகின்றன.

' கேர் ' நிறுவனத்தாரால் வழங்கப்பட்டு வரும், உணவுப் பொருட்கள், குழந்தைகள் விரும்பி உண்ணும் உணவுப் பொருட்களாகத் தயாரிக்கப்பட்டு 80 குழந்தைகளுக்கும் 40 தாய்மார்களுக்கும் வழங்கப்படுகின்றன.

மணவாளக் குறிச்சி சிற்றூரில் மகளிர் மன்றம் 30 உறுப்பினர்களுடன் செயல்படுகின்றது. தையல் இயந்திரமும் இதர வேலைக்குரிய சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளன. எல்லா விதமான ஆக்கப் பணிகளிலும், சிறு சேமிப்பு, குடும்பநலத் திட்டம் ஆகியவற்றில் பெரும்பாலான உறுப்பினர்கள் தீவிரப் பங்கேற்று ஆக்கப் பணிகளில் ஆர்வமுடன் செயல்பட்டு வருகிறார்கள்.

**சிரணி :—**

' தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து தன்னலமற்ற பணியாற்றிடல் வேண்டும்' என்கிற அண்ணாவின் சிறப்பு மிக்க சீரணித் திட்டத்தின்கீழ் அண்ணா நினைவுப்பள்ளி ஒன்றைச் சீரணியினர் இச் சிற்றூரில் செம்மையாக நிர்மாணித்துள்ளனர்.

**தமிழக அரசின் வறட்சி நிவாரணத் திட்டம் :—**

வறட்சியால் வாடிய மக்களின் துயர் துடைக்கும் திட்டமாம் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் இச்சிற்றூரைச் சேர்ந்த படுநிலம் என்னுமிடத்தில் ரூ. 6,000 மதிப்பீட்டில் குடிநீர்க் கிணறும் கடலோர மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு ரூ. 40,000 மதிப்பீட்டில் மீனவ மக்கள் வாழும் புதூர் துறை கிராமத்தில் ரூ. 40,000 மதிப்பீட்டில் குழாய் மூலம் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் சீரும் சிறப்பு மிக்கதாக விளங்குகின்ற இச் சிற்றூரில் அனைவரையும் கவர்கின்ற வரலாற்றுப் புகழ் பெற்ற பகவதி அம்மன் கோவில் உள்ளது. தமிழ்த் திங்கள் மாசி முடிய பத்துநாட்கள்தொடர்ந்து நடைபெறும் இக்கோவில் திருவிழாவில் அண்டை மாநிலங்களிலிருந்தும், இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் சுமார் இரண்டு லட்சம் பேர் அம்மனை வணங்க வருவது இச் சிற்றூருக்கு மேலும் சிறப்பையும் பொலிவையும் ஊட்டுவதாக அமைந்துள்ளது.

**மாதவன் மட்டுமா?** மஞ்சள் நிறக் கந்தல் புடவையை அலங்கோலமாய் அள்ளிப் போட்டுக் கொண்டு ஓர் ஆரணங்கும் நின்றிருந்தாள் அந்த அறையினுள்ளே.

புழுதி மணலில் புதைந்து வெளிப்பட்ட பூங்கொத்துப் போல அவளது உடல், உடை இரண்டுமேஅழுக்கேறி இருந்தன; பழுப்பேறித் தோன்றின. எண்ணெய்யைக் கண்டு தலைக்கு எவ்வளவு காலம் ஆயிற்றே? முடியெல்லாம் செம்பட்டை தட்டிப் போய்ச் சிலிர்த்தும் சுருண்டும் குருவிக் கூடாய்ச் சிதறிக் கிடந்தன.

அவளது முகமோ........'சவ்-சவ்'—சீமைக் கத்திரிக்காயை விட, அதுங்கியும் பிதுங்கியும், குழிந்தும், கொப்பளித்தும்.... சே! முகமா அது? அதிலிருந்து அவளது உண்மையான வயதைத் தான் கணித்து விட முடியுமா? இளமையையும் ஒட்டிக் கொண்டிருக்கின்ற — முதுமையையும் தொட்டுத் தொடர்கின்ற—ஓர் இடைப்பட்ட வயதாக இருக்கலாம் அவளுக்கு.




அ. முருமலையான்

## 6. காணமற்போன காதலன்

பொதுவாக, அவளைக் காண்பவர்களுக்குக்கருணையும் பிறக்கும்; கூடவே ஒருவிதக் கரிப்பும் சுரக்கும்! இரக்கமும் ஏற்படும்; எச்சரிக்கையோடு தள்ளி நிற்கின்ற ஒதுக்கமும் உண்டாகும். பேரின்ப முத்துவைப் பொறுத்த வரையில் அவள் இப்போது எரிச்சலையே கொடுத்துக் கொண்டிருந்தாள்.

சுழல் நாற்காலியிலே அமர்ந்திருந்த அவர், காரின் முன் கண்ணுடியில் விழும் மழைத் துளிகளை அகற்றும் 'துடைப்பான்' ('வைபர்') மாதிரி, அப்படியும் இப்படியுமாகத் தாம் அசைந்தவாறே, சுருள் சுருளாகச் சிகரெட் புகையைத் தவழ விட்டுக்கொண்டிருந்தார்.

அறையின் குறுக்குக் கதவைத் திறந்து கொண்டு, தம்முடைய மகள் உள்ளே நுழைந்தது கூட அவரது உணர்விலே உறைந்திருக்குமா என்பது ஐயப்பாடுதான்.

கோபக் கனலின் தகிப்பினல் அவரது முகம் முழுவதுமே கொதிப்பேறிக் கிடந்தது; தடித்துக் கறுத்த உதடுகளும் மிக நுண்மையாக—இலேசாகத்— துடித்த வண்ணம் இருந்தன.

தன் எதிரே நோட்டுப் புத்தகம் ஒன்றை நீட்டிக் கொண்டு நிற்கும் அந்தப்பெண்ணை நேருக்கு நேர் பார்க்க அறவே விரும்பாதவரைப் போல், மேலே சுவரிலே தொங்கும் ஓவியங்கள் மீது தம் விழிகளை ஓடவிட்ட அவர், தொண்டையைக் கிழித்துக் கொண்டு இப்படி இரைந்து கத்திஞர்:

''இந்த இடத்தை விட்டு இப்போ போகப் போறியா இல்லையா? என்ன நினைச்சிக்கிட்டு இப்படிக் காலையிலேயே வந்து என் கழுத்தை அறுக்கிறே?''

வேருெருவராக இருந்திருந்தால் அவரது சிவப்பேறிய விழிகளைக் கண்டதும்—சீறுகின்ற குரலைக் கேட்டதும்—நடுநடுங்கிப் போய் மெதுவாகவா நழுவியிருப்பார்கள்? விரைவாக ஓட்டமே எடுத்திருப்பார்கள்!

ஆனல் அந்தப் பெண்ணே..?

சரியான அழுத்தக்காரிதான்! இம்மியளவு கூடத் தான் நின்றிருந்த இடத்தை விட்டு அவள் நகரவே இல்லை. 'இடம்'—என்றுல் தரையை மட்டுமல்ல, அவள் பிடித்த பிடிவாதத்தை—விடுத்த வேண்டுகோளைச்—சேர்த்துத்தான் குறிப்பிடுகிறேம்.

''உங்க தரத்துக்குத் தகுந்த மாதிரி, நீங்க தரவேண்டியதைத் தந்திட்டா, நான் அடுத்த விநாடியே இங்கிருந்து ஓடிப் போயிட மாட்டேனு?''

—அலட்டிக் கொள்ளாத ஒரு நமுட்டுச் சிரிப்புடன் கூறினள் அவள்.

''அதெல்லாம் ஒண்ணும் இங்கே நடக்காது. யாரோ தெருவிலே திரிகிற திருட்டுப் பசங்க பிள்ளைங்களுக்கெல்லாம் இவள் புத்தகம் வாங்கிக் கொடுக்கப் போருளாம்; அதுக்கு நான் பத்து ரூபாயை உடனே எடுத்து நீட்டணுமாம். கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கப் பார்க்கிறியா—?''

''பிள்ளையாருக்குக் கோவில் கட்டி வச்சுக் கும்பிடுறவங்களே ஏழை - எளிய - பிள்ளைங்களுக்கு இரக்கப்பட மறுத்தா எப்படி?''

''ஓகோ! எனக்கே நீ அறிவுரை வழங்க ஆரம்பிச்சுட்டியா? என்னை எதிர்த்து வாதம் பண்ற அளவுக்கு உனக்கு வாய்க் கொழுப்பும் ஏறிப் போச்சா? உன்னை இந்தக் காம்பவுண்டுக் குள்ளே நுழைய விட்டதே தப்பு! உன்னைப் பார்த்தாலே எனக்கு எவ்வளவு அருவருப்பா—அசிங்

கமா—வயிற்றையே குமட்டிக் கிட்டு வாந்தியே வருது தெரியுமா? நீயெல்லாம் எதுக்கு வெளியிலே வந்து நடமாடிப், பார்க்கிறவங்க மனசையெல்லாம் பல்லி விழுந்த பாலாகக் கெடுக்கணும்?

''என்ன பண்றது? உங்க மாதிரிப் 'பெரிய மனிதர்'களின் அழ



கான உடைக்கும் உடம்புக்கும் உள்ளே இருதயமும் தூசுபடியாமே துப்புரவா இருக்கான்னு தெரிஞ்சுக்க வேணுமா? அதுக்காகத்தான் என்னைப் போல உள்ளவங்க வெளியே தலையைக் காட்ட வேண்டியிருக்கு. ம்.. என்னைப் பார்க்கிறதுக்கு 'இப்போ' உங்களுக்கு அருவருப்பாத்தான் இருக்கும்..?''

—என்று இளக்காரமாகக் கூறிய அவள் மேலும் தொடரவில்லை; பெருமூச்செறிந்து பெரிதாகச் சிரித்தாள்.

அவள் 'இப்போ'—என்னும் வார்த்தைக்கு வழங்கிய அழுத்தம் மாதவன் — தேன்மொழி இருவருடைய மனத்திலும் ஒரு விதப் புழுக்கத்தையே நிரப்பிற்று. அவர்களது விழிகள் பொருள் செறிவோடு சந்தித்துத் தாழ்ந்தன; பிறகு சுவரிலே தொங்கும் ஓர் ஓவியத்தின்மீதும் படர்ந்தன.

அந்த ஓவியத்திலோ தேர் வடம் போலத் தன்னைச் சுற்றிக் கொண்டுவிட்ட பாம்பிடம் திணறிக் கொண்டிருந்தது ஒரு பசுமாடு.

''மத்தவங்க பின்னாலே என்னைக் கிண்டல் பண்ணிச் சிரிக்கிறதுக்குத்தான் இப்ப நீ வந்தியா? எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு உன்னை இப்படியே கழுத்தை நெரிச்சுக் கொன்னுடணும் போல என் கை ரெண்டும் துடியாய்த் துடிக்குது; ஆனா உன் நாறிப்போன உடம்பை எப்படித் தொடறதுன்னுதான் நான் யோசிக்கிறேன்''

—நறநறவென்று பற்களைக் கடித்துக் கொண்டார் பேரின்பமுத்து. அவரது இடக்கரம், எரிந்து குறைந்து எஞ்சி நிற்கும் சிகரெட் துண்டைச் 'சாம்பல் கிண்ணி'—'ஆஷ்டிரே' யில் ஓர் அழுத்து அழுத்தி வீசியெறிந்தது. மறுகரமோ, பூ வேலையோடு கூடிய சின்னஞ்சிறு பளிங்குச் 'சுமைக்கல்'லை (பேப்பர் வெயிட்டை)—உருட்டிய வண்ணமே இருந்தது.

எங்கே ஆத்திர வெறியில் அந்தக் கல்லை எடுத்து அவள்மீது வீசிவிடுவாரோ தன் அப்பா என்று தேன்மொழிக்கும் அச்சந்தான்.

ஆனால் அந்த அச்சம் எதுவும் அடம் பிடித்துக்கொண்டு நிற்கும் அந்தப் பெண்ணுக்கு அறவே இல்லை.

''நீங்க என்னைக் குத்திக் குத்தியே பேசினாலும்—என்னைக் கொல்றதுக்காகக் கத்தியையே நீட்டினாலும்—உங்க கிட்டே ஒரு பத்து ரூபாயாவது வாங்காமல் இந்த இடத்தை விட்டு நான் நகர்வேனா? ஊ..கூ..ம்!''

—என்று அலட்சியமாகச் சிரித்தாள் அவள்.

தன்னுடைய முதலாளியின் பொறுமை எல்லையைக் கடந்துவிட்டால் பிறகு என்ன செய்வார் என்பதை எண்ணிப் பார்க்கவே முடியாதே என்று அஞ்சிய மாதவன், எப்படியாவது அந்த நெருக்கடி நிலைக்கு ஒரு தீர்வு காண்பது என்கிற போக்கிலே,

''உனக்கென்ன, பத்து ரூபாய் பணந்தானேம்மா வேணும்? இந்தா, இதை எடுத்துக்கொண்டு இந்த இடத்தை விட்டுப் போ''

—என்றவாறே, தன் சட்டைப் பையிலிருந்து ஒரு பத்து ரூபாய்த் தாளை எடுத்து நீட்டினான்.

''நீ நல்லா இருக்கணும், தம்பி; என்னைச் சேர்ந்தவங்க கிட்டே, இவரோட நன்கொடையா பத்து ரூபாயாவது வாங்கிக்கிட்டு வந்திடுவேன்னு பந்தயம் போட்டேன். அதனாலேதான் இவ்வளவு அழுத்தமா பிடிவாதம் பிடிக்கவேண்டியதாப் போச்சு. ஆயிடுச்சு. பாவம்! இவர் எப்போதும்போல இரக்கம் இல்லாமத்தான் இருக்காரு''

—என்று ரூபாய்த் தாளைப் பெற்றுக் கொண்ட அந்த நோயாளிப் பெண் அறையை விட்டு விரைவாக வெளியேறினாள்.

* * *

அவளுடைய தலை மறைவதற்குள்ளேயே சீற்றந் தெறிக்கும் விழிகளுடன் மாதவனை எரித்து விடுவதைப்போல் நோக்கினார் பேரின்பமுத்து.

''ஆமா நீ எதுக்கு அவ கிட்டே பணத்தை எடுத்துக் கொடுத்தே?''

—அவருடைய குரலில் பொறி பறந்ததைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனான் மாதவன்; நடுக்குற்றுத் தவித்தாள் தேன்மொழி.

''நீ எதுக்குப் பணத்தை எடுத்துக் கொடுத்தே? நான் பொல்லாதவன்; நீ மட்டும் நல்லவன்னு பேர் எடுத்துக்கிறதுக்கா? நான் படுகஞ்சன்; நீ பாரி வள்ளல்னு தம்பட்டம் அடிச்சுக்கிறதுக்கா?''

''அதுக்கில்லே, சார்..வந்து ....''

"என்ன அதுக்கில்லே...... பின்னே எதுக்கு அப்படி என்னை அவமானப் படுத்தினே?''

''சார், அந்த மாதிரி நீங்க தவறா எடுத்துக்கிறதா இருந்தா, நான் மன்னிப்பே கேட்டுக்கிறேன். அந்த அம்மா 'விடாக்கண்டனா' உங்க உயிரை எடுக்கிறாளே என்றுதான்..''

''அவ, உயிரை மட்டுந்தான் எடுத்தா; நீ என் மானத்தையே எடுத்திட்டியே!.. உங்களையெல்லாம் வைக்கவேண்டிய இடத்திலே வைக்காமல் உரிமை கொடுத்தேன் பாரு, அது என் தப்பு! என்ன திமிர் இருந்தா, எனக்கு முன்னாலேயே அவ கிட்டே பணத்தை எடுத்து நீட்டுவே?''

'' சார், அப்படியெல்லாம்...''

'' சரிதாண்டா, வாயை மூடு! பேசாதே?''

—வெறியேறிக் கத்திய அவரது கையின் படபடப்பில், படாத பாடுபட்டுக் கொண்டிருந்த அந்தப் பளிங்குக்கல் சட்டென்று அவரது பிடியை விட்டுப் பிதுங்கிற்று ; மேசைக் கண்ணாடியிலே விரைந்து உருண்டோடிய அது 'நங்' என்று கீழே போய் விழுந்தது.

அதே சமயம், தன்னுடைய இருதய நரம்பையும் யாரோ 'நங்' என்று சம்மட்டி கொண்டு அடிப்பது போல் இருந்தது தேன்மொழிக்கு.

''அப்பா ! உங்களுக்கென்ன பைத்தியம் கியித்தியம் பிடிச்சுட்டுதா ?''—என்று அலறினாள் அவள்.

மாதவனோ . . !

மறுவார்த்தை எதுவும் பேசவில்லை. தலையைக் குனிந்தவாறே விரைந்து வெளியேறினான் அந்த அறையை விட்டு.

• • •



சாந்தோமில் உள்ள கிறித்துவ தேவாலயத்தை ஒட்டிக் கடற்கரையை நோக்கி ஒரு தெரு செல்கிறது அல்லவா? அதன் ஓரத்தில் தன் காரை நிறுத்திவிட்டுக் கடலை நோக்கி நடந்தாள் தேன்மொழி.

பிற்பகல் இரண்டுமணி இருக்கலாம். வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது கடுமையாக. அந்த அனல் வீச்சில் கடலே தடதடவென்று ஆடுவது போல் தென்பட்டது தேன்மொழிக்கு. கீழே சோளக்கதிரைப் போட்டால் மல்லிகைப் பூவாய் மலர்ந்து விடும் என்று சொல்லும்படியாகச் சுரீர் என்று சுட்டது பெருமணல். அதிலே தன் கால் கொப்புளித்து விடுமே என்று கூடக் கவலைப் படாமல், அவள் தாவித் தாவி நடந்த வண்ணம் இருந்தாள்.

எதிரே தெரியும் மண்டபத்தில் ஓர் ஆடவனும் பெண்ணும் மிக நெருக்கமாக அமர்ந்து ஒருவர் மீது ஒருவர் சாய்வதும் நிமிர்வதுமாகச் சிரிப்பாய்ச் சிரித்தனர். தேன்மொழியைக் கண்டதும் தங்களைத் துப்பறியத்தான் வருகிறாளோ என்னும் அச்சத்

தாலோ என்னவோ அந்த இளஞ்சிட்டுகள் இரண்டும் சட்டென்று எழுந்து வடக்கு நோக்கி விரைந்தன.

தேன்மொழி, அவர்களுக்காகவா அங்கே—அந்த நேரத்தில்—அதுவும் கொளுத்துகின்ற வெய்யிலில்—வந்தாள்? இல்லே. மாதவனைக் கண்டுபிடித்துவிட மாட்டோமா என்ற எண்ணத்தால்தான்!

கடந்த ஒரு வாரமாகவே அவன் முகத்தைக் காணுமல் அவள் உள்ளம் அடைந்துவரும் வேதனைக்கு — விம்மலுக்கு— எல்லேயே இல்லே. அவன் குடியிருக்கின்ற வீடு, உணவு அருந்துகின்ற உண்டி விடுதி, விளையாடுகின்ற திடல்கள் — மகிழ்ச்சி மன்றங்கள்—எங்குமே அவனைத் தேடிவிட்டாள்; கண்டுபிடிக்கவே முடியவில்லே.

அவன் பணிபுரிகின்ற தன் தந்தைக்குச் சொந்தமான அலுவலகத்திலும் விசாரித்துப் பார்த்தாள். மாதவன் வேலேக்கும் வரவில்லே; விடுமுறை மனுவும் தரவில்லே என்று அங்கே கூறிவிட்டார்கள்.

எங்கே தன் தந்தையின் நெருப்புச் சொற்களினுல் நெஞ்சம் வெந்து போய்ப் பதவியிலிருந்து விலகி விடவும் அவன் துணிந்திருப்பானே என்கிற அச்சமும் அவளேப் பதறச் செய்தது.

அப்படியெல்லாம் அவன் வெறுப்புக்கும் விரக்திக்கும் இரையாவதற்கு முன்னே, அவனே நேரில் கண்டு மனத்தைத்தேற்றித் தன் தந்தையின் சார்பில் மன்னிப்பும் கேட்டுவிட வேண்டும் என்னும் துடிப்போடுதான் அவனைத் தேடுகின்ற படலத்தில் ஈடுபட்டாள் தேன்மொழி.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலே தனக்கு 'டேபிள் டென்னீஸ்' கற்றுக் கொடுக்க நேரங்கழித்து வந்த அவன், தான் சாந்தோம் கடற்கரையில் உள்ள சிறு மண்டபத்திலே அயர்ந்து உறங்கிவிட்டதாகக் காரணம் கூறியது அவளது நினைவில் வந்து பளிச்சிட்டது.

'ஒரு வேளே அப்படியும் ஏன் அவர் உறங்கிக் கொண்டிருக்கக் கூடாது அங்கே?'— என்கிற ஒரு குருட்டு நம்பிக்கையோடுதான், அவள் இப்போது சாந்தோம் கடற்கரைப் பக்கம் வந்திருக்கிருள் மாதவனைத்தேடி.

### ஆணுக்குத் துணே

பெண் என்பவள் ஆணுக்குத் துணைவி; ஆணைப் போலவே சரிசமமான அறிவுத்திறன் வாய்ந்தவள். ஆணின் ஈடுபாடுகளில் சிறு சிறு அம்சங்களில் கூடக் கலந்துகொள்ளவும் அதில் பங்குபெறவும் பெண்ணுக்குச் சரிசமமான உரிமையுண்டு.

—காந்தியடிகள்

* * * *

அந்த இளங்காதலர்கள் எழுந்து ஓடியதும் கடலின் பக்கமாகக் கால்களே நீட்டிவிட்டு, மண்டபத் தூணின் மறைவில் ஒரு மனித உருவம் படுத்துக் கிடப்பது தேன்மொழியின் விழிகளுக்குத் தெளிவாகத் தெரிந்தது.......?

அருகில் நெருங்கிப் பார்த்தாலோ . . ?

அவள் கொண்டிருந்தது 'குருட்டு நம்பிக்கை' இல்லே, 'விழிப்பு நம்பிக்கையே' என்பது வெளிச்சமாயிற்று.

ஆம்; அங்கே படுத்துக் கிடந்தவன் மாதவனே!

அவனுடைய முகத்தைக் கண்டதுமே அவளது உடம்பும் உள்ளமும் புகைமுற்றுச் சிலிர்த்தன பூரிப்பினுல்; நெஞ்சம் விம்மிற்று மகிழ்ச்சியினுல்; மல்லாந்து கிடக்கும் அவனது நெடிய வடிவத்தின் அருகே அமர்ந்து கீழேயுள்ள படிக்கட்டிலே கால்களேத் தொங்கவிட்டுக் கொண்ட தேன்மொழிக்கு, அவன் உறங்குகின்ற அழகே தனியான உவகைப் பெருக்கை அளித்தது.

அவனுடைய பரந்த முக எழிலேயே தன் விழிகளால் பருகிக் கொண்டிருந்த அவள், சற்றே பிளந்திருந்த அவனது கீழ் உதட்டின் அருகே ஒரு சுள்ளெறும்பு ஊர்ந்து செல்வதைக் கவனித்து விட்டாள்.

அதைத் தன் பட்டுப்போன்ற விரல்களால் அழுத்திப் பற்றி எடுத்தெறிய முற்பட்ட பொழுது—

மாதவன் தற்செயலாகவே விழித்துக் கொண்டு விட்டான்.

உள்ளங்கையினுல் கண்களே அழுத்தித் தேய்த்து உறக்க மயக்கத்தை விரட்டியடிக்க முயன்ற அவன்,

"ஆமா, நீங்க எங்கே இங்கே வந்தீங்க— அதுவும் இந்த நேரத்திலே?"—என்று வியப்போடு நோக்கினுன் தேன்மொழியை.

"எல்லாம் உங்களேத் தேடித்தான்!"—முறுவலே இழையவிட்டவாறே மொழிந்தாள் அவள்.

"வேடிக்கையா இருக்கே! இந்த வேகாத வெய்யிலிலே தேடிக் கண்டு பிடிக்கிற அளவுக்கு நான் என்ன திருவிழாச் சந்தடியிலே காணுமல் போன சின்னக் குழந்தையா என்ன?"

"பின்னே ஏன் இந்த ஒரு வாரமாக இந்தப் பெரிய குழந்தையைக் காணவே காணுேமாம்?"

"ஓ! அதைக் கேட்கிறீங்களா? உங்கள் வீட்டை விட்டு நான் வந்ததுமே, ஊருக்கு உடனே புறப்பட்டு வரச் சொல்லித் தந்தி வந்திருந்தது. வண்டியைப் பிடித்து விட வேண்டும் என்கிற பரபரப்பில் யாரிடமுமே சொல்லிக்கொள்ள முடியவில்லே! கிளம்பி விட்டேன். இன்று காலேயில்தான் திரும்பி வந்தேன். அதுவும் பத்து மணிக்கு மேலே. சரி, இன்றைக்கும் விடுமுறையாகவே கழியட்டும்! மாலேயிலே உங்களே வந்து சந்திப்போம்! உங்கள் அப்பாவிடமும் ஊருக்குப் போக நேர்ந்த நிலேமையை விளக்கி விடுமுறையை ஏன் முன் கூட்டியே எடுக்க முடியவில்லே என்பதைத் தெளிவாக்குவோம் என்று நினைத்திருந்தேன். அதற்குள் நீங்களே வந்து விட்டீர்கள்."

"நல்ல வேளே! இந்த ஒரு வாரமாக உங்களேக் காண முடியாமல் போனதும் நான் எப்படியெல்லாம் கற்பனே செய்து கொண்டு கலங்கிப் போனேன் தெரியுமா? எங்கே வேலேக்கு முழுக்குப் போட்டு

விட்டு விலகி விட்டீர்களோ என்றுகூட வேதனைப் பட்டேன்''

'' எதற்கு அப்படி நான் வேலையை விட்டு விலகணும் ?''

'' அப்பா அன்றைக்கு உங்களிடம் கடுமையாக நடந்து கொண்டு முறை தவறியும் பேசி விடவில்லையா ? அதனால் உங்கள் மனம் உடைந்திருக்குமோ என்றுதான் அப்படி நினைத்தேன்.''

'' அட பைத்தியமே ! உங்கள் அப்பாவைப் பற்றி எனக்குத் தெரியாதா என்ன ? அவர் ஓர் உணர்ச்சிக் கடல் ; முன்கோபி. அப்படித்தான் பாம்பாகச் சீறுவார் ; உடனே பச்சைக் குழந்தையாகவும் மாறுவார். அதோடு அவருடைய சூடான சொற்களெல்லாம் பெரும்பாலும் உள்ளத்திலிருந்து வருவதில்லை : உதட்டிலிருந்துதான் தெறிக்கின்றன என்பதும் எனக்குப் புரியாதா என்ன ? மேலும் ........ மற்றவர்கள் என்னைத் தவறாகக் கருதினாலோ தாறுமாறாக ஏசினாலோ உடனே நான் உணர்ச்சி வயப்பட்டு நிதானத்தை இழந்து விடுவதில்லை. '' நான்தான் ஏதோ செய்திருப்பேனு?'' என்று முதலில் என்னைத்தான் உள்முகமாகத் திரும்பிப் பார்த்துக் கொள்வேன் ; திருத்திக் கொள்ளவும் முயல்வேன். என்னிடம் தவறில்லை என்று தெளிவாகப் பட்டாலும் கூட அதற்காக எதிரி மீது சேற்றை வாரி வீசி விட வேண்டும் என்று நான் துடிதுடிப்பதும் இல்லை. அதே வேளையில், ' நம்மைப் பற்றி அவர்கள் இப்படி எண்ணவோ ஏசவோ தேவை இல்லையே !' என்கிற ' உறுத்தல் ' வேண்டுமானல் உண்டாகும். அந்த உறுத்தலே நெஞ்சை நெருடுவதோடு நில்லாமல் ஆழமாகக் கீறியே விடுமானல் அதற்காக ஒதுங்கிக் கொண்டு விடுவேனே யொழிய அந்த உறுத்தலையே ' வெறுப்பாக ' மாற்றிக் கொள்வதில்லை. ஏன் தெரியுமா ? வெறுப்பைப் போல மனிதப் பண்பாட்டுக்கு வேட்டு வைக்கும் நெருப்பு உணர்ச்சி வேறு எதுவுமே இல்லை. அதுவும், உங்கள் அப்பாவை நான் எப்படி வெறுக்க முடியும் ? அன்றிருந்த சூழ்நிலையில் அவருக்கு ஏதோ அடக்க முடியாத ஆத்திரம் ! வார்த்தைகளை வீசி விட்டார். ஏதோ ஒரு நொடியில் தவறி வந்த வார்த்தைகளைப் பெரிது படுத்திக் கொண்டு பலகாலமாக அவர் காட்டி வந்த அன்பை— கொடுத்து வந்த மதிப்பை —அளித்து வந்த சலுகைகளை —உடனே மறக்கலாமா? வெறுக்கலாமா ? சரி, அதுதான் போகட்டும் ; அவர் என் வருங்கால மாமனர் ஆயிற்றே ? அவரை எப்படி நான் வெறுக்க முடியும் ? அதுவும் இப்படியொரு அழகான ஓவியத்தைப் பெற்று வைத்திருப்பதற்காகவாவது நான் அவரை விரும்ப வேண்டாமா ? ''

—கண்களைச் சிமிட்டிப் புன்னகையை வழிய விட்ட மாதவன், தேன்மொழியின் பூங்கரத்தை உரிமையோடு பற்றித் தன் உதட்டருகே கொண்டு சென்றான்.

அவன் பேசப்பேச, அவனது சொற்சுவையிலேயே சொக்கிப் போய் இமைக்க மறந்து அவனையே வியப்போடு நோக்கிக் கொண்டிருந்த அவள்,

'' உங்களுக்கு இவ்வளவு மனத் தெளிவு இருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை.''

—என்று பெருமிதத்தோடு கூறினாள்.

'' ஆமாம், நான் கொடுத்த கடிதத்தைப் படித்தீர்களா ?''

'' ம்.''

'' அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ? ''

'' சொன்னல் கோபிக்க மாட்டீங்களே ? ''



'' கண்டிப்பாகக் கோபிக்க மாட்டேன் ; அதுவும் இந்த ரோஜாப்பூ வாயாலே சொல்லும் போது எப்படிங்க கோபம் வரும் ? சும்மா சொல்லுங்க.''

'' எனக்குப் பிடிக்கலே ''

'' காரணம்.?''

'' அளவுக்கு மீறித் தெவிட்டிப் போச்சு ! ''

'' ஓகோ ! ''

'' அதுவும் ஆயிரம் அல்வாத் துண்டை ஒரே மூச்சில் விழுங்கின மாதிரி அவ்வளவு இனிப்பு !''

'' அப்போ அது உங்களுக்கு ஆகாது தானுங்களே ? ''

—இருவருடைய சிரிப்பலைகளும் அந்தச் சிறுகட்டடம் முழுதும் எதிரொலித்தன.

'' போகட்டும் ; இன்னும் நீங்கள் ' கள் ' போட்டுத்தான் பேசணுமா ? ''

நாணங்குமிழக் கேட்டாள் தேன்மொழி.

'' நான் ஒன்றும் ' கள் ' போட்டு விட்டு வரவில்லையே ! ஓ, அந்தக் ' கள் ' ளைச் சொல் நீங்களா ? அதுவும் சரிதான் ; இந்தக் ' கள் ' இருக்கும் பொழுது அந்தக் ' கள் ' தேவை இல்லை தான் !

—என்றவாறே தேன் மொழியின் கன்னக் கதுப்பைக் கிள்ளித் திருகினன் மாதவன்.

கடலுக்கு மேலே இரண்டு பறவைகள் சிறகடித்துப் பறந்து சென்றன.

சற்றுத் தொலைவில் அலைகளை இலட்சியம் செய்யாமல் படகு ஒன்று கரையை நோக்கி வந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்தவாறே,

'' இன்று இரவு நீங்கள் வீட்டுக்கு வந்தீர்களானல் அப்பா உங்களுக்கு ஓர் இனிப்பான செய்தியைச் சொல்வார். ''

—என்றாள் தேன் மொழி.

'' என்ன செய்தி ! ''—ஆவலுடன் கேட்டான் மாதவன்.

'' அங்கே வந்த பிறகு தான் தெரிந்துகொள்ளுங்களேன். ஆனல் அது நம் திருமணத்தைப் பற்றியது மட்டும் அல்ல!

(தொடரும்)

தமிழ்நாடு

# கதர்ப்பட்டு

விற்பனை

**10** சதவிகிதம்

தள்ளுபடி
கொடுககப்படும்



உங்கள் தேவைக்கு

## கதர் கிராமத்தொழில்

விற்பனை
நிலையங்களுக்கு

வருகை தாருங்கள்

# சிற்றூர் செழிக்க சிறு தொழில்கள்!

கு. செல்லசாமி. பி.ஏ.,

“நல்ல இமயம், நலம் கொழிக்கும் கங்கை நதி—வெல்லத் தமிழ் நாட்டின் மேன்மைப் பொதிய மலை—செந்நெல் வயல்கள், செழுங் கரும்புத் தோட்டங்கள்—தின்னக் கனிகள்—தெவிட்டாப் பயன் மரங்கள் இன்பஞ் செறிந்திருக்கும் இப்பெரிய தேசம்,” என்று வளமனைத்தையும் கவிதையாக வடித்துக் காட்டுகின்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்.

ஆனால், இந்த நாட்டில் வறுமை சூழ்ந்திருக்கின்றதே? இருள் கவ்விக் கொண்டிருக்கின்றதே? ஏன்? அந்தப் பாடலின் பிற்பகுதியிலே அதற்குக் காரணம் சொல்லாமல் போகவில்லை. அறியாமையே இவற்றுக்கெல்லாம் காரணம் என்று பாடுகின்றார்.

“அருள் ஒன்றே சட்டம்! மக்கட்கே ஆட்சி-அமைதி நிலை என்று கொட்டடா பறை” என்று ஆர்த்தெழுந்து, “ஆனஎன் ஆட்சியை நிறுவ அல்லல்கள் வரின் ஏற்பேன்-ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு-உவப்புடன் நான் சேர்ப்பேன்” என்று சூளுரை புகன்று, நித்திய தரித்திரராய் உழைத்துழைத்து தினைத் துணையும் பயனின்றிப் பசித்த மக்களின் பிணி போக்கப் பகல் இரவு துஞ்சாது, நாலரைக்கோடித் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நீங்காது நிலைத்து நிற்கின்ற நாயகனாக, பேரறிஞர் அண்ணாவின் படைத் தலைவராக விளங்குகின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 15—8—71 விடுதலை நாள் விழாவன்று, நாட்டு மக்களுக்கு விடுத்த உணர்ச்சி மிக்க வேண்டுகோளை அனைத்திந்திய வானொலி முழங்கியது.

“அறியாமை இருள் அகன்றிட
உழைப்போம்.
இல்லாமைக் கொடுமை
தொலைந்திட உழைப்போம்.
புத்தொளி கண்டிட
உழைப்போம்”.

புதுவைக் கவிஞரின் பாடல், உலகக் கவிஞரின் மூலம் பெரு முழக்கமாகப் பீரிட்டெழுந்து நாட்டு மக்களைத் தட்டி எழுப்புகின்ற அதிசயத்தை நாம் பார்க்கின்றோம். வளம் மிக்க இப்பெரிய தேசத்தில் இல்லாமை இல்லையென்று ஆக வேண்டும். அறியாமை என்ற இருள் அகல வேண்டும். பகுத்தறிவுப் பகலவன் உதயமாக வேண்டும். அந்தக் காலைக் கதிரவனின் செந்தளிர்க் கரங்கள் பட்டு, ஏழை எளியவர்கள் சிரித்திட வேண்டும்-அதில் இறைவனைக் காண வேண்டும்-நாடெல்லாம் மலர்க் காடாகி நாமெல்லாம் தும்பிகளாகச் சிறகடித்துப் பறக்க வேண்டும், என்பதுதான் கலைஞர் அவர்களின் உள்ளக் கிடக்கை.

அந்த வரலாற்றுப் புகழ் மிக்க வீர உரையின் ஒரு பகுதியில் எடுத்துக்காட்டாக இதையும் நம்முன் படைக்கிறார். உவமையின் இலக்கணமே—தெரியாத ஒரு பொருளுக்குத் தெரிந்த ஒரு பொருளைக் காட்டித் தெளிவு பெறச் செய்தல் ஆகும். கலைஞர் அவர்களோ எடுத்துக்காட்டாகக் காட்டும் ஓர் உவமையையே ஒரு பொருளாகக் காட்டி விட்டுச் செல்கின்றார். கலைஞர் அவர்களுக்கே உரிய தனிச் சிறப்பு இது.

“நூற்பாலைகளையும் நெசவாலைகளையும் அனுமதித்துவிட்டுத்தான் கதர் கட்டுவதிலும் கைத்தறி கட்டுவதிலுமுள்ள சிறப்புகளைப் போதித்து வருகிறோம்.”

‘குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த நின் மழலை’ என்ற சிலப்பதிகாரக் காப்பியச் செய்யுளைப் படிக்கும்போது, ‘குழலினிது யாழினிது என்ப தம்மக்கள்-மழலைச் சொல் கேளாதவர்’ என்ற இனிய குறள் நினைவுக்கு வருதல் போல, கலைஞர் அவர்களின் மேற்கண்ட உரைப் பகுதியைக் காணும்போது 1963-ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் டெல்லிப் பாராளுமன்றத்தில் நேரு பெருமகனார் ஆற்றிய உரைப் பகுதியை நினைவுக்குக் கொண்டு வருகிறோம்.

“முழுக்க முழுக்க இயந்திரச் சகாப்தத்தை வரவேற்பவன் நான்; என்றாலும் பெருமளவு மக்கட் தொகையினர் இன்னும் முழுமையான பலனடையவில்லை, என்பதைப் பார்க்கும்போது சிறு தொழில்களுக்கு ஊக்கமளிப்பது மிகவும் அத்யாவசியமாகிறது.”

கலைஞர் அவர்கள் ‘உழைப்பு உழைப்பு’ என்று அறைகூவி விடுத்த வேண்டுகோளைக் கதர் கிராமத் தொழில்களில் ஈடுபடுவதன் மூலமும் நிறைவேற்றித் தரலாம். ஏனெனில், கதர்-உழைப்பின் சின்னம் என்று அடையாளம் காட்டப்பட்டு விட்டது.

கதர்-தனிப்பட்டவருக்கு மட்டுமோ, அல்லது ஒரு கட்சிக்கோ சொந்தமென்ற ஒரு ‘மாயை’ முன்னர், தெரிந்தோ தெரியாமலோ உருவாகியிருந்ததன் பலனாக, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிபீடம் ஏறியபோது பலர் பயந்தனர். கதர் என்னவாகுமோ என்ற வினா எழுப்பினர். ஆனால் அந்தக் கருணை வள்ளல்-தமிழகத்துத் தலைமகனார், தென்னாட்டுக் காந்தி அவர்கள் பெருந்தன்மையோடு கதர் வளர்ச்சிக்குப் பேராதரவைத் தந்து முன்னினும் பன்மடங்கு சாதனைபுரிந்து காட்டினார்கள்.

அந்தப் பெருமகனாரின் அடிச்சுவட்டில் வீறு நடை போடுகின்ற-உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண்கின்ற பசுமைப் புரட்சித் திட்டம், மாநிலத் திட்டக் குழு, மைய—மாநில உறவு ஆய்வுக் குழு, குடிசை மாற்றுத் திட்டம், பிச்சைக்காரர்களின் மறுவாழ்வுத் திட்டம் போன்ற, பல்வேறு மாநிலங்களுக்கெல்லாம் வழி காட்டுகின்ற ‘முன்னோடித் திட்டங்கள்’ மூலம்

சாதனைகள் நிகழ்த்திக் காட்டும் கலைஞர் அரசு, கதர்த் திட்டத்தையும் ஏற்றுச் சிறப்புற இயக்கிக் காட்டிக், கடந்த ஆண்டுகளில் கண்டிராத மகத்தான சாதனையைச் செய்துகாட்டி, இதிலும் தமிழகம் 'முன்னோடி' என்ற தனது தனித்த 'முத்திரையைப்' பதித்திருக்கின்றார்கள்.

## வேலை வாய்ப்பு

மறைந்த மாமேதை-முன்னாள் தமிழக முதல்வர் அவர்கள் 1947 ஆகஸ்டு 15-ஆம் நாளை ஆங்கிலேயனுக்குக் ''கணக்குத் தீர்த்த நாள்'' என்று குறிப்பிட்டு விட்டு, அதற்குப் பின்னர் ஆண்டு தோறும் வருகின்ற ஆகஸ்டு 15-ஆம் நாளைக் 'கணக்குப் பார்க்கும் நாள்' என்று சுட்டிக் காட்டினார்கள்.

இப்போது 1970–71 நிதியாண்டில் கதர் கிராமத்தொழில் சாதனைகளைக் கணக்கிட்டுப் பார்ப்போம்.

தமிழகம் முழுவதிலுமுள்ள சிற்றூர்களின் எண்ணிக்கை 15,000. இதில் 80 சதவிகிதத்தினர் உழுதுண்டு வாழ்வோர். வேலையற்றோர் பலராயினும் வேலையிருந்தும் போதிய ஊதியமில்லாமல் அவதிப்படுவோர் மிகப் பலர். இவ்விரு பகுதியினருக்கும் இத் தொழில்கள் நல்வாய்ப்பை நல்குகின்றன. குறிப்பாகவும் சிறப்பாகவும் சிற்றூர்களில் வாழ்கின்ற பின் தங்கிய ஏழை எளிய மக்களுக்குக் கதர் கிராமத் தொழில்கள் உறுதுணையாக இருக்கின்றன. நூற்றல், பாவு போடுதல், நூலிழைத்தல், சாயம் போடுதல் நெய்தல் முதலான தொழில்களில் கதர்த் தொழிலில் மட்டும் ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை நல்கி யிருக்கிறது தமிழக அரசு. அவர்களுக்கு 118 இலட்சங்களுக்குமேல் ஊதியமாக வாரி வழங்கியிருக்கின்றது.

பனைத் தொழில், பனை நார், எண்ணெய், கரும்பு, வெல்லம், பழுப்புச் சர்க்கரை, கைக்குத்தல் அரிசி, சோப்பு செய்தல், தேனீ வளர்த்தல், மட்பாண்டம், தோல், தச்சு-கொல்லுப் பட்டறை, கைக் காகிதம், குடிசைத் தீப்பெட்டித் தொழில், சுண்ணும்பு, பழம் பதப் படுத்துதல், பனை ஓலை, நார், பிரம்பு, மூங்கில், கிராமப்பொருள்கள் விற்பனைக் கூடங்கள் ஆகிய கிராமக் கைத் தொழில்களில் ஈடுபடுத்தி $2\frac{1}{4}$ லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பைத் தந்து ரூ. 209 இலட்சத்தை ஊதியமாகப் பகிர்ந்து தந்திருக்கின்றது. ஆக மொத்தம் கதர்கிராமத்தொழிலில் 1970–71 நிதியாண்டில் மட்டும் $3\frac{1}{2}$ லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பைத்தந்து 327 இலட்சத்துநாற்பத்தெட்டாயிரம் ரூபாயை ஊதியமாகத் தந்திருக்கின்றது.

## கதர்

பாலாடையன்ன மேலாடையும் ஆவியன்ன ஆடைகளையும் துகிலையும் நெய்து வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கடல் மூலம் வாணிபம் செய்து தொன்மையும் மேன்மையும் பெற்றவர் தென்னவர். கைபுனைக் கதராடைக்குத் தமிழகத்தில் ஒரு சிறப்பிடம் உண்டு.

> கதர் என்னும் தத்துவத்தில் மக்கள் நலனும் உண்மையான சமத்துவமும் உள்ளடங்கியிருக்கிறது.
>
> கிராமங்களில் நடைபெற்று வந்த கைத்தொழில்கள் எல்லாம் மறந்து போனதால் அவைகள் அழிந்து போகும் நிலையில் இருக்கின்றன. அவற்றை மீண்டும் உயிர்ப்பிப்பதால் தான் கிராமங்களையும் உயிர்ப்பிக்க முடியும்!
>
> —காந்தியடிகள்

ஆனால் பத்தாண்டுகளுக்குமுன்பாகக் கதர் என்றால் முரட்டுத் துணி என்பதுவும், அதை அணிந்திருப்பவரைப் பார்த்தால் அவருக்கு ஒரு 'வண்ணம்' இருப்பதுவுமாகவே நம் கண் முன் நிழலாடும். அவையாவும் இப்போது பொய்யாகப் பழங்கதையாகக் கற்பனையாகப் போய் விட்டது. இப்போது யாவரும் கதர் உடுத்துகின்றனர். துணிகள் மெல்லியதாக இருக்கின்றன.

பழைய கைராட்டையிலிருந்து கிசான் ராட்டை, அம்பர் ராட்டை, டெக்ஸ்டூல் ராட்டைகள், 6 கதிர் 12 கதிர் ராட்டைகள் என்று மாறிப் புதுமை நுழைக்கப்பட்டிருக்கின்றது.

முழுநேரமும் ஈடுபடத் தக்க வகையிலும், அதிக ஊதியம் பெறும் நோக்கோடும் தரமான நூல் உற்பத்தியின் பொருட்டும், பழைய கைராட்டையில் மாறுதல் செய்து அம்பர் ராட்டையைக் கண்டுபிடித்து அவைகள் பரவலாக்கப்பட்டன. அந்த அம்பர் இராட்டையைக் கண்டு பிடித்த திருவாளர் ஏகாம்பரம், எந்த வறுமையை ஒழிக்க அந்தப் புதுமையைச் செய்தாரோ, அதே வறுமையால் பாதிக்கப்பட்டதைக் கண்டார் கலைஞர் அவர்கள். அவருக்கு வாழ்க்கைப் பணமாக மாதம் ரூ. 100 வீதம் முதல்வர் அவர்கள் கொடையளித்துள்ளார்கள் என்றால் டாக்டர் அவர்கள் இக் கதர்த் திட்டத்தின் மீது எத்தகைய கருத்தைச் செலுத்தி வருகிறார் என்பது நன்கு புலனாகும்.

புதிய டெக்ஸ்டூல் இராட்டைகள் மூலம் தரமான மெல்லிய நூல் உற்பத்தி பெருகி வருகின்றது. கதர் விலையும் குறைந்திருக்கிறது. ஈடுபடுபவர்களுக்குக் கணிசமான ஊதியமும் கிட்டி வருகிறது. தற்போது இயங்கி வருகின்ற 75 டெக்ஸ்டூல் இராட்டை நிலையங்களில் 1,49,278 நூற்பாளர்கள் நூற்று வருகின்றனர். அவர்கள் சென்ற நிதியாண்டில் பெற்ற ஊதியம் ரூபாய் 52 இலட்சம்.

கதர் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற 3,639 நெசவாளர்கள் ரூ. 52.40 இலட்சம் நெசவு கூலியாகப் பெற்றிருக்கிறார்கள்.

தற்போது இயங்கி வருகின்ற 9 பட்டு உற்பத்தி நிலையங்கள் ரூ. 63 இலட்சத்துக்குப் பட்டு உற்பத்தி செய்திருக்கின்றது. பட்டுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற நூலிழைப்போர், நெசவாளிகள் ஆகிய 1,183 பேர் பெற்ற கூலி ரூ. 13 இலட்சம்.

1970–71-ல் 124 கதர் உற்பத்தி நிலையங்களும், 21 பிரதான முக்கிய நிலையங்களும், 170 கதர் விற்பனைக் கூடங்களும், தலைநகரில் உள்ள 'குறளகமும்', புறநகரில் உள்ள, கோவை, திருச்சியில் இருக்கும் இரு கதர் அங்காடி

களும் 5,295 பேரைக் கொண்ட 13 கூட்டுறவு நிறுவனங்களும் கதர்ப்பணியில் ஈடுபட்டிருக்கின்றன.

வேலூர், கடலூர், தஞ்சை, திருப்பூர், மதுரை ஆகிய 5 இடங்களில் வாரியத்தின் தையல் நிலையங்கள் பணிபுரிகின்றன. இவைகளில்சென்ற ஆண்டில் 10 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஆயத்த ஆடைகள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

காந்தி பிறந்தநாள், தீபாவளி, பொங்கல் முதலிய சிறப்புத் தள்ளுபடிக் காலங்களில் 10 விழுக்காடு விலையில் தள்ளுபடி செய்து விற்கப்படுகிறது. சென்ற சிறப்புத் தள்ளுபடிக் காலங்களில் ரூ. 271 இலட்சத்துக்குக் கதர் விற்பனையாகியுள்ளது.

1970–71-ல் கதர் உற்பத்தியின் மதிப்பு ரூ. 238.84 இலட்சம். விற்பனை ரூ. 306.75 இலட்சம். இவ்வளவு உற்பத்தியும் விற்பனையும் இதற்கு முன் இல்லையாதலால் இந்த நிதியாண்டைச் சாதனையாண்டு என்று குறிப்பிடுகிறோம்.

## கிராமத் தொழில்கள்

பனைத் தொழில், எண்ணெய், சோப்பு, தேனீ வளர்த்தல் முதலான 18 கிராமக் கைத்தொழில்களின் அலகுகள் 3,250-ம், 2,420 கூட்டுறவு நிறுவனங்களும், ரூ. 766.32 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்திருக்கின்றன. ரூ. 852.73 இலட்சத்துக்கு அப்பொருள்கள் விற்பனையாகியிருக்கின்றன. இதில் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற 251 இலட்சம் பேர்களும் 209 இலட்சம் ரூபாயை ஊதியமாகப் பெற்றிருக்கின்றனர்.

இங்ஙனம் சிறு துளி பெரு வெள்ளமாக, சிறு தொழில்கள் பெரும் வேலை வாய்ப்பு நிறுவனங்களாக, நாட்டின் பொருளாதாரச் செழிப்புக்கு உறு துணையாக இருந்து வருகின்றன.

முடிவாக, கடந்த ஜூன் திங்கள் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் தமிழக முதல்வரும் நிதியமைச்சருமான டாக்டர் கலைஞர் அவர்கள் ஆற்றிய நிதிநிலை அறிக்கையில் அளித்த உரையின் ஒரு பகுதியை இங்கே கோடிட்டுக் காட்டுவது மிகவும் பொருத்தமானதாகும்.

''ஏழை எளியவர்கள்—கிராமப்புறத்து மக்கள் இது வரையில் தங்களையே சரிவர உணர்ந்து கொள்ள முடியாமல் எங்கோ அழுத்தப்பட்டு, தள்ளப்பட்டுக் கிடந்த பிற்போக்கான நிலையிலுள்ள மக்கள் வாழ்வில் விடிவு ஏற்பட வேண்டுமென்பதற்காக இவ்வளவு முயற்சிகளையும் இந்த அரசு மேற் கொண்டிருக்கிறது''


# காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந் திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங் களும், பிற தஸ்தாவேஜூகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை. மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ?

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**
பள்ளிப்பாளயம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB

உயர்ரகத்தைக் குறிக்கும் வாட்டர் மார்க்



FDS.SPB 777 TMA

## உறுதியான கட்டடங்கள்: *பொதுப்பணியில்-2*


SANKAR IC CEMENT




சாலச் சிறந்த சாலைகள் அமைக்க

# சங்கர் சிமெண்ட்

IS:269 ISI

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது

ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2

25 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18

FDSIC-1447TMR

# பயணத்தில் கிடைத்த நண்பர்

சுந்தர்

கோவைக்குச் சென்றிருந்த நான் சென்னைக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தேன். புகை வண்டி நிலையத்தில் ஒரேகூட்டம். ஏற்கனவே இருக்கைக்குப் பதிவு செய்து வைக்காததால் நெரிசலில் சிக்கித் தவித்தேன். மிகுந்த முயற்சி செய்து அமர்வதற்கு ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டேன்.

வண்டி புறப்பட்டது. வழியனுப்ப வந்திருந்த எனது நண்பர்களும் விடைபெற்றுச் சென்றுவிட்டார்கள். அவர்கள் சென்ற பிறகு, அன்றைய நாளிதழ் ஒன்றை எடுத்துப் படிக்கத் தொடங்கினேன். படித்து முடிக்கும்போது வண்டி, திருப்பூரை அடைந்தது. சில நிமிடங்கள் அங்கே புகைவண்டி ஓய்வுபெற்றது. பயணிகள் அங்கும் இங்கும் ஓடினர்—ஆகாரத்தைத் தேடி!

புகைவண்டி, நீண்ட ஒலியை எழுப்பியது. பயணிகள் ஓடோடி வந்தார்கள். தங்கள் பெட்டிகளில் ஏறிக்கொண்டார்கள். பெயருக்கேற்றபடி புகையைக் கக்கியவாறு புகை வண்டி புறப்பட்டது.

இந்த நேரத்தில் எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் என் பெட்டியிலேயே என்னுடனேயே பயணம் செய்து வருவதைக் கண்டேன். அந்த நண்பர் என்னைக் கண்டதும் மறைந்து கொண்டார். நான் அவரைப் பார்க்காத நேரங்களில் அவர் என்னைப் பார்த்து, தானும் என்னுடன் பயணம் செய்து வருவதை நினைவு படுத்திக் கொண்டே வந்தார். அவருடைய செயல் ஒவ்வொன்றும் அவர் 'டிக்கெட்' இல்லாத பயணி என்பதை மெய்ப்பித்துக்கொண்டிருந்தது.

வண்டிகளில் வழக்கமாகப் பேசப்படும் அரசியல் விமரிசனங்கள், கலை உலகச் செய்திகள், நடிக நடிகையரின் வாழ்க்கை வரலாறுகள் ஆகியவை அன்றையத் தினம் பேசப்படவில்லை. எல்லாப் பயணிகளும் நித்திரைத் தேவியின் சீட கோடிகளாக இருந்ததால், பெட்டியில் உள்ள விளக்குகள் அணைக்கப்பட்டுவிட்டன. உள்ளே இருந்த பெருமக்களின் தலைகளும் வண்டியின் போக்குக்கு ஏற்ப நர்த்தனமாடத் தொடங்கின.

சேலம் சந்திப்பில் வண்டி நின்றது. மதிப்பிற்குரிய டிக்கெட் பரிசோதகர் தனக்கே உரிய தனித்தோரணையில் எங்கள் பெட்டிக்குள் நுழைந்தார். உள்ளே இருட்டாக இருப்பதை அறிந்து, விளக்கைப் போட்டார். அவ்வளவுதான்! அதுவரை எல்லார் முன்னாலும் இருந்த என் அருமை நண்பர் ஓட்டம் பிடித்தார். பயணிகள் அமர்ந்திருக்கும் பலகைக்குக் கிழே தஞ்சம் புகுந்தார். போகும்போது அவர் என்னைப் பார்த்துவிட்டுச் சென்ற பார்வை மிகவும் பரிதாபமாகவே இருந்தது. டிக்கெட் இல்லாமல் பயணம் செய்யும் அந்த நண்பரைக் காப்பாற்ற நினைத்தேன். குற்றம் செய்தால் மட்டுமல்ல தண்டனை, குற்றம் செய்பவருக்கு உதவி செய்தாலும் தண்டனை உண்டு என்பது தெரியும். என்றாலும்



நண்பரின் உயிரைக் காப்பாற்ற நான் முடிவு செய்ததால் பாவம், அவரைக் காட்டிக் கொடுக்கவில்லை. ஒருவழியாகப் பரிசோதகரிடம் இருந்து தப்பிவிட்டார் நண்பர். ஆனால் சில நிமிடங்களுக்குள்ளேயே தனது பழைய நிலையை மறந்துவிட்டார். மீண்டும் தொல்லை கொடுக்க ஆரம்பித்தார். ஏனைய பயணிகளை அடிக்கடி விழிக்க வைத்து, அவர்களின் கோபத்தையும் சாபத்தையும் நிறையச் சம்பாதித்துக்கொண்டார்.

சென்னை வந்தது. வண்டியில் வந்த பரிசோதகரைத்தான் ஏமாற்றி விட்டார், நிலையத்தின் வெளியே பளபளக்கும் வெள்ளை உடையுடன் நிற்கும் டிக்கெட் சேகரிப்பவருக்குத் தெரியாமல் எப்படி வெளியே போகப் போகிறாரோ என்று என் மனம் அச்சப்பட்டுக் கொண்டிருந்தது. பெட்டியை விட்டு இறங்கினேன்; நண்பர் வருகிறாரா என்று திரும்பிப் பார்த்தேன். என்ன அதிசயம்! நண்பரைக் காணவில்லை. நல்ல வேளை என்று எண்ணியபடி எனது டிக்கெட்டைக் கொடுத்துவிட்டு நிம்மதியாக வீட்டுக்கு வந்துசேர்ந்தேன்.

என் மனம் மட்டும், நண்பர் எப்படித் தப்பித்துச் சென்றார் என்பதைப் பற்றியே எண்ணி எண்ணி வியந்துகொண்டிருந்தது. அந்த நேரத்தில் ஒரு சிறு அதிர்ச்சி! என்ன ஆச்சரியம்! தப்பிச் சென்றதாக எண்ணினேனல்லவா, அந்த நண்பர் என் வீட்டுக்கே வந்து விட்டார். அவர் தானாகத் தப்பிவரவில்லை. எனது துணை கொண்டுதான் வந்திருக்கிறார். அவர் மீது எனக்குக் கோபம் கோபமாக வந்தது. டிக்கெட் இல்லாமல் பயணம் செய்து வந்து விட்ட அந்த நண்பரை என்ன செய்யலாம் என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, ''என்னங்க இது, ரெயில் சிநேகிதமா? உருப்பட்டாப்பிலே தான்'' என்ற அர்ச்சனையுடன் அருகில் வந்தாள் என் அன்பு மனைவி.

பாவம்! டிக்கெட் பரிசோதகரின் கண்ணில் படாமல் தப்பித்து வந்துவிட்ட அந்த நண்பர் என் குடும்ப விளக்கின் கூர்மை

யான கண்களிலிருந்தும் கடுமையான எண்ணத்திலிருந்தும் தப்பிக்க முடியவில்லை. அருமை நண்பர் என் மனைவியின் கரங்களால் பயங்கரமாகக் கொலை செய்யப்பட்டார். என்னால் அந்தக் கோரக் காட்சியைப் பார்க்க முடியாமல் கண்களை மூடிக்கொண்டேன். பிறகு, சிறிது சிறிதாகத்தான், மாண்டு கிடந்த நண்பரைப் பார்க்க முடிந்தது என்னால்.

முதலில் நானும் நண்பரின் கொலைபற்றி வருந்தத்தான் செய்தேன். பிறகு, குடும்ப விளக்கு செய்ததே சரி என்ற முடிவுக்கு வந்தேன். அந்த நண்பர் யாரென்று தெரிந்தால் நீங்களும் எங்கள் கருத்தைத்தான் ஆதரிப்பீர்கள்.


தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00

அரை ஆண்டு ரூ. 4.00

தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை- 2


டிக்கெட் இல்லாமல் பயணம் செய்த அந்தத் தீரர் யார் தெரியுமா?

என்னைப் பின் தொடர்ந்து என் வீட்டுக்கு வந்துவிட்ட நண்பர் யார் தெரியுமா?

என் இல்லத்து அரசியினால் கொலைக்களத்துக்கு அனுப்பப்பட்ட பரிதாபத்திற்குரிய நபர் யார் தெரியுமா?

அவர்தான் . . . . . திருவாளர் **மூட்டைப் பூச்சியார்!**

# ஐ. ஆர். 22.

பிலிப்பைன்சு நாட்டிலுள்ள அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் (International Rice Research Institute) உருவாக்கப்பட்ட நான்காவது நெல் தினுசு ஐ. ஆர். 22. அனைத்து நாட்டிலும் அதிக மகசூல் அளித்து, ' அதிசய நெல் ' ( Wonder Rice ) என்ற சிறப்புப் பெயர் பெற்ற ஐ. ஆர். 8 நெல்லையும், நோய் தாங்கும் திறன் கொண்டதும், சிறந்த மணிகளைக் கொண்டதுமான ' தடுக்கன் ' ( Tadukan ) என்ற பிலிப்பைன்சு நாட்டு நெல்லையும் 1965-ஆம் ஆண்டில் கரு இணைப்புச் செய்து (Hybridisation) உருவாக்கப்பட்டது ஐ. ஆர். 579-160-3 என்ற தினுசு. பல்வேறு வகையான பரிசோதனைகளுக்குப் பின் அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிலையம் ஐ. ஆர். 579-160-3 என்ற தினுசை 1969-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24-ஆம் நாள், ஐ. ஆர். 22 எனப் பெயரிட்டு வெளியிட்டது.

ஐ. ஆர். 22 நெல், ஐ. ஆர். 8 நெல்லைப் போன்றே அதிக உரமேற்று அதிக மகசூல் அளிக்க வல்லது. ஐ. ஆர். 22 நெல், ஐ. ஆர். 8 நெல்லைப் போலவே நல்ல திடமான நாற்றுக்களையும் அகன்ற இலைகளையும், விரைப்பான தண்டுகளையும், நன்கு கிளைக்கும் திறனையும்கொண்டது. ஆனால், ஐ. ஆர். 22 நெல்லின் மணியானது, ஐ. ஆர். 8 நெல்லின் மணியைவிடச் சிறந்த தரமுள்ளதாக இருக்கிறது. மேலும், இத் தினுசு, ஐ. ஆர். 8 நெல்லை விட நோய்களைத் தாங்கும் திறன் வாய்ந்தது.

ஐ. ஆர். 22 நெல்லின் மணிகள் நீளமாக இருக்கும். ஐ. ஆர். 8 அரிசியின் நடுப் பாகத்தில் வெண்மையாக இருக்கும். இதனால் இதைப் பெரும்பாலோர் விரும்புவதில்லை. ஆனால், ஐ. ஆர். 22 அரிசியின் நடுப் பாகத்தில், அவ்வாறில்லாமல் சாதாரண அரிசியைப் போன்றே இருக்கும். எனவே, ஐ. ஆர். 8, ஐ. ஆர். 5 ஆகியவைகளை விட ஐ. ஆர். 22 நெல்லை, மக்கள் பெரிதும் விரும்பக் கூடும். இதன் வயது 120 முதல் 135 நாட்களேயாகும். ஐ. ஆர். 8 நெல்லுக்குப் பரிந்துரைக்கப்படும் முறைகளையே இந்த நெல்லிற்கும் மேற்கொள்ள வேண்டும்.



பகல் முழுதும்
கடினமான வேலைக்குப் பிறகு...

புத்துயிரளிக்கும்
நெஸ்கா:பே ஒரு கப்
அருந்துங்கள்
—5 செகண்டில் தயார்!








NCE 6369

# நெஸ்கா:பே

**உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:பே**
**ஊக்கமளித்திடும் நெஸ்கா:பே!**

முற்றிலும் சுத்தமான காப்பி—
தென்னிந்திய காப்பி
விதைகளிலிருந்து
தயாரிக்கப்பட்டது

ஒரு நெஸ்லெ தயாரிப்பு

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்

# வழங்கியோர் பட்டியல்

| | ரூ. | பை. |
|---|---|---|
| முந்திய இதழின்படி தொகை. | 16,98,286 | 86 |
| திரு அப்துல் ரகீம் (முதல்வர் அலுவலகம் வாயிலாக). | 10 | 00 |
| வெள்ளக்கோவில் சாமிநாதன், (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்). | 101 | 00 |
| திரு டி.எம். சண்முகம், சென்னை .. | 10 | 00 |
| பொன்மலைப்பட்டி, தி.மு. கழகம். | 5 | 00 |
| டால்மியா, சிமென்ட் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், கல்லக்குடி. | 206 | 00 |
| கோட்டாட்சி அலுவலர், கோவில்பட்டி. | 3,340 | 00 |
| திரு எம்.டி. ராமசாமி ரெட்டியார், டிரஸ்டி, ஸ்ரீஅபிநாமேசுவரர் கோவில், திருவாமாத்தூர், | 150 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், சாத்தான்குளம். | 1,038 | 66 |
| நிலவளவங்கித் துணைப்பதிவாளர். | 50 | 00 |
| இணைத் துணைப் பதிவாளர், மாவட்டப் பதிவாளர் அலுவலகம், காஞ்சிபுரம். | 25 | 00 |
| நிர்வாக அலுவலர், பேரூராட்சி, பெரம்பலூர். | 50 | 00 |
| துணைப்பதிவாளர், ஊத்துக்கோட்டை | 25 | 00 |
| வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், பூண்டி. | 110 | 00 |
| லட்சுமி தியேட்டர், திருநெல்வேலி (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சகம் வாயிலாக.) | 265 | 15 |
| அறிஞர் அண்ணா மன்றம், பலகைவாராவதி, திருவான்மியூர். | 15 | 00 |
| திரு சி. ராமன், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர். | 30 | 00 |
| செயலாளர், கருணாநிதிபுரம் | 81 | 00 |
| திரு சின்னக்கண்ணு, அத்திரிமலைப்பட்டு. | 5 | 02 |
| ஒண்ணுபுரம் தி. மு. கழகம் — | 1 | 00 |
| திரு திருநாவுக்கரசு .. — | 1 | 01 |
| அண்ணா நினைவுக் கல்லூரி, தருமபுரி | 5 | 00 |
| ஒகனேகல் கிளை அலுவலகம் ... | 51 | 51 |
| தீர்த்தகிரி, நொச்சிப்பேட்டை, கிளைக்கழகம். | 5 | 00 |
| தலைவர், நொச்சிப்பேட்டை, கிளைக் கழகம். | 5 | 00 |
| திரு மாணிக்கம், கோவிந்தரெட்டிபாளையம், (கல்வியமைச்சர் அலுவலகம்வாயிலாக.) | 5 | 00 |
| திரு இருளப்பன் சேர்வை வத்தலக் | 100 | 00 |
| குண்டு, வெள்ளரிப்பட்டிப் பொதுக் கூட்ட வசூல். | 54 | 00 |
| 'ஏமாளி' நாடகத்தில் நடிகர் கண்ணன் வசூல். | 10 | 00 |
| மின்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஓ.பி. ராமன் மூலம். | 500 | 00 |
| சிறைக்கைதிகள்—இன்ஸ்பெக்டர் ஜெனரல், குறளகம், சென்னை. | 25 | 00 |
| மருத்துவ அலுவலர், முதல்நிலை சுகாதார நிலையம், ஒட்டநத்தம். | 20 | 00 |
| திரு பத்மனபன், அட்வகேட், கடலூர்-1. | 100 | 00 |
| மொத்தத் தொகை .. | 17,04,636 | 21 |

# தமிழ்நாட்டில் இளைஞர் படை

எஸ். சிங்கராசன்

14 வயது முதல் 22 வயது வரையிலும் கல்வி கற்று வேலை வாய்ப்புகளை நாடும் தமிழ் நாட்டு இளைஞர்கள், ஆண்களும் பெண்களும் வேலை வாய்ப்புகளைப்பெறுவது வரை, தங்கள் பொன்னான நேரத்தை, வேலை வாய்ப்புகளை அறிவதிலும், பணியின் மூலம் தங்கள் உள்ளத்தைப் பக்குவப் படுத்தி, நாளை தேடிக்கொள்ளும் வேலைக்குத் தங்களை மேலும் உகந்தவர்களாக ஆக்கவும் இளைஞர் படை அமைப்பில் ஒரு சிறந்த வாய்ப்பு உள்ளது.

ஒவ்வொரு இளைஞனும் தன் வருங்காலத்தையும், நாட்டின் எதிர்காலத்தையும் எண்ணித் தனக்கும், நாட்டிற்குமிடையே அமைந்த குடும்பம், ஊர், ஊராட்சி, கோவில், அற நிலையம், மாவட்டம், பள்ளி, பாலர் அரங்கங்கள், விளையாட்டு அரங்கங்கள், ஓய்வு வேளையில் தொழில்களைக் கற்கும் நிலையங்கள், விவசாயப்பண்ணைகள், நூலகங்கள் போன்ற நிறுவனங்களில் தன்னைப் போன்ற இளைஞர்களுடன் சேர்ந்து, ஓய்வு வேளைகளில் சேவை செய்வானாயின், தான் கல்லூரியில் கற்ற பாடங்கள், தனக்கு அமைந்த பண்பாடுகள், தான் என நினையாமல் மற்றவர்களை எண்ணித் தான் செய்ய வேண்டிய சேவைகள் இவைகளைப் பெருக்கவும், விருத்தி அடையச் செய்யவும் ஓர் இளைஞர் அணி பெரும் தேவையாகும்.

கல்வி கற்கும் வாய்ப்புகள் முடிவடைந்ததும், இன்று நம் இளைஞர்கள், தாங்களே வேலை வாய்ப்புகளைத் தேடி நடக்கும் ஓர் இக்கட்டான நிலை நாட்டில் உருவாகியுள்ளது. வேலைத் தகவல் நிலையங்கள், வேலையில்லாதவர் பெயரைப் பதிவு செய்து வேலை வாய்ப்புகள் வரும்போது அவர்களுக்கு அறிவித்து, வேலை ஏற்பாடுகள் செய்ய உதவிய போதிலும், வேலை இல்லாதவர்கள் எண்ணிக்கை ஆண்டு தோறும் இலட்சக் கணக்கில் கூடுவதன் காரணமாகவும், போதிய வேலை வாய்ப்புகள் திடீரென அதிகரிக்காத காரணத்தாலும், ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலை இல்லாமல் அவதிப் படுகின்றனர்.

ஆனால், நாட்டில் நடக்க வேண்டிய வேலைகளோ ஏராளம்! ஏராளம்!! கட்டாயக் கல்வி, சுகாதாரம், சாலைகள் அமைப்பது, காடு வளர்த்தல், விவசாயிகளுக்கு உதவுதல், தொழில் நுட்பக் கல்வியில் மேலும் தேர்வு பெறுதல், சமுதாய நலன் கருதி ஆரம்பிக்கப்பட்டிருக்கும் எண்ணிறந்த நிறுவனங்களுக்குத் தொண்டு செய்வது, போன்ற முற்போக்கு மனப்பான்மை ஓங்கி வளர்வதற்கு இளைஞர்கள் முன் வர வேண்டும்.

இளைஞர்கள் முன்னேற்றமும், நாட்டின் முன்னேற்றமும், ஒன்றோடொன்று இணைந்தே காட்சியளிக்கிறது. இன்றைய இளைஞர்கள் மனம் கொந்தளிக்காமல், நல்ல பயிற்சியின் மூலம் சேவையின் இன்றியமையாமை உணர்த்தப்படுமாயின், நாளை அவர்கள் இந்நாட்டின் நல்ல குடிமக்களாக இருப்பது மட்டுமல்லாமல் அவர்கள் வேலைக்கு அமரும் காலங்களில் சேவையின் முக்கியத்துவத்தை உணர்ந்து தமக்குத் தாமே எவ்வாறு உதவி செய்வது என்று அறிவதோடு, மற்றவர்கட்கும் பணி செய்வதைத் தங்கள் இலட்சியமாகக் கொள்ள வாய்ப்பு ஏற்படும். மன விரிவும், பண்பும் பெற மனித சமுதாயத்தின் தேவைகளை நடைமுறையில் பார்த்தும், செய்தும் புரிந்து கொள்வதுதான் பணியின் அடிப்படை இலட்சியம். உண்மையில் நம் இளைஞர்களுக்கு மிகத் தேவை விவசாயக் கல்வியும், தொழிற் கல்வியும். அத்தோடு தாங்கள் கற்ற பாடங்களை நடைமுறையில் எவ்வாறு பயன்படுத்துவது என்ற அறிவும் அவசியம்.

வெறும் புத்தகப் பூச்சியாக இல்லாமல், பயிற்சியும், அனுபவமும், தேர்வும் பெற்று நாட்டின் நிலையையும் தேவையையும் புரிந்து, தாமாகவே தம்மை ஒரு வேலையில் அமர்த்தும் திறன், இளைஞர்கள் பணியின் மூலம் நமது நாட்டில் உருவாக்க முடியும். இளைஞர்கள் வாழ்வில் நிச்சயமாக ஓர் புதிய அத்தியாயத்தைத் தொடங்க வாய்ப்பு உண்டு.

" தனி மரம் தோப்பாவதில்லை ". குடும்பத்தில் எல்லாரும் பட்டம் பெற்று வேலை தேடுவதில் வாழ்வைக் கழிப்பதிலும் பயன் இல்லை. தன் நிலையைப் பக்குவப்படுத்திப் பணிக்கு முந்தும் எந்த இளைஞனுக்கும், எப்போதும் வேலை இல்லாமல் இருந்ததில்லை. ஆனால் அதற்கு மாறாக இளைஞர்களுக்குப் போதிய நேரம் இல்லை எனக் கூறலாம். குடும்பத்திற்கும், நாட்டிற்கும் உழைக்கும் பண்பு பணியின் மூலமே பெற முடியும். தனியார் ஒருவரின் முன்னேற்றமோ அல்லது ஒரு நாட்டின் முன்னேற்றமோ, தன்னலமற்ற தியாகத்திலும், பணியிலும் தான் அமைந்துள்ளது. பதவி, பணம், கௌரவம் எல்லாம் தியாகத்தின் சிகரங்கள்; பயிற்சியுப்

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் இயக்குநரான இக்கட்டுரை ஆசிரியர்—தமிழ்நாட்டில் இளைஞர் அணி எப்படி அமைய வேண்டும் என்பது பற்றித் தமது கருத்துக்களை இலட்சிய அடிப்படையில் தெரிவிக்கிறார்.

பணியும் இல்லாதவர்கட்கு இவ் வாய்ப்புகள் எட்டாத உச்சிகளாகும். ஆக, வாழ்வில் உயர் வளிக்கும் பாதைதான் இளைஞர் படை அமைப்பு. இளைஞர்களின் பள்ளிக் கல்வி அல்லது கல்லூரி வாழ்வு முடிந்ததும், தன் போன்ற நூற்றுக் கணக்கான இளைஞர்களுடன் தோளோடு தோள் சேர்ந்து சமுதாய நலனை முக்கியமாகக் கருதி, சமுதாய அமைப்பில் தன் வருங்காலத்தை வளர்ச்சியடையச் செய்ய இளைஞர்படை பெரும் உதவியளிக்கும். குருவிற்கும், குருகுலத்திற்கும், கோவில்கட்கும், நண்பர்களுக்கும், நாட்டு மன்னருக்கும் தன்னாலான பணிகளைச் செய்து பயிற்சி பெற்ற பாரம்பரியத்தில் வந்த தமிழ் நாட்டு இளைஞர்கட்கு, இளைஞர் கூட்டணி புதிய பாடம் அல்ல.

## மேலை நாடுகளில் இளைஞர் பணி

இங்கிலாந்தில் இளைஞர் பணி மூன்று முக்கிய பங்காளிகளால் நடத்தப்படுகின்றது. அவைகள் முறையே, அந்நாட்டின் அரசு, மாவட்டக் கல்வி அதிகாரிகள், தானாகவே பணி செய்யும் நோக்குடன் முன்வரும் சங்கங்கள். இந்நிறுவனங்கள் 14—20 வயதிற்கு உட்பட்ட ஓய்வியுள்ள இளைஞர்களுடன் பங்கு கொண்டு செயல்படுகின்றன. இளைஞர் முன்னேற்றம் தேசீயக் கல்வியின் முக்கியப் பொறுப்பாக 1839-ஆம் ஆண்டு 'இளைஞர் பணி' என்ற தலைப்பில் ஆரம்பிக்கப்பட்டது. 1944-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட கல்விச் சட்டத்தின் அடிப்படையில் உள்ளாட்சி மன்றங்கள் கட்டாயமாக அவ்வட்டாரங்களின் தேவைக்கேற்ப வசதிகளை இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு ஏற்பச் செய்து கொடுப்பதோடு, முன் வந்துள்ள இளைஞர் சங்கங்களுடன் சேர்ந்து நல்ல முறையில் பணி ஆற்ற வேண்டும்.

இங்கிலாந்திலும், வேல்ஸ் நாட்டிலும் இளைஞர் பணியை நடத்த வேண்டிய மத்தியப் பொறுப்பு "கல்வி—விஞ்ஞானத் துறையைச் சேர்ந்ததாகும். ஆனால் இத்துறை, 'இளைஞர் பணியைப் பெருக்கும் மன்றத்தின்' ஆலோசனையைக் கேட்டே பணியாற்றும்; இத்துறை இளைஞர்களின் பயிற்சிக்கு வேண்டிய பணியாற்றும் நிறுவனங்களை நடத்துவதற்குத் தேவையான பண உதவியை அளிக்கும். இந்நிறுவனங்களில் முழு நேர இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், இளைஞர் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் நிறுவனங்களுக்குத் தேவையான பூமி, அங்கு தேவைப்படும் பொருள்கள், சிறந்த நாட்டுப்பணித் திட்டங்கள் நடத்தும் செலவுகளை ஈடு செய்யவும் கல்வி—விஞ்ஞானத் துறை பொருள் உதவி செய்யும். ஆங்காங்குள்ள கல்வி அதிகாரிகள், வட்டார இளைஞர் மன்றங்களோடு தொடர்பு கொண்டு இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் அதிகாரிகள் மூலம் இளைஞர் மன்றங்களிடையே ஒத்துழைப்பை உண்டாக்கி, புதிய நிறுவனங்களையும் ஆரம்பிக்கின்றனர்.

மாவட்ட அதிகாரிகள், இளைஞர் தலைவர்களுக்குப் பண உதவி செய்வதோடு இளைஞர் மன்றங்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்கின்றனர். ஒவ்வொரு மன்றத்திற்கும் திறமை வாய்ந்த பயிற்சியாளர்களை அனுப்பி, மன்ற இளைஞர்களுக்கு வேண்டிய பயிற்சியை அளிக்கின்றனர். மாவட்ட அதிகாரிகள் அரசாங்கத்தின் மேற்பார்வையில் நேரடியாகப் பல இளைஞர் மன்றங்களை நடத்துகின்றனர். மாவட்ட அதிகாரிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும், அதிகாரிகளையும், இளைஞர் மன்றங்களிலிருந்து அனுப்பும் பிரதிநிதிகளையும் கொண்ட குழுக்கள் அமைத்து மேலும் பணியைப் பெருக்குவதைப் பற்றி ஆலோசிக்கின்றனர்.

இங்கிலாந்தில் முக்கியமான பணிகளை 1944-ஆம் ஆண்டு புதிதாக வந்த சட்டத்திற்கு முன்பாகவே கிறித்தவ மன்றங்களைச் சார்ந்த இளைஞர்கள் ஆரம்பித்து நடத்தி வந்தார்கள். அங்கு 21 வயதிற்குட்பட்ட 30 லட்சத்திற்கும் அதிகமான இளைஞர்கள் இந்த மன்றங்களில் உறுப்பினர்களாக இருக்கின்றனர்.

இளைஞர் மன்றங்களின் முக்கியப் பணியானது அவரவர் திறமைக்கு ஏற்றவாறு தொழில் சம்பந்தமாக வழி காட்டுவதாகும்; இவ்விளைஞர்கள் என்னென்ன வேலை வாய்ப்புகள் நாட்டில் உள்ளன என்றும் அவர்கள் வேலையில் அமர்ந்த பின்னரும், அவர்கள் வேலை முன்னேற்றமாகத் தொடர்பு கொள்வதும் இளைஞர் மன்றங்களின் முக்கியப் பணியாகும்.

இங்கிலாந்தில், 1948-ஆம் ஆண்டு அமலில் வந்த வேலை வாய்ப்பு—சேவைச் சட்டத்தின் கீழ், தொழில் அமைச்சர் இளைஞர்களின் வேலைக்கும், இளைஞர் சேவைக்கும் தலைமை வகித்ததோடு பாராளுமன்றத்துக்கும் பொறுப்புள்ளவராக இருந்தார். அவருக்கு ஆலோசனை கூறத் தேசீய இளைஞர் வேலை மன்றம் ஒன்று அமைக்கப்பட்டது. அம்மன்றம் நாட்டிலுள்ள பலதரக் கல்விநிறுவனங்களையும், தொழில் நிறுவனங்களையும், தனியார் நிறுவனங்களையும் ஒன்று சேர்த்துப் புதிய கொள்கைகளை அமல் செய்து வந்தது. ஆகவே கல்வி கற்று முடிந்ததுமே இளைஞர்கள் கல்வி நிலையங்களோடு தொடர்புள்ள இளைஞர் சேவை செய்யும் மன்றங்களில் கொண்டு வரப்பட்டு, அவர்களுக்கு வேண்டிய உதவியும், பயிற்சியும் அளிக்கப்படுகின்றனர். இளைஞர் சேவை செய்யும் மன்றங்களின் அவசியத்தை ஸ்காட்லாந்திலும் ஒப்புக் கொள்ளப்பட்டுத்தான் கல்வி நிலையங்களின் இன்றியமையாத தொடர்புள்ள அம்சமாக 1945-ஆம் ஆண்டிலிருந்து கருதப்பட்டு வருகிறது.

## தமிழ்நாட்டில் சமுதாயச் சீர்திருத்தமும் இளைஞர் பணியும்

1917-ஆம் ஆண்டு சமுதாயச் சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமை வகித்த திரு எம். ஆர். ஜெயகர் (M. R. Jayakar) அவர்கள் இளைஞர்களின் தேச சேவை சமுதாயப் புனரமைப்பிற்கும், முன்னேற்றத்திற்கும் எத்துணை அவசியம் எனக்குறிப்பிடும்போது, சமுதாய ஒருமைப்பாட்டிற்கும், பகுத்தறிவுக் கொள்கைகளுக்கும் புறம்பான மூடப் பழக்க வழக்கங்களை ஒழிப்பதற்கும், சாதிப்பாகுபாட்டினால் பின் தங்கிய மக்களுக்குக் கை கொடுக்கவும் இளைஞர் பணி மிக அவசியம் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார். முன்னேற்றக் கருத்துக்களை, இளைஞர்கள் பணி மூலம் கண்டறி

வார்களேயாயின் அவர்கள் முன்னேற்றக் கொள்கைகளைப் பரப்பும் அரசாங்கத்தின் தூண்களாகக் காட்சி அளிப்பர் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. ஆசைகள் பொங்கி அலைபாயும் இளைஞர்களின் ஆவேசத்தைச் சமுதாய சீர்திருத்தத்திற்கு வேண்டிப் பயன்படுத்தப் பணி என்ற அணை போட்டுப், புனரமைப்பு என்ற வாய்க்கால் வழித் திருப்புவதாயின் அரசுக்கும், இளைஞர்கட்கும் நல்லெண்ணம் ஏற்படுவதோடு சமுதாயமும் சீர்திருத்தப்படும். சாதி ஒழிப்பு, கலப்புத் திருமணம், சமுதாய ஒற்றுமை, தேசிய உணர்வு, பகுத்தறிவுக் கொள்கைகளை மக்களிடையே பரப்புதல், இதற்கெல்லாம் மேலாக எல்லா இளைஞர்களும் தொழில், விவசாயம் இவ்விரு துறைகளிலும் பயிற்சி பெறுவது போன்ற ஆக்க வேலைகளை இளைஞர் படையின் மூலம் இளைஞர்கட்கு அளிக்கப்படும் சமுதாயப்பணி நிச்சயம் செய்து முடிக்கும்.

### நல உரை

தமிழ் நாட்டில் இளைஞர் படையை அமைத்து, இளைஞர் பணியை நல்ல முறையில் கொண்டு வரப் பின் வரும் ஏற்பாடுகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன.

(1) மேல்நாடுகளைப் போன்று சீர்திருத்தங்களுக்கு முன்னோடி (Pioneer) எனப் பெயர் பெற்ற தமிழக அரசு 'இளைஞர் கல்வி விஞ்ஞானம்' (Department for Youth services and rationalism) என்ற புதிய துறை ஒன்றை அமைப்பதோடு 'இளைஞர் பணியில்' தேர்ச்சி பெற்ற நிபுணர்கள், கல்வி அதிகாரிகள் இளைஞர் மன்றப் பிரதிநிதிகள் இவர்களைக் கொண்ட ஒரு ஆலோசனை சபையை (Youth corps or Youth service Advisory Board) நிறுவுவது உடனடித் தேவையாகும்.

(2) எல்லா உயர்தரப் பள்ளிகளும், கல்லூரிகளும், தேர்வு பெற்று வேலை தேடும் இளைஞர்கட்கு இளைஞர் சேவையைப் பற்றிப் பயிற்சி அளிக்கவும், வேலை வாய்ப்பு அளிக்கும் வழிகளைத் தெரியப் படுத்தவும், இளைஞர் மன்றங்களை நிறுவச் சட்ட அடிப்படையில் அரசு எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும்.

(3) தமிழ் நாடு முழுவதும் 1,000 இளைஞர்கட்கு ஒரு மன்றம் என்ற அடிப்படையில் இளைஞர் மன்றங்கள் அமைத்து, அவ்விளைஞர்கட்கு நற்பயிற்சி அளிக்க, அதிகாரிகளையும், நிறுவனங்களுக்கு வேண்டிய வசதிகளையும் அரசு அளிக்க வேண்டும். மேற் குறிப்பிட்ட நடவடிக்கைகள் மூலம் சமுதாயச் சீர்திருத்தமும், சமூக முன்னேற்றமும் புரட்சியின்றி நிலை நாட்ட வழி பிறக்கும்.


## தமிழ் நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்.

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-1.

தொலைபேசி எண் : 20367

தந்தி விலாசம் : 'அர்பாங்க்'
தபால் பெட்டி எண் : 226

(வருடத்திற்கு சதவீதம்)

| | |
|---|---|
| | 0·50 |
| கரண்ட் அக்கௌண்ட் | 4·00 |
| சேவிங்ஸ் பாங் அக்கௌண்ட் | |
| கால் டெபாஸிட்டுகள்—1,000-ம் அதற்கு மேலும். | 2·00 |
| 15 நாட்கள் | 3·00 |
| 46 நாட்கள் | |
| பிக்செட் டெபாஸிட்டுகள்—ரூ. 100-ம் அதற்கு மேலும். | 4·75 |
| 91 நாட்கள் | 5·25 |
| 6 மாதங்கள் | 6·25 |
| 12 மாதங்கள் | 6·75 |
| 2 வருடங்கள் | 7·25 |
| 3 வருடங்கள் | 7·50 |
| 5 வருடங்கள் | |

குறைந்த பட்ச கால அளவாக ஓராண்டுக் காலத்திற்கு ரூ. 1,000-க்கும் அதற்கு அதிகமாக உள்ள டெபாஸிட்டுகளுக்கும் மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம, கல்வி ஸ்தாபனங்களின் டெபாஸிட்டுகளுக்கு மேலே குறிப்பிட்ட வட்டி விகிதத்தை விட ½ சதவிகிதம் கூடுதல் வட்டி தரப்படும்.

ரெக்கரிங் டெபாஸிட்டுகள் :

தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.

| மாதத் தவணை | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
|---|---|---|---|---|---|---|---|
| ரூ. 5-ம் அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

ஆர். கனகசபை,
தலைவர்.

பி. என். டி. சாரி,
செயலாளர்.


குறளகம்
சென்னை.1
உங்களுக்கு வேண்டிய
எல்லாமே
இங்கே கிடைக்கும்
20461
20462
20463
20464. 20465
கதர்-
கைத்தொழில்
அங்காடி
கைவண்ணப்
பொருள்களின்
களஞ்சியம்



# கண் நோய்

டாக்டர் ஜி. வெங்கடசாமி

கடந்த பத்து ஆண்டுகளாகத் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் கண் சிகிச்சை முகாம்கள் நடத்தி வருகிறோம். அதன் பயனாகத் தமிழ் நாட்டின் மக்களுக்கு என்னென்ன கண் நோய்கள் உண்டாகின்றன, எவ்வளவு பேர்களுக்கு நோய் உண்டாகிறது என்று அறிந்திருக்கிறோம். முன்னேறிய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம் நாட்டில் கண் நோய்கள் அதிகம். நோய் அதிகமாக இருந்தும், சிகிச்சைக்குப் போதிய அளவு வசதி இல்லை. கண்நோய்களை முக்கியமாக நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

### சுற்றுப்புறச் சூழ்நிலையால் உண்டாகும் கண் நோய்கள்

சுற்றுப்புறம் அசுத்தமாக இருந்தால் அதனால் கிருமிகள் கண்களில் சேர்ந்து கண் நோய்களை உண்டாக்குகின்றன. சாதாரணமாக, கண்கள் சிவந்து பூளை வடியும், கண் வலி என்ற நோய் இந்த மாதிரிக் கிருமிகளால் உண்டாகிறது. உடலையும், சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொண்டால் இம்மாதிரி நோய்களைத் தடுக்கலாம்.

மேல் நாடுகளில் இத்தகைய கண் நோய்கள் வெகு குறைவு. கிருமிகளால், கரு விழியில் புண் உண்டாகி பார்வை இழப்பது நம் நாட்டில் சகஜம். இதுவும் மேலை நாடுகளில் மிகக் குறைவு. சுத்தம் குறைவதால் கண்ணில் உள்ள நீர்ப்பையில் கிருமிகள் சேர்ந்து நீர்ப்பையை அடைத்துக் கொள்ளும். இதுவும் நம் நாட்டில் சாதாரணமாகக் காணப்படுகின்றது. நீர்ப்பையில் உண்டாகும் சீழ் கண் விழியில் சேர்வதால் பல கெடுதல்கள் ஏற்படும். கருவிழியில் சிறிய தூசிபட்டாலும் கூட, கிருமிகள் சேர்ந்து, பெரிய புண்ணாகி, பார்வை இழக்கிறார்கள். இக் கிருமிகளால் ஏற்படும் நோய்களை எல்லாம், நமது உடம்பை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதாலும், சுற்றுப்புறத்தைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்வதாலும் தடுக்கலாம்.

குப்பை, கூளங்கள், சாக்கடை, வெளியில் மலஜலம் கழித்தல், இவற்றால் பல்வேறு வியாதிகள் உண்டாகின்றன. உடனடியாக சுற்றுப்புறச்சூழ்நிலையை மாற்றிச் சுத்தமாக வைத்தோமானால், இத்தகைய கண் நோய்கள் உட்பட பற்பல வியாதிகளைத் தடுக்கலாம்.

### சத்துக் குறைவான உணவினால் ஏற்படும் நோய்கள் :

உணவில் போதிய சத்து இல்லாவிடில் உடல் வளர்ச்சி குறைவதுடன் பல்வேறு கண் நோய்களும் ஏற்படுகின்றன. மாலைக்கண் இதற்கு ஓர் சிறந்த உதாரணம். கீரை, பால், கேரட் ஆகியவற்றில் இருக்கும் வைட்டமின் 'எ' போதிய அளவு உணவில் இல்லாவிடில் மாலைக்கண் ஏற்படும். தமிழ் நாட்டில், குழந்தைகளுக்கு மாலைக்கண் சகஜமாக காணப்படுகிறது. இன்னும் உணவில் அதிக சத்து குறையுமானால் கருவிழி கெட்டு, பார்வை போய் விடும். ஆயிரக்கணக்கான குழந்தைகள் தமிழ்நாட்டில் இவ்வாறு ஒவ்வொரு வருடமும் பார்வை இழக்கிறார்கள். பெரும்பாலும் இரண்டுமுதல் நான்குவயதுக்குட்பட்ட குழந்தைகளே இவற்றால் பாதிக்கப்படுகின்றனர். இக்குழந்தைகளின் தாய்மார்களுக்கு இவ்வியாதியின் காரணம் தெரிவதில்லை. குழந்தைகளுக்குக் காய்ச்சல் அல்லது வயிற்றுப்போக்கு ஏற்பட்டவுடன், கொடுக்கவேண்டிய சிறிய அளவு ஆகாரத்தையும் நிறுத்திப் பத்தியம் போட்டு விடுகிறார்கள். அப்பொழுது குழந்தை கண் திறக்காமல் கண்களை மூடிக் கொண்டேயிருக்கும்.

பின்னர் கண்களைத் திறந்து பார்க்கும் பொழுது கருவிழி கரைந்து கெட்டுப் போய்விடும். இந் நிலைமையைத் தாய்மார்கள் அறிந்தால் இவ் வியாதியை எளிதில் பூரணமாகத் தடுத்து விடலாம். வளரும் குழந்தைக்கு என்ன உணவு கொடுக்க வேண்டும், சத்துக் குறைவான உணவு கொடுத்தால் குழந்தை எவ்வாறு இருக்கும் என்பதை மக்களுக்குப் போதிக்க மதுரையில் சத்து உணவு நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறைந்த வருமானம் உள்ள குடும்பத்திலுள்ளவர்களுக்காக மலிந்த விலையில் குழந்தைகளுக்கு ஏற்ற சத்து உணவு தயாரிக்கும் முறை, உணவு புகட்டும் முறை ஆகியவற்றைத் தாய்மார்களுக்குப் போதிக்கிறார்கள். எல்லாத் தாய்மார்களும் இம் முறைகளைச் செவ்வனே கையாண்டால் சத்துணவின்மையால் பார்வை இழப்பதைத் தடுக்கலாம்.

உணவில் வைட்டமின் 'பி' இல்லாவிடினும், இமைகளில் புண் உண்டாகி, பார்வை குறையும். இதுவும் தமிழ் நாட்டில் சாதாரணமாக காணப்படுகிறது. பள்ளியில் படிக்கும் குழந்தைகளில் நூற்றுக்குப், பதினைந்து பேர், இந்த 'பி' வைட்டமின் குறைவால் அவதிப்படுகிறார்கள். இவர்களுக்கு வாய்ப்புண், கண் எரிச்சல், கூச்சம் முதலியன உண்டாகும். பார்வையும் குறையும். கைக்குத்தல் அரிசி, கீரை வகைகள், பால், மோர் முதலியன உட்கொண்டால் இந்த 'பி' வைட்டமின் குறைவால் உண்டாகும் கண் நோய்களைத் தடுக்கலாம்.

### கண் உறுப்புகளில் ஏற்படும் கோளாறு

ஐம்பது வயதிற்கு மேற்பட்ட மக்களுக்குக்கண்ணினுள்இருக்கும் வில்லை கெட்டுப் புரை உண்டாகும்.

இது சாதாரணமாக வயதான யாவருக்கும் உண்டாகும் வியாதி. கொஞ்சம்கொஞ்சமாகப்பார்வை குறைந்து, சில மாதங்களில் பார்வை முழுவதும் குறைந்து விடும். இவ் வியாதியை எளிதில் குணப்படுத்தலாம். அறுவைச் சிகிச்சை மூலம் புரையை எடுத்து விட்டுக், கண்ணாடி போட்டுக் கொண்டால் இழந்த பார்வை

யைத் திரும்பப் பெறலாம். மக்களில் நூற்றுக்கு இரண்டு பேர் கண்ணில் புரை உண்டாகி, இதனால் பார்வையை இழக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் எட்டு லட்சம் மக்கள் இதனால் பார்வையை இழக்கிறார்கள். இவர்கள் கண் நோய் மருத்துவமனைக்கோ அல்லது முகாமிற்கோ சென்று அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு இழந்த பார்வையைத் திரும்பப் பெறலாம். எந்த வயதிலும் இந்த அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளலாம். புரை முற்றிப் பூரணமாக மறையும் முன்னரே அறுவைச்சிகிச்சை செய்து கொள்ளுதல் நல்லது. குழந்தைகளுக்குக் கூட சிலருக்கு கண்ணில் புரை உண்டாகலாம். இதையும் அறுவைச்சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம்.

### கண் அழுத்தம் அதிகமாதல்

கண்ணினுள் சுரக்கும் நீர் வெளிப்படுவது தடைப்பட்டால் கண்ணில் அழுத்தம் அதிகமாகும். ஆரம்பத்தில் இவ் வியாதிக்கு அறிகுறிகள் ஒன்றும் இருக்காது. கொஞ்சம் கொஞ்சமாக பார்வை குறைந்து இவ் வியாதி முற்றும் போது பூரணமாகப் பார்வையை இழந்து விடுவார்கள். இவ்வாறு பார்வை போய்விட்டால் அதைத் திரும்பப் பெற இயலாது. தமிழ் நாட்டில் மட்டும் பல்லாயிரக் கணக்கான மக்கள் இதனால் பார்வை இழந்திருக்கிறார்கள். இவ் வியாதியை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து வைத்தியம் செய்தால் பார்வையைக் காப்பாற்றலாம். வருடம் ஒரு முறையாவது ஒவ்வொருவரும் தங்களின் கண் அழுத்தம் எவ்வாறு இருக்கிறது என்று சோதித்துப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

### மாறு கண்

கண்விழி அசைவதற்கு ஒவ்வொரு விரியையும் சுற்றி ஆறு தசைகள் உள்ளன. இத் தசைகளில் ஏதாவது கோணலினாலும், இதர காரணங்களினாலும் மாறு கண் உண்டாகின்றது. இதுவும் குணப்படுத்தக் கூடிய வியாதி. சிறு வயதிலேயே தகுந்த டாக்டரிடம் காட்டிச் சிகிச்சை செய்து வந்தால் மாறு கண்களை நேராக்கலாம். அவ்வாறு நேராக்காவிட்டால் கண்ணில் பார்வை குறையும். இரண்டு கண்களும் சேர்ந்து இணைந்து பார்க்க முடியாது.

### உடல் வியாதியால் ஏற்படும் கண் நோய்கள்

கண்களும், உடலில் உள்ள உறுப்புக்களில் ஒன்றானதால், உடலில் ஏற்படும் வியாதிகள் கண்களையும் பாதிக்கும். நீரிழிவு நோயினால் ஆயிரக்கணக்கான மக்கள் பார்வை இழக்கிறார்கள். பல வருடங்கள் ஒருவருக்கு நீரிழிவு நோய் இருந்தால் கண்ணினுள் இருக்கும் விழித் திரையில் ரத்தக் கசிவு ஏற்படும். அது அதிகமாகிப் பார்வையைக் குறைத்துவிடும். ஆதலால் நீரிழிவு உள்ளவர்கள் தங்களது கண்களை அடிக்கடி டாக்டரிடம் காட்டிப் பரிசோதனை செய்து கொள்வது அவசியம். ஆரம்பத்திலேயே நல்ல முறையில் கவனித்தால் பார்வையைப் பல வருடங்கள் பாதுகாக்கலாம்.

### இரத்தக் கொதிப்பு

உடலில் இரத்தக் கொதிப்பு உண்டானாலும், கண்ணில் உள்ள விழித் தசையில் இரத்தம் கசியும். இதனாலும் பார்வை குன்றும்.

### மூளையில் உண்டாகும் கட்டிகள்

மண்டைக்குள், மூளையிலும் மூளையைச் சுற்றி உள்ள உறைகளிலும் வியாதிகள் வந்தால், அவை கண் நரம்புகளைப் பாதிக்கும். இதனால் பலருக்குப் பார்வை போய்விடுகிறது. ஆதலால், தலைவலி, மயக்கம், வலிப்பு முதலிய நோய்கள் ஏற்பட்டால் கண் டாக்டரிடம் காட்டி, கண் நரம்புகளில் ஏதாவது கோளாறு இருக்கிறதா என்று அறிந்துகொள்ள வேண்டும். ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்துவந்தால் பார்வை இழப்பதைத் தடுக்கலாம். இது தவிர, கிரந்தி போன்ற வியாதிகளாலும் கண்களில் நோய்கள் உண்டாகிப் பார்வை இழக்கிறார்கள். உடலில் எத்தகைய வியாதிகள் இருந்தாலும், அவைகளைச் சரிவரக் கவனித்துக் குணப்படுத்த வேண்டும்.

நாம் பிறக்கும் போது நல்ல பார்வையுடன் பெறும் கண்கள், நாம் சாகும்வரை நன்றாகப் பாதுகாக்கப்பட வேண்டும். இதில் சிறப்புக்கவனம்செலுத்துவதால், கண்களில் எந்த வியாதிகள் உண்டாகும் என்றுஅறிந்து, அவற்றை வராமல் தவிர்க்கச் செய்ய வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களினால் நோய்கள் உண்டானாலும், தகுந்த சிகிச்சை செய்துகொள்ள வேண்டும். இவ்வாறு செய்வோமானால் கடைசி வரை நம் கண்கள் நமக்கு நல்ல பார்வையை அளித்து வாழ்வை ஒளிமயமாக்கும். ❖

---

**தமிழரசு இதழுக்கு அனுப்பப்படும் கவிதை-கதைகள் முதலியன எக்காரணம் கொண்டும் திருப்பி அனுப்பப்படமாட்டா. அவை வெளியிடுதல் பற்றிய கடிதத் தொடர்பு வைத்துக் கொள்ள இயலாது! அஞ்சல் தலைகளோ அஞ்சல்அட்டைகளோ அனுப்ப வேண்டாம் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**— ஆசிரியர்**




'சமுதாயத்தில் எல்லார்க்கும் எல்லா வாய்ப்புக்களும் கிடைக்க வேண்டும்—எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தி வாழ வேண்டும்—வாய்ப்பில்லாக் காரணத்தால் யாருடைய வளர்ச்சியும் தடைப்படக் கூடாது—வாய்ப்பும் வசதியும் உடைய காரணத்தால் மிகச் சிலர் சமுதாயத்தின் மேல் மட்டத்தில் உலவுவதும் இவ்விரண்டும் இல்லாக் காரணத்தால் பெருவாரியானவர்கள் அடிமட்டத்தில் நைந்து உழல்வதுமான நிலைமை ஒழிக்கப்பட வேண்டும் என்று காந்தியடிகள் விரும்பி, 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' அளிக்கும் 'சர்வோதய' சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் பெரும் பணியில் ஈடுபட்டார். இக் கருத்தினை வலியுறுத்துவது போன்றே,

'தனியொருவனுக்
குணவில்லையெனில்
சகத்தினை யழித்திடுவோம்'

என்றார் பாரதியார்.

ஆம். சமுதாயத்தில் தன் தேவைக்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு போராட, கூச்சல் போடச் சில நபர்களோ அல்லது ஒரு கட்சியோ இல்லாமல்— தனக்குத் தானே உரத்துக் கேட்கும்—தட்டிக் கேட்கும் வலிமை கூட இல்லாமல் சமுதாயத்தின் கடைக் கோடியில் எங்கோ ஒரு மூலையில் கண்ணிருந்தும் குருடனாய்—காதிருந்தும் செவிடனாய்—வாயிருந்தும் ஊமையாய் முடங்கிக் கிடந்து அணு அணுவாகச் செத்துக் கொண்டிருக்கிறானே, அவனைத் தான் பாரதி, 'தனியொருவன்' என்னும் சொற்றொடரால் நமக்குக் காட்டுகிறார். அத்தகையவர்களுக்கு உரிய வாய்ப்பும் வசதியும் அளித்து, அவர்களையும் சமுதாய அந்தஸ்தோடு வாழவைப்பதுதான் சர்வோதயம். அத்தகையதொரு சர்வோதய சமுதாயத்தைக் காணவே காந்தியடிகள் தன்னை அர்ப்பணித்தார்.

'உலகம் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோமோ அதை இந்தச் சமுதாயக் கடை கோடியில் இருக்கிறவர்களுக்கும் நாம் செய்ய வேண்டும்—எல்லாருக்கும் சம வாய்ப்புக் கிடைக்க வேண்டும். வாய்ப்பு மட்டும் அளிக்கப்படுமானால் ஒவ்வொரு மனிதனும் சமமான ஆன்மீக வளர்ச்சியைப் பெறுவான்'—என்கிறார் காந்தியடிகள்.

காந்தியடிகளின் வாழ்க்கையில் இத்தகையதொரு இலட்சியத்திற்கு வித்தாக அமைந்தது எது தெரியுமா? அஃதொரு சுவையான வரலாறு. இதனைக் காந்தியடிகள் எழுதிய 'சத்திய சோதனை' என்னும் 'தன் கதை' யில் விரிவாக விளக்குகிறார். 'ஒரு நூலின் மந்திர சக்தி' என்றே அந்த அதிகாரத்திற்குப் பெயரும் கொடுத்துள்ளார்.

ஒரு சமயம் காந்தியடிகள் நேட்டாலுக்குப் புறப்படும் போது, அவரது முழு நம்பிக்கைக்கும் பாத்திரராகி விட்டவரும், 'கிரிட்டிக்' என்னும் பத்திரிகையின் உதவி ஆசிரியருமான திரு போலக் காந்தியடிகளை வழியனுப்புவதற்காக ரயில்வே நிலையத்திற்கு வந்திருந்தார். அவர், 'இது தங்கட்குப் பெரிதும் பிடிக்கும்' என்று கூறி ஒரு புத்தகத்தைக் காந்தியடிகளிடம் கொடுத்தார். அதை அன்போடு பெற்றுக் கொண்டார் காந்தியடிகள்.

காந்தியடிகள் தனது ரயில் பயணத்தில், திரு போலக் வழங்கிய அந்தப் புத்தகத்தையே தனக்கு 'வழித் துணை'யாக்கிக் கொண்டு படிக்கத்தொடங்கினார். 'இந்த நூலைப் படிக்க ஆரம்பித்த பின் இடையே அதைக் கீழே வைக்கவே முடியவில்லை; எனது உள்ளம் முழுவதையும் அது கவர்ந்து விட்டது' என்று காந்தியடிகளே கூறுகிறார்.

இலக்கியப்பித்தன்

பொதுவாகத் தனது பள்ளிப் பருவத்தில் காந்தியடிகள் பள்ளிப் பாடப் புத்தகங்களைத் தவிர இதர புத்தகங்களை அநேகமாகப் படித்ததேயில்லையாம். இது தவிர, தொண்டு வாழ்க்கையில் இறங்கிவிட்ட பிறகு அவருக்குப் படிப்பதற்கு நேரமே இருந்ததில்லையாம். 'நூல்களைப் படித்த அறிவு எனக்கு உண்டென்றே சொல்லிக் கொள்வதற்கில்லை. என்றாலும், இதனால் அதிகப்படியான நஷ்டம் அடைந்து விடவில்லை என்றே கருதுகிறேன்' என்கிறார் காந்தியடிகள்.

'அத்தகைய நூல்களில், என் வாழ்க்கையில் உடனேயே நடைமுறை மாறுதலை உண்டாக்கிய நூல், கடையனுக்கும் கடைத் தேற்றம் என்னும் நூலே' என்கிறார். ஆம். காந்தியடிகள் நேட்டாலுக்குப் புறப்படும்போது, வழியனுப்ப வந்திருந்த திரு போலக் 'உங்களுக்கு மிகவும் பிடிக்கும்' என்று கூறிக் கொடுத்துப் போனதுதான் 'கடையனுக்கும்கடைத்தேற்றம்' எனும் நூல். இது, 'Unto the last' என்னும் தலைப்பில் ரஸ்கின் எழுதியதாகும். 'ரஸ்கின் எழுதிய நூல்களில் நான் முதல் முதலாகப் படித்தது இந்த நூலே' என்கிறார் காந்தியடிகள்.

ரஸ்கினின் இந்த நூலை—காந்தியடிகள் வாழ்க்கையில் உடனடி மாறுதலை உண்டாக்

கிய இந்த நூலையே, பின்னர் காந்தியடிகள், 'சர்வோதயம்' என்னும் பெயரில் தன் தாய் மொழியான குஜராத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்னும் நூல் தனது உள்ளத்தில் உறுதிப்பட்டிருந்த கொள்கைகளைப் பிரதிபலித்திருப்பதாக உணர்ந்த காந்தியடிகள், அதனாலேயே அது தன்னை ஆட்கொண்டதோடு மட்டுமின்றித் தன் வாழ்க்கையையும் மாற்றிக் கொள்ளும்படிச் செய்தது என்கிறார்.

சமுதாயத்தில் எல்லாருமே சரிசமமான வளர்ச்சியடைந்திருக்கவில்லை என்பதைக் காந்தியடிகள் நன்கு உணர்ந்திருந்தார். பொதுவாக, மனித உள்ளத்திலிருக்கும் நல்ல தன்மையை எழுப்பிவிட வல்லவனே கவிஞன். என்றாலும்கூட, மேலே கூறிய வண்ணம் எல்லாருமே சரிசமமான வளர்ச்சியடைந்தவர்களாக இல்லாமையால், எல்லாருடைய உள்ளங்களிலும் பெரும் மாறுதல்களை உண்டாக்கி விடுவதில்லை என்பது காந்தியடிகள் கருத்து. எனவே, 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனும் சோஷலிச சமுதாய உணர்வோடு, 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்னும் நூல் பின் வருபவைகளைப் போதிப்பதாக எனக்குத் தோன்றுகிறது என்று கூறிச் சிலவற்றைக் குறிப்பிடுகிறார். அவர் கூறுவதைப் பார்ப்போம் :

"1. சமுதாய நலனில்தான் தனிப்பட்டவர் நலனும் அடங்கிக் கிடக்கிறது.

2. தங்கள் உழைப்பினால் வாழ்க்கையின் தேவைகளைத் தேடிக் கொள்வதற்கு எல்லாருக்குமே ஒரே மாதிரியான உரிமை இருப்பதால் மயிர் மழிக்கும் தொழிலாளியின் தொழிலுக்கு உள்ள அதே மதிப்புத்தான் வழக்காடியின் வேலைக்கும் உண்டு.

3. ஒரு பாட்டாளியின் வாழ்க்கையும், அதாவது நிலத்தில் உழுது பாடுபடும் குடியானவரின் வாழ்க்கையும் கைத்தொழில் செய்பவரின் வாழ்க்கையுமே வாழ்வதற்கு உகந்த மேன்மையான வாழ்க்கைகள்.

இவற்றில் முதலில் கூறப்பட்டதை நான் அறிவேன். இரண்டாவதாகக் கூறப்பட்டிருந்ததை அரைகுறையாகவே அறிந்து கொண்டிருந்தேன். மூன்றாவதாகக் கூறப்பட்டதோ என் புத்திக்குத் தோன்றவே இல்லை. இரண்டாவதும் மூன்றாவதும் முதலாவதாகக் கூறப்பட்டிருப்பதிலேயே அடங்கியிருக்கின்றன என்பதைக் 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' பட்டப்பகல் போல் எனக்குத் தெளிவாக உணர்த்தியது. பொழுது புலர்ந்ததும் நான் எழுந்து இந்தக் கொள்கைகளை நடைமுறையில் கொணரத் தயாரானேன்''.

ஆம்! காந்தியடிகளின் வாழ்க்கையில் இத்தகையதொரு மன மாற்றத்தை ஏற்படுத்திய 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்னும் நூலின் மந்திர சக்தியை எவரும் வியக்காமலிருக்க முடியாது.

கடையனை — சமுதாயத்தின் கடை கோடியில் வாழ்கின்ற — நலிபிழைப்புப் பிழைக்கின்ற மனிதனை — வாழவைக்க வேண்டும் — அவனுக்கு வாய்ப்பும் வசதியும் கிடைக்கச் செய்ய வேண்டும் — அதன் மூலம் அவனை உயர்த்தி, அவனுடைய சமுதாய அந்தஸ்தை உயர்த்த வேண்டும் என்று விரும்பினார் காந்தியடிகள். அவர் காண விரும்பிய — அமைக்க விரும்பிய சர்வோதய சமுதாயம் அதுதான். தமிழகத்தைப் பொறுத்தவரை, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று பேரறிஞர் அண்ணா குறிப்பிட்டதும், அண்ணா அமைத்துக் கொடுத்த 'தமிழ்நாடு அரசு' பீடுநடை போட்டுக் கொண்டிருப்பதும் அந்தச் சர்வோதயசமுதாயத்தை நோக்கியேயாகும்! அத்தகைய சமுதாயத்தை அமைப்பதுதான் காந்தியடிகளுக்கு நாம் நிறுவும் நிலையான — பெருமை தரத்தக்க நினைவுச் சின்னமாகும்!






# 17. வன்முறையை வேரறுப்போம் வா.

'கோட்டை, குடிசை' யென்று கூறுகின்ற வேற்றுமையேன்?
வாட்டும் வறுமையிலே வாழுகின்ற—பாட்டாளி
இன்முறையில் வாழ 'இருப்பவன்; இல்லாத
வன்' முறையை வேரறுப்போம் வா.

—மு. சிவலிங்கம், வேடசந்தூர்.

பண்ணூர் மொழிபேசும் பைந்தமிழ்ச் செல்வா! நாம்
அண்ணு கலைஞர் அடியொற்றி—கண்ணனை
தென்னாட்டின் நல்லமைதி தீய்க்க முயல்வாரின்
வன்முறையை வேரறுப்போம் வா.

—நாகை. செல்வம், கொடும்பாளூர்.

இந்து முசுலிமும் இன்ன பிறருமே
வந்து வகையுடனே வாழவழி—தந்ததனுல்
இன்புறவே வாழுகின்ற இன்பத் தமிழகத்தின்
வன்முறையை வேரறுப்போம் வா.

—வா. சுப்பையா, நிலக்கோட்டை.

மங்காப் புகழோடு மாண்டு மடிந்துவரும்
வங்காள மக்களை வாட்டியே—இங்கிதமாய்க்
கொன்று குவித்துக் குதூகலப் பட்டுவரும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் அ. தங்கவேலு, வாணாபுரம்.

வள்ளுவனின் முப்பாலும் வள்ளலார் செப்பியதும்,
உள்ளமதில் ஓதி யுணர்ந்திடுவோம்—கள்ளமிலா,
நன்முறையில் நாம்வாழ நானிலத்தி லென்றென்றும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—இரா. சுப்ரமணியன், சாத்தாம்பாடி.

அன்புவழி தான்நடந்தே ஆக்கமெனும் உச்சியினைச்
சென்றடைதல் நன்றெனவே செப்பிடுவீர்!—இன்றந்த
நன்முறையை நீக்கிவிட்டு நாசவழி நாடுகின்ற
வன்முறையை வேரறுப்போம் வா!

—புலவர் மு. இரத்தினம், அலங்காநல்லூ

மண்ணில் தமிழ்ப்பண்பு மாயாமல் போற்றிடவும்,
கண்ணான நம்நாட்டைக் காத்திடவும்—அண்ணாவின்
நன்னெறி நாட்டில் நிலைபெறவும் தீயோரின்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் குமர நன்னெறியன், கண்ணமங்கல

கலையை வளர்த்திடும் நம்கலைஞர் மக்கள்
நிலையை உயர்த்திட நித்தம்—மலையாது
நன்முறையை நாட்டுவதை நாடாத புல்லோரின்
வன்முறையை வேரறுப்போம் வா.

—க. பரமசிவம், பி.எஸ்ஸி., பி.டி., அரண்மனைப்புது

பண்பற்ற செய்கைகளால் பாருலகோ டென்றோழி
விண்ணுலகு கிட்டிடினும் வேண்டோமே—மண்ணுலகில்
அன்பாறு பாய்ச்சி அனைத்துலகும் வாழ்வுபெற
வன்முறையை வேரறுப்போம் வா.

—சந்தா. இராசு

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:

திரு மு. சிவலிங்கம்
நெ. 85, காந்தி தெரு,
வேடசந்தூர்,
மதுரை மாவட்டம்.

நற்செய்கை செய்துவரும் நல்லோரின் போக்கினைச்
சொற்புத்தி இல்லாதார் தூற்றுகிறார்—பொற்புடைய
நன்முறையைத் தூற்றி நலமழிக்க நாடுவார்தம்
வன்முறையை வேரறுப்போம் வா.

—மோ. யாகோப்பு, புதுவை-5.

இந்த நிலையில் எதற்கடியோ உன்முத்தம்?
செந்தமிழ் நாட்டமைதி சீர்குலைக்க—முந்துகிறார்;
அன்னவரை வீழ்த்திடுவோம்! அப்புறம்தான் நம்காதல்!
வன்முறையை வேரறுப்போம் வா.

—சிவ. மு. சிவலிங்கம், சிவகாசி.

பாலம் உடைத்தற்கும் பல்லோரை மாய்த்தற்கும்
காலனே வந்தாலும் கட்டறுப்போம்—ஞாலத்தில்
மென்முறையை நாடிடும் மேலாந் தமிழகத்தில்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் ச. ஆதிமூலம், பி.ஏ., தேவகோட்டை.

மண்ணிருக்கும் தண்ணிலவே! மாமயிலே! பூப்போலக்
கண்ணிருக்கும் என்னின்பக் காதலியே!—பண்ணிருக்கும்
மென்மொழியே! பண்பாட்டு மேன்மையுடன் நாம்தீய
வன்முறையை வேரறுப்போம் வா.

—கலைநம்பி, சீர்காழி.

கண்ணே கனியமுதோ கற்கண்டோ பாகோ நீ
உன்னைக் கரம்பிடித்தேன் உத்தமியே—பெண்மணியே
அன்னைத் தமிழ்நாட்டில் ஆறாய்ப் பெருகிவரும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—வ. குமரன், திருமூர்த்திநகர்.

ஆக்கப் பிறந்தோம்நாம்; ஆறறிவு பெற்றோம்நாம்;
தாக்கும் வறுமையைத் தாழ்நிலையைப்—போக்கிட
நன்முறையை நாடிடுவோம்! நானிலம் தூற்றிடும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—அ. வை. முத்துச்சாமி, அந்தியூர்.

காட்டில் விலங்குகள்போல் கண்டபடி ஓர்கூட்டம்
நாட்டைக் குலைத்து நலங்கெடுக்கப்—போட்டிருக்கும்
புன்மதித் திட்டத்தைப் போக்கித் தமிழகத்தில்
வன்முறையை வேரறுப்போம் வா.

—அ. வெ. அழகுசுந்தரம், குளமங்கலம்.

எங்கெங்குச் சென்றாலும் ஏதேது கண்டாலும்
தங்கத் தமிழகம்போல் தாரணியில்—மங்காத
நன்னெறி இல்லையென நானிலத்தோர் போற்றிநிற்க
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் ல. சண்முகசுந்தரம், தென்காசி.

தேவன் திருக்குறளும் சேரன் புரிசிலம்பும்
நாவில் இனிக்குமொரு நாலடியும்—சேல்விழியே!
நன்முறையைக் கூறும்; நயக்கத் தகாதென்ற
வன்முறையை வேரறுப்போம் வா.

—'வெற்றிச் செல்வன்', காந்திக் கிராமம்.

நாட்டு வளர்ச்சியிலே நாட்டம் சிறிதுமின்றி
வேட்டை வெறிநாய்போல் வீணாக—வேட்புற்று
பொன்னான இந்நாட்டின் தொன்மைப் புகழழிக்கும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் ந. அ. அண்ணாமலை, நத்தம்.

தூங்கினையா தம்பீ! துணிவிலையா? தூளாக்கும்
ஓங்கியுயர் தோள்வீரம் ஓய்ந்ததுவா—தீங்கிழைக்கும்
கன்மனத்தார் காடாக்கும் நம்நாட்டைக் காத்திடுவோம்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் வெ. இரா. இராசகோபாலன், காவேரிநகர்.

நன்முறையைச் சொல்லும் நலமுணர்ந்த நல்லோரைத்
தன்னலத்தைப் பேணாத் தகையோரை—இந்நிலத்தில்
குன்றக் கொடுமைசெயும் கோமாளிக் கூட்டத்தின்
வன்முறையை வேரறுப்போம் வா.

—ஆசிரியர், ''மாணாக்கன்'', திருத்துறைப்பூண்டி.

கல்லெறிந்து சொல்லெறிந்து கைகொட்டி ஆர்ப்பரித்துப்
புல்லுருவி போல்வார் புரிகின்ற—அல்லலோ!
சொன்னால் அளவில்லை, தோழா! பொறுப்பதோ!
வன்முறையை வேரறுப்போம் வா.

— கலைக்கிழார், கடமலைக்குண்டு

அண்ணல்நம் காந்தியவர் அன்புநெறி காட்டியுள்ளார்
அண்ணாவும் அவ்வழியே மேற்கொண்டார்—கண்ணேபோல்
இன்முறையைக் காப்போம் இழிந்தோர்கள் கையாளும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—வித்துவான் கு. செல்லையா, தேவதானப்பட்டி.

நல்லரசின் பேர்கெடுக்க, நாட்டில் அமைதிகெட,
தொல்லைபல செய்கின்றார், துள்ளியெழு!—சொல்லவொணா
புன்மைச் செயல்புரியும் புல்லரின் உள்ளத்து
வன்முறையை வேரறுப்போம் வா.

—மு. அ. முகில்வண்ண்ணன், செய்துங்கநல்லூர்.

செந்தமிழ்த் தாயீன்ற செல்வத் திருமகனே!
நந்தமிழ் நாட்டில் நலம்பலவும்—வந்தணைய
நன்முறையைக் காட்டும் நமதரசை மாய்க்கவரும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—வெண்பாவூர் எஸ். சுந்தரம், பாலையூர்.

பூக்காட்டில் தீய புயல்மூட்ட எண்ணுகின்ற
போக்குடைய பேருக்குப் புத்திசொலி—மாக்குறளின்
அன்புநெறி சொல்வோம்; அதைமறுத்துச் சீறிவரும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—இரா. வைரமுத்து, சென்னை-7.

வெண்ணிலவே! எங்கெங்கும் வீசுகின்ற தென்றலே!
பண்ணார் மொழிபேசும் பைங்கிளியே!—''நண்ணாதே''
என்றுரைத்த என்தலைவி எண்ணமதில் சேர்ந்துள்ள
வன்முறையை வேரறுப்போம் வா.

—கு. கிருட்டிணமூர்த்தி, பி.ஏ., ஷாநகர்.

பேரழகே! தாழ்குலத்துப் பெண்ணுன்னை நான்மணந்தால்
ஊரிழிவாய்த் தள்ளி ஒதுக்குமாம்!—பாரழகை!
நன்முறையில் நாம்மணந்து, நம்மை அறுக்கவரும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் கரு. செல்லமுத்து, புதுக்கோட்டை.

ன்னலொடு செந்நெல்லும் காவிரியால் காட்சிபெற்ற
பன்னலத்தைப் பாரதமே பார்த்ததுண்டு—பொன்னியுன்னை
என்னுரிமை என்றே பிதற்றிவரும் பித்தரது
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் பத்மநாபன், எரையூர்.

ஆக்கும் புரட்சியைநாம் ஆதரிப்போம்; மக்களைத்
தாக்கும் வறட்சிக்குத் தாழிடுவோம்—ஊக்கமுற
நன்மறைகள் ஓதுபல நன்னெறியில் நின்றென்றும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—த. குப்பால், வேப்பங்குளம்.

வண்டாரும் பொங்கர் வளநாட்டின் மாமணிகள்
கொண்டாரோ வஞ்சகக் கோலத்தை—தொண்டாற்றித்
தன்னைத்தான் அர்ப்பணிக்கும் தன்மையால் வஞ்சகரின்
வன்முறையை வேரறுப்போம் வா.

—மீனாட்சிசுந்தரம், கோவை.

காந்தி வழியிருக்கக் காஞ்சித் தலைவர்தம்
சாந்தி வழியிருக்கச் செஞ்சீன—மாந்தர்தம்
இன்னாத போதனையை ஏற்றுச் சிலர்செய்யும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—நிலவு முருகன், குளிப்பிறை.

அண்ணா பிறந்த அருமைத் தமிழகத்து
மண்ணில் அமைதி மடிவதுவோ—திண்ணமாய்
நன்முறை வாளெடுத்து நாட்டில் தலைகாட்டும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—வ. பெ. ராமசாமி, சென்னை-18.

எல்லா வளங்கொண்டோம்! ஏற்ற அரசமைத்தோம்!
இல்லாமை ஈங்கில்லை என்றுண்டா?—சொல்தோழா!
உன்மத்தம் கொண்டோரால் ஊடுருவிப் பாய்கின்ற
வன்முறையை வேரறுப்போம் வா.

—இரா. திருவேங்கடம், சின்னத்தடாகம்.

பொன்னி தமிழ்நாட்டின் பொய்யாக் குலக்கொடியாம்,
கன்னி இளமயிலைக் காத்திடவே!—துன்னலரின்
இன்னல் தடையகற்றி ஈண்டு வளம்காண
வன்முறையை வேரறுப்போம் வா.

—அ. பொ. மு. வாணன், கோவை-18.

கத்தியைத் தீட்டக் களமா இதுதம்பீ?
புத்தியைத் தீட்டிப் புறப்படு—சித்தமாய்
என்னுடன் வா, தம்பீ, எங்கெங்கே கண்டாலும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—வை. வாணி, பி.ஏ., சென்னை-4.

முல்லை வழிவிளங்க முள்வழியை நாடுவதேன்?
கல்லுருகச் செய்வாய் கனிமனமே!—தொல்லையொழி
மென்முறையாம் அண்ணாவின் மேன்மை வழிசென்று
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் முத்துவெங்கடேசன், திருமயம்.

அன்பால் உருவானோம், ஆதலினால் பூதலத்தில்
தென்பால் பிறந்துவளர் தென்றலென—என்தோழா!
நன்மை விளைவிக்க நாடிடுவோம்! தேவையிலா
வன்முறையை வேரறுப்போம் வா.

—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

அறத்துக்கும், நல்ல அமைதிக்கும், காணும்
மறத்துக்கும் பேர்போன மண்ணே!—புறத்திருந்து
சொன்முறை யாலன்றிச் சூழ்ச்சியாற் றாக்குகின்ற
வன்முறையை வேரறுப்போம் வா.

—மீரா மணாளன், மாயூரம்.

அன்பும் அறமும் அரசோச்சும் மாநிலமாய்
இன்பத் தமிழகம்தான் இன்றிருக்க—அன்னமே
சின்ன மனம்படைத்தோர் சீரழிக்கச் செய்கின்ற
வன்முறையை வேரறுப்போம் வா.

—கோ. புகழேந்தி, புதுவை-4.

தென்மறவா! செந்தமிழ்த் தேன்பெறவா! வெற்றிகள்
உன்னுறவாம், ஊரறியு முன்பெருமை—அன்புறவாய்
நன்முறையில் நல்லின்பம் நாட்டில் குடிகொள்ள
வன்முறையை வேரறுப்போம் வா.

—இலக்கியன், புதுவை-1.

இன்மனத்தான் காந்திமகான் ஏற்றிவைத்த சத்தியத்தைப்
பொன்மனத்தில் முன்னிருத்திப் போரிடுவோம்—வன்மனத்
[தார்
மன்பதையை ஈரமின்றி மாய்த்ததிலே யின்பமுறும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—கோ. அநுத்தமா, சென்னை-16.

குத்துவதேன்? வெட்டுவதேன்? குண்டெடுத்து வீசுவதேன்?
பித்தப் பெருமயக்கோ? பேய்க்குணமோ?—முத்தமிழர்
பொன்னரசோ டொத்துழைத்துப் புல்லரிவர் நெஞ்சத்து
வன்முறையை வேரறுப்போம் வா.

—கோ. செந்தாமரை, குலசேகரன்பட்டினம்.

மாமரத்துச் சோலையிலே மந்தி புகுந்திருந்து
பூமணக்கும் பிஞ்சுகளைப் பேர்த்தாற்போல்—பாமணக்கும்
இன்பத் தமிழகத்தின் ஏற்றம் குலைக்கின்ற
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் து. நடராசன், மெய்ஞ்ஞானபுரம்.

தியணைக்கும் தண்ணீராய், சிறுபுலி மாயம்பாய்
நோயொழிக்கும் மாமருந்தாய், நோன்மையொடு—தாயினமும்
தன்வீரம் காட்டும் தருணம், தமிழ்த்தோழீ!
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.

ஆர்வளங்கள் சூழ அமைதிமிகு பூங்காவாய்ச்
சீர்விளங்கும் தாயகத்தைச் சீரழிக்க—நேர்மையிலார்
இன்வேலி ஓரம் இருக்கின்றார்; அன்னவர்தம்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் க. ஆ. இராசன், திருச்செங்கோடு.

சீரான வாழ்வுக்குச் சிறுகுடும்பம் போதுமெனக்
கூரான வேல்விழியாள் கூறுகின்றாள்—தேராதோர்
இன்னும் இதற்கெதிராய்ப் பரப்பும் வதந்திஎனும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—இரா. கிருஷ்ணமூர்த்தி, பி.எஸ்ஸி., கோயம்புத்தூர்-18.

சங்கத் தமிழ்மகனே, சான்றோர் குலவிளக்கே,
சிங்க மறவரினச் செல்வமே,—பங்கமிலா
நன்முறையில் வாழ்ந்துவரும் நாட்டையெல்லாம் பாழ்படுத்
[தும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—ஞா. பேகன், சோபுன்பட்டி.

நாட்டின் வளமோங்க நற்றமிழே ஆட்சிகொள
வாட்டும் பிணிச்சாதி வாழ்விக்க—வீட்டமைதி
நன்முறையில் வாழ நறுந்தமிழா! இன்றுமுதல்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் நா. மரகதம், வெள்ளக்கோயில்.

வரட்டுக் கவுரவத்தால் வாய்பேசிப் பின்னர்
இருட்டில் மதுவோ(டு) இணையும்—திருட்டகற்ற
நன்முறையால் சட்டம் நடைமுறைக்கு வந்ததனால்
வன்முறையை வேரறுப்போம் வா.

—வித்துவான் நெல்லை ஆ. கணபதி, சைதாப்பேட்டை.

நம்பினோர்க் காதரவை நல்கிய நற்குணத்தால்
அம்புவியில் பேர்பெற்ற அண்ணாவின்—தம்பிகள்
உன்னதமாய்ச் செங்கோலை ஓச்சுவதற் கூறுசெயும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—வெங்கடேசன், சேலம்-9.

கட்டிக் கரும்பே! கனிச்சுவையே! கற்பகமே!
எட்டிக் குணமுடைய ஈரமிலார்—வெட்கமுற
நன்முறையில் வாழ்ந்து நலிவுதரும் சாதிமத
வன்முறையை வேரறுப்போம் வா.

—பசுமலை விர. முருகேசன், எம்.ஏ., பி.டி., மதுரை-20

திமை உணர்வோம்; திருந்தக் குறள்கற்போம்;
'நாமே நமக்குதவி' நன்கறிவோம்—பூமிதனில்
நன்மைப் பயிர்விளைப்போம்; நாளும் தலைதூக்கும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—சி. சௌ. கருப்பன் செட்டி, திருச்சி-16..

இல்லாமை தீர்ந்திடவும் இன்பவாழ் வெய்திடவும்
எல்லார்க்கும் எல்லா நலமுமே—மல்கிடவும்
அன்பின் வழியாய் அமைதியே கண்டிடவும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர். வை. சுப்பிரமணியன், வா ரேசி.

குடமுருட்டிப் பாலத்தில் குண்டுகளை வைத்தோர்
உடலுருட்டி, ஊரார் உவப்பரே!—கடலலையாய்க்
கன்னித் தமிழ்க்குலத்துக் காளையே! இந்நாட்டில்
வன்முறையை வேரறுப்போம் வா.

—தாமரைச்செல்வன், திருச்சிராப்பள்ளி-12.

நீயாவி நானுடல்· நீயின்றி நானிங்கு
மாயாமல் வேற்றுடம்பு வாழுமோ! தூயவளே!
இன்னும் உனையேற்க இன்னலாம் சாதிவெறி
வன்முறையை வேரறுப்போம் வா.

—எஸ். ஆதினம், விரசிகாமணி,

தென்னாடும் நன்னாடே! தென்னவரும் நல்லவரே!!
பொன்னாட்டின் ஆளுகையும் பூரிப்பே!!!—இந்நாட்டின்
முன்னவரைக் கொல்ல முடிவெடுத்த பாவிகளின்
வன்முறையை வேரறுப்போம் வா.

—ஆர். லலிதா, II பி.எஸ்சி , கடலூர்-1.




NCM 26 TAM

குழந்தைகளே ! பஞ்சொத்த
தேங்காய்த் துருவல்,
பலமூட்டும் ஆடைப்பால்
இவற்றின் பாங்கான
சுவைப் புதையல்-
நியூட்ரின் கோகோனட்
பான் பான்கள் !

**தின்னத்தின்ன**
**திகட்டாத மிட்டாய்!**

நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி

---

## நீலகிரி கூட்டுறவு மைய வங்கி லிமிடெட்
நெ. ஜே. 90. ''கூட்டுறவு மத்திய வங்கி
கட்டடம்'' உதகமண்டலம்

தந்தி : நில்போபாங்க் தொலைபேசி எண் : 2420

| கிளைகள் : | கோத்தகிரி | குன்னூர் | கூடலூர் |
|---|---|---|---|
| தொலைபேசி எண் : | 322 | 2684 | 24 |

| | (லட்சம்) |
|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் .. | 40·00 |
| வழங்கப்பட்ட பங்கு மூலதனம் .. | 29·87 |

**வட்டி விகிதம்**

| | |
|---|---|
| (1) சேவிங்ஸ் பாங்கு கணக்கு .. | 4% |
| (2) பிராவிடண்ட் பண்டு டெபாசிட்டு . | 5% |

**நிரந்தர டெபாசிட்டுகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | 1 மாதம் முதல் | | 3 மாதங்களுக்குள்ளாக | | $3\frac{1}{2}$% |
| (2) | 3 | ,, | 6 | ,, | $4\frac{3}{4}$% |
| (3) | 6 | ,, | 12 | ,, | $5\frac{1}{4}$% |
| (4) | 12 | ,, | 24 | ,, | $6\frac{1}{4}$% |
| (5) | 24 | ,, | 36 | ,, | $6\frac{3}{4}$% |
| (6) | 36 | ,, | 60 | ,, | $7\frac{1}{4}$% |
| (7) | 60 | ,, | 84 | ,, | $7\frac{1}{2}$% |
| (8) | 84 மாதங்களுக்குமேல் | | | | $7\frac{3}{4}$% |

36 மாதங்களுக்கும் அதற்கும் மேற்பட்ட காலத்திற்கும் போடப்படும் டெபாசிட்டுகளுக்கு (அசலுக்கும், வட்டிக்கும்) தமிழ்நாடு அரசு உத்திரவாதம் அளித்துள்ளது.

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

ஜே. மாதா கவுடர், எம்.பி., இரா.சு. வேலாயுதம், பி.எ.
பெருந்தலைவர். துணைப்பதிவாளர்-செயலாளர்.

---

## நல்வாழ்த்துக்கள்

**யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்**
**பிரைவேட் லிமிடெட்**

**1/4, சூரியநாராயண செட்டி தெரு**
**சென்னை-81**

உயர்ந்த தரமுள்ள
''கோபுரம்'' மார்க்
மைதா, சூஜி
மற்றும்
''கப்பல்'' மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண், 52670 - 52671
52672 - 52673

தந்தி, MONARCH

நாளைய தலைமுறை



# தமிழ்த் தட்டச்சைக் கண்டுபிடித்தவர் கதை

— அழகனார் —

மணிமணியான எழுத்துக்கள் பார்ப்பதற்கு அழகைத் தரும். அழகிய எழுத்துக்களைப் படிப்பதற்கு ஆவல் தோன்றும். கோணல் மாணலான கிறுக்கு எழுத்துக்களைப் படிப்பதற்கு வெறுப்பாக இருக்கும்.

அழகாக எழுதுவதற்கு எல்லாராலும் முடிவதில்லை. சின்ன வயதில் எப்படி எழுதிப் பழகினார்களோ அப்படித்தான் எழுத்து அமைந்து விடுகிறது.

அழகாக எழுத வேண்டும் என்பதற்காகத்தான் சிறிய வகுப்புகளில் பல பயிற்சிகளைக் கொடுக்கிறார்கள். ஆனால், எல்லாராலும் அழகாக எழுதுவதற்கு வருவதில்லை.

அழகாக எழுதுவதற்குக் குறைந்த அளவு நேரம் கூடுதலாகவும் ஆகிறது. அத்துடன் பல பிரதிகள் எடுக்க வேண்டும் நிலை வந்தால் நேரம் மேலும் மேலும் செலவாகும்.

அழகாகவும் பல படிகள் எடுப்பதற்கும் 'டைப்ரைட்டர்கள்' பயன்படுகின்றன. டைப்ரைட்டர்களைத் தமிழில் தட்டச்சுகள் என்று சொல்லுகின்றோம் நாம்.

அரசு அலுவல்கள் சீராகவும் சிறப்பாகவும் நடப்பதற்குத் தட்டச்சுப் பொறிகள் பெரும் துணை செய்கின்றன.

தட்டச்சுப் பொறியினால் மிக வேகமாக அச்சிட முடிகிறது. அழகாகவும் அச்சிட முடிகிறது. படிப்பவர்கள் சுலபத்தில் படித்துக்கொள்ளும் அழகிய எழுத்துக்களில் ஒரே சீராக அச்சிட முடிகிறது.

ஒருவர் சாதாரணமாகப் பத்து நிமிடங்களில் ஒரு பக்கம் கையால் எழுதுவதாக வைத்துக் கொள்வோம். அதே பத்து நிமிடத்தில் தட்டச்சுப் பொறியினால் மூன்று பக்கங்கள் எழுதி முடித்து விடலாம்.

தட்டச்சுக்கள் கண்டுபிடிக்கப்பட்டு நூறு ஆண்டுகள் ஆகின்றன. ஆங்கிலத்தில்தான் முதன் முதலாகத் தட்டச்சுப் பொறிகள் வெளிவந்தன. அதன் பெருமையை உணர்ந்த தமிழர் ஒருவர் தமிழிலும் தட்டச்சுப் பொறிகள் உருவாக உறுதி பூண்டார். அதற்காக ஆராய்ச்சிகள் செய்தார். அரும் பெரும் ஆராய்ச்சிக்குப் பிறகு உருவெடுத்ததுதான் தமிழ்த் தட்டச்சு. இந்த அரும் பெரும் பணியைச் செய்தவர் ஒரு தமிழர்! அவர் பெயர் திரு. இரா. முத்தையா.

இரா. முத்தையா ஈழ நாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுண்டிட்றகுளியில் 1886-ஆம் ஆண்டு பிறந்தார். அவருடைய தந்தை பெயர் இராமலிங்கம். அவர் நன்கு கற்று அறிந்தவர். இரா. முத்தையாவுடன் பிறந்தவர்கள் எட்டுப் பேர்கள். எல்லாருக்கும் இளையவர் இவர்.

இவருடைய ஏழாம் வயதில் தந்தை இறந்து போனார். தாயாரின் விடா முயற்சியினால், கல்வி பெற்றார். வறுமை மிகுந்த குடும்பம் இவருடைய குடும்பம். என்றாலும் தாயின் தளராத ஊக்கம் இவரைப் படிக்கச் செய்தது. வறுமை மாறித் தம் மக்கள் சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டும் என்பதே அவர் தாயாரின் ஆவல்.

ஈழ நாட்டில் இருந்தால் வறுமை மாறாது. வறுமை மாறத் திரைகடல் கடந்து போனால் தான் திரவியம் கிடைக்கும் என்று நம்பினார், இவருடைய தாயார். தாயாரின் விருப்பப்படி உழைத்துப் பொருள் தேடுவதற்கு மலாயாவிற்குப் போனார் திரு. முத்தையா.

சிங்கப்பூர் இரயில்வேயில் சில காலம் வேலை செய்தார். அரசாங்க அலுவலில் அவருக்கு நாட்டம் இல்லை. அதனால் இரயில்வேயிலிருந்து விலகித், தனியார் ஒருவருடைய நிறுவனத்தில் சேர்ந்தார்.

வேலை நேரம் போக மீதி இருந்த நேரத்தில் அவர் சும்மா இருக்கவில்லை. கணக்கு, பொருளாதாரம், அச்சடித்தல், சுருக்கெழுத்து, ஆகிய கலைகளைக் கற்றார். அத்துடன் தமிழ் இலக்கியங்களையும் ஆங்கில இலக்கியங்களையும், கற்றுத் தேறினார். 1913-ஆம் ஆண்டில் நடைபெற்ற அகில உலகச் சுருக்கெழுத்துப் போட்டியில் கலந்துகொண்டு வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

இந்தக் காலத்தில்தான் ஆங்கிலத்தில் இருந்ததைப் போலத் தமிழிலும் தட்டச்சுப் பொறி இல்லாதது ஒரு குறையாகப் பட்டது அவருக்கு. தமிழில் ஒரு தட்டச்சுப் பொறியை உருவாக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

ஆங்கிலத்தில் எழுத்துக்கள் மிகக் குறைவு. தமிழில் 247 எழுத்துக்கள். தட்டச்சில் 46 விசைகளே இருந்தன. இந்த 46 விசைகளுக்குள் 247 எழுத்துக்களையும் எப்படி அடக்குவது என்பது சுலபத்தில் செய்துவிடக் கூடிய செயலாக இல்லை.

அல்லும் பகலும் அதற்குரிய சிந்தனையில் ஈடுபட்டார். அவருடைய விடா முயற்சியும் ஆராய்ச்சியும் கடைசியில் நல்ல பலனைத் தந்தன.

தி, நி, பி, மி, சி முதலிய உயிர்மெய் எழுத்துக்களுக்குப் பொதுவாக வருகின்ற 'இ' என்னும் ஒலியைத் தருகின்ற மேல் பூட்டுகளைத் தனியே ஓர் எழுத்தாக்கி ஒரு விசையில் அமைக்க வழி கண்டார். இதன் மூலம் ஒரு பெரிய சிக்கல் தீர்ந்தது, இதைப், போலவே, ப், ம், வ், ய், ர் முதலிய மெய் எழுத்துக்களில் உள்ள மேல் புள்ளியையும் தனி ஒரு விசையில் அமைக்க வழி கண்டார்.

இப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட மேல் பூட்டும், புள்ளியும் நகராத விசையில் அமைக்கப்பட்டுள்ளதைத் தட்டச்சுப் பொறியைச் சோதனை செய்து அறியலாம்.

ஒரு மெய் எழுத்தைப் பதித்திட வேண்டியிருந்தாலும், கி, மி போன்ற எழுத்தைப் பதித்திட வேண்டியிருந்தாலும் முதலில் மேல் புள்ளியையும் 'இ' என்று ஒலி தருகின்ற மேல் பூட்டையும் முதலில் இயக்க வேண்டும். இவ் வரிசைகள் இயங்கும் போது சிலிண்டர் இயங்காது, தன் நிலையிலேயே நிற்கும். இதற்கு நகரா விசை என்று கூறுவார்கள்.

முன்னர் தமிழ்த் தட்டச்சுக்கள் ஒரே சீரான அமைப்புடன் இல்லாமல் உருவாக்குகின்ற கம்பெனிகள் தத்தம் ஆராய்ச்சிக்கு ஏற்பத் தட்டச்சு விசைப் பலகை அமைத்து வெளிவந்தன. 1955ம் ஆண்டில் அரசு ஒரு குழுவை அமைத்து ஆலோசனைகளைக் கேட்டது. அதன்படிப் பல புதிய மாற்றங்களுடன் ஒரே சீரான விசைப் பலகையுடன் தட்டச்சுப் பொறிகள் வரத் தொடங்கின.

புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட மாற்றங்கள் எல்லாம் திரு முத்தையா கண்டுபிடித்த விசை அமைப்பிற்கு ஏற்றதாகவே இருப்பதைக் காணலாம்.

முதலாவது உலகப் போர் முடிந்த பிறகு செர்மனியில் உள்ள சைடல் அண்டு நௌமான் என்னும் நிறுவனத்தாரிடம் தாம் கண்டுபிடித்த விசைப் பலகை அமைப்பை ஒப்படைத்துத் தட்டச்சுப் பொறிகளை உருவாக்கினார். அதற்கு வேண்டிய முதலீட்டை அவரே ஏற்றுக்கொண்டார். விற்கும் பொறுப்பையும் அவரே மேற்கொண்டார். அதற்குப் பிறகு மேலும் பல மாற்றங்கள் கண்டுபிடித்து, பிஜோ, ஐடியல் ஆகிய கையடக்கமுள்ள சிறு பொறிகளை அமைத்தார். இவற்றைப் பின்பற்றி ஆாசு, எரிகா, யுரேனியா, ஆல்டா, முதலிய தட்டச்சுக்கள் வெளிவந்தன.

24-2-1886-ஆம் ஆண்டில் பிறந்த திரு முத்தையா 10-2-1959-ஆம் ஆண்டில் காலமானார். தமது 22-ஆம் வயது முதல் நாள் தவறாமல் நாட்குறிப்பு எழுதியிருக்கிறார். சிறந்த சமூக சேவையாளராகவும் விளங்கினார்.

இலங்கையில் 'விசுவ கலாநிதி' என்ற செய்தி இதழைத் தொடங்குவதற்குத் துணையாக இருந்திருக்கிறார். இலங்கையில் நடந்த வகுப்புக் கலவரங்களால் விளைந்த பின் விளைவுகளைப் பற்றி ஆங்கிலத்தில் நூல் ஒன்று எழுதியிருக்கிறார்.

கண்ணுக்கினிய முத்து முத்தான தமிழ்த் தட்டச்சு திரு முத்தையா அவர்களை நமக்கு நினைவுபடுத்திக்கொண்டே இருக்கும்.

## அட்டை என்ன சொல்லுகிறது ?

அக்டோபர்த் திங்களில் கொண்டாடப்படும் வன விலங்கு வார நிகழ்ச்சியை நினைவூட்டுவது போன்ற இந்த அட்டை என்ன சொல்லுகிறது ?

முதுமலையிலுள்ள தெப்பக்காட்டில் மரங்களை எடுத்துச் செல்வது போன்ற வேலைகளைக் கவனிக்கப் பல யானைகளை நமது அரசின் வனத்துறையினர் வளர்க்கின்றனர். அந்த யானைகளில் ஒன்றுதான் தேவி.

தேவி அண்மையில் இரண்டு குட்டிகள் போட்டது. ஒரு யானை இரண்டு குட்டிகள் போடுவது அதிசயமான நிகழ்ச்சியாகும்.

அந்த யானையையும் அதன் குட்டிகளையும் தான் இந்த இதழ் அட்டை அணி செய்கிறது.



காட்டிய வழி
7
முத்து வந்தவுடன்தான்
ஆரம்பிக்கணும்....
அதுதான்
முறை
குறிப்பிட்ட
நேரத்தில்
வரவேண்டியதும்
முறை
முத்து
வராவிட்டால்
என்ன?
நாம்
முடிவெடுப்பதை
மறந்து விடப்
போகிறனு?
முத்து
செயலாளராச்சே
அண்ணு!
திரும்ப திரும்ப அவன்
வராததைப் பற்றியே
பேச வேண்டாம் நீங்கள்
முடிவெடுப்பதை முத்து
ஒத்துக் கொள்ளும்படி
செய்வது என் பொறுப்பு
ஆண்டு விழாவை
நடத்த முதலில் ஒரு
குழு அமைப்போம்.
குழுவுக்கு
வேலன்தான்
தலைவர்
என்ன அண்ணு
செயலாளர்தானே
விழாக் குழுவுக்குத்
தலைவராக
இருப்பது
வழக்கம் ?
இந்த ஆண்டு புதுமையாக
இருந்தால் என்ன?
ஆமாம் அண்ணு!
புதுமையாகச்
செய்யணும்
வேலன்தான் விழாக்குழுத்
தலைவர். மற்றும் நான்கு
பேர் உறுப்பினர்கள்
ஒருவன் முத்து
மற்றவர்கள்....
செல்வன்,
செந்தாமரை
இன்னெருவன்....
அமுதன்
இருக்கட்டும்
கதை · நம்பியின் தம்பி
படம் · குமார்
முத்து
கொடுக்கச்
சொன்னுன்
அண்ணு!
முத்து
செயலாளர்
பதவியை
ராஜிணுமாச்
செய்து விட்டான்
தொடரும்

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள் வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

## தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

**ஒப்பந்த அறிவிப்பு**

தமிழ்நாடு குடிசை மாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் அப்பாசாமி முதலி தெருவில் பல அடுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 15—10—1971 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

| எண். | பிரிவு எண். | வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு. | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. | |
| 1 | I | முப்பது குடியிருப்புகள் கொண்ட கட்டடமும், 12 குடியிருப்புகள் கொண்ட கட்டடமும் கட்டுதல். | 1,70,000 | L. S. 2,550 | ரூ. 15 மற்றும் விற்பனை வரி. |

வரை படங்களையும், ஒப்பந்தப் பத்திரங்களையும், கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 30—9—1971 முதல் 14—10—1971 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 1—10—1971 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் காரணமின்றி நிராகரிக்கவோ, ஏற்றுக் கொள்ளவோ நிர்வாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

**நிர்வாகப் பொறியாளர்,**
**கோட்டம் எண் 3.**

தாண்டவராயச்சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.

(த16)

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.
வடசென்னை, கொரட்டூர், மற்ற புறநகர்களை
காண்பிக்கும் சென்னை நகர வரை படம்



# தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

கொரட்டூர்—புற நகர்த் திட்டம்.
வட சென்னை புறநகர்த் திட்டம்
தனி வீடுகளும்—இணைந்த வீடுகளும்
**ஒதுக்குதல்**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செயல்படுத்தும் கொரட்டூர் புறநகர்த் திட்டத்திலும், வட சென்னை புறநகர்த் திட்டத்திலும் கீழ்க்கண்ட வகையான தனித்தனி வீடுகளும், இணைந்த வீடுகளும், கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மேற்கண்ட புறநகர்களில் நல்ல குடிநீர் வசதியும், தார்போட்ட சாலைகளும், தெரு மின் விளக்குகளும், பாதாள கழிவு நீர் வசதியும், உயர் நிலைப் பள்ளிக்கான இடமும் மற்றும் கடைகள், கல்யாண மண்டபம், தபால் அலுவலகம், பூங்கா முதலியவையும் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும் இந் நகர்களிலிருந்து அருகாமையிலுள்ள தமிழ்நாடு அரசுப் பேருந்து நிலையங்களுக்குப் பேருந்து (பஸ்) வசதியும் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

கொரட்டூர் புறநகர்த் திட்டம், சென்னை-ஆவடி சாலையை ஒட்டியும், டி.வி.எஸ்., லூகாஸ் தொழிற்சாலைக்கும் கொரட்டூர் ரயில் நிலையத்திற்கும் அருகில் அமைந்துள்ளது. விரைவில் அமைக்கப்படவிருக்கும் சென்னை-அரக்கோணம் மின் ரயில் பாதையில் கொரட்டூர் ரயில் நிலையம் அமைந்திருப்பதால் இந் நகர் விரைவில் முன்னேற்றமடைய வாய்ப்புள்ளது.

வட சென்னை புறநகர்த் திட்டம் சென்னை-நெல்லூர் சாலையை ஒட்டியும், வியாசர்பாடி கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்கு அருகிலும், சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து 4 கி. மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது.

மேற்கண்ட புறநகர்களில் தனித் தனி வீடோ, இணைந்த வீடோ வேண்டுபவர்கள் தங்கள் பெயரைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அலுவலகத்தில் 31—10—1971-ஆம் தேதிக்குள் பதிவு செய்துகொண்டு, 15—11—1971-ஆம் தேதிக்கு மேல் அதற்குரிய விண்ணப்பத் தாள்களை அவ்வலுவலகத்திலிருந்து ரூ. 5-க்கு வாங்கி, 15—12—1971-ஆம் தேதிக்குள் கிடைக்குமாறு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், 36. அண்ணாசாலை, சென்னை-35 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

வீடு ஒதுக்குவதற்குக் கீழ்க்கண்ட வரிசையில் முதலிடம் கொடுக்கப்படும்.

(1) முழுத் தொகையும் ஒரே தவணையில் செலுத்தல்.

(2) 25 சத விதம் முதலில் செலுத்தி, மீதியை ஒரு வருடத்தில் மாதத் தவணையாகச் செலுத்தல்.

(3) 25 சத விதம் முதலில் செலுத்தி, மீதியை மூன்று வருடங்களில் மாதத் தவணையாகச் செலுத்தல்.

(4) 25 சத விதம் முதலில் செலுத்தி, மீதியைப் பத்து வருடங்களில் மாதத் தவணையாகச் செலுத்தல்.

**தலைவர், வீட்டு வசதி வாரியம்,**
சென்னை-35.

கொரட்டூர் புறநகர்த் திட்டத்திலும் வடசென்னை புறநகர்த் திட்டத்திலும்
கட்டப்படவிருக்கும் வீடுகளின் விவரம்

**1. குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கான வீடுகள்.**

| எண். | வகை. | வீட்டின் பரப்பளவு. | வீட்டின் மதிப்பு. ரூ. | பண்படுத்தப் பட்ட நிலத்தின் மதிப்பு. ரூ. | மொத்த மதிப்பு. ரூ. |
|---|---|---|---|---|---|
| (அ) | தனி வீடு. | 435 ச. அடி முதல் 575 ச. அடி வரை. | 14,000 முதல் 18,500 வரை. | 7,000 | 21,000 முதல் 25,500 வரை. |
| (ஆ) | இணைந்த வீடு. | 460 ச. அடி .. | 12,000 | 3,500 | 15,500 |

**2. நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கான வீடுகள்.**

| எண். | வகை. | வீட்டின் பரப்பளவு. | வீட்டின் மதிப்பு. ரூ. | பண்படுத்தப் பட்ட நிலத்தின் மதிப்பு. ரூ. | மொத்த மதிப்பு. ரூ. |
|---|---|---|---|---|---|
| (அ) | தனி வீடு. | 746 ச. அடி முதல் 855 ச. அடி வரை. | 24,000 முதல் 27,500 வரை. | 10,500 | 34,500 முதல் 38,000 வரை. |
| (ஆ) | இணைந்த வீடு. | 855 ச. அடி. | 24,000 | 5,000 | 29,000. |

**3. சிறு தொழில் நடத்துவோருக்கான வீடுகள்.**

| எண். | வகை. | வீட்டின் பரப்பளவு. | வீட்டின் மதிப்பு. ரூ. | பண்படுத்தப் பட்ட நிலத்தின் மதிப்பு. ரூ. | மொத்த மதிப்பு. ரூ. |
|---|---|---|---|---|---|
| (அ) | தனி வீடு. | 282 ச. அடி. | 8,500 | 2,600 | 11,100. |
| (ஆ) | தனி வீடு. | 314 ச. அடி | 9,500 | 2,600 | 12,100. |

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

ஒப்பந்த அறிவிப்பு

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகளை முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொது சுகாதாரப்பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைக் கிராமப் பணித் துறை, அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண் 17. சர் பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொது சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 20—10—1971 பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளரரலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—சிவகெங்கை குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—இரண்டாம் நிலை—9,00,000 லிட்டர் கொள்ளளவு உள்ள உயர் மட்ட நீர்த்தொட்டி கட்டுதல்.

ஒப்பந்த வகை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை—ரூ. 5,500 (ரூபாய் ஐயாயிரத்து ஐந்நூறு மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் காரைக்குடி பொது சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு, அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும். செக்காக(காசோலை) அனுப்புதல் கூடாது.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு—12 மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை—ரூ. 15·53 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் காரைக்குடி பொது சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளரிடமிருந்து 48, கல்லூரிச் சாலை, காரைக்குடி என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 16—10—1971 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**கே. கோவிந்தமேனன்,**

மேற்பார்வைப் பொறியாளர்
(பொ.சு.பொ).,
தமிழ்நாடு குடிநீர்,
வடிகால் வாரியம்.

(த. 17)

---

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

ஒப்பந்த அறிவிப்பு

தமிழ்நாடு, குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும், கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகளை முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொது சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம் ) பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலை, கிராமப் பணித் துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண் 17, சர் பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொது சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 7—10—1971 வியாழக்கிழமை, பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு, அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளரராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : புஞ்சைப் புகலூர் குடிநீர்த் திட்டம்—முதல் நிலை—1·25 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள தரைமட்ட நீர்த் தொட்டி கட்டுதல்.

ஒப்பந்த வகை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை : ரூ. 550 (ரூபாய் ஐநூற்று ஐம்பது மட்டும்). இத் தொகை கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொது சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு : (4) நான்கு மாதங்கள்

ஒப்பந்தப் படிவங்களின் விலை : ரூ. 5·18 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொது சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளரிடமிருந்து பி. 15, தில்லை நகர், மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 4–10–1971 திங்கள் மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கே. கோவிந்தமேனன்,**

மேற்பார்வைப் பொறியாளர்
(பொ.சு.பொ),
தமிழ்நாடு குடிநீர்,
வடிகால் வாரியம்.

7—9—1971.

(த.23)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ் நாடு
### பொதுப்பணித் துறை
### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

வேலையின் பெயர் :

மதுரை மாவட்டம்—கொடைக்கானல் வட்டம் பண்ணைக் காடு அரசாங்க மருத்துவ மனையில், ஓர் அறுவைச் சிகிச்சை நிலையமும், ஒவ்வொன்றும் பத்துப் படுக்கைகள் கொண்ட இரு வார்டுகளும் கொண்ட கட்டடம் கட்டுதல்.

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் மேற்பார்வைப் பொறியாளர், மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால், மேற்கண்ட வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 20—10—1971 மாலை 3-00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்பட்டு, மாலை 4-00 மணிக்குத் திறக்கப் படும். 9—10—1971 முதல் 16—10—1971 வரை ஒப்பந்தப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்த முறை : மொத்தத் தொகை.
கட்டுத் தொகை : ரூ. 4,700
வேலை முடிவுக் கெடு: ஆறுமாதங்கள்

ஒப்பந்தப் பத்திரத்தின் விலையான ரூ. 20 (ரூபாய் இருபது)தொகையை அரசினர் கருவூலம் ஒன்றிலோ அல்லது ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலோ ''P. W. Remittances III. O.R.'' என்ற தலைப்பில், நிர்வாகப் பொறியாளர்—கட்டடக் கோட்டம், மதுரை—பொ.ப.து. அவர்கள் கணக்கில் வரவு செய்யும்படியாகவும், ரூ. 0·75 விற்பனை வரியை XII. Sales Tax (d) Miscellaneous'' என்ற தலைப்பிலுமாக, ஒரே சலானில் செலுத்தப்பெற்ற சலானைத் தாக்கல் செய்து, ஒப்பந்தப் பத்திரங்கள் பெறலாம். சலானைத் தாக்கல் செய்த பிறகே ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

சலான்கள் அல்லது ஷெட்யூல் பாங்கின் ''Deposit Call'' ரசீது அல்லது மாநில அரசாங்க செக்யூரிடிகள் அல்லது ஷெட்யூல் பாங்குகள் டிமாண்ட் டிராப்டுகள் அல்லது தேசீய மயமாக்கப்பட்ட 14 பாங்குகளின் உத்திரவாதம் ஆகிய உருவிலேயே கட்டுத் தொகை டிபாஸிட் ஏற்றுக் கொள்ளப்படும். தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்கள் மற்றும் தேசீய சேமிப்பு சர்ட்டிபிகேட்களும் கூட, மார்க்கெட் மதிப்பில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். மற்ற எந்த வகையில் செலுத்தினாலும் ஏற்கப்படமாட்டாது.

**சி. தேசிகசங்கர்.**

மேற்பார்வைப் பொறியாளர்,
(பொதுப்பணித் துறை),
மதுரை வட்டம், மதுரை.

(த-25)

## பரிசுப் போட்டி

### தமிழ்நாடு அரசு

[புதிதாகக் கல்வி பயில்வோருக்கான (வயது முதிர்ந்தோர்) இலக்கியங்களுக்குப் பரிசுகள்].

(மத்திய அரசினர் நடத்தும் 16-வது பரிசுப் போட்டி)

புதிதாகக் கல்வி பயில்வோர் படிப்பதற்குத் தக்க சுவையான நூல்கள் இலக்கியத் தேர்வுக்கு ஆசிரியர்களிடமிருந்தும், வெளியீட்டாளர்களிடமிருந்தும் மற்றும் இதர இந்திய மொழிகளில் வரவேற்கப்படுகின்றன. ஏறத்தாழ 40 நூல்கள் தேர்ந்தெடுக்கப்படும். ஒவ்வொரு நூலுக்கும் ரூ. 1,000 வீதம் பரிசு வழங்கப்படும்.

போட்டிக்கு அனுப்ப விரும்பும் நூல்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு 30—11—1971 அல்லது அதற்கு முன்னதாக அனுப்பி வைக்கவேண்டும். 30—11—1971-க்குப் பின்னர் வரும் எந்த நூலும் எக்காரணத்தைக் கொண்டும் போட்டிக்கு ஏற்றது ஆகாது.

முகவரி : உதவி கல்வி ஆலோசகர், (எம்.இ.2 பிரிவு), அறை எண் 407, சி. பிரிவு, சாஸ்திரி பவன், இந்திய அரசு கல்வி, சமூக நலன் அமைச்சகம், புது டில்லி.

போட்டிக்குரிய விதிமுறைகளையும் விண்ணப்பத்தாளையும் பெற விரும்புவோர் 50 காசு தபால் தலை ஒட்டிய தங்கள் முகவரி எழுதிய உறையைத் தனி அலுவலர் (நூலகமும், முதியோர் கல்வியும்), பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகம், சென்னை-6 என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

**பள்ளிக் கல்வி இயக்குநர்,**

சென்னை-6.

(த.8)

## ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு சிறைத் துறை

### ஒப்பந்த அறிவிப்பு

1971–72 ஆம் ஆண்டின் எஞ்சியுள்ள மாதங்களுக்குக்கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்கள் முதலியன வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தம் 22–10–71-ஆம் தேதி பிற்பகல் 3-00 மணி வரை தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களின் சார்பாகவும் வரவேற்கப்படுகின்றன. விலைகள் மெட்ரிக் அளவைகளில் மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும்.

நிறுவனங்கள் :— சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, சேலம், மதுரை, கோயம்புத்தூர், பாளையங்கோட்டை, முதலிய இடங்களிலுள்ள மத்திய சிறைகள் மற்றும் புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளி மற்றும் பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம்.

ஒப்பந்தங்கள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் ஒப்புகைப் பதிவஞ்சலில் (By Registered Post—Ack. Due) மட்டுமே அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் ''.... ................க்கு (இங்கு எந்த நிறுவனத்திற்கான ஒப்பந்தமோ அந்த நிறுவனத்தின் பெயரைக் குறித்து) உணவுப் பொருட்கள் முதலியன வழங்குவதற்கான ஒப்பந்தம் என்று தவறாமல் எழுதி, தமிழ்நாடு சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர் அவர்களின் பெயருக்கு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தங்கள் சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர் அலுவலகத்தில் 23—10—1971 முற்பகல் 10-30 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்த நமூனக்கள், ஒப்பந்த விதிகள், வழங்க வேண்டிய உணவுப் பொருட்களின் விவரக் குறிப்பீடுகள் முதலியவைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கண்காணிப்பாளரிடமிருந்து மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

**இ.பி.டி. தாமஸ்,**

சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர்-பொறுப்பு,
குறளகம், சென்னை-1.

10—9—1971.

(த.21)

---

## ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு அரசு

## பொதுப்பணித் துறை

### சிட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

வேலையின்பெயர் : தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் ஒரு சொற்பொழிவு அறை கட்டுதல். மேற்படி வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிக்கைகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித்துறை, தஞ்சாவூர் வட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 15—10—1971 மாலை மணி 3-00 வரை பெற்றுக் கொள்ளப்படும்.

1 ஒப்பந்த வகை.—மொத்தத் தொகை.

2 பிணைப்பணம்.—ரூ. 2,800.

3 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (அரசினர் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் '' பொ. ப—செலுத்துத் தொகை—III மற்றைய செலுத்துத் தொகை '' எனும் தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் கட்டடக் கோட்டம், திருவாரூர் அவர்களின் பெயரில் செலுத்தப்பட வேண்டும்).—ரூ. 30.

4 விற்பனை வரி.— (அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் XII—விற்பனை வரி (பி) பற்றுச்சீட்டு, மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ்—பொது விற்பனை வரி '' என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்).—ரூ. 1·05

5 கால அளவு.—எட்டு மாதங்கள்.

6 ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள்.—24—9—1971

**ஆர். வேணுகோபால்,**

மேற்பார்வைப் பொறியாளர்.
தஞ்சை வட்டம், தஞ்சாவூர்.

(த. 24)

---

## ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு அரசு
## பொதுப்பணித் துறை

### ஒப்பந்தப் புள்ளி தேதி நீட்டிப்பு அறிவிப்பு

வேலையின் பெயர்:

மதுரை மாவட்டம், தோப்பூர் அரசினர் காசநோய் சானடோரியத்தில் கீழ்த் தளத்தில் 30 படுக்கைகளுக்கும், முதல் தளத்தில் 30 படுக்கைகளுக்குமான ஒரு இரண்டு தளக் கட்டடம் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப் புள்ளிகள் பெறும் தேதி 6—10—1971 அன்று மாலை 3 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 28—9—1971 முதல் 4—10—1971 வரை விற்பனைக்குக் கிடைக்கும். அவை 6—10—1971 அன்று மாலை 4 மணிக்குக் கீழ்க் கையொப்பமிட்டவரால் திறக்கப்படும்.

மற்ற விதிகளில் மாறுதல் ஏதும் இல்லை.

**சி. தேசிகசங்கர்,**

மேற்பார்வைப் பொறியாயாளர் (பொ.ப.து),
மதுரை வட்டம்,
மதுரை.

(த 22)

# தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

ஒப்பந்த அறிக்கை.

தமிழ்நாடு குடிசை மாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், செனுய்நகரில் பல அடுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 6—10—1971 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிருர். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

| எண். | பிரிவு எண். | வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு. | கட்டுத் தொகை. | ஒப்பந்த பத்திரங்களின் விலை. |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. | |
| 1 | I | 32 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள், A-1, A-2. | 2,47,000 | 3,700 | ரூ. 15 மற்றும் விற்பனை வரி (ஒவ்வொரு வகைக்கும்). |
| 2 | II | ஷை A 3, A-4. | 2,47,000 | 3,700 | |
| 3 | III | ஷை A-5, A-6. | 2,47,000 | 3,700 | |
| 4 | IV | 32 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள், A-7, A-8. 16 குடியிருப்புகள் கொண்ட C-1. | 3,09,000 | 4,630 | |
| 5 | V | ஷை A-9, A-10, C-2. | 3,09,000 | 3,250 | |
| 6 | VI | 32 குடியிருப்புகள் கொண்ட கட்டடம், A-11, 24 குடியிருப்புகள் கொண்ட B-2. | 2,16,500 | 3,250 | |
| 7 | VII | ஷை A-12, B-1. | 2,16,500 | 3,250 | |
| 8 | VIII | ஷை B-3, C-3. | 1,55,000 | 2,325 | |
| 9 | IX | ஷை B-4, C-4. | 1,55,000 | 2,325 | |

வரைபடங்களையும், ஒப்பந்தப் பத்திரங்களையும் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 25—9—1971 முதல் 5—10—1971 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 6—10—1971 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ, நிர்வாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

**நிர்வாகப் பொறியாளர்,**
**கோட்டம் எண் 3.**

தாண்டவராயச்சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.

(த27)

## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராமப் பொறியியல் பணித்துறை) திருச்சிராப்பள்ளி, அவர்கள் சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1, விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 6—10—1971 (புதன்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் பிரதிகள் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|
| **தஞ்சாவூர் மாவட்டம்.** | | |
| **தஞ்சாவூர் கோட்டம்.** | | |
| 1 முத்துப்பேட்டை-மீமிசல் சாலை கி.மீ. 63/6-8 (மை. 39/7)-ல் ஒரு பாலம் கட்டுதல். | 10,700 | கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.), தஞ்சாவூர். |
| 2 ஷை கி.மீ. 75/6-8 (மை. 47/1). | 5,200 | ஷை |
| 3 ஷை கி.மீ. 58/2 (மை. 36/3). | 7,400 | ஷை |
| 4 ஷை கி.மீ. 65/8 (மை. 41/1). | 5,500 | ஷை |
| 5 ஷை கி.மீ. 20/0 (மை. 16/2-3). | 11,300 | ஷை |

வரிசை எண்ணும் வேலையின் பெயரும். கட்டுத் தொகை. ரூ. ஒப்பந்தப் பிரதிகள் கிடைக்கும் விலாசம்.
தஞ்சாவூர் மாவட்டம்.
தஞ்சாவூர் கோட்டம்.

| | | |
|---|---|---|
| 6 பட்டுக்கோட்டை ஒன்றியம்-பலத்தலை கிராமச் சாலையில் நரையாற்றின் குறுக்கே மைல் 0/8-ல் ஒரு தரைப் பாலம் கட்டுதல். | 3,000 | ஷை |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர், அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை) தஞ்சாவூர் விலாசத்திலிருந்து 22—9—1971 முதல் 5—10—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விபரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள், முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் ''ரெவின்யூ டெபாசிட்' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசீய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும் ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்கு காரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

மாற்று வடிவ அமைப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பாங்கு காரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பேங்க் ஒப்புதலைப் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தம் நிராகரிக்கப்படும்.

முன் பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**அ. தேவப்பிரியம்,**
மேற்பார்வைப் பொறியாளர்
(நெ.கி.ப.), திருச்சிராப்பள்ளி-1.

(த 70)

## வேலை வாய்ப்பு

### தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

பொதுப்பணித் துறை, தொழில் துறை (நிர்மாணப் பிரிவு) நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை, ஆகியவற்றின் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள மேற்பார்வையாளர்கள், இளநிலைப் பொறியாளர்களை நிரந்தரமாக்குதல் ( Regularisation ).

பொதுப்பணித்துறை, தொழில் துறை, (நிர்மாணப் பிரிவு) நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை, ஆகியவற்றில் ஓராண்டுக்குக் குறையாமல் அதாவது **3-4-1971-ல்**, ஓராண்டுக் காலம் பணியாற்றியிருக்கும், மேற்பார்வையாளர்கள், இளநிலைப் பொறியாளர்களிடமிருந்து விண்ணப்ப மனுக்கள் 2-11-1971 மாலை 5 மணி வரை வரவேற்கப் படுகின்றன.

குறிப்பு:—3-4-1971 அன்று வெளியிடப்பட்ட கழகத்தின் அறிவிப்பையொட்டித் தற்காலிக வேலைகளை நிரந்தரமாக்க மனுச் செய்திருந்தவர்கள், மீண்டும் இதற்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டிய அவசியமில்லை.

தகுதி I.—பொதுப் பணித் துறை, தொழில் துறையின் நிர்மாணப் பிரிவிலும் மேற்பார்வையாளர்களாகவும், இளநிலைப் பொறியாளர்களாகவும், நியமிக்கப்பட வேண்டியவர்களுக்கு :—

**1.** பல்கலைக் கழக நிதி உதவிக் குழுவினரால், நிதி உதவிக்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட, ஏதாவது பல்கலைக் கழகம் அல்லது கல்வி நிலையத்தில் பெற்றுள்ள பொறியியல் பட்டம் (சிவில், மெக்கானிக்கல் அல்லது எலக்ட்ரிகல்).

(அ) கிண்டி பொறியியல் கல்லூரியின் பொறியியல் பட்டம் (சிவில், மெக்கானிக்கல் அல்லது எலக்ட்ரிக்கல்)

அல்லது

(ஆ) கிண்டி பொறியியல் கல்லூரியின் எல்.சி.இ. டிப்ளமா அல்லது மேல்நிலை உதவியாளர் டிப்ளமா (Upper Subordinate)

அல்லது

(இ) சென்னை மாநில தொழில்நுணுக்கக் கல்வி, பயிற்சி வாரியம் அளித்த எல். சி. இ. அல்லது எல்.எஸ்.இ. டிப்ளமா,

அல்லது

(ஈ) ஏ. எம். ஐ. இ. (இந்தியா) தேர்வில் (ஜியோடெசி) பாடத்தைக் கூடுதல் பாடமாகவோ, அல்லது விருப்பப் பாடமாகவோ எடுத்து, ஏ, பி பிரிவுகளில் தேர்ச்சி பெற்றவர்கள், கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மனுச் செய்யலாம்.

1. 'சர்வே' பயிற்சியில் ஓராண்டுக்குக் குறையாமல் பயிற்சி பெற்றதற்கு ஆதாரம் காட்டப்பட வேண்டும்; அல்லது

2. பொதுப்பணித் துறையில் ஓவர்சியராகவோ அல்லது மேற்பார்வையாளராகவோ, வேலை பார்த்திருக்க வேண்டும்; அல்லது

3. கிண்டி பொறியியல் கல்லூரியில் மேல் நிலைப் பணியாளர் (Upper Subordinate) அல்லது எல்.சி.இ. டிப்ளமா பெற்றவராகவோ, அல்லது, சென்னை மாநில தொழில்நுணுக்கக் கல்வி, பயிற்சி வாரியத்தினால், அளிக்கப்பட்ட எல்.சி.இ. அல்லது எல்.எஸ்.இ. பட்டம் பெற்றவராகவோ அல்லது இதற்கு இணையான வேறு ஏதாவது ஒப்புதல் அளித்த தகுதி பெற்றவராகவோ இருக்க வேண்டும்.

குறிப்பு.—இளநிலைப் பொறியாளராகக் கவனிக்கப்படுவதற்கு விண்ணப்பம் செய்பவர்கள், ஏ.எம்.ஐ.இ. (இந்தியா) தேர்வில் ஏ, பி பிரிவுகளில் தேர்ச்சி அடைந்தவர்கள், தேர்ச்சி அடைவதற்கு முன்பாகவோ அல்லது தேர்ச்சி அடைந்த பின்னரோ, மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல், வேலை பார்த்த அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.

அல்லது

உ. சென்னை மாநில, தொழில் நுணுக்கக் கல்வி, பயிற்சி வாரியத்தின் எல்.எம்.இ. அல்லது எல். ஏ.இ. டிப்ளமா பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:—சென்னை மாநில, தொழில்நுணுக்கக் கல்வி, பயிற்சி வாரியத்தினர் அளித்த எல்.எம். இ. அல்லது எல்.ஏ.இ. டிப்ளமா வைத்திருப்பவர்களைப் பொறுத்த வரை, அவர்கள் மேற்பார்வையாளர்களாகத் தேர்ந்தெடுக்கப் படும்போது, போதுமான அளவு வேலை அனுபவம் உள்ளவர்கள் என்று சம்பந்தப்பட்ட நிர்வாகப் பொறியாளர்களால் சான்றிதழ் வழங்கப்பட்டால்தான், நியமனத்திற்குக் கவனிக்கப்படுவார்கள்.

மற்றும்

டிப்ளமா பெற்றபின் குறைந்தது இரண்டு ஆண்டுக் காலமாவது பொறியியல் பணியில் வேண்டிய அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும்.

தகுதி II. நெடுஞ்சாலை, கிராமப் பணித் துறையில், மேற்பார்வையாளர்கள், இளநிலைப் பொறியாளர்களை நியமித்தல்—

1. பல்கலைக் கழக நிதி உதவிக் குழுவினரால், நிதி உதவிக்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட ஏதாவது பல்கலைக் கழகம் அல்லது கல்வி நிலையத்தில் பெற்றுள்ள பொறியியல் பட்டம் (ஹைவேஸ், சிவில், அல்லது மெக்கானிக்கல்)

அல்லது

2. (அ) கிண்டி, பொறியியல் கல்லூரியின் பொறியியல் டிப்ளமா.

அல்லது

(ஆ) கிண்டி, பொறியியல் கல்லூரியின் மேல்நிலை உதவியாளர் அல்லது எல்.சி.இ. டிப்ளமா.

அல்லது

(இ) மாநில, தொழில்நுணுக்கக் கல்வி, பயிற்சி வாரியம், சென்னையினால் அளிக்கப்பட்ட எல்.சி.இ. அல்லது எல். எ.இ. டிப்ளமா.

அல்லது

(ஈ) கிராம உயர் நிலைக் கல்விக்கான தேசிய மன்றம் (National Council for Rural Higher Education) அளித்த சிவில் மற்றும், கிராமப் பொறியியல் டிப்ளமா.

அல்லது

(உ) சென்னை மாநில, தொழில் நுணுக்கக் கல்வி, பயிற்சி வாரியத்தினால் வழங்கப்பட்ட ஆட்டோமொபைல்ஸ் அல்லது மெக்கானிக்கல் பொறியியல் பட்டம்.

அல்லது

(ஊ) ஏ.எம்.ஐ.இ. (இந்தியா) தேர்வில், ஏ, பி, பிரிவுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்படுவார்கள்.

1. மனுதாரர்கள் கீழ்க் கண்ட பாடங்களை எடுத்திருக்க வேண்டும். 6 (எ) தாளில், A பிரிவில்

(1) Theory of Structures and Strength of Materials.

(2) Theory of Design of Structures.

(3) Geodesy.

(4) Roads and Hydraulics and Hydraulic Machinery.

2. ''ஸர்வே''யில் ஓராண்டுக்குக் குறையாமல் பயிற்சி பெற்றுள்ளதற்கான ஆதாரம் காட்ட வேண்டும்; அல்லது

3. பொதுப் பணித் துறை/நெடுஞ்சாலைத் துறையில் ஓவர்சியராகவோ அல்லது மேற்பார்வையாளராகவோ, ஓராண்டு பணியாற்றியிருக்க வேண்டும்;

அல்லது

4. கிண்டி பொறியியல் கல்லூரி அளித்துள்ள மேல் நிலை உதவியாளர் அல்லது எல்.சி.இ. டிப்ளமா அல்லது சென்னை, மாநில தொழில்நுணுக்கக், கல்வி பயிற்சி வாரியத்தினரால் அளிக்கபட்ட டிப்ளமா அல்லது கிராம உயர் நிலைக்கல்விக்கான தேசிய மன்றத்தினுல் அளிக்கப்பட்ட சிவில் மற்றும், கிராமப் பொறியியல் டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு:—இளநிலைப் பொறியாளர்களாகக் கவனிக்கப்படுகிறவர்கள், மேலே 6-ல் குறிப்பிட்டுள்ள தகுதியைப் பெற்றிருப்பதோடு, பல்கலைக்கழக நிதி உதவிக் குழுவிடம் ஒப்புதல் பெற்ற ஏதாவது நிதி உதவி பல்கலைக் கழக நிறுவனத்தில், இண்டர்மீடியட் தேர்வில் தேர்ச்சி பெற்றவராகவோ அல்லது அதற்கு இணையாக மாநில அரசினுல் ஒப்புதல் பெற்ற தேர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதோடு, ஏ.எம்.ஐ.இ. (இந்தியா) தேர்வில், ஏ,பி, பிரிவுகளில் தேர்ச்சி பெற்றபின் குறைந்தது நான்கு ஆண்டுகளாவது, அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

டிப்ளமா பெற்ற பின் குறைந்தது 2 ஆண்டுகளாவது, பொறியியல் பணியில் வேலை பார்த்த அனுபவம்பெற்றிருக்க வேண்டும்.

இந்தப் பதவிகளின் சம்பள விவரம்—

1. மேற் பார்வையாளர் : மாதம் ரூ. 325–15–475–20–575—25–650.

2. இளநிலைப் பொறியாளர்—மாதம் ரூ. 400–15–475–20–575—25–650.

முழுவிவரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கும், செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வுக் கழகம், அண்ணா சாலை, சென்னை-2 என்ற முகவரிக்கு வேலையின் பெயரைக் குறிப்பிட்டு, 35 காசு அஞ்சல் தலை ஒட்டப்பட்டு, குறைந்தது 23 செ. மீ. நீளமுள்ள உறையில், நூலஞ்சல் என்று குறிப்பிட்ட உறையை உடன் வைத்து எழுத வேண்டும்.

(ந. 6)

---

## ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

வேலையின் பெயர் : ஆம்பூர் நீர் வழங்கு திட்டம்—நான்காவது இறுதிக் கட்டம்—மேல் மட்ட ஆர். சி. சி. சர்வீஸ் ரிஸர்வாயர் 18 லட்சம் லிட்டர் திறனுள்ள அல்லது ஒவ்வொன்றும் 9 லட்சம் லிட்டர் திறனுள்ள இரட்டை ரிசர்வாயர்கள் கட்டுமானம், அவசியமான குழாய் இணைப்புகள், வால்வு பிட்டுகள், பம்ப் முதலியன உள்பட முழுமையாக.

தமிழ் நாடு தண்ணீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும், மேலே கண்ட வேலைக்காகத் துறைக்குரிய முறையான வடிவத்தில் முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை, இந்தத் துறையின் அல்லது இதுபோன்ற அரசு நிறுவனத்தின் உரிய பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் சர்க்கிள், சென்னை-8 அவர்கள் தமது அலுவலகத்தில் (52, கெங்கு ரெட்டி சாலை, எழும்பூர், சென்னை-8-ல்) 16-10-1971 பிற்பகல் 3 மணி வரை பெற்றுக் கொள்ளுவார். ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாளில் பிற்பகல் 3-30 மணிக்கு மேல் மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் சர்க்கிள், சென்னை அவர்களால் ஒப்பந்தப்புள்ளித்திறப்பின்போது ஆஜராக இருக்க விரும்புகின்ற ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

2. கட்டுத் தொகை—ரூ. 7,125 (ரூபாய் ஏழாயிரத்து நூற்று இருபத்தைந்து மட்டும்). (அரசு கருவூல சலான் வடிவில் அல்லது ஒப்பந்தப் புள்ளி சம்பந்தப்பட்ட விதிகளில் குறிக்கப் பட்டுள்ளபடி, ஏற்கத்தக்க வேறு வடிவில் கட்டுத் தொகை கட்டப் பெறவேண்டும்.)

3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 10·35 (பத்து ரூபாய் முப்பத்தைந்து காசுகள் மட்டும்).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணங்கள், நிர்வாகப் பொறியாளர் பொது சுகாதாரப் பொறியியல் டிவிஷன் வாணியம்பாடி, பி.டபிள்யூ III, ஓ. ஆர். அவர்கள் கணக்கிலும் விற்பனை வரிக்கு XII விற்பனை டி. பல்வகை I பொது விற்பனை வரியிலும் தனி சலான்களில் சேர்க்கப்படவேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் பெற—நிர்வாகப் பொறியாளர் (பொ.சு. பொ.)பொ.சு. பொறியியல் டிவிஷன் 301, ஜமாத் சாலை, வாணியம்பாடி (வ. ஆ.) அவர்களுக்கு மனுச் செய்து பெறலாம். (ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணம் ரொக்கமாகவோ, பணமாகவோ பண அஞ்சல் மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும்.)

வேலையை முடிக்க வேண்டிய கால வரை—9 மாதங்கள்.

**எம். துரைராஜன்,**
மேற்பார்வைப் பொறியாளர்
(பொ. சு. பொ.)

(து. 2)

## ஒப்பந்தப் புள்ளி

# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

## ஒப்பந்த அறிவிப்பு

*1642 எஸ்.டி. 2. தேதி 1–9–1971.*

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம் சார்பாக கீழ் வரும் பணிக்கு, அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள், 8–10–1971 மாலை 3·00 மணி முடிய, கோவை பொதுச் சுகாதார மேற்பார்வைப் பொறியாளரால் அவரது அலுவலகம் 25-1, மூன்றுவது வீதி, டாட்டாபாட், கோவை-12-ல் வரவேற்கப்படுகிறது. மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 4·00 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அதிகாரிகளாலோ, வரப்பெற்ற ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | பணியின் பெயர் | ... | சேலம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—இரண்டாம் நிலை—இரண்டாம் கட்டம் (பகுதி-2)—20, 24 அங்குல கிராவிட்டி மெயின் பைப்புகளைப் பதித்தலும் இணைத்தலும் மற்ற வேலைகள் செய்தலும். |
| 2 | ஒப்பந்தமுறை | ... | மொத்தத் தொகை (L.S.). |
| 3 | பிணைப்பணம் | ... | ரூ. 8,960 (ரூபாய் எட்டாயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபது மட்டும்.) |
| 4 | பணி முடிக்க வேண்டிய காலம். | | ஆறு மாதங்கள். |
| 5 | ஒப்பந்தப் பத்திரங்கள் விலை. | | ரூ. 10·35 (விற்பனை வரி உள்பட). |
| 6 | ஒப்பந்தப் பத்திரங்கள் விற்கப்படும் தேதி. | | 10–9–1971 முதல் 6–10–1971 முடிய. |

மேற்படிப் பணிக்கான ஒப்பந்தப் பத்திரங்களை, நிர்வாகப் பொறியாளர், 28, ஔவையார் தெரு, சுப்ரமணியம் நகர், சேலம்-5 விலாசத்துக்கு, மணியார்டர் மூலமாகவோ நேரில் பணம் செலுத்தியோ பெற்றுக் கொள்ளலாம்.

பிணைப் பணத்தை மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் ''கேட்பு வரைவோலை'' சேலம் நிர்வாகப் பொறியாளரின் சார்பில் செலுத்தவோ அல்லது கஜானாவில் சேலம் நிர்வாகப் பொறியாளர், பி.டபிள்யூ. III. O. R. தலைப்பில் செலுத்தவோ செய்யலாம். அங்கீகாரம் செய்யப்பட்ட வங்கிகளின் பொறுப்புறுதிகள் பிணைப் பணத்திற்காக ஒப்புக்கொள்ளப்படும். பிணைப்பணம் இணைக்கப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளருக்கு ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது அனைத்து ஒப்பந்தத்தையோ காரணம் இல்லாமல் நிராகரிக்க உரிமையுண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்.**

(த.5)

## ஒப்பந்தப் புள்ளி

# எண்ணூர் அனல் மின் திட்டம்

## ஒப்பந்த விளம்பரம்

மொத்தத் தொகை ஒப்பந்தம்

1. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் 'தமிழ்நாடு மின்சார வாரியம்' எண்ணூர் அனல் மின் திட்டம் எண்ணூர் அனல் மின் நிலைய வேலைக் களத்திலருகே 1—11—1971 முதல் ஓராண்டுக் காலத்திற்கு பாக்கறி உணவு விடுதி நடத்துதல் எனவும் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு, கீழ்க்கையொப்பமிட்டவரால் 12—10—1971 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அன்று மாலை 3-30 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

2. ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 3 (மூன்று மட்டும்) கீழ்க்கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளவும். இந்தத் தொகை எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

3. இந்த வேலைக்கான பிணைத் தொகை ரூ. 1,000 (ஆயிரம் மட்டும்) ஒப்பந்தப் பிரதியில் கூறியுள்ளபடி செலுத்தி, அதற்கான ரசீதை ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் வரும் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

4. துறையினரைச் சார்ந்த நமூனக்களில் இல்லாத ஒப்பந்தங்களும், இறுதி தேதிக்கும், நேரத்திற்கும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் ஏதாவது ஒன்றையோ, அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கக் கீழ்க்கையொப்பமிட்டவரே உரிமையுடையவராவார்.

5. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத் தக்கவையல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
**எண்ணூர் அனல் மின் திட்டம்,**
**எண்ணூர் சென்னை 57.**

(த.32)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலைக் கிராமப் பொறியியல் பணித்துறை) திருச்சிராப்பள்ளி, அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1, விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 6—10—1971 (புதன்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| வேலையின் பெயர். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் புள்ளி கிடைக்கும் விலாசம். |
|---|---|---|
| தஞ்சாவூர் மாவட்டம். | | |
| தஞ்சாவூர் கோட்டம். | | |
| 1 முத்துப்பேட்டை-மீமிசல் சாலையில் கி.மீ. 49/8 (மைல். 31/1)-ல் ஒரு பாலம் கட்டுதல். | ரூ. 2,800 | கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) தஞ்சாவூர். |

1. ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) தஞ்சாவூர் விலாசத்திலிருந்து 22—9—1971 முதல் 5—10—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், வரைபடங்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

2. மேலே குறிப்பிடப்பட்ட கட்டுத் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப்பொறியாளரின் (நெடுஞ்சாலை, கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர, 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

3. மாற்று வடிவ அமைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. பாங்கு காரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்க் ஒப்புதலைப் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தம் நிராகரிக்கப்படும்.

5. முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**ஆ. தேவப்பிரியம்,**
மேற்பார்வைப் பொறியாளர், (நெ.கி.ப.)
திருச்சிராப்பள்ளி.

(த. 1)

## ஏலம்

### இணை மாநில நிலவியல் ஆய்வாளர் அலுவலகம்

தொழிற்பேட்டை
கிண்டி சென்னை-32.

### ஏல விளம்பரம்

கிண்டி, தொழிற்பேட்டை, சென்னை-32-ல் உள்ள இணை மாநில நிலவியல் ஆய்வாளர் அலுவலகத்தில் இரண்டு 'காலிக்' துளைபொறிகள் பம்புகள் அதைச் சார்ந்த தளவாடங்கள் முதலியவைகள் 15—10—1971 அன்று பிற்பகல் 2-00 மணி அளவில் பொது ஏலத்தில் விடப்படும்.

ஏலம் கேட்க விரும்புவோர் மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் 10-30 மணியிலிருந்து 5-00 மணி வரை 12—10—1971-க்குள்ளாக விற்பனை வரையறைகளையும் நிபந்தனைகளையும் இணை மாநில நிலவியல் ஆய்வாளரிடமிருந்து நேரிடையாகவோ அல்லது விண்ணப்ப நமூனாவுடன் சுய முகவரியிட்ட 20 பைசா அஞ்சல் தலையுடன் கூடிய உறையுடன் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

**இணை மாநிலக் கனிப்பொருள் ஆய்வாளர்.**

(த.35)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும், பொது சுகாதாரப் பொறியியல் துறை, தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இது போன்ற வேறு அரசு துறைகளில் உரிய பிரிவில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர் (பொ. சு. பொ.) அவர்களால், எண் 17. சர். பி. டி. ராஜன் சாலை, மதுரை-2, என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 19–10–1971 (செவ்வாய்) மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் துறைக்குரிய வடிவத்தில் வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாள் மாலை 3-30 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப் படும்.

| | | |
|---|---|---|
| வேலையின் பெயர் | — | பழனி குடிநீர் வழங்கும் திட்டம்—நாலாம் கட்டம்—பழனியில் கோடை கால ஸ்டோரேஜ் டேங் கட்டுதல் |
| ஒப்பந்த வடிவம் | — | மொத்தத் தொகை. |
| கட்டுத் தொகை | — | ரூ. 37,000. |

இந்தத் தொகையை ஒப்பந்தப் புள்ளியுடன் கருவூலச் சலான் வடிவிலோ அல்லது டிமாண்ட் டிராப்ட்டாகவோ அல்லது தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் காரண்டியாகவோ நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் கோட்டம், மதுரை அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| வேலையை முடிக்கவேண்டிய காலம். | 18 மாதங்கள். |
| ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை. | ரூபாய் 25·88 (விற்பனை வரி உட்பட). |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை 14, ராமமூர்த்தி சாலை, சொக்கிகுளம், மதுரை-2, என்ற முகவரியில் உள்ள நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் கோட்டம், அவர்களிடமிருந்து 12–10–1971 அன்று மாலை 5 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**கே. கோவிந்த மேனன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ.சு.பொ.), மதுரை-2.

தேதி: 25–8–1971.
(த.4)

## விளம்பரம்

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், வீரகேரளம் புதூர் கிராமத்தில் தமிழக அரசு தொழில் வணிகத் துறையினரால் நடத்தப்பட்டு வரும் பொது நோக்கு பொறியியல் பட்டறையில் 18 மாத காலத் தொழிற் பயிற்சி பிட்டிங் (Fitting) வெல்டிங் (Welding), டர்னிங் (Turning), கருமார் (Smithy) முதலிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட (D-notified tribes) வகுப்பைச் சேர்ந்த 12 மாணவர்களும், அட்டவணையில் கண்ட (Scheduled Caste) வகுப்பைச் சேர்ந்த 3 மாணவர்களும் இப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களோ, அட்டவணையில் கண்ட வகுப்பைச் சார்ந்தவர்களோ போதிய அளவில் முன் வரவில்லையென்றால் காலியுள்ள இடங்களில் பின்னிலை வகுப்பைச் சேர்ந்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. 45 (ரூபாய் நாற்பத்தி ஐந்து) வீதம் பயிற்சி உதவித் தொகை கொடுக்கப்படும். பயிற்சியாளர்கள் பயிற்சிக் காலம் முழுவதும் தொடர்ந்து பயிற்சியில் இருப்போம் என்று உறுதிமொழி எழுதித் தர வேண்டும். அத்துடன் பயிற்சியாளர்கள் பயிற்சியில் சேருவதற்கு முன், முன் வைப்புப் பணம் ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும்) கட்ட வேண்டும். மேலும் பயிற்சியாளர்களில் மேல் குறிப்பிட்டுள்ள தொழில்களில் பயிற்சி பெறுவதற்கான உடல் ஆரோக்கியமானவர்கள் என்பதற்கு மருத்துவ அதிகாரிகளிடமிருந்து (சிவில் அஸிஸ்டெண்ட் சர்ஜன் அந்தஸ்துக்குக் குறையாதவர்கள்) சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் குறைந்த அளவு எட்டாவது வகுப்பு அல்லது மூன்றும் படிவம் படித்தவர்களாகவும், 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும், 30 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும். நேரடித் தேர்வுக்கு வரும் மாணவர்களுக்குச் செலவுத் தொகை எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்களைச் சாதாரண வெள்ளைக் காகிதத்தில் எழுதி அனுப்ப வேண்டும்.

1. விண்ணப்பதாரரின் பெயர்.
2. வயது.
3. தகப்பனாரின் பெயர்.
4. வகுப்பு (ஜாதி).
5. கல்வித் தகுதி.
6. சொந்த ஊர்.
7. தற்போதைய விலாசம்.

முதலியவற்றை விண்ணப்பத்தில் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். விண்ணப்பங்கள் கண்காணிப்பாளர், பொதுநோக்கு வசதிப் பொறியியல் பட்டறை, வீரகேரளம் புதூர் என்ற முகவரிக்கு 10–10–1971 தேதிக்குள் வந்து சேரும்படி அனுப்பப்படவேண்டும். விண்ணப்பம் செய்யும்போது அல்லது நேர்முகத் தேர்வுக்கு வரும்பொழுது அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு அல்லது அட்டவணையில் கண்ட வகுப்பு அல்லது பின்னிலை வகுப்பு சார்ந்தவர்கள் என்று வருவாய்த்துறை அதிகாரி (மணியக்காரர்) அவர்களிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்க வேண்டும்.

**தொழில் வணிக இயக்குநர்.**

(த. 14)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை ஒப்பந்த அறிவிப்பு

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சார்பாகவும், உத்தரவுப்படியும் கோயம்புத்தூர் வட்டம், நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்களை அக்டோபர் திங்கள் 6-ஆம் நாள் புதன்கிழமை மாலை 3-00 மணி வரையில் கோயம்புத்தூர் ரத்தினசபாபதிபுரம் வெங்கட்ரமணா சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாள் மாலை 3-15 மணி அளவில் (அலுவலக கடிகாரப்படி) திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | | கோட்டம். | முன் வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலை எண் 46, கிருஷ்ணகிரி, ராணிப் பேட்டை சாலையை 1971-72-ஆம் வருடத்திய வருடாந்திரத் திட்டத்தில் அகலப்படுத்தலும், உறுதிப்படுத்தலும்— கி.மீ. 1·6 முதல் 10·0 வரை. | கிருஷ்ணகிரி. | 26,200 |
| 2 | ஷை கி. மீ. 10·0 முதல் 15·0 வரை. | ஷை | 17,800 |
| 3 | ஷை கி. மீ. 15·0 முதல் 23·0 வரை. | ஷை | 24,100 |

ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை கிருஷ்ணகிரி கோட்டப் பொறியாளரிடமிருந்து ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 50 (ஐம்பது) உடன் விற்பனை வரியும் செலுத்தி, 17—9—1971 முதல் 5—10—1971 வரை பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. ஒப்பந்த நாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன் வைப்புத் தொகையை கிருஷ்ணகிரி கோட்டப் பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் செலுத்தி, செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்கு காரண்டி முன் வைப்புத் தொகையாகப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமேயானால், ஷை பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் இருக்கவேண்டும். தவிர, ரிசர்வ் பாங்கு ஆப் இந்தியாவின் மேற்படி பாங்கு காரண்டிற்கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்கவேண்டும்.

பா. சேக் உமர்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப.),
கோவை-2.

ரத்தினசபாபதிபுரம்,
கோயம்புத்தூர்-2,
30—8—1971.

(த.3)

---

## ஏலம்

### தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம்

கோயம்புத்தூர்-3.

ஈச். 5/968/71.

நாள் : 8—9—71.

கால்நடை ஏல விளம்பரம்

கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள மத்தியப் பண்ணையிலும் பால் பண்ணையிலும் 31 உயர்ந்த ரக பசுக்களும், காளைகளும், காளைக்கன்றுகளும் 15—10—1971 (வெள்ளிக்கிழமை)-ம் தேதி மாலை 3 மணி அளவில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏலம் கோருபவர்கள் ரூ. 100 (ரூபாய் நூறு மட்டும்) முன் பணம் செலுத்தி நேரில் ஏலம் கூறலாம். ஏலம் எடுத்தவர்கள் உடனேயே அதற்குரிய ஏலத் தொகையையும், விற்பனை வரியையும் செலுத்தி விடவேண்டும்.

மாடுகளின் ஏலத்தொகையை நிர்ணயிக்கவோ, ஏலத்தினைத் தள்ளிவைக்கவோ, ஏலத்தை நிறுத்தவோ ஏலம் விடும் வேளாண்மை நுண்ணறிஞர், மத்திய பண்ணை அன்னாரின் முடிவே இறுதியும் சட்டப்படி கட்டுப்படுத்துவதாகும்.

எ. பெ. மொரச்சன்,
பேராசிரியர்,
வேளாண்மைப் பிரிவு.

(த.7)

# தமிழ்நாடு அரசு

## பு 3/30606/71 தேதி 16-9-1971

## உணவுப்பொருள் வழங்குதுறை

### காலி சாக்குகள் விற்பனை

சென்னை நகரத்திலும், ஆவடியிலும் உள்ள அரசாங்கக்கிடங்குகளில் அரசுக்குச்சொந்தமான உபயோகமுள்ள கோணிப்பைகளும், ஒட்டுப்போட்ட கோணிப்பைகளும் உபயோகத்திற்குத் தகுதி அற்ற கோணிப்பைகளும், டன்னேஜ் (Dunnage) கோணிப்பைகளும் அனுபந்தத்தில் கண்டுள்ளபடி, ஆணையாளர், உணவுப்பொருள் வழங்குதுறை, சென்னை அவர்களிடமிருந்து ஒப்பந்தம் மூலமாக விலைக்கு வாங்குவதற்காக அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன.

(1) ஒப்பந்த நிபந்தனைகளடங்கிய விபரங்களை ஈ. டி. மில்ஸ், 2, டெமல்லோஸ் ரோடு, சென்னை-7-ல் உள்ள உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டியது.

(2) ஒப்பந்த பாரங்களும், மேலே கூறிய அலுவலகத்தில் கிடைக்கும். ஒப்பந்த பாரத்தின் விலை ரூ. 5-ம் 3½ சதவிகிதம் விற்பனை வரியும் ஆக ரூ. 5·18 ரிசர்வ் பாங்கில் "Personal Deposit Account of the Commissioner of Civil Supplies" என்ற தலைப்பில் செலுத்தி செலானை ஈ. டி. மில்ஸ், 2, டெமலோஸ் ரோடு சென்னை-7-ல் உள்ள உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கொடுத்து மேற்படி பாரங்களை பெற்றுக்கொள்ள வேண்டியது. ஒவ்வொரு ஒப்பந்தத்துடன் கட்டுக் காப்புத் தொகைக்காக ரூ. 2,000-க்கு டிமாண்ட் டிராப்ட் வாங்கி அனுப்ப வேண்டியது.

(3) அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் சேப்பாக்கம் (சென்னை-5) எழிலகம் கட்டடத்தில் உள்ள துணை ஆணையாளர் (விநியோகம்) உணவுப்பொருள் வழங்குதுறை, அவர்களால் 20—10—1971 அன்று மாலை 3 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு, ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் அவர்களால் அல்லது அவரால் நியமிக்கப்படும் அதிகாரியால் பிரிக்கப்படும்,

(4) ஷெ ஒப்பந்தங்கள், ஆணையாளர், உணவுப்பொருள் வழங்குதுறை "Commissioner of Civil Supplies Madras" அவர்களால் ஒப்புதல் பெற்றே முடிவு செய்யப்படும்.

| எண் | கிடங்கின் பெயர் | உபயோக முள்ளவை 100 கி. | ஒட்டுப் போட்டவை 75 கி. | உபயோக மற்றவை 75 கி. | 100 கி. | டன்னேஜ் கோணிகள் (Dunnage) |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆவடி எம். 39 | .. | 33,800 | 64,150 | .. | .. |
| 2 | ஆவடி எம். 39 | .. | .. | .. | .. | .. |
| 3 | ஏ. எல். 4 கிடங்கு, சென்னை, ஈ. டி. மில்ஸ் | 558 | .. | 2,634 | 1,558 | .. |
| 4 | ஈ. டி. 23 சென்னை ஈ. டி. மில்ஸ் | 2,300 | .. | 2,352 | 393 | 574 |
| 5 | ஈ. டி. 25/27 சென்னை ஈ. டி. மில்ஸ் | 15,018 | .. | 5,568 | 1,096 | 1,609 |
| 6 | தங்கசாலை கிடங்கு, சென்னை | 2,172 | .. | 3,052 | 606 | 2,350 |
| 7 | நந்தனம் கிடங்கு, சென்னை | 873 | .. | 2,577 | 1,037 | 1,556 |
| 8 | கோபாலபுரம் கிடங்கு, சென்னை | 2,636 | .. | 187 | 10 | 546 |
| 9 | அண்ணா நகர் யூனிட் 1 சென்னை | 72 | .. | 3,188 | 538 | 476 |
| 10 | அண்ணா நகர் யூனிட் 2 சென்னை | 378 | .. | 4,375 | 758 | 488 |
| 11 | ஆவடி | 935 | .. | 225 | 50 | .. |
| 12 | எல் | .. | .. | .. | .. | 22,340 |
| | மொத்தம் .. | 24,942 | 33,800 | 88,308 | 6,046 | 29,930 |

ஆணையாளர்,
சென்னை-5.

(த. 77)

## தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித் துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் **15—10—1971** மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப் படும்.

| | | |
|---|---|---|
| 1. வேலையின் பெயர் | ... | தஞ்சாவூரில் மன்னர் சரபோஜி அரசினர் கலைக் கல்லூரிக்கான மேல்நிலைப் பட்டப் படிப்பிற்கான கட்டடங்கள் கட்டுதல். |
| 2. ஒப்பந்த வகை | ... | மொத்தத் தொகை. |
| 3. பிணைப் பணம் | ... | ரூ. 4,300. |
| 4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை<br>அரசினர் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "பொ. ப செலுத்துத் தொகை-III —மற்றைய செலுத்துத் தொகை" எனும் தலைப்பில் செயற் பொறியாளர் கல்லணைக் கால்வாய் தஞ்சாவூர் அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும். | | ரூ. 30. |
| 5. விற்பனை வரி<br>அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் XII விற்பனை வரி 'பி' பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி என்னும் தலைப்பில் செலுத்துதல் வேண்டும். | | ரூ. 1·05. |
| 6. கால அளவு | — — | ஒன்பது மாதங்கள். |
| 7. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள். | | 24—9—1971. |

**ஆர். வேணுகோபால்,**
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 36)

## மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம்
## பொறியியல் பணித்துறை

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொறியியல் பணித்துறை, திருச்சி வட்டம், திருச்சி அவர்களால் திருச்சியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விபரங்களின்படி பெற்றுக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| (1) வேலையின் பெயர் | ... | திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை இளம் குற்றவாளிகள் பள்ளியில் ஒரு படுக்கைக் கூடக் கட்டடம் அமைத்தல். |
| (2) ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசித்தேதி மற்றும் நேரம். | | 20—10—1971 மாலை 3-00 மணி. |
| (3) பிணைப் பொறுப்புத் தொகை. | | ரூ. 3,800 (ரூபாய் மூவாயிரத்தெண்ணூறு மட்டும்). |
| (4) ஒப்பந்த முறை | .. | மொத்தத் தொகை. |
| (5) முடிக்க வேண்டிய காலம் | | பத்து மாதங்கள். |
| (6) ஒப்பந்தப் பத்திரத்தின் விலை | | ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்). |
| (7) விற்பனை வரி | ... .. | ரூ. 0·88 (எண்பத்தெட்டு பைசாக்கள் மட்டும்). |
| (8) ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி. | | 1—10—1971. |
| (9) விரும்பும் ஒப்பந்தக்காரர்களின் முன்பாக ஒப்பந்தம் திறக்கப்படும் தேதி, மற்றும் நேரம். | | 20—10—1971 மாலை **3-30 மணி.** |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும், விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில் (XXXVII Public works-State Revenue-Miscellaneous) மற்றும் (XII Sales Tax (b)receipts under the State Sales Tax Act General Sales Tax) என்ற தலைப்புகளின் கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்த சலான் மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும், விபரங்களும் விரிவாக ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தபால் பெட்டி எண் : 55

**நா. முத்துக்கிருஷ்ணன்,**
திருச்சி வட்ட மேற்பார்வைப்
பொறியாளர்.

(த. 34)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### நெடுஞ்சாலே கிராமப்பணித்துறை

சென்னை வட்டம், சென்னை-25

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 20—10—71 அன்று மாலை 3·00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வ.எண். | வேலை விபரம். | முன் வைப்புத் தொகை. ரூ. | ஒப்பந்த நமூனு கிடைக்குமிடம். |
|---|---|---|---|
| 1 | ஆரணி-தேவிகாபுரம் சாலே கி.மீ. 11/6ல் (மைல் 7/2) செய்யாற்றின் குறுக்கே ஓர் மூழ்கு பாலம் கட்டுதல். | 13,400 | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணாமலை. |

ஒப்பந்தங்கள் 20—10—1971 அன்றே மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள், வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருவண்ணாமலை அலுவலகத்தில் விற்பனைவரி உட்பட ரூ. 51·50 செலுத்தி 6—10—1971 முதல் 19—10—1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப் பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை), திருவண்ணாமலை அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை), திருவண்ணாமலை பெயரில் செலுத்தி செலுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

மாற்றிய வடிவமைப்பைத் தாங்கிய ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினுல் அதற்கான "ரிசர்வ் வங்கி" யின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

14—9—1971.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
(நெடுஞ்சாலை), சென்னை வட்டம்.

(த. 45)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### போக்குவரத்துத் துறை

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

கான்வாஸ் பெல்ட் வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட விலைப் புள்ளிகள் 11—10—1971 மாலை 3 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், இதர விவரங்களைக் கொள்முதல் அலுவலர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, சென்னை-2 அவர்களிடமிருந்து வேலை நாட்களில் இலவசமாகப் பெறலாம்.

**இயக்குநர்.**

(த. 58)

## ஏல ஒப்பந்தம்

**கண்காணிப்பாளர் அலுவலகம்**
**அரசினர் காச நோய் சானடோரியம்**
**தாம்பரம், சென்னை-47**

அரசினர் காச நோய் சானடோரியம், அம்ரித் நகர் குடியிருப்பு (சானடோரியம் சார்ந்த புனர்வாழ்வு நிலையம்) பகுதிகளில் உள்ள மரங்களின் பலன்களை எடுத்துக்கொள்ள 16—11—1971 முதல் 15—11—1972 வரை உள்ள காலத்துக்குக் குத்தகை உரிமை அரசினர் சானடோரியத்தில் 30—10—1971 மாலை 3 மணிக்கு பகிரங்க ஏலம் விடப்படும் என்று இதன் மூலம் அறிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்கொண்டு விவரங்களை சென்னை-47 தாம்பரம், அரசினர் காச நோய் சானடோரியம் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெறலாம்.

**டாக்டர் கே. வி. கிருஷ்ணசாமி,**
**எம்.டி., எப்.சி.சி.பி.**
**கண்காணிப்பாளர்,**

அரசினர் காசநோய் சானடோரியம், தாம்பரம், சென்னை-47.

(த. 61)

## 4½·/. சென்னை மாநில மின்சார வாரியப் பத்திரம், 1971 மீட்பு அறிவிப்பு

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 30—9—1971 தேதி அறிவிப்பு எண். 1539 F.C/61-படி, அறிவிக்கப்பட்ட விதிகளின் படி, 4½ சதவிகித 1971-ஆம் ஆண்டின் தமிழ்நாடு மின்சார வாரியப் பத்திரத்திற்குத் திருப்பிக் கொடுக்கப்படாத மீதி தொகையை 15—10—1971 வரையிலாக வட்டி உட்பட 16—10—1971அன்று, அன்றைய நிலவரப்படி திருப்பி அளிக்கப்படும். 16—10—1971 தேதி முதற்கொண்டும் அதன் பிறகு கடன்மேல் எந்தவித வட்டியும், கொடுக்கப்பட மாட்டாது. (3-ஆம் பத்தியில் குறிப்பிட்டுள்ள விலக்குகளைப் பார்க்க.)

கடனைத் திருப்பிக்கொடுப்பதற்கான முறைகளில் ஏதாவது மாறுதல் இருப்பின் சூழ்நிலைக்குத் தக்கபடி மாற்றி அமைக்கப்படும். அரசாங்கக் கடன் பத்திரப் பாதுகாப்பு கைப்பிரதியிலுள்ள சட்டங்கள் மற்றும் வாரியத்தின் முக்கிய விதிகளுடன் இணைந்தும் சூழ்நிலைக்குத் தக்க அமலாக்கம் செய்யப்பட்ட மின் (வினியோக) சட்டம், 1948-ன் கீழ் தமிழ்நாடு மின் வாரியத்தினால் ஏற்படுத்தப் பட்ட விதிகளுக்கு உட்பட்டு மாறுதல் இருக்கும்.

தமிழ்நாடு மின் வாரியம் இந்த ஆண்டு அக்டோபர் 1971-ன் மத்தியில் ஒருபுதிய ஓப்பன் மார்க்கெட் கடனை (Open Market Loan) வெளியிடவிருக்கின்றது. 1971-ஆம் ஆண்டு 4½ சதவிகிதத் தமிழ்நாடு மின் வாரியக்கடன் பத்திரங்கள் வைத்திருப்பவர்கள், தாங்கள் விரும்பினால் அதனை அதற்குச் சமமான புதிய கடன் பத்திரமாக மாற்றிக் கொள்ளலாம். இதனைப் பயன் படுத்திக்கொள்பவர்கள் தங்களுடைய புதிய கடன் பத்திரத்திற்குப் பழைய கடன் பத்திரத்திற்குக் குறையாத அளவிலான புதிய வட்டியைப் புதிய கடன் வெளியிடும் தினமான 16—10—1971-லிருந்து, பெற்றுக் கொள்ள தகுதியுடையவ ராவார். இதனைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் நபர்கள் கடன் தொகையைப் பெறுவதற்காகத் தங்களது கடன் பத்திரங்களை இச்சமயத்தில் சமர்ப்பிக்க வேண்டாம். ஆனால் மாறுதல் செய்வதற்காக தக்கத் சமயத்தில் முறை யாகத் தள்ளுபடி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

கடன் பத்திரங்களைப் பணமாக மாற்ற விரும்பும் நபர்கள் தங்கள் பத்திரங்களை முறையாகத் தள்ளுபடி செய்து அதனை நேரிலோ அல்லது அவர்களது கிளை மூலமாகவோ அல்லது அவர்களது பாங்கர்கள் மூலமாகவோ சென்னை பாங்க் ஆப் மைசூர் கட்டடத்திலுள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் பொது நல நிறுவனக் கடன் பிரிவில் பத்திரங்களைச் சமர்ப்பித்துத் தமிழ்நாட்டின் கிளைகள் மற்றும் பெங்களூர் மற்றும் பெங்களூர் நகரங்களிலுள்ள கிளைகள் மற்றும் அகமதாபாத், பம்பாய், கல்கத்தா, ஹைதராபாத், கான்பூர், மற்றும் புதுடெல்லியிலுள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் லோக்கல் தலைமை அலுவலகத்தின் சரியான படிவங்களைப் பூர்த்தி செய்து கொடுத்தபின் மேற்கூறப்பட்டவை பிரிவில் மாற்றிக் கொள்ளத் தக்க அதிகாரப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள லாம். தள்ளுபடி செய்வது சம்பந்தமான முறைகளைப் பற்றிய முழு விவரங்களை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வின் பொது நலக் கடன் பிரிவிலிருந்தும், அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் எந்த கிளைகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**

தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை.

(த 12)

---

## ஒப்பந்தப் புள்ளி

---

### தமிழ்நாடு அரசு

### பொதுப்பணித் துறை

சென்னை செங்கற்பட்டு வட்டம்
ஒப்பந்தப்புள்ளி ஒத்திவைப்பு அறிவிப்பு

வேலையின் பெயர் :சென்னை—10, கீழ்ப்பாக்கம், அரசினர் மனநோய் மருத்துவமனை, நர்சிங் அலுவலர்களுக் கான இல்லங்கள் கட்டுதல்.

பார்வை : இந்த அலுவலகத்தின் எண். டி3/19006/71–4 நாள் 23—8—1971.

மேற்கண்ட வேலைக்காக ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்கான கடைசித் தேதி 13—9—1971 லிருந்து 11—10—1971க்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் இந்த அலுவலகத்திலிருந்து 5–10–1971 முதல் 9—10—1971 வரை கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

**பி. கே. கந்தசாமி,**

மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கற்பட்டு வட்டம்.

(த-74)

## பயிற்சி

### அறிவிப்பு

**பரிசோதனைச் சாலை தொழில் நுட்ப பணியாளர் கிரேடு I பயிற்சி அக்டோபர் 1971**

அக்டோபர் 1971 முதல் ஆரம்பமாகவிருக்கும் பரிசோதனைச்சாலை தொழில் நுட்பப் பணியாளர் கிரேடு I பயிற்சிக்கு, பரிசோதனைச் சாலை தொழில் நுட்பப் பணியாளர் கிரேடு II சான்றிதழ் அல்லது அதற்கு ஈடான சான்றிதழ் பெற்றுள்ளவர்களிடமிருந்தும், அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பரிசோதனைச் சாலையில் 2 ஆண்டுகளுக்குக் குறையாமல் பணியாற்றி யுள்ளவர்களிடமிருந்தும் மனுக்கள்வரவேற்கப்படுகின்றன. தற்பொழுது பணியில் உள்ளவர்கள் தங்களுடைய மனுக்களை, தங்கள் துறையைச் சார்ந்த சம்பந்தப்பட்ட அலுவலர்களின் மூலமாக, இயக்குநர், மருத்துவக் கல்வி, சென்னை-5 அவர்களுக்கு அனுப்ப வேண்டும். பயிற்சி, பின்கண்ட நிலையங்களில் நடைபெறும்.

1. சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.
2. ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரி, சென்னை.
3. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை.
4. மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.
5. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.
6. கிங் இன்ஸ்டிட்யூட், கிண்டி.

மனு வடிவங்கள், விவரத் தொகுப்புகள், இதர விவரங்கள் ஆகியவற்றை இயக்குநர், கிங் இன்ஸ்டிட்யூட், கிண்டி அவர்களிடமிருந்தோ அல்லது பயிற்சி பெற விரும்பும் மேற்கூறிய கல்லூரிகளின் தலைவர் (டீன்) மற்றும் முதல்வர்களிடமிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட மனுக்கள் இயக்குநர், கிங் இன்ஸ்டிட்யூட், கிண்டி அல்லது சம்பந்தப்பட்ட மருத்துவக் கல்லூரிகளின் தலைவர் மற்றும் முதல்வர் அவர்களுக்கு 5-10-1971 அன்று மாலை 5·00 மணிக்கு அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்க வேண்டும்.

**என். ஆர். ரத்னக்கண்ணன்,**
இயக்குநர்,
மருத்துவக் கல்வி

13—9—71

(த. 42)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை.

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

ஸ்பீடா மீட்டர், காஜஸ் வழங்குவதற்காக, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 20—10—1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், இதர விவரங்களை கொள்முதல் அலுவலர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து, அண்ணா சாலை, சென்னை-2 அவர்களிடமிருந்து அலுவல் நாட்களில் இலவசமாகப் பெறலாம்.

(த.65)

**இயக்குநர்.**

## ஏலம்

### கோயம்புத்தூர் நகராட்சி

ஏல விளம்பரம்

நகராட்சிக்குச் சொந்தமான தியாகி குமரன் மார்க்கெட் வண்டிப் பேட்டைக்கு அருகில் உள்ள புதிய பிளாக் கடை எண். என். பீ. 25-ல் 31-3-74 வரை தக்காளி வியாபாரம் செய்யும் உரிமை 19-10-71-ஆம் தேதியன்று மாலை 3·00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும்.

கட்டவேண்டிய டெபாசிட் தொகை ரூ. 100 மற்ற நிபந்தனைகளை நகராட்சி அலுவலகத்தில் கேட்டுக் தெரிந்து கொள்ளவும்.

**ஆணையர்.**

(த. 79)

## ஒப்பந்தப் புள்ளி

### விழுப்புரம் நகராட்சி

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

மெத்தைகள், தலையணைகள் வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 13—10—1971 மாலை 4·00 மணி வரை விழுப்புரம் நகராட்சி ஆணையரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 4·30 மணிக்கு ஆணையரால் பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள் ரூ. 50 கட்டுத் தொகையுடன் அனுப்பப்பட வேண்டும். மேற்கொண்டு விவரங்களை அலுவலகத்திலிருந்து பெறலாம்.

**பி. ஐ. பத்மநாப மேனன்,**
ஆணையர்.

15—9—1971.

(த. 41)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் லிமிடெட்

ஆலங்குளம், தமிழ்நாடு சிமெண்ட்ஸ், சிமெண்ட் பாக்கிங்கிற்காக 28" × 18" அளவுள்ள (இந்த அளவு இருந்தால் விசேஷம்) பயன்படத்தக்க பழைய கோணிப்பைகள் மாதம் சுமார் 2,00,000 எங்களுக்குத் தேவைப்படுகின்றன. இதை வழங்குவதில் விருப்பமுள்ளவர்கள், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களைப் பெறுவதற்காக 1971 அக்டோபர் 9-ஆம் தேதிக்குள் கீழே கையொப்பமிட்டவரிடம் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

**பொருட்கள் நிர்வாகி,**

150-ஏ அண்ணாசாலை,
அஞ்சல் பெட்டி எண் 5205,
சென்னை-2.

(த.50)

## ஒப்பந்தப்புள்ளி

### திருவள்ளூர் நகராட்சி

கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை நகர் மன்ற ஆணையரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 11—10—1971 திங்கட்கிழமை மாலை 4–00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

இதர நிபந்தனைகளும் ஒப்பந்தப்புள்ளி நமூனுவிற்கும் அலுவலகத்தில் விண்ணப்பிக்கவும்.

| வ. எண். | வேலை விவரம். | மதிப்பீடு. ரூ. | கட்டுத் தொகை. முதல் தவணை ரூ. | 2–வது தவணை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஆசூரி தெருவின் தூசியில்லாத் தளத்தைப் புதுப்பிக்க. | 6,200 | 155 | 155 |
| 2 | கொண்டமாபுரம் தெருவின் தூசியில்லாத் தளத்தைப் புதுப்பிக்க. | 2,500 | 65 | 65 |

**ஆணையர்.**

(த-81)

## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு குடிநீர் - வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும், பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைக் கிராமப் பணித்துறை அல்லது இதுபோன்ற இதர அரசுத் துறைகளில் உரிய பிரிவில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளர் (பொ. சு. பொ.) அவர்களால், எண் 17, சர். பி. டி. ராஜன் சாலை, மதுரை–2, என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலத்தில் 13—10—1971 புதன் கிழமை மாலை 3-00 மணி வரை துறைக்குரிய வடிவத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன. அவை அதே நாள் மாலை 3-30 மணிக்கு அந்த சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| வேலையின் பெயர் | ... | குளித்தலை குடிநீர் வழங்கும் திட்டம் —முதற்கட்டம்—6 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள உயர் மட்ட ஆர். சி. சி. சர்வீஸ் நீர்த் தேக்கம், அமைத்தல். |
| ஒப்பந்த வடிவம் | .. | மொத்தத் தொகை. |
| கட்டுத் தொகை | ... | ரூபாய் 3,980—இந்தத் தொகையைக் கருவூலச் சலான் வடிவிலோ அல்லது டிமாண்ட் டிராப்ட்டாகவோ அல்லது நாட்டுடைமையாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் காரண்டியாகவோ, நிர்வாகப் பொறியாளர், பொதுச் சுகாதாரப் பொறியியல் கோட்டம், திருச்சி அவர்கள் கணக்கில் செலுத்தி, ஒப்பந்தப்புள்ளியுடன் சேர்ப்பிக்கப்படவேண்டும். |
| வேலையை முடிக்க வேண்டிய காலம். | | 6 மாதங்கள். |
| ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை. | | ரூபாய் 10-35 (விற்பனை வரி உட்பட) |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர், பொதுச் சுகாதாரப் பொறியியல் கோட்டம், பி. 15, தில்லை நகர் மெயின் ரோடு, திருச்சி–3 அவர்களிடமிருந்து 9—10—1971 வெள்ளிக்கிழமை மாலை 5-00 மணி வரை பெறலாம்.

**கே. கோவிந்தமேனன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ. சு. பொ.)
மதுரை-2.

6—9—1971

(த-29)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ் நாடு அரசு பொதுப்பணித் துறை

#### சிட்டு ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவர் பொருட்டும் கீழ்க்கண்ட வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித் துறை, கோயம்புத்தூர்—நீலகிரி வட்டம் அவர்கள், கோயம்புத்தூரில் தமது அலுவலகத்தில் 14—10—71 மாலை 3·00 மணி வரை பெற்றுக் கொள்வார்.

| | |
|---|---|
| வேலையின் பெயர் .. | கோயம்புத்தூர், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் ஜிம்னேசியம், ஸ்போர்ட்ஸ் பவல்லியன், ரன்னிங் டிரக் கட்டுதல். |
| ஒப்பந்த வடிவம் | மொத்தத் தொகை. |
| கட்டுத் தொகை | ரூ. 4,000. |
| ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை வரைபடங்களுடன். | ரூ. 10·35. |
| வேலையை முடிக்க வேண்டிய காலம். | 6 மாதங்கள். |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களைப் பெற, நிருவாகி, நிருவாகப் பொறியாளர் அலுவலகம், பில்டிங்ஸ் டிவிஷன், கோயம்புத்தூர் அவர்களுக்கு எழுத்து மூலமாகக் கோரிக்கை அனுப்பியும் மேலே குறிப்பிட்டபடி கட்டணம் செலுத்தியும் (இக்கட்டணம் திருப்பித் தரப்படமாட்டாது) 1—10—71 லிருந்து எல்லா அலுவல் நாட்களிலும் அலுவல் நேரத்தில் பெறலாம்.

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ. ப. து.)
கோயம்புத்தூர்-நீலகிரி வட்டம்,
கோயம்புத்தூர்-1.

(த.–37)

## ஒப்பந்தப் புள்ளி

### கோவை நகராட்சி

நகராட்சி லாரி எம்.டி.இ. 2073-ஐப் பழுது பார்த்துப் புதுப்பிக்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 11-10-71 மாலை 3·00 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். அன்று மாலையே 3·30 மணிக்குப் பொதுப்பணிப் பொறியாளரால் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகளுக்கான விவரங்கள்அடங்கிய பட்டியலை ரூ. 2·06 செலுத்தி நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆணையர்.

(த. 80)

### திருச்சிராப்பள்ளி நகராட்சி

" பைப் லைன் மெட்டீரியல்ஸ் வழங்குவதற்காக, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தனி அலுவலரால் 15-10-71 மாலை 4·00 வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் இதர விவரங்களை நகராட்சிப் பொறியாளருக்கு மனுச் செய்து அல்லது நேரில் சென்று பெறலாம்.

(த–55)

டி. கோவிந்தராஜன்,
தனி அலுவலர்.

## வேலை வாய்ப்பு

### மாயூரம் நகராட்சி

பி. ஏ. அல்லது பி.எஸ்ஸி. யுடன் எல்.டி., பி.டி., அல்லது பி.இ.டி. கல்லூரிப் பயிற்சிச் சான்றிதழ் உள்ள பிசிக்ஸ் அல்லது கெமிஸ்ட்ரி முக்கிய பாடமாகவும் கணிதம் துணைப் பாடமாகவும் கொண்ட ஷெடியூல் வகுப்பினர், ஷெடியூல் பழங்குடியினரிடமிருந்து, சயன்ஸ் பட்டதாரி உதவியாளர் வேலைக்காகத் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து மனுக்கள் 15-10-1971 மாலை 4 மணி வரை வரவேற்கப் படுகின்றன.

ரூபாய் ஒன்று செலுத்தி மாயூரம் நகராட்சி அலுவலகத்திலிருந்து மனு வடிவங்களைப் பெறலாம்.

17-9-71

எஸ். வீரையன்,
ஆணையர்.

(த–75)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசுப்

### போக்குவரத்துத் துறை

ரப்பர் மேட்டிங் (Rubber Matting) (Black with Hersain backing) வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட விலைப் புள்ளிகள் 12—10—1971 மாலை 3 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களைத் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை கொள்முதல் அலுவலரிடமிருந்து அலுவல் நாட்களில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

இயக்குநர்.

(த. 47)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரை யிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களைக் கோட்டப் பொறியாளர் (நெகிப) திண்டுக்கல் விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 13–10–1971—ஆம் தேதி புதன்கிழமை அன்று பிற்பகல் 3-00 மணி வரையில் (அலுவலகக் கடியாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-05 மணிக்குத் திறக்கப்படும்.

| வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு. ரூ. | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|---|
| திண்டுக்கல் (நெ) கோட்டம். | | | |
| 1. மதுரை பாலமேடு சாலை கி.மீ. 6·6 முதல் கி.மீ. 12·0 வரை அவசர பழுது பார்த்தல். | 1,76,000 | 4,400 | கோட்டப் பொறியாளர் (நெகிப) திண்டுக்கல். |
| 2. ஷை கி.மீ. 12.0–18·0. | 1,62,500 | 4,065 | ஷை |
| 3. ஷை கி.மீ. 18·0–24·4. | 1,68,500 | 4,215 | ஷை |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 10·40 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் (நெகிப) அலுவலகம், திண்டுக்கல் விலாசத்திலிருந்து 6-10-1971 முதல் 12-10-1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணய பாரங்கள், ஷெடியூல்கள், வரைபடங்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பி தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெகிப) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் 'ரெவின்யூ டெபாசிட்' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருடத் தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருடத் தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்கு காரண்டிகளும், டிமாண்ட் டிராப்ட்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். பாங்க் காரண்டிகளைச் சமர்ப்பிக்கும் போது ரிசர்வ் பாங்கி ஒப்புதலைப்பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தம் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புக் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**மை. அ. சமத்,**
கோட்டப் பொறியாளர் (நெகிப),
திண்டுக்கல்.

(த-66)

## ஏல விற்பனை

### தமிழ்நாடு தீயணைப்புத் துறை.

கண்டனம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட 2 வண்டிகள் வேலூர் தீயணைப்பு நிலையத்தில் 5—10—71 அன்று காலை 11·00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். மேற்படி இடத்தில் வண்டிகளைப் பார்வையிடலாம். விற்பனை நிபந்தனைகளைக் கீழே கையொப்பமிட்டவர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

| ஊர்திகளின் வகை. | பதிவு எண். | வருடம், மாடல். |
|---|---|---|
| 1. நீர்தாங்கி வண்டி. | எம்.எஸ்.எக்ஸ். 1453. | பார்கோ, 1957 மாடல் பெட்ரோலில் ஓடுவது. |
| 2. இழுக்கும் மோட்டார் வண்டி. | எம்.எஸ்.ஒய். 9249. | ஸ்டுடிபேக்கர், 1957 மாடல் பெட்ரோலில் ஓடுவது. |

**யூ. நாராயண,**
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
வேலூர் கோட்டம்.

(கு. 52)

## தமிழ்நாடு அரசு
## பொதுப்பணித் துறை

### ஒப்பந்தப் புள்ளி தேதி நீட்டிப்பு.

வேலையின் பெயர் .. .. (1) கும்பகோணம் ஆண்கள் கலைக் கல்லூரியில் பௌதிகத் துறை பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.

(2) கும்பகோணம் ஆண்கள் கலைக் கல்லூரியில் இரசாயனப் பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.

(3) கும்பகோணம் ஆண்கள் கலைக் கல்லூரியில் கலைத்துறைப் பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.

(4) தோல் சம்பந்தமான வியாதிகட்குச் சிகிச்சையளிக்க தஞ்சை இராசாமிராசுதார் மருத்துவ மனையில் இரு பகுதிகட்குக் கட்டடம் கட்டுதல்.

பார்வை .. .. .. '' இந்தியன் எக்ஸ்பிரஸ் '' தேதி 30—6—1971, 2—7—1971.

'' தி மெயில் '', தேதி 28—6—1971-ல் வெளியிட்ட சீட்டு ஒப்பந்த அறிக்கை.

'' தமிழரசு '', தேதி 1—9—1971-ல் வெளியிட்ட ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு.

மேற்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் பெறும் தேதி 20—10—1971 அன்று மாலை 3-00 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 19—10—1971 அன்று மாலை 5-00 மணி வரை கிடைக்கும். மற்ற விதிகளில் மாறுதல் ஏதும் இல்லை.

**ஆர். வேணுகோபால்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சை வட்டம், தஞ்சாவூர்,

(த. 33)

ஒப்பந்தப் புள்ளி

## சிதம்பரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அவர்களால் தனது அலுவலகத்தில் 15-10-1971 அன்று மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குழாய் விளக்குகளுக்கான சோக் மற்றும் ஸ்டார்ட்டர்கள் வழங்க வரவேற்கப்படுகின்றன. அவை அன்று மாலையே 4-15 மணிக்குத்திறக்கப்படும். கட்டுத் தொகை ரூ. 260. மற்ற விவரங்கள் நகராட்சிப் பொறியாளரிடமிருந்து எழுதிக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**பொ. இராமலிங்கம்,**
ஆணையர்.

10-9-1971
(த. 48)

## ஏல விற்பனை

## தமிழ்நாடு தீயணைப்புத் துறை

கண்டனம் செய்யப்பட்ட இழுக்கும் மோட்டார் வண்டி எம்.எஸ்.ஒய். 7044—ஆஸ்டின் 1953 மாடல், பாளையங் கோட்டைத் தீயணைப்பு நிலையத்தில் 1971-ஆம் வருடம் அக்டோபர் மாதம் சனிக்கிழமை23-ஆம்தேதியன்று காலை11-00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். மேற்படி வண்டியை, பாளையங்கோட்டைத் தீயணைப்பு நிலையத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். விற்பனைக்குரிய நிபந்தனைகளைக் கீழே குறிப்பிட்ட அலுவலரிடமிருந்து பெற்றுகொள்ளலாம்.

**எம். எஸ். சுப்பிரமணியம்,**
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
பாளையங்கோட்டை.

(த. 53)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### தொழில் வணிகத் துறை

வேலையின் பெயர் : அம்பத்தூர் தொழிற் பேட்டையில் உள்ள சிறு கொட்டகைகளுக்கு உள்பகுதி மின்சார வசதி செய்வதற்குரிய வேலைக்கான தொழிலடிப் படையான அச்சு இணைப்புகள் (Industrial type fittings) வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற் கூறப்பட்ட பொருள்களை வழங்குவதற்காகப் புகழ்பெற்ற நிறுவனங்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டு மானப் பிரிவு, தொழில் வணிகத்துறை அவர்களால் 6—10—1971 அன்று மாலை 3—00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3—10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளி தாரர்களின் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பிரிவு, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை—2 அவர்களால் திறக்கப்படும்.

1. கட்டுத் தொகை ... ... ... ரூபாய் 200.

2. மாதிரி வரைபடம்உட்பட (ஒப்பந்தப் ரூபாய் 5.20 புள்ளி பத்திரங்களின் விலை, விற்பனை வரி உட்பட.)

3. வேலையை முடிக்க வேண்டிய காலம் ... 1 மாதம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், 35/2, உட்ஸ் ரோடு, சென்னை—2 என்ற முகவரியில் உள்ள, நிர்வாகப் பொறி யாளர் (கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம் அவர்களது அலுவலகத்தில், 25—9—1971 முதல், அலுவலக நேரத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்டத் தொகையான ரூபாய் 5·20-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசு கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கிலோ " XXIX Industries other receipts) " என்ற தலைப்பில், நிர்வாகப் பொறியாளர் (கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம், தொழில் வணிகத்துறை, சென்னை—2, அவர்களது கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

கட்டுத் தொகையை சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிர்வாகப் பொறியாளர் (கட்டுமாணம்) அம்பத்தூர் கோட்டம், சென்னை—2 அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்டு டிராப்ட்டுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசு பாதுகாப்புப் பத்திரங் கள், தமிழ்நாடு மின்சார வாரியப் பத்திரங்கள் ஆகியவை விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

நாட்டுடமையாக்கப்பட்ட எந்த வங்கியின் டிமாண்ட் டிராப்ட்டும் கட்டுத்தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப் படுமானால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

சி. பி. மேத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமாணப் பிரிவு.

12—9—1971.
(த: 51)

---

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு
### பொதுப் பணித் துறை

**ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு**
**எண் 39**

ராயபுரம் படகு கட்டும் தளத்தில் ரோலிங் ஷட்டர் இணைப்பு—அமைப்பு — 1-க்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந் தப் புள்ளிகள் கீழே கையொப் பமிட்டவரால் 19—10—1971 பிற்பகல் 1 மணி வரை வர வேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளி வரையறை கள், நிபந்தனைகள் விவரங் களைக் கீழே கையொப்பமிட்டவ ருக்கு மனுச் செய்து இலவச மாகப் பெறலாம்.

**எஸ். சச்சிதானந்தம்.**
பொதுக் கண்காணிப்பாளர்,
பொதுப்பணி பணிமனை &கிடங்கு

(த.71)

### தமிழ்நாடு அரசு
### போக்குவரத்துத் துறை
சென்னை-2

**ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு**

ஹெட் லேம்ப் அசெம்பிளி அண்டு சீல்டு பீம் யூனிட்டுகள் வழங்குவதற்காக மூடி முத் திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 14—10—1971 பிற்பகல் 2 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் இதர விவரங்களை, கொள்முதல் அலுவலர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, அண்ணா சாலை, சென்னை-2 அவர் களிடமிருந்து இலவசமாகப் பெற லாம்.

**இயக்குநர்.**

(த.62)

# ஒப்பந்தப் புள்ளி

கீழ்க்கண்ட பொருள்கள் வாங்குவதற்கான மூடி முத்திரையிட்ட சாற்றுக் குறிப்பெண்ணும், தேதியும், குறியிட்ட விலை ஒப்பங்கள் (Sealed Tenders) அடியில் கையொப்பம் இட்டவரால் அவரது அலுவலகத்தில் ஒவ்வொரு பொருளுக்கும் எதிரே குறிப்பிட்ட தேதியில் பகல் 12-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண். | பொருள். | சாற்றுக் குறிப்பெண். | சாற்றுக் குறிப்பின் விலை (வரி உட்பட). ரூ. | தவணைத் தேதி. |
|---|---|---|---|---|
| 1 | டின் சால்டர் 50 சதவீதம் (Tin Solder) | P. 131/71 | 10·00 | 20—10—71 |
| 2 | பிளம்பிங் மெட்டல் 30 சதவீதம் (Plumbing). | P. 132/71 | 10·00 | 20—10—71 |
| 3 | அலுமினியம் கேபிள் இணைப்பு சால்டர் (Solder for jointing Aluminium cable). | P. 133/71 | 10·00 | 20—10—71 |

ஒப்பந்தப் படிவங்கள் குறிப்பிட்ட முடிவு தேதிகளில் பிற்பகல் 3-00 மணிக்கு விரும்பி வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். குறித்த காலம் தவறி வரும் விலை ஒப்பங்கள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேற்படிப் பொருள்களைப் பற்றி விவரங்களும் விலைப் புள்ளிகள் குறித்து அனுப்புவதற்குக் குறிப்புத் தாள் ஒன்றும் அடங்கிய ஒப்புச் சாற்றுக் குறிப்புப் பிரதிகள் (Copies of specification) வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு மேலே குறித்த விலைக்கு பிரதி ஒன்று ரூ. 10·00 (விற்பனை வரி உள்பட) அக்கௌண்ட்ஸ் ஆபீஸர், சென்னை மின் அமைப்பு, 157, அண்ணா சாலை, சென்னை-2 (Accounts Officer, Madras Electricity System, 157, Anna salai, Madras-2.) என்ற முகவரிக்கு ரொக்கமாகவோ அல்லது பண அஞ்சல் (Money Order) மூலமாகவோ அல்லது டிமாண்ட் டிராப்ட் (Demand draft) மூலமாகவோ அல்லது நேரிலேயோ செலுத்தி அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படித் தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்பட மாட்டாது. பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அஞ்சலில் அவை தவற நேரிட்டால் அதற்கு மின்சார வாரியம் எந்த விதத்திலும் பொறுப்பாகாது.

கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு விலை ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா விலை ஒப்பந்தங்களையோ, எவ்விதக்காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும், இரண்டுஅல்லது அதற்கு மேற்பட்ட விலை ஒப்பந்ததாரர்களுக்கிடையே ஆணையைப் (Order) பகிர்ந்து கொடுக்கவும், உரிமை பெற்றவராவார். ஒருவர் பெயரில் வாங்கப்பட்ட விலையொப்பத்தாள்களும், ஒப்புச் சாற்றுக் குறிப்பும் பிரதிகளும் மற்றொருவர் பயன்படுத்துவது செல்லாது. அரசாங்கக் கடன் பத்திரங்களோ அல்லது மின்சார வாரிய பாண்டு (Board Bonds) களோ கட்டுத் தொகைக்கு ஈடாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கட்டுத் தொகை (Earnest money Deposit) இல்லாமல், அனுப்பப்படும் விலை ஒப்பங்கள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. ஒவ்வொரு ஒப்புச் சாற்றுக் குறிப்புக்கும் கட்டுத் தொகை ரூ. 1,000 (ஒரு ஆயிரம்) கட்ட வேண்டும்.

பணச் செக்குகள் (Cheques) கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஆங்கிலத்திலுள்ள ஒப்புச் சாற்றுக் குறிப்புப் பிரதிகள்தான் (Copies of specification in English only) விற்கப்படும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
சென்னை மின்சார வாரியம்
சென்னை-2.

(த.59)

1—10—71

## தமிழ்நாடு அரசு

### தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகம் (கட்டுமானங்கள் பகுதி)
### சென்னை–25.

### சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை.

வேலையின் பெயர்—

வேலை எண் 1.—சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்காக ஆடிட்டோரிய கட்டடம் கட்டுதல்.
வேலை எண் 2.—சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்காக நூலகக் கட்டடம் கட்டுதல்.
வேலை எண் 3.—சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்காக உலோகவியல் 5 ஆண்டு பட்டப்படிப்பிற்கான கூடுதல் கட்டடம் கட்டுதல்.
வேலை எண் 4.—சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்காகச் சமையற்கூடம், சாப்பிடும் இடத்திற்கான கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கண்ட வேலைகளைக் கீழே குறிப்பிட்டுள்ளபடி செய்வதற்காக, தொழில்நுட்பக் கல்விப்பகுதிகளில் வேலைகளை மேற்கொள்வதற்காகப் பதிவு செய்துகொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்கூறப்பட்ட அலுவலகத்தில் தொழில் நுட்பக்கல்வி இயக்குநர் சென்னை-25 அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள், அதே நாள் மாலை 3-30 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிக்காரர்கள் முன்னிலையில் தொழில் நுட்பக்கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் திறக்கப்படும்.

| | வேலை எண் 1. | வேலை எண் 2. | வேலை எண் 3. | வேலை எண் 4. |
|---|---|---|---|---|
| 1 ஒப்பந்த வடிவம் .. .. .. .. | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை. |
| 2 கட்டுத் தொகை .. .. .. .. | ரூ. 5,750 | ரூ. 4,500 | ரூ. 5,000 | ரூ. 2,500 |
| 3 மாதிரி வரைபடத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை. | ரூ. 20 மற்றும் விற்பனை வரி. | ரூ. 20 மற்றும் விற்பனை வரி. | ரூ. 20 மற்றும் விற்பனை வரி. | ரூ. 20 மற்றும் விற்பனை வரி. |
| 4 வேலையை முடிக்க வேண்டிய காலம் .. .. | 10 மாதங்கள். | 8 மாதங்கள். | 10 மாதங்கள். | 8 மாதங்கள். |
| 5 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்கண்ட அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கிடைக்கக் கூடிய நாட்கள். | 4–10–1971 முதல் 16–10–1971 | 4–10–1971 முதல் 16–10–1971 | 4–10–1971 முதல் 16–10–1971 | 4–10–1971 முதல் 16–10–1971 |
| 6 ஒப்பந்தப் புள்ளிகளைக் கொடுக்கவேண்டிய நாள் .. | 19–10–1971 மாலை 3-00 மணி. | 19–10–1971 மாலை 3-00 மணி. | 19–10–1971 மாலை 3-00 மணி. | 19–10–1971 மாலை 3-00 மணி. |
| 7 ஒப்பந்தப் புள்ளிகள் அளிக்கத் தகுதி வாய்ந்த பிரிவு. | 2-ம் பிரிவும் அதற்கு மேலும். | 2-ம் பிரிவும் அதற்கு மேமும். | 2-ம் பிரிவும் அதற்கு மேலும். | 2-ம் பிரிவும் அதற்கு மேலும். |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது)அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "P. W. Remittances—III Other Remittances" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், மண்டலப் பொறியியற் கல்லூரிச் கோட்டம், திருச்சிராப்பள்ளி அவர்கள் கணக்கில் செலுத்தவேண்டும். விற்பனை வரியைத் தனிச்சலானில் அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XII Sales-tax (b) Receipts under States Sales-tax Act—General Sales-tax" என்ற தலைப்பில் செலுத்த வேண்டும். ஒப்பந்தப்புள்ளி அட்டவணை வேண்டுமென்ற வேண்டுகோள் கடிதத்துடன் சலானை இணைத்துக் கொடுத்தால்தான் ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்கள் வழங்கப்படும். சென்னை, தொழில் நுட்பக் கல்லூரி இயக்குநர் அலுவலக கட்டுமாணப் பகுதி வேலைகளை மேற்கொள்ள உரிய பிரிவில் பதிவுசெய்து கொள்ளாத ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது.

கட்டுத்தொகையைச் சலான் வடிவிலும், ஷெட்யூல்டு வங்கிகளின் 'கால் டிபாசிட்' வடிவிலும் ஏற்றுக்கொள்ளப்படும். அரசு புரோநோட்டுகள், மாநில மின்சார வாரிய பாண்டுகள், தேசிய சேமிப்புப் பத்திரங்கள் கட்டுத்தொகைக்காக, விற்பனை மதிப்பில், 5 சத விகிதம் குறைத்து அல்லது அடிப்படை மதிப்பில் எது குறைவாக இருக்கிறதோ அந்த வகையில் ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியின் காரண்டி வகையிலும் கட்டுத் தொகை ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புகிறவர்கள் உரிய பிரிவுகளில் பெரிய கட்டுமான வேலைகளை மேற்கொள்வதில் குறைந்தது 3 ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும். எவ்விதக் காரணமும் கூறாமல், எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்கத் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

**தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,**
**சென்னை–25.**

(து. 31)

---



## தமிழ்நாடு அரசு

### பொதுப் பணித்துறை

### சீட்டு ஒப்பந்த அறிக்கை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 27–10–71 மாலை 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| 1. வேலையின் பெயர்: | தஞ்சை அரசினர் இராசா மிராசுதார் மருத்துவ மனையில் குடும்பக்கட்டுப் பாடுத் திட்டத்தின் கீழ் அறுவைச் சிகிச்சை நிலையமும் 20 படுக்கைகள் கொண்ட பகுதிக்கான கட்டடத்தை, தாய்சேய் நல விடுதிக் கட்டடத்தின் முதல் மாடியில் கட்டுதல்: |
| 2 ஒப்பந்த வகை ... ... | மொத்தத் தொகை. |
| 3 பிணைப்பணம்—செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக் கொள்ளப்படும். | ரூ. 3,800. |
| 4 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசினர் கருவூலத்தில் பொ.ப. செலுத்துத் தொகை. III மற்ற செலுத்துத் தொகை எனும் தலைப்பின் கீழ் செயற் பொறியாளர் கட்டடக் கோட்டம், திருவாரூர் கணக்கில் செலுத்துதல் வேண்டும். | ரூ. 30·00. |
| 5 விற்பனை வரி— அரசினர் கருவூலத்தில் XIIவிற்பனை வரி பி. பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ்பொது விற்பனை வரி என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும். | ரூ. 1·05. |
| 6 கால அளவு ... ... | 8 மாதங்கள். |
| 7 ஒப்பந்தப் பத்திரம் கிடைக்க ஆரம்பிக்கும் நாள். | 8–10–1971. |

10–9–71

**ஆர். வேணுகோபால்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த.60)

## ஒப்பந்தப் புள்ளி

மின்சார வாரியம், கீழ்க்கண்ட மாவட்டங்களிலுள்ள துணை மின் நிலையங்களில் குடியிருப்புக் கட்டடங்கள் மொத்தத் தொகை ஒப்பந்த முறையில் கட்டுவதற்கான தனித்தனியாக முத்திரையிட்ட ஒப்பந்த விபரங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் கோரப்படுகின்றன

| வரிசை எண்ணும், துணை நிலையத்தின் பெயரும் வேலையும். | செலுத்த வேண்டிய முன்பணம் (திருப்பித் தரத்தக்கது). | தர விபர எண். | ஒப்பந்த விபரங்கள் வரை படங்களுடன் ஒன்றின் விலை (திருப்பித் தரத்தக்கது அல்ல). | ஒப்பந்த விபர அறிக்கை அட்டவணை ஒன்றின்விலை (திருப்பித் தரத்தக்கது அல்ல). |
|---|---|---|---|---|
| 1. மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையம் 110/22 ஆயிரம் வோல்ட் துணை நிலையத்தில் குடியிருப்பு வீடுகளும் அதன் சார்பான வேலைகளும் கட்டுதல். | 2,000 (ரூபாய்இரண்டாயிரம் மட்டும்). | ஜி. எஸ். 225 | 28·00 (ரூபாய் இருபத்தி எட்டு மட்டும்). | 8·00 (ரூபாய் எட்டு மட்டும்). |
| 2. கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொங்கலூர் 110/11 ஆயிரம் வோல்ட் துணை நிலையத்தில் குடியிருப்பு வீடுகளும் மற்றும் அதன் சார்பான வேலைகளும் கட்டுதல். | 2,000 (ரூபாய்இரண்டாயிரம் மட்டும்). | ஜி.எஸ்.எஸ். 226 | 28·00 (ரூபாய் இருபத்தி எட்டு மட்டும்). | 8·00 (ரூபாய் எட்டு மட்டும்). |
| 3. திருச்சி மாவட்டத்தில் ஆதனக்கோட்டை 66/22/11 ஆயிரம் வோல்ட் துணை நிலையத்தில் குடியிருப்பு வீடுகளும் மற்றும் அதன் சார்பான வேலைகளும் கட்டுதல். | 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்). | ஜி.எஸ்.எஸ். 227 | 28·00 (ரூபாய் இருபத்தி எட்டு மட்டும்). | 8·00 (ரூபாய் எட்டு மட்டும்). |

தமிழ்நாடு மின்சார வாரியம், குடியிருப்புக் கட்டடங்களும் அதன் சார்பான வேலைகளும் கட்டுதல் என்பதுடன் துணை நிலையத்தின் பெயர், தர விபர என் (ஸ்பெஸிபிகேஷன் நெ.) ஒப்பந்தக்காரரின் பெயர் ஆகியவற்றையும் மேல் உறையில் எழுதி முத்திரை செய்து, ஒப்பந்த விபரங்கள் கீழ்க் கையொப்பமிட்டவரால் 25—10—71 தேதி பிற்பகல் 3 மணி வரை அவரது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். அன்றே பிற்பகல் 3-30 மணியளவில் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

மேற்கண்ட வேலைகளுக்கான ஒப்பந்த விபரங்களும் வரை படங்களும் வேண்டுவோர் உரிய தொகையைச்செலுத்திக் கீழ்க்கண்டவர்களின் அலுவலகங்களில் 30—9—71 தேதிக்குமேல் பெற்றுக் கொள்ளலாம். இந்தத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

1. கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகம்.
2. நிர்வாகப் பொறியாளர்,
   கட்டுமானம்/டிரான்ஸ்மிஷன் லைன் டிவிஷன்,
   83, பெருமாள்புரம், திருநெல்வேலி-7.

இலாகா ஒப்பந்த பாரங்களில் எழுதாத, முன்பணம் கட்டாத, குறித்த காலத்தில் வராத ஒப்பந்த விபரங்கள் கண்டிப்பாய் நிராகரிக்கப்படும்.

கீழ்க் கையொப்பமிட்டவர் வேலைகளைப் பிரித்துக் கொடுப்பதற்கும் குறிப்பிட்ட (அல்லது) எல்லா ஒப்பந்த விபரங்களையும் காரணம் கூறுமல் நிராகரிப்பதற்கும் உரிமை பெற்றவராவார்.

தபால் பெட்டி எண் 86,
மன்னார்புரம்,
திருச்சிராப்பள்ளி-1.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பொதுநிர்மாண வட்டம்.

(தூ 63)

## ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாகக் கீழ்க்காணும்–தேவைக்கு மேற்பட்ட/பழுதடைந்த/பழைய இயந்திரங்களையும் கருவிகளையும் வாங்குவதற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் குறிப்பிட்ட நாட்களில் பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. தனித் தனி உறைகளில் சாற்றுக் குறிப்பெண்ணும் முடிவு தேதியும் குறிப்பிட்டு, மேற்பார்வைப் பொறியாளர், மின் உற்பத்தி வட்டம், நீர் மின் நிலையங்கள், குந்தா பாலம் அஞ்சல், குந்தா-நீலகிரி என்ற அவர்களது அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

| வரிசை எண். | சாற்றுக் குறிப்பு எண். | | பொருட்களின் விவரம். | கட்டுத் தொகை. | இறுதி நாள். |
|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | |
| 1 | கே.ஜி.சி. | xx/71–72 | என்ஜின் & பம்ப் செட் | 1,00 | 14—10—71 |
| 2 | கே.ஜி.சி. | xxi/71–72 | கான்கிரீட் மிக்சர்கள் | 1,000 | 14—10—71 |
| 3 | கே.ஜி.சி. | xxii/71–72 | ஸ்டோன் கிரஷர்களும் கருவிகளும் | 1,000 | 20—10—71 |
| 4 | கே.ஜி.சி. | xxiii/71–72 | ஏர் கம்ப்ரசர்கள் | 700 | 21—10—71 |
| 5 | கே.ஜி.சி. | xxiv/71–72 | காஃப் டோசர்கள் | 400 | 21—10—71 |
| 6 | கே.ஜி.சி. | xxv/71–72 | ரோடு ரோலர் | 1,500 | 22—10—71 |
| 7 | கே.ஜி.சி. | xxvi/71–72 | ரஷியன் டம்ப்பர் | 1,000 | 22—10—71 |
| 8 | கே.ஜி.சி. | xxvii/71–72 | இதர கருவிகள்-ஜாக்ஹாமர் முதலியன. | 200 | 23—10—71 |
| 9 | கே.ஜி.சி. | xxviii/71–72 | பலதரப்பட்ட ஸ்கிராப் சாமான்கள். | 500 | 25—10—71 |
| 10 | கே.ஜி.சி. | xxix/71–72 | பழைய டிப் டிரக்குகள் .. | 1,000 | 26—10—71 |
| 11 | கே.ஜி.சி. | xxx/71–72 | டிப்டிரக் அங்கங்கள், டப் ஃபிரேம், ஆக்ஸில் முதலியன. | 500 | 26—10—71 |

மேற்படி சாற்றுக் குறிப்புப் பிரதிகள் வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு ரூ. 2 (ரூபாய் இரண்டு) விதம் தலைமைக் கணக்காயர் குந்தா நீர்மின் உற்பத்தி வட்டம் குந்தா பாலம் அஞ்சல் நீலகிரி என்ற முகவரிக்குப் பண அஞ்சல் மூலமாகவோ நேரிலோ செலுத்தி 25-9-71 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது,

ஒப்பந்தப் படிவங்கள் சாதாரண அஞ்சல் மூலம்தான் அனுப்பப்படும். அவை உரியவருக்குச் சரிவரப் பட்டுவாடா செய்யப்படாமல் இருந்தால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

ஒப்பந்தப் படிவங்கள் மாற்றிக் கொள்ளத் தக்கவை அல்ல. குறித்த காலத்திலும் தேதியிலும் வராத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும். ஒப்பந்தப் படிவங்களில் விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் படியேதான் மேற்கூறிய பொருட்களின் விற்பனை மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொரு சாற்றுக் குறிப்பிற்கும் குறிப்பிட்ட கட்டுத் தொகையை ஒப்பந்தப் படிவங்கள் அனுப்பும்போது கண்டிப்பாகக் கட்டியிருக்க வேண்டும். கட்டுத் தொகை கட்டாத ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தங்கள் மேலே குறித்துள்ள நாட்களில் மாலை 4-00 மணிக்குக் குந்தா அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
குந்தாபாலம்,
நீலகிரி

(த. 76)

# தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம்

(தமிழ்நாடு அரசுக்கு உரிமையானது)

'' அக்ரோ '' இல்லம், தொழிற்பேட்டை, கிண்டி,
சென்னை-32

## டிராக்டர்கள் விற்பனை.

RSO 9 டிராக்டர் 20 H.P.

காற்றால் குளிர்விக்கக்கூடியது GDR ல் செய்யப்பட்டது. வெர்சடைல் புதிய வகையானது, பலவகை வேலைகளுக்கும் பயன்பட வல்லது—இந்திய தட்ப வெட்ப நிலைக்கு ஏற்ப முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டது. ஊராட்சிகள், நகராட்சிகள், ஆகியவை துப்புரவுப் பணியை மேற்கொள்ள எளிமையானது—விலையோ மிக மலிவு—வரி உட்பட ரூ. 11,601·70—(வேறெந்த டிராக்டரும் இவ்வளவு மலிவான விலையில் வாங்க முடியாது).

ஜெட்டார் 5511 டிராக்டர்—55 H.P. [ZETOR].

நீரால் குளிர்விக்கக்கூடியது—செக்கோஸ்லோவாகியாவில் செய்யப்பட்டது—நம்பிக்கையான செயல்முறைகள் கொண்டது—கடினமான பயிர்த் தொழில் வேலைக்கு உகந்தது. கரும்பு பயிரிடுதல் மற்றும் சுத்திகரிப்பு வேலைகள்—விலை சுமார் ரூ, 32,000 வரி உட்பட.

T 25 டிராக்டர். 20 H.P.

காற்றால் குளிர்விக்கக் கூடியது—USSR ல் செய்யப்பட்டது—புத்தம் புதிய மாதிரி—விலை சுமார் வரியுட்பட ரூ. 19,500.

U 650 M டிராக்டர் 65 H.P.

நீரால் குளிர்விக்கக்கூடியது—ருமேனியாவில் செய்யப்பட்டது—கட்டுக் கோப்பான செய்முறை—ஆழமான உழவு வேலைகள் மற்றும் கரும்பு பயிரிடுதல், வேலைக்கு ஏற்றது—பெருஞ் சுமைகளை 25 முதல் 30 டன் வரை இழுத்துச் செல்லவல்லது—விலை வரி உட்பட ரூ. 26,805·05—இவ்வளவு குறைந்த விலையில் 65 H.P.—ல் மற்றெந்த டிராக்டரும் வாங்க முடியாது.

ஜெட்டார் 2011 டிராக்டர் 25 H.P.

நீரால் குளிர்விக்கக்கூடியது—செக்கோஸ்லோவாகியாவில் செய்யப்பட்டது—விலை சுமார் ரூ. 24,000 வரிகள் உட்பட.

## பவர் டில்லர்கள் விற்பனை.

கபோதா பவர் டில்லர்கள் 12 H.P.

காற்றால் குளிர்விக்கக்கூடியது.—ஜப்பானில் செய்யப்பட்டது—சிறு பண்ணைகள் மற்றும் தோட்டப் பயிர் வேலைகளுக்கு ஏற்றது—விலை சுமார் வரியுட்பட ரு. 10,000.

## '' டாக்ரிகோ '' டிஸ்க் ஹேரோஸ் விற்பனை.

டிஸ்க்ஹேரோஸ் (டிராக்டருடன் உபயோகப்படுத்தக்கூடியது)—மவுண்டட் டைப்—டிஸ்க்குகளுடன் U.K. விலிருந்தும் ஆஸ்திரேலியாவிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டு—இக்கழகத்தால் விற்பனை செய்யப்படுவன

டிஸ்க்ஹேரோவ் 22'' டிஸ்க்குகள் 12 உடன் விலை ரூ. 2,450.
டிஸ்க்ஹேரோவ் 24'' டிஸ்க்குகள் 12 உடன் விலை ரூ. 2,500.
டிஸ்க்ஹேரோவ் 22'' டிஸ்க்குகள் 16 உடன் விலை ரூ. 2,950.
டிஸ்க்ஹேரோவ் 24'' டிஸ்க்குகள் 16 உடன் விலை ரூ. 3,000.

## டிராக்டர் பவர் டிரில்கள்—வாடகைக்கு.

இக்கழகத்தால் வீல் டைப் டிராக்டர்கள், டிரெயிலர்கள் மற்றும் இதரக் கருவிகளுடன் உழு தொழில்கள் சம்பந்தப்பட்டவை—டிரான்ஸ்போர்டேஷன் தவிர பவர் டிரில்கள் (ரோட்டரி டிரில்கள் மற்றும் ஹேமர் டிரில்கள்) மணல், மற்றும் பாறையான இடங்களில் ஆழமான குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்காகவும் வாடகைக்கு விடப்படும். விவரங்களுக்கு அருகில் உள்ள கீழ்க்கண்ட இடங்களில் உள்ள வட்டார அலுவலகங்களில் தொடர்பு கொள்ளவும். (அல்லது சென்னை-32 கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்).

சிறு காவேரிப்பாக்கம், காஞ்சிபுரம், தொழிற்பேட்டை, மதுரை-7
219, நேரு சாலை, விழுப்புரம், பால்க்கீஸ் காம்பவுண்ட், சேலம்-10;
தொழிற்காலனி, திருச்சி-10.

நிர்வாக இயக்குநர்

(த். 15)

## ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு அரசு

## தொழில் நுட்பக் கல்வி இயக்குநரகம் (கட்டுமானப் பகுதி), சென்னை-25.

வேலையின் பெயர்:—சென்னை, அடையாற்றில் உள்ள படத் தொழில் நுட்ப நிலையத்திற்குத் தச்சுத் தொழிற்சாலை, கார் நிறுத்துமிடம் அமைத்தல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கூறிய வேலையைச் செய்வதற்காகத் தொழில் நுட்பக் கல்வி பகுதியில் III மற்றும் அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் பதிவு செய்து கொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி, சென்னை-25 அவர்களால் 25—10—1971 அன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளி தாரர்களின் முன்னிலையில் இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி, சென்னை-25 அவர்களால் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்த வடிவம் .. | மொத்தத் தொகை. |
| 2 | கட்டுத் தொகை .. | ரூ. 2,500. |
| 3 | மாதிரி வரைபடத்துடன் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை. | ரூ. 20·00 (விற்பனை வரி உட்பட) |
| 4 | வேலையை முடிக்க வேண்டிய காலம். | 6 மாதங்கள். |
| 5 | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்கூறிய அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் கிடைக்கும் தேதிகள். | 11—10—1971 முதல் 23—10—1971. |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசு கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "P.W.D Remittances—III. Other Remittances" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், மண்டலப் பொறியியற் கல்லூரி கோட்டம், திருச்சி அவர்கள் கணக்கில் செலுத்த வேண்டும். விற்பனை வரியை தனிச்சலானில் அரசு கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XII. Sales-tax (b) Receipts under State Sales-tax Act. General Sales-tax" என்ற தலைப்பில் செலுத்தவேண்டும். ஒப்பந்த அட்டவணை வேண்டுமென்ற வேண்டுகோள் கடிதத்துடன் சலான்களை ஒப்படைத்த பின்பே ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும். சென்னை தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அகத்தின் கட்டுமானப் பகுதியில் உரிய பிரிவில் பதிவு செய்துகொள்ளாத ஒப்பந்தக் காரர்களுக்கு ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்பட மாட்டா.

கட்டுத் தொகை சலான் வடிவிலும், ஷெட்யூல்டு பாங்குகளின் "கால் டிபாசிட்" தொகை வடிவிலும் ஏற்றுக் கொள்ளப்படும். அரசு புரோநோட்டுகள், மாநில மின்சார வாரிய பாண்டுகள், தேசியச் சேமிப்புப் பத்திரங்கள் ஆகியவை கட்டுத்தொகைக்காக, விற்பனை மதிப்பில் 5 சதம் குறைத்தோ அல்லது அடிப்படை மதிப்புக்கோ இதில் எது குறைவாக உள்ளதோ அந்த வகையில் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியின் காரண்டி மட்டுமே கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வடிவத்திலும் கட்டுத் தொகை ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புகின்றவர்கள் உரிய பிரிவில் பெரிய கட்டுமாண வேலைகளை மேற்கொள்ளுவதில் குறைந்த அளவு 3 ஆண்டு அனுபவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தையுமோ எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்க இயக்குநர், தொழில்நுட்பக் கல்வி, சென்னை-25 அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

இயக்குநர்,
தொழில் நுட்பக் கல்வி, சென்னை.

(த.30)

## ஒப்பந்தப் புள்ளி

எண் 65492/ஐ௵1/71,
நாள் 12-9-1971.

விண்ணமங்கலம் டான்சி தோல் பதனிடு தொழிற்சாலையில் உள்ள தோல் வகைகள் (Finished and crust leathers) அவை இருக்குமிடத்தில் உள்ள நிலைமையில் எடுத்துக்கொள்ள மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 19-10-1971 காலை 11-00 வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களையும் இதர விவரங்களையும், பொதுக் கண்காணிப்பாளர், டான்சிடானரி, விண்ணமங்கலம், மின்னூர் அஞ்சல், வட ஆர்க்காடு மாவட்டம் அவர்களிடம் ரூ.5·25 (ரூபாய் ஐந்து, காசுகள் இருபத்தி ஐந்து மட்டும்) ரொக்கமாகவோ மணியார்டர் மூலமோ செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"19-10-1971-ல் Finished and crust leathers வாங்குவதற்கு" என்று மேலே குறிப்பிட்டு ஒப்பந்தப் புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறைகளில் வைத்து, பொதுக் கண்காணிப்பாளர், டான்சி டானரி, விண்ணமங்கலம், மின்னூர் அஞ்சல், வட ஆர்க்காடு மாவட்டம் அவர்களுக்கு 19-10-1971 காலை 11-00 மணிக்குள் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் 19-10-1971 நண்பகல் 12-00 மணிக்கு, விண்ணமங்கலம் டான்சி பாக்டரியில் பிரிக்கப் படும்.

நிர்வாக இயக்குநர்.

(த.28)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு
### நெடுஞ்சாலை கிராமப்பொறியியல் பணித் துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை), திருச்சிராப்பள்ளி அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக் கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 20—10—1971 அன்று (புதன் கிழமை) பிற்பகல் 3-30 மணி (அலுவலக கடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தம் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| வேலையின் பெயர். | கட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி கிடைக்கும் விலாசம். |
|---|---|---|
| வேளாங்கண்ணி-வேதாரண்யம் சாலை கி.மீ. 24/4 (மைல் 15/2ல்) (ஹரிச்சந்திரா நதியில்) ஒரு பாலம் கட்டுதல். | 9,000 | கோட்டப் பொறியாளர் (நெகிப) நாகப்பட்டினம். |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம் கோட்டப்பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), நாகப்பட்டினம் விலாசத்திலிருந்து 5—10—1971 முதல் 19—10—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணய, பாரங்கள் ஷெட்யூல்கள், வரைபடங்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) நாகப்பட்டினம் அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத்தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகள் சமர்ப்பிக்கப்படும்பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன் பணவைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**அ. தேவப்பிரியம்,**
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப.)
திருச்சிராப்பள்ளி-12.

(த.43)

## ஒப்பந்தப் புள்ளி நீட்டிப்பு

### தமிழ்நாடு அரசு
### பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்: வட ஆர்க்காடு மாவட்டம் செங்கம் நகரில் 38 படுக்கை வசதி உள்ள புதிய அரசினர் மருத்துவ மனை கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்குக் கடைசித் தேதி 6-10-1971 வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 6-10-1971 மாலை 3-00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்கப்படும். அதே நாள் மாலை 3-15 மணிக்கு அவை பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 20-9-1971 லிருந்து 4-10-1971 வரை விற்பனைக்குக் கிடைக்கும். மற்ற நிபந்தனைகளில் மாற்றம் எதுவும் இல்லை.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பொதுப்பணித் துறை,
செங்கற்பட்டு, வட ஆர்க்காடு வட்டம்.

(த.38)

## ஏல அறிவிப்பு.

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.

அசோக் நகர் திட்டத்தில் அசோகா தூண் அருகில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கடைகளைக் குத்தகைக்குப் பெறும் உரிமை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் துணை-தலைமை வருவாய்த் துறை அலுவலர் அவர்களால் 5-10-1971 அன்று காலை 10-00 மணிக்குக் கடைகள் உள்ள பகுதியில் ஏலம் விடப்படும்.

ஏலம் கோர விரும்புகிறவர் ஏலம் தொடங்குவதற்கு முன்பு ரூ. 50 கட்டுத் தொகை (செக்யூரிடி டெபாசிட்)கட்ட வேண்டும்.

மேற்கொண்டு விவரங்களைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மத்திய டிவிஷன் நிர்வாகப்பொறியாளர் மற்றும் தலைமை வருவாய்த்துறை அலுவலர் அவர்களிடமிருந்தும் பெறலாம்.

**ராஜதுரை,**
தலைமை வருவாய்த் துறை அலுவலர்.

35, அண்ணா சாலை,
சென்னை-35,
நாள்: 9-9-1971.
(த.39)

## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.

கீழே குறிப்பிடப்பட்ட பகுதிகளில் மத்திய வருமானமுள்ளவர்கள், குறைந்த வருமானம் உள்ளவர்கள், மிகக் குறைந்த வருமானமுள்ளவர்களுக்கான குடியிருப்புகள் (Flats) ஒதுக்கீடு செய்ய விண்ணப்ப மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

| எண். | திட்டத்தின் பெயர், பகுதி. | தற்காலிக விலை மதிப்பீடு. | ஒதுக்கீடு முறை. | மனுச் செய்யத் தகுதியான ஆண்டு வருவாய். |
|---|---|---|---|---|
| 1 | மத்திய வருமானக்காரர்களுக்கான (M.I.G.) குடியிருப்புக்கள் (2 படுக்கை அறை வசதி) அண்ணா நகர்—பிரிவு 2 (ஆவடி ரோடு அருகே) உடனே குடியேறுவதற்குத் தயாராகவுள்ளன. குடியிருப்புகள் எண் : கே. 44 ; எல். 47, எம். 50, எம். 51, என். 56, ஓ. 59. பி. 64. | ரூ. 23,000 முன்வைப்புத் தொகை. | முழுத் தொகைக்கு வாங்குதல்—வைப்புத் தொகை ரூ. 750+ மொத்த விலையில் கால் பங்கு. மீதித் தொகை குடியிருப்பு ஒதுக்கப்பட்ட பத்து வாரங்களில் கட்டப்பட வேண்டும். | ரூ. 7,200-க்கும் ரூ. 18,000-க்கும் மத்தியில். |
| 2 | ம.வ.கு. (M.I.G.) (2 படுக்கை அறை வசதி). அண்ணா நகர்—பிரிவு 3 (அரும்பாக்கம் அருகே). குடியிருப்பு எண்கள் எம். 13-3, எம். 15-2, எம். 15-4. | ரூ. 23,000 முன்வைப்புத் தொகை. | ஷை | ஷை |
| 3 | ம.வ.கு. (M.I.G.) (2 படுக்கை அறை வசதி). இந்திரா நகர் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. | ரூ. 28,000 முன்வைப்புத் தொகை. | தவணை/முழுத் தொகை வழங்குதல். வைப்புத் தொகை ரூ. 750+ மொத்த விலையில் கால் பங்கு. | ஷை |
| 4 | கு.வ.கு. (L.I.G.) (ஒரு படுக்கை அறை வசதி.) டர்ன்புல்ஸ் ரோடு. | ரூ. 18,500 முன்வைப்புத் தொகை. | தவணை/முழுத்தொகை ரூ. 500+ விலையில் கால் பங்கு. | ரூ.7,200-க்கு அதிகம் இருக்கக் கூடாது. |
| 5 | மிகக் குறைந்த வ.கு. ( Small L.I.G. ) பெசந்த் நகர், கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. | ரூ. 14,000 முன்வைப்புத் தொகை. | தவணை/முழுத்தொகை ரூ. 250+ விலையில் கால் பங்கு. | ஷை |
| 6 | மிகக் கு.வ.கு. கலைஞர் கருணாநிதி நகர். (கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.) | ரூ. 14,000. | தவணை/முழுத்தொகை ரூ. 250+ விலையில் கால் பங்கு. | ஷை |

தவணை மற்றும் மொத்தத் தொகைக்கு வாங்குதல் என்று குறிப்பிடப்பட்ட குடியிருப்புகளில், மொத்தத் தொகை கட்டுபவர்களுக்கே ஒதுக்கீட்டில் முக்கியத்துவம் தரப்படும்.

நந்தனத்திலுள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அலுவலகத்திலுள்ள காசுப் பிரிவில் ரூ. 5 கட்டி எல்லா அலுவலக நாட்களிலும் காலை 10 முதல் நண்பகல் 2-30 வரை படிவத்தினைப் பெறலாம். அந்தக் குறிப்பிட்ட படிவத்தில் மனுதாரர்கள் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் மனுக்கள் வந்து சேரவேண்டிய கடைசித் தேதி 1971 அக்டோபர் 25 ஆகும்.

36, அண்ணா சாலை,
சென்னை-35.

ஏ. கிட்சனன்,
செயலாளர்.

(ந. 18)



1-10—12

# தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியம்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைகளுக்காக உறையின் மீது வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் குறிப்பிடப்பட்டு, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து நிர்வாகப் பொறியாளர், குடிசைப் பகுதி மாற்று வாரியம், டிவிஷன் IV அவர்களால், அசோக் நகர், (அசோகா தூண் அருகில்), சென்னை-33 அவரது அலுவலகத்தில் 6—10—1971 மாலை 3-00 வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| வரிசை எண். | வேலையின் பெயர். | வேலையின் சுமார் மதிப்பு ரூபாய். | ஒப்பந்த வடிவம் கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (இது திருப்பித் தரப்பட மாட்டாது). | வேலையை முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|---|
| I | ஒன்றில் 24 (பி 1 & பி. 2) இரண்டு பிளாக்குகள் ஒன்றில் 32 (ஏ1) ஒரு பிளாக் ஓர் அறை நான்கு தள குடியிருப்புகளை நுங்கம்பாக்கம் மேயர் சம்பந்தம் நகரில் டைப் டிசைன் 217/70 படி கட்டுதல். | 4,43,800 | L.S. / 6,600 | ரூ. 15 அத்துடன் விற்பனை வரி ஒவ்வொன்றிற்கும். | எட்டு மாதங்கள் ஒவ்வொன்றிற்கும். |
| II | ஒன்றில் 32, நான்கு பிளாக்குகள் (ஏ2, ஏ3, ஏ4, ஏ5) ஓர் அறை, நான்கு தள குடியிருப்புகளை, நுங்கம்பாக்கம் மேயர் சம்பந்தம் நகரில் டைப் டிசைன் 217/70 படி கட்டுதல். | 7,10,000 | L. S. / 10,650 | ,, | ,, |
| III | ஒன்றில் 32, நான்கு பிளாக்குகள் (ஏ6, ஏ7, ஏ8, ஏ9) ஓர் அறை நான்கு தள குடியிருப்புகளை நுங்கம்பாக்கம் மேயர் சம்பந்தம் நகரில் டைப் டிசைன் 217/70 படி கட்டுதல். | 7,10,000 | L. S. / 10,650 | ,, | ,, |
| IV | ஒன்றில் 18, நான்கு பிளாக்குகள் (பி-1, பி-2, பி-3, பி-4) ஓர் அறை மூன்று தள குடியிருப்புகளை டைப் டிசைன் 7-71 படி ராமகாமத்புரத்தில் ராமகாமத்புரம் திட்டத்தில் கட்டுதல். | 4,51,400 | L. S. / 6,780 | ,, | ,, |
| V | ஒன்றில் 32, இரண்டு பிளாக்குகள் 1 டைப், ஓர் அறை நான்கு தள குடியிருப்புகள் டி. எஸ். எண் 4700, டைப் டிசைன் 7-71 படி, தியாகராயநகர் ராமகிருஷ்ணபுரம் திட்டம் பகுதி I (கோடம்பாக்கம் ரயில் நிலையத்துக்கு எதிர்ப்புறம்) கட்டுதல். | 3,27,700 | L. S. / 4,920 | ,, | ,, |
| VI | ஒன்றில் 32, இரண்டு பிளாக்குகள், ஓர் அறை, நான்கு தள குடியிருப்புகள், வரைபடம் எண் டைப் டிசைன் 7-71 படி தியாகராயநகர் | 3,27,700 | L. S. / 4,900 | ,, | ,, |

ராமகிருஷ்ணு மிஷன் நிலத்தில்/பிரிவின் டி. எஸ். எண் 7993 (வடக்கு உஸ்மான் ரோடு) கட்டுதல்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், (குடிசைப் பகுதி மாற்று வாரியம்) டிவிஷன் IV அசோக் நகர், சென்னை-33-ல் 23-9-1971-லிருந்து எல்லா அலுவல் நாட்களிலும் முற்பகல் 11 மணியிலிருந்து முற்பகல் 3 மணி வரை பெறலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் அத்துடன் விற்பனை வரி செலுத்தியதற்குச் சலான் ரசீது காட்டி அவற்றைப் பெறலாம்.

எவ்விதக் காரணமும் கூறுமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்க உரிமை உண்டு.

அசோக் நகர், சென்னை-33,
8-9-1971.

**எஸ். மாரியப்பன்,**
நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், அசோக் நகர், சென்னை-33
டிவிஷன் எண் IV.

(த-10)

---

## வேலை வாய்ப்பு

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்.

கீழ்க்கண்ட பதவிகளுக்கான மனுக்கள் 16—11—1971 அன்று மாலை 5-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன .

தொழிற் பயிற்சி நிலையங்கள், தமிழ்நாடு தொழில் சார் நிலைப்பள்ளி ஆகியவற்றில், விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சிப் போதகருக்கான தற்காலிகப் பதவிகள்—4 நியமனங்கள்.

குறிப்பு : நான்கு நியமனங்களிலும் ஒன்று பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள நியமனங்களுக்குப் பெண்களும் மனுச் செய்யத் தகுதிபடைத்தவர்களாவர்.

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூபாய் 275—10—375—15—450.

வயது : 1—7—1971-ல் 35 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

தகுதி : 1. பல்கலைக்கழக மானியக் குழுவினுல் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக் கழகம் அல்லது நிறுவனத்தில் உடற் கல்வி டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

உடற்கல்வி (மேல்நிலை) ஆசிரியர் சான்றிதழ் பெற்று ஓர் ஆண்டுக் காலத்திற்குக் குறையாமல் கற்பித்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

2. கல்லூரிப் படிப்பிற்குத் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

குறைந்த பட்சப் பொதுக் கல்வித் தகுதியிலும் மேற்பட்ட பொதுத் கல்வித் தகுதி பெற்றுள்ள தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. இதர தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி வகுப்பினருக்கு உச்ச வயது 5 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு உத்தரவினுல் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அவர்களுடைய புதல்வர்கள், திருமணமாகாத அவர்களின் புதல்விகள், மற்றும் தேசீய மாணவர் படையில் 1—1—1963-ல் அல்லது அதற்குப் பின்னர் முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார் ஜென்ட் மேஜராக அமர்த்தப்பட்டிருந்த முன்னுள் தேசீய மாணவர் படையினர் ஆகியோருக்கு வயது வரம்பில் சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, வீமானப்படை ஆகியவற்றிலிருந்து படை கலைக்கப்பட்டதால் திரும்பியவர்கள் 1—7—1971-ல் 40 வயதுக்குட்பட்டவர்களாக இருப்பார்களேயானுலும், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 1—1—1964-ல் அல்லது அதற்குப் பின்னர் குடி பெயர்ந்தவர்களாக இருப்பினும், இலங்கை, பர்மா, ஆகியவற்றிலிருந்து திருப்பி அனுப்பப் பட்டவர்களாக இருப்பினும், வயது வரம்பு உட்படத் தகுதிகள் தளர்த்தப்படும். மனு வடிவங்களையும், இதர விவரங்களையும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவியின் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 சென்டி மீட்டர் நீளமுள்ள சுய விலாசமிட்ட 35 காசு அஞ்சல் தலை ஒட்டிய '' நூல் அஞ்சல் '' என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 44)

## தமிழ்நாடு அரசு

### நில நீர் இயக்குநர் அலுவலகம்

ஒப்பந்தப்புள்ளி—காலநீடிப்பு—அறிக்கை.

வேலையின் பெயர்—நிலநீர் இயக்குநர் அலுவலகத்திற்குத் தளவாடங்கள் வழங்கல்.

கீழ்க்கண்ட வேலைகளுக்காக, நிலநீர் இயக்குநர், சென்னை-4 அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் 30—9—1971 அன்று வரை பெறுவதாக இருந்த ஒப்பந்தப்புள்ளிகள், 29—10—1971 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் 29—10—1971 அன்று மாலை 4-00 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள், மேற்கூறிய அலுவலகத்தில், அலுவலக நேரங்களில், 22—10—1971 வரை கிடைக்கும். மற்ற நிபந்தனைகள் எதுவும் மாற்றப்படவில்லை.

**எண்.** உள்வேலை.

1. பெர்கூசன் ரிக்குகளுக்கு ( Rigs. ) சிறப்புக்கருவிகள் வழங்கல்.

2. (1) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் (துண்டுகள் மற்றும் துணைத் திறப்பான்கள்) வழங்கல்.
   (2) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் (மட் பம்பு மற்றும் குழாய் வெட்டும் கருவி) வழங்கல்.
   (3) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் (டவுன்தி ஹோல் ஹேமர்ஸ் பிட்டுகள்) வழங்கல்.

3. கேசிங் பைப்புகள், துணைப் பொருள்கள் வழங்கல்.
4. ஹைடிராலிக் ஜாக் பம்பு, ஜாக் வழங்கல்.
5. ஜியோபிசிகல் தளவாடங்கள் வழங்கல்.
6. ஜியோ கெமிகல் தளவாடங்கள் வழங்கல்.
7. போட்டோ ஜியாலஜிகல் தளவாடங்கள் வழங்கல்.
8. ஹைடிரோலாஜிகல் தளவாடங்கள் வழங்கல்
9. ஹைடிரோ மீட்டிரியாலஜிகல் தளவாடங்கள் வழங்கல்.
10. ஹைடிரோ ஜியாலாஜிகல் தளவாடங்கள் வழங்கல்.
11. வரை தளவாடங்களும் புகைப்படக் கருவியும் வழங்கல்.

**இயக்குநர்,**
நிலநீர்.

(த.82)

---

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

அறிவிப்பு எண் : 14166/டி8/72. நாள் :17—9—1971

சென்னை, நேப்பியர் பாலத்திற்குக் கிழே கூவம் ஆற்றின் வலது கரையில் நீச்சல் குளம், டைவிங் குளம் ஆகியவைகளில் இயக்கி வைத்தல் உள்பட, எல்லா உறுப்புகள், துணை உறுப்புகளுடன் நீர் வடிகட்டு இயந்திரம் வழங்கல், நிர்மாண வேலைக்காகத் தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் உரிய வடிவத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், மேற்பார்வைப் பொறியாளர் பொதுப் பணித்துறை வீராணம் திட்ட வட்டம் சேப்பாக்கம், சென்னை—5 அவர்களால், பொதுப் பணித்துறையில் உரிய பிரிவில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்நக்காரர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—கே 2.

கட்டுத் தொகை—ரூ. 5,000

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 10-இத்துடன் நடை முறையில் உள்ள விற்பனை வரி.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—4 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் காலம்—10—10—1971 லிருந்து 21—10—1971 வரை.

ஒப்பந்தப்புள்ளித் தேதி—26—10—1971 மாலை 3-00 மணி வரை.

நிபந்தனைகள், வரையறைகள், மற்றும் இதர விவரங்களைக் கிழே கையொப்பமிட்டிருப்பவரின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெறலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்.**
TWS & DB
வீராணம் திட்ட வட்டம், சென்னை-5.

(த.72)

## ஒப்பந்தப் புள்ளி

# திருச்சி வீட்டு வசதி நிலையம்

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினுடையது)

ஒப்பந்தப் புள்ளி அறிக்கை எண் 43/71-72.

திருச்சி, காஜாமலைக் காலனியில், கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளை மேற்கொள்வதற்காக உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயரும் குறிப்பிட்டு, 27—10—1971 அன்று மாலை 3 மணிக்குள் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்குக் கிடைக்குமாறு தனித்தனி மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வேலையின் பெயர். | வேலையின் தோராய மதிப்பு. | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை. |
|---|---|---|---|
| | ரூபாய். | ரூபாய். | |
| டி.டி.எண் 151/70-ன் படி, மூன்று மாடி (1-ல் 12) வாடகைப் பிளாட்டுகள் கட்டுதல். | 1,28,200 | 1,930 | ரூபாய் 10 விற்பனை வரி $3\frac{1}{2}$ சதவீதம். |
| டீ.எச்யூ.எண் 9/71-ன் படி மூன்று மாடி (1-ல் 12) வாடகைப் பிளாட்டுகள் கட்டுதல். | 77,000 | 1,555 | ஷை |
| ஷை | 77,000 | 1,555 | ஷை |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை, கோட்டக் கணக்காளர் அவர்களிடமிருந்து, எல்லா அலுவலக நாட்களிலும் காலை 11-00 மணிக்கும் மாலை 4-00 மணிக்கும் இடையில் மேற்கூறப்பட்ட தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் அஞ்சல் மூலமாக அனுப்பப்படவேண்டுமானால், அஞ்சல் கட்டணத்தையும் செலுத்த வேண்டும். ஒப்பந்தப் புள்ளி அட்டவணைகள் 27—9—1971 முதல் 26—10—1971 வரை விற்பனைக்குக் கிடைக்கும். வந்து சேர்ந்த ஒப்பந்தப் புள்ளிகள், நிருவாகப் பொறியாளர், திருச்சி வீட்டுவசதி நிலையம் அவர்களால் 27—10—1971 அன்று, வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

சர்க்யூட் ஹவுஸ் ரோடு,
திருச்சிராப்பள்ளி-1,
14—9—1971.

ஆர். வெங்கடாச்சார்.
நிருவாகப் பொறியாளர் மற்றும் நிருவாக அலுவலர்.

(த-67)

## தமிழ்நாடு அரசு.

## குடிநீர் வடிகால் வாரியம்.

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி.

அறிவிப்பு எண் : 317/டி2/71 டி2.

நாள் :15—9—1971

இறக்குமதியான உருக்கை, சென்னைத் துறைமுகத்திலிருந்து தென் ஆர்க்காடு மாவட்டம் பண்ருட்டி அருகே பணிக்குப்பம் வீராணம் திட்ட பாக்டரிப் பகுதிக்குக் கொண்டு செல்லும் வேலைக்காகத் தமிழ்நாடு. ஆளுநர் சார்பிலும்அவர் பொருட்டும் முடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (உரிய வடிவங்களில்), மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை வீராணம் திட்ட சர்க்கிள், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் பொதுப் பணித் துறையில் செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் உரிய பிரிவினரிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—கே 2

கட்டுத் தொகை—ரூ. 5,500.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 10-இத்துடன் விற்பனை வரி.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் காலம்—5—10—1971லிருந்து 25—10—1971 வரை.

ஒப்பந்தப் புள்ளித் தேதி—30—10—1971

நிபந்தனைகள், இதர விவரங்களைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
T.W.S. & D.B.
வீராணம் திட்ட வட்டம், சென்னை-5.

(த,57)

## தமிழ்நாடு அரசு

## பொதுப்பணித் துறை

### சீட்டு ஒப்பந்த அறிக்கை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை தஞ்சாவூர் வட்ட மேற் பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 15—10—1971 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்—தஞ்சாவூரில் மன்னர் சரபோஜி அரசினர் கலைக் கல்லூரிக்கான மேல்நிலைப்பட்டப் படிப்பிற்கான கட்டடங்கள் கட்டுதல்.

2. ஒப்பந்த வகை—மொத்தத் தொகை.

3. பிணைப்பணம்—ரூ. 4,300

4. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை: ரூ 30.

அரசினர் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் பொ. ப. செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகை எனும் தலைப்பில் செயற்பொறியாளர் கல்லணைக்கால்வாய் தஞ்சாவூர் அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்.

5. விற்பனை வரி: ரூ. 1·05

அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் விற்பனை வரி : " பி " பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி எனும் தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.

6. கால அளவு—ஒன்பது மாதங்கள்.

7. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள் 24—9—1971

**ஆர். வேணுகோபால்,**
மேற்பார்வைப் பொறியாளர்.
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த.36)

## மின் இணைப்புச் செய்ய....

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்கான அரக்கு மூத்திரை யிட்ட ஒப்பந்தங்கள் மாநிலத் துறைமுக அலுவலர், சென்னை அவர்களால், சென்னை-1, முதல் கடற்கரைச் சாலை, பழைய உயர் நீதி மன்ற கட்டடத்தில் உள்ள அவருடைய அலுவலகத்தில் 15—10—71 மாலை 3 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினம் மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் :

'' இராமேஸ்வரம் துறை முகத்தில் பயணிகள் நிலையத் திற்கு மின் இணைப்பு செய்தல்'

ஒப்பந்தப் பத்திரம் வேண்டு வோர் செட் ஒன்றுக்கு ரூ. 7·25 (ரூபாய் ஏழு, காசு இருபத்து ஐந்து மட்டும்) (திருப்பி அளிக்கப் பட மாட்டாது) செலுத்தி மாநிலத் துறைமுக அலுவலர், சென்னை அவர்களுக்கு மனுச் செய்து பெற்றுக் கொள்ளலாம். மேற்படி வேலைக்கு முன் வைப் புத் தொகை மற்றும் செக் யூரிட்டி டிபாசிட் ஒவ்வொன்றிற் கும் ரூ. 400 (ரூபாய் நானூறு மட்டும்). ஒப்பந்தப் பத்திரங் கள் 12—10—71 வரை மட்டுமே வழங்கப்படும்.

**எல். ஜி. ஹர்தாஸ்,**

மாநில துறைமுக அலுவலர்.

(த. 88)

---

## கால்நடைத் தீவனம்.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஒசூர் மாவட்ட கால்நடைப் பண்ணை குஞ்சு பொரிப்பு அலு வலர் உடன் கண்காணிப்பாளர் அவர்களால் 11—10—71 அன்று மாலை 4-00 மணி வரையில் மேற்படி பண்ணைக்கு இரண்டு மாதத்திற்கான கால்நடைத் தீவனங்களுக்கு உரிய முத்திரை யிடப்பட்ட கொட்டேஷன் வர வேற்கப்படுகின்றன. முத்திரை யிடப்பட்ட கொட்டேஷன்கள் 11—10—71 அன்று மாலை 4-00 மணிக்கு மேல் குஞ்சு பொரிப்பு அலுவலர் உடன் கண்காணிப்பாளரால் திறக்கப் படும்.

நிபந்தனை முதலானவை குஞ்சு பொரிப்பு அலுவலர் உடன் கண்காணிப்பாளர் அவர்களிட மிருந்து விண்ணப்பித்துப் பெற் றுக் கொள்ளவும்.

**கண்காணிப்பாளர்,**

மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒசூர்.

(த. 86)

---

## தமிழ்நாடு அரசு,

## தொழில் வணிகத் துறை

எண் 170 66/டிபி/டி6/கியூ/71.

நாள் 16—9—1971

நார்த் லைட் வயர்டு கிளாசஸ் 6 எம். எம். ($\frac{1}{4}$") கனத்தில் வழங் குவதற்காக, தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், மேற் பார்வைப் பொறியாளர் (சி) தொழில்துறை அவர்களால்தமது அலுவலகம் 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2-ல் 4—10—1971 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அதே நாளில் மாலை 3-10 மணிக்கும் பிரிக்கப் படும்.

தேவைப்படும் பொருள் அளவு சுமார் : 830 சதுர மீ.

கட்டுத் தொகை : ரூ. 625.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங் களை, நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் (சி) வடக்கு டிவிஷன் தொழில் வணிகத் துறை, தொழில் பேட்டை, கிண்டி, சென்னை-32-ல் 20—9—1971 லிருந்து அலுவலக நாட்களில் காலை 10-30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**சி. பி. மாத்யூ,**

மேற்பார்வைப் பொறியாளர், நிர்மாணப் பிரிவு.

16—9—71

(ந.64)

---

## தமிழ்நாடு சிறு தொழில் கழகம்.

35—2, உட்ஸ் ரோடு, அண்ணா சாலை, சென்னை-2.

ஆர்.சி. எண் 15636—டி3—71, தேதி : 1—9—1971

கும்பகோணம், டான்சி இரும்பு-பித்தளைக் கூடத்திலுள்ள F-5, & F-8. Man Section's வாங்குவதற்கு மூடி முத்திரை யிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15-10-1971 மாலை 3 மணிவரை யில் வரவேற்கப் படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களும் பிற தகவல்களும் இந்த அலு வலகத்தில் ரூ. 5·25-ஐக் கொடுத்தோ அல்லது கணக்கு அலுவலர் (காசு), தமிழ்நாடு சிறு தொழிற் கழகம், 35—2 உட்ஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை-2 என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப் பியோ பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளியின் மீது F-5, & F-8. Man Section's 15—10—1971 விலைக்கு வாங்க என்று குறிப்பிட்டு மூடி முத்தி ரையிட்ட உறையிட்டு, நிருவாக இயக்குநர், தமிழ்நாடு சிறு தொழிற் கழகம், 35—2, உட்ஸ் ரோடு, சென்னை-2 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் 15—10—1971 மாலை 4 மணிக் குப் பிரிக்கப்படும்.

**நிருவாக இயக்குநர்**

(த. 9)—

**6 சத தமிழ்நாடு மின்சார வாரியக் கடன், 1983.**

(2-ம் தொடர்) ரூபாய் 600 இலட்சத்திற்கு.

(வட்டி வழங்குதலும், அசலைத் திருப்பி அளித்தலும் தமிழ்நாடு அரசால் உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது).

கடன் பத்திரங்கள் இந்திய ட்ரஸ்ட் சட்டத்தின் கீழ், நம்பிக்கைக்குரிய பத்திரங்களாகும். மேலும், இவைகள் இன்ஷ்யூரன்ஸ் சட்டம், பேங்கிங் கம்பெனிகள் சட்டம் ஆகியவைகளைப் பொறுத்தவரையில் அனுமதிக்கப்பட்ட பத்திரங்களாகும். இப் பத்திரங்கள் இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1934, பிரிவு 17 (4) (ஏ)-ன் கீழ் முன் பணம் பெறும் காரணத்திற்கு அரசுப் பத்திரங்களைப் போலவே பாவிக்கப்படும்.

வெளியீட்டு விலை : ரூபாய் 99·75 சதவிகிதம்.

**1983ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் மீட்கக் கூடியவை.**

ரொக்கமாகவோ, அல்லது காசோலையாகவோ அல்லது 1971-ஆம் ஆண்டு 4½ சத சென்னை மாநில மின்சார வாரிய பாண்டு ஆகவோ, 1971-ஆம் ஆண்டு அக்டோபர் 16-ஆம் நாள் முதல் ஏற்றுக் கொள்ளப்படும். மொத்தப் பங்குத் தொகை சுமார் ரூ. 600 இலட்சம் ஆகியவுடன், முன்னறிவிப்பு இன்றிக் கடன் பட்டியல் நிறுத்தப்படும். எப்படியும் பங்குத் தொகை பெறுவது 1971 அக்டோபர் 21-ஆம் நாள் அலுவல் நேர முடிவுக்குள் நிறுத்தப்படும்.

கடன் மனுக்கள் சென்னை, பம்பாய், கல்கத்தா, ஐதராபாத் ஆகிய இடங்களிலுள்ள இந்திய ஸ்டேட் பாங்கின் உள்ளூர் தலைமை அலுவலகங்களிலும், தமிழ் நாட்டிலுள்ள ஸ்டேட் பாங்கின் கிளைகளிலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

கடன் பத்திர வெளியீட்டின் நிபந்தனைகள் சம்பந்தப்பட்ட அறிவிப்பின் நகல்களும் மனு வடிவங்களும், மேலே குறிப்பிட்டுள்ள எல்லா அலுவலகங்களிலும், தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கருவூலங்களிலும், துணைக் கருவூலங்களிலும், தமிழ் நாடு மின்சார வாரியத்தின் எல்லா அலுவலகங்களிலும் கிடைக்கும்.

**சி. ஜி. ரங்கபாஷ்யம்,**
**தலைவர்,**
தமிழ்நாடு மின்சார வாரியம்.

(த. 40)

---

## ஒப்பந்தப் புள்ளி

---

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

**ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கான கடைசித் தேதி நீட்டிப்பு.**

**பொருள்: பல்வேறு குடிநீர்த் திட்டங்களுக்கான கிணறுகள் அமைத்தல்.**

இதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்குக் கடைசித் தேதி 20—10—1971 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 20—10—1971 மாலை 3 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும் ; அன்று மாலை 3-30 மணிக்குச் சம்பந்தப்பட்ட வட்டங்களைச் சேர்ந்த மேற்பார்வைப் பொறியாளர்களால் (மக்கள் நல்வாழ்வுப் பொறியியல்) அல்லது அவரால் அனுப்பப்படும் அலுவலரால் அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

பிற நிபந்தனைகள் அனைத்தும் ஏற்கனவே வெளியிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பினின்று மாறுபடவில்லை.

**தலைமைப் பொறியாளர்**
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் மற்றும் நீர்த் திட்டப் பணிகள்.

(த 84)

---

## ஏல விற்பனை

---

## தமிழ் நாடு அரசு

## வேளாண்மைத் துறை.

ஒரு செவர்லட் லாரி (எம். எஸ். சி. 9656) 1945 மாடல் 11-10-1971 அன்று மாலை 3 மணிக்கு உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களால் 34, தொரபாடி ரோடு, வேலூர்-2ல் பகிரங்க ஏலம் மூலம் விற்கப்படும்.

அலுவலக நாட்களில் அலுவல் நேரத்தில் மேற்கண்ட இடத்தில் வண்டியைப் பார்வையிடலாம்.

அரசின் நலன் கருதி, ஏலத்திலிருந்து பின்வாங்கவோ, ஒத்தி வைக்கவோ, ஏலத்தை ரத்து செய்யவோ, வேளாண்மைத் துறைக்கு உரிமை உண்டு.

மேற்கொண்டு விவரங்களையும் விற்பனை நிபந்தனைகளையும், உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு), வேலூர்-2 அவர்களிடமிருந்து பெறலாம்.

**வேளாண்மைத் துறை இயக்குநர்.**
சென்னை-5.

---

## ஏல விற்பனை

---

பயனற்றதாக ஒதுக்கப்பட்ட ஜீப் எண்: எம்.எஸ்.எக்ஸ்.: 2768 பத்மநாபபுரம் வருவாய் கோட்ட அலுவலர் (ஆர்.டி.ஓ.) அலுவலகத்தில் 15—10—1971 அன்று 11 மணிக்குப் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும். ஜீப் பற்றிய விவரம் பின்வருமாறு :

1. இயந்திர எண் 4 ஜே. 201012.
2. சேசிஸ் எண். 45536.
3. தயாரிப்பு ஆண்டு 1958.
4. மாதிரி சி.ஜே. 3, வில்லீஸ்-58.
5. ஓடிய மைல்கள் 17,00,45

**வருவாய்க் கோட்ட அலுவலர்,**
**பத்மநாபபுரம்.**

(த 83)

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

### சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் துறை, தமிழ் நாடு குடிநீர்-வடிகால் வாரியம், பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை மற்றும் அரசின் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து குறிப்பிட்ட படிவத்திலுள்ள மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளரால் (ம. ந. வாழ்வு பொறியியல்) 17. சர். பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2-ல் உள்ள அவரது அலுவலகத்தில் 13—10—1971 புதன்கிழமை மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகிறது. அவை அன்று மாலை 3-30 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| | |
|---|---|
| வேலையின் பெயர் .. .. | புஞ்சை புகலூர் குடிநீர் வழங்கு திட்டம்—முதல் நிலை—4 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்மட்ட நீர்த் தேக்கம் கட்டுவதற்கு. |
| ஒப்பந்த முறை .. .. | மொத்தத் தொகை. |
| முன்வைப்புத் தொகை .. | ரூ. 2,900 (இரண்டாயிரத்துத் தொள்ளாயிரம் மட்டும்). |
| வேலை முடிக்க வேண்டிய காலம்: | ஆறு மாதம். |
| ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை | ரூ. 10·35 (விற்பனை வரி உட்பட). |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர், பொதுப் பணிப் பொறியியல் பிரிவு, பி-15, தில்லை நகர் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் கிடைக்கும். (8—10—1971 வெள்ளிக்கிழமை மாலை 5 மணி வரை.)

**கே. கோவிந்தமேனன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
(ம.ந.வா.பொ.), மதுரை—2.

(த. 11)

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் மக்கள் நல் வாழ்வுப் பொறியியல்துறை, தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இது போன்ற வேறு அரசு துறைகளில் உரிய பிரிவில் பதிவு செய்துகொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர் (ம.ந.வா.பொ.) அவர்களால் எண் 17. சர். பி. டி. ராஜன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 20—10—1971 (புதன்) மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் துறைக்குரிய வடிவத்தில் வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாள் மாலை 3-30 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | |
|---|---|
| வேலையின் பெயர் .. | மதுரை புதைச் சாக்கடைத் திட்டம் வைகை—ஆற்றுக்கு வடக்கே—முதல் கட்டம்—700 எம்.எம். நடுவிட்டமுள்ள ஜி. ஐ. பைப்புகள், ஸ்பெஷல்கள் பம்பிங் மெயினுக்காக எல். எஸ். டு எல்.எஸ்.—7,850. |
| ஒப்பந்த வடிவம் .. | மொத்தத் தொகை. |
| கட்டுத் தொகை .. | ரூ. 4,500 (ரூபாய் நாலாயிரத்து ஐநூறு மட்டும்). |

இந்தத் தொகையை ஒப்பந்தப் புள்ளியுடன் கருவூலச் சலான் வடிவிலோ அல்லது டிமாண்ட் டிராபடாகவோ அல்லது தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் காரண்டியாகவோ, நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் கோட்டம், மதுரை அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| வேலையை முடிக்க வேண்டிய காலம். | ...ஒன்பது மாதங்கள். |
| ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை. | ரூ. 10·35 (விற்பனை வரி உள்பட). |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை 14, ராமமூர்த்தி சாலை, மதுரை என்ற முகவரியில் உள்ள நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் கோட்டம், அவர்களிடமிருந்து 16—10—1971 மாலை 5 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**கே. கோவிந்தமேனன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
(ம.ந.வா.பொ.), மதுரை-2.

13—9—1971.
(த. 69)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகம்

**கட்டுமானங்கள் பிரிவு, கிண்டி, சென்னை-25**

**வேலையின் பெயர்**

வேலை எண் 1 .. மதுரை-தேனி சாலையில் உள்ள மதுரைப் பல்கலைக் கழகத்தில், மதுரைப் பல்கலைக் கழகத்தின் 2 பேராசிரியர்களுக்கும், 2 விரிவுரையாளர்களுக்கும், 9 கடைநிலைப்பணி ஊழியர்களுக்கும் இருப்பிடம் (Quarters) கட்டுதல்.

வேலை எண் 2 .. மதுரை-தேனி சாலையில் உள்ள மதுரைப் பல்கலைக் கழகத்தில் மானிடவியல் கட்டடம் (Humanities Block) கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்குறிப்பிட்ட வேலைகளை மேற்கொள்வதற்காக, தொழில் நுட்பக் கல்வி கோட்டத்தில் வேலைகளைச் செய்வதற்காக உரிய வகுப்பில் பதிவு செய்து கொண்டுள்ள வகுப்பு-2ம் அதற்கு மேற்பட்ட வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் 11—10—1971 அன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் மேற்கூறிய அலுவலகத்தில் அதே நாள் மாலை 3-30 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் திறக்கப்படும்.

| | வேலை எண் 1. | வேலை எண் 2. |
|---|---|---|
| 1. ஒப்பந்த வடிவம் .. | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை. |
| | ரூ. | ரூ. |
| 2. கட்டுத் தொகை .. | 7,500 | 10,500 |
| 3. மாதிரி வரை படத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை. | 20·00+ விற்பனை வரி. | 20·00+ விற்பனை வரி. |
| 4. வேலையை முடிக்க வேண்டிய காலம். | 8 மாதங்கள். | 10 மாதங்கள் |
| 5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்கூறிய அலுவலகத்தில், அலுவல் நேரத்தில் கிடைக்கும் தேதிகள். | 1—10—71 முதல் 8—10—71 வரை. | 1—10—71 முதல் 8—10—71 வரை. |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ " P. W. Remittances III other Remittances " என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், பல்கலைக்கழகக் கட்டடங்கள் கோட்டம், மதுரை அவர்கள் கணக்கில் செலுத்த வேண்டும். விற்பனை வரியை தனிச் சலானில் அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ " XII Sales Tax (b) Receipt under States Sates Tax Act–General Sales Tax" என்ற தலைப்பில் செலுத்த வேண்டும். ஒப்பந்த அட்டவணை வேண்டுமென்ற வேண்டுகோள் கடிதத்துடன் சலான்களை இணைத்து ஒப்படைத்த பின்பே ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும். சென்னை, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகக் கட்டுமானப் பிரிவில், உரிய வகுப்பில் பதிவு செய்து கொள்ளாத ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

கட்டுத் தொகை சலான் வடிவிலும், ஷெட்யூல்டு வங்கிகளின் 'கால்டிபாசிட்' ரசீது வடிவிலும், ஏற்றுக் கொள்ளப்படும். அரசு புரோ நோட்டுகள் மாநில மின்சார வாரிய பாண்டுகள், தேசிய சேமிப்புப் பத்திரங்கள் ஆகியவை கட்டுத் தொகைக்காக, விற்பனை மதிப்பில் 5 சதம் குறைத்தோ அல்லது அடிப்படை மதிப்புக்கோ, இதில் எது குறைவாக உள்ளதோ அந்த வகையில் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியின் காரண்டி மட்டுமே கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வடிவத்திலும் கட்டுத்தொகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புகின்றவர்கள் உரிய வகுப்பில் பெரிய கட்டுமான வேலைகளைச் செய்வதில் குறைந்த அளவு 3 ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும். எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையுமோ எவ்விதக் காரணமும் கூறாமல் நிராகரிக்க தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

**தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை.**

(த. 13)

## ஒப்பந்தப் புள்ளி

# தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

## கொரட்டூர் கோட்டம்

**கே. ஆர். 6/3072/71 நாள் 9—9—1971.**

கொரட்டூர் புறநகர், 1-வது கட்ட திட்ட வேலைகளில் கீழ்க்கண்ட வேலைகளுக்காக உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயரும் குறிப்பிட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழே கையொப்பமிட்டவரால் 8—10—71 மாலை 3 மணி வரை வரவேற்கப் படுகின்றன.

| தொடர் எண். | வேலையின் விவரம். | வேலையின் மதிப்பு சுமார் ரூபாய்களில். | கட்டுத் தொகை ரூபாய். | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை (இது திருப்பித் தரப்பட மாட்டாது). |
|---|---|---|---|---|
| 1 | (அ) கொரட்டூர் முதல் கட்ட திட்டத்தில் குறைந்த வருமானப் பிரிவினருக்கான வீடுகள். 1-வது தொகுதி, 8 வீடுகள் தனித் தனி முறையில் கட்டுதல்—உள் வசதிகள் உள்பட (டை.டி. 28(i)/71; டை.டி. 28(ii)/71; டை.டி. 28 (iii) /71 ; டை.டி. 28AI/71 இவை ஒவ்வொன்றின்படி இரண்டு வீதம் வீடுகள் கே. ஆர். 6/1213-ஏ/71 குரூப் I. | 91,900 | 1,380 | 10+வி.வ. |
| | (ஆ) ஃபைல் எண். கே. ஆர். 6/1213-பி/71, குரூப் II. | 91,900 | 1,380 | 10+வி.வ. |
| | (இ) கே. ஆர். 6/1213-சி/71 குரூப் III .. | 91,900 | 1,380 | 10+வி.வ. |
| | (ஈ) கே. ஆர். 6/1213-டி/71 குரூப் IV .. | 91,900 | 1,380 | 10+வி.வ. |
| 2 | கு. வ. பி. வீடுகள் தொகுதி 2 ஒன்றில் நான்கு உள்ள இரண்டு தளங்கள் அடுக்கு வீடுகள் 10 பிளாக்குகள் கட்டுதல். ஃபைல் எண். கே. ஆர். 6/1837/71. | 7,00,000 | 10,500 | 15+வி.வ. |
| 3 | கு. வ. பி. வீடுகள் தொகுதி 4 ஒன்றின் நான்கு உள்ள இரண்டு தளங்கள் அடுக்கு வீடுகள் 10 பிளாக்குகள் கட்டுதல் கே. ஆர். 6/3079/71. | 7,00,000 | 10,500 | 15+வி.வ. |
| 4 | (அ) நடுத்தர வருமானப் பிரிவினர் வீடு தொகுதி 1 ந. வ. பி. தனித் தனி வீடுகள் 7 கட்டுதல் உள் வசதிகள் செய்வது உள்பட. டை.டி.5/70 படி 2 ; டை.டி. 6/70 படி 2 ; டை.டி. 7/70 படி 3 ; குரூப் 1 கே. ஆர். 6/1214-ஏ/71 கீழ். | 1,35,350 | 2,030 | 10+வி.வ. |
| | (ஆ) ந. வ. பி. வீடுகள் 7 கட்டுதல் உள் வசதிகள் உள்பட. டை.டி. 5/70 படி 2 ; டை.டி. 6/70 படி 3 ; டை.டி. 7/70 படி 2 ; குரூப் 2 கே. ஆர். 6/1214 பி./71. | 1,30,500 | 1,960 | 10+வி.வ. |

| | | | | |
|---|---|---|---|---|
| | (இ) ந. வ. பி. தனித்தனி வீடுகள் 7 கட்டுதல் உள் வசதிகள் செய்வது உள்பட. டீ.டி. 5/70 படி 3 ; டீ.டி. 6/70 படி 2 ; டீ.டி. 7/70 படி 2 ; குருப் 3 கே. ஆர். 6/1214—சி/71. | 1,28,600 | 1,930 | 10+வி.வ. |
| 5 | ந. வ. பி. வீடுகள் தொகுதி 2 ஒன்றில் நான்கு உள்ள இரண்டு தளங்கள் அடுக்கு வீடுகள் 7, கே. ஆர். 6/1838/71. | 6,02,000 | 9,030 | 15+வி.வ. |
| 6 | ந. வ. பி. வீடுகள் தொகுதி 4 ந. வ. பி. வீடுகள் தனித்தனி வீடுகள் 23 கட்டுதல். | 4,94,200 | 7,420 | 15+வி.வ. |
| 7 | ந. வ. பி. வீடுகள் தொகுதி 4 ஒன்றில் நான்கு உள்ள இரண்டு தளங்கள் அடுக்கு வீடுகள் 7 பிளாக்குகள் கட்டுதல் கே. ஆர். 6/3078/71. | 6,02,000 | 9,030 | 15+வி.வ. |
| 8 | பேஸ்மெண்ட்டுக்கு மேல் சமுதாயக் கூடம் கட்டுதல் ஃபைல் எண் கே. ஆர். 6/3489/71. | 1,16,200 | 1,745 | 10+வி.வ. |
| 9 | தொழில் வினைஞர் மனைத் திட்டம் தொகுதி 1ன் கீழ் தனித்தனி வீடுகள் கட்டுதல் கே. ஆர். 6/3160/71. | 5,54,400 | 8,320 | 15+வி.வ. |
| 10 | தொழில் வினைஞர் மனைத் திட்டம் தொகுதி 2ன் கீழ் 74 தனித்தனி வீடுகள் கட்டுதல் கே. ஆர். 6/3159/71. | 5,69,800 | 8,550 | 15+வி.வ. |

வரைபடங்கள், ஒப்பந்தப்புள்ளிப்பத்திரங்கள் ஆகியவைகளை நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், கொரட்டூர் வட்டம், அண்ணா நகர், சென்னை-40-ல் குறிப்பிட்ட கட்டணத் தொகையை சலான் மூலம் செலுத்தி 1—10—71லிருந்து பெறலாம். பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 8—10—71 மாலை 3-05 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

**டி. வி. காளியப்பன்,**
நிர்வாகப் பொறியாளர் (கே).

(த. 54)

---

## தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்.

(அறிஞர் அண்ணா நகர் பிரிவு)

### ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளி அனுப்புவரின் பெயரும் உறையின் மீது எழுதப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்கண்ட வேலைகளுக்காக அடியில் கையெழுத்திட்டவரால் 6—10—1971 மாலை 3 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலையில் 3-05 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| வேலையின் பெயர். | வேலையின் உத்தேச மதிப்பீடு. | முன் வைப் புத்தொகை. | ஒப்பந்த முறை. | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை (திருப்பித்தரப்படமாட்டாது.) |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | |
| 1 அறிஞர் அண்ணா நகரில் ஒட்டேரி நுல்லா 3-வது பிரிவு பகுதியில் இருபுறமும் சிமெண்ட் காங்கிரீட் ரிவெட்மெண்ட் போடுவதற்கு (Reach I ch 3,000 to 5,000'). | 1,16,090 | 1,750 | முழுத் தொகை. | ரூ. 10·00+ விற்பனை வரியும். |
| 2 தகவல் எண் : AN 2/56/71 (Reach II-Ch 5,000 to 7,000') report no. AN/2/56/71. | 1,09,520 | 1,645 | முழுத் தொகை. | 10·00+ விற்பனை வரியும். |
| 3. (Reach III-Ch 7,000 to 9000') report no. AN/2/56/71. | 1,12,640 | 1,690 | முழுத் தொகை. | 10·00+ விற்பனை வரியும். |

(த. 20)

**நிர்வாகப் பொறியாளர்.**

## ஒப்பந்தப் புள்ளி

### குழித்துறை நகராட்சி

கீழ்க்கண்ட பணிகளைச் செய்வதற்கான மூடி முத்திரை யிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1971-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12-ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4-00 மணிக்கு மேற்படாமல் ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப் படும். அதே தேதியன்று பிற்பகல் 4-30 மணிக்குத் திறக்கப் படும். குறிப்பிட்ட ஒப்பந்தப் புள்ளிகளும் முன்வைப்புத் தொகை செலுத்தாத ஒப்பந்த புள்ளிகளும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். இதர விபரங்கள் அலுவலக நாட்களில் வேலை நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

| வரிசை எண்ணும், பணியின் விபரமும். | முன் வைப்புத் தொகை. | ஒப்பந்தப் படிவம் விலை (விற்பனை வரி உள்பட). | வேலை முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| 1. பெருந் தெருவிற்கு மறுமுறை தார்தளம் அமைக்க (Recoating). | 200 | 5·18 | 2 மாதம். |
| 2. இடத் தெருவிற்கு மறு முறை தார் தளம் அமைக்க (Recoating). | 100 | 2·07 | 2 மாதம். |
| 3. பி.பி.எம். பம்பிற்கு சமீபம் செல்லும் தெருவிற்கு தார் தளம் அமைக்க (Block Tapping). | 90 | 2·07 | 2 மாதம். |
| 4. கொடுங்குளம்-கெல்லக் குளம் தெருவில் உதவு சுவர் கட்ட. நகராட்சி. | 90 | 2·07 | 2 மாதம். |
| 5. நிலையத்தின் பக்கம் செல்லும் பாதையின் ஓரத்தில் பக்கச் சுவர் கட்ட. | 55 | 2·07 | 2 மாதம். |
| 6. மார்த்தாண்டம் ஆர். சி. தெருவில் உதவு சுவர் கட்ட (Re-coating wall). | 90 | 2·07 | 2 மாதம். |
| 7. மார்த்தாண்டம் தின சரிச் சந்தையில் உள்ள கட்டடங்களைப் பராமரிப்புச் செய்ய. | 40 | 2·07 | 2 மாதம் |

T. P. கோபு,
ஆணையர்.

குழித்துறை,
18—9—71.
(த. 87)

## ஒப்பந்தப் புள்ளி

எண். 38

### தமிழ்நாடு அரசு

(பொதுப்பணி—பணிமனை & பண்டகசாலை)

பொதுப்பணித்துறை

மின்விசையால் இயங்கும் ஆழ் கிணறு பம்பு செட் ஒன்று வழங்குவதற்கு, மூடி முத்திரை யிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி கள் அடியில் கையெழுத்திட்டவ ரால் 13—10—1971 நண்பகல் 1 மணி வரை வரவேற்கப்படு கிறது.

இதற்கான ஒப்பந்தப் புள்ளி விவரங்கள் நிபந்தனைகள் ஆகிய வற்றை அடியில் கையெழுத் திட்டவரின் நேர்முக உதவி யாளரிடம் மனுச் செய்து இல வசமாகப் பெற்றுக்கொள்ளலாம்

எஸ். சச்சிதானந்தம்,
பொதுக் கண்காணிப்பாளர்,
பொதுப்பணிமனை&பண்டகசாலை.
(த. 85)

## ஒப்பந்தப் புள்ளி

தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம், விருத்தாசலம், திண் டிவனம், கோட்டாட்சியர்களுக்கு ரெவின்யூ நில அளவு கற்கள் வினியோகம் செய்ய முத் திரையிட்ட ஒப்பந்தங்கள் 6—10—1971 மாலை 4·00 மணி வரை கடலூர் நில அளவுப் பதி வேடுகள் துறை, உதவி இயக் குநரால் வரவேற்கப்படுகிறது. மேற்கண்ட இடங்களுக்குக் கற்கள் சப்ளை செய்ய விரும்பு கிறவர்கள், இது சம்பந்தமாக 28-8-1971 தேதிய தென்னார்க் காடு மாவட்ட கெஜட்டில் பக்கம் 52-54-ல் வெளியாகி யுள்ள விளம்பரத்தைப் பார்த்து அதில் கண்டுள்ள நிபந்தனை களுக்கு உட்பட்டு முத்திரை யிட்ட ஒப்பந்தங்கள் அனுப்பி வைக்கக் கோரப்படுகிறார்கள்.

உதவி இயக்குநர்,
நில அளவுப் பதிவேடுகள் துறை,
(த.73) கடலூர்.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### தொழில் நுட்பக் கல்வித் துறை, சென்னை-25

திரைப்படத் தொழில் நுட்ப நிறுவனம், சென்னை-20ல் நடத்தப்படும் கீழ்க்கண்ட டிப்ளமா படிப்புகளில் முதலாண்டு வகுப்பில் சேருவதற்கு மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

| படிப்புகள். | டிப்ளமா படிப்புகள் குறைந்த பட்ச கல்வித் தகுதி. | படிப்பின் கால அளவு. |
|---|---|---|
| 1. ஸ்டில் போட்டோ கிராபி. | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு (எந்தப் பிரிவானாலும்) அல்லது அதற்குச் சமமான பி.டி.சி. | 2 ஆண்டுகள். |
| 2. எலக்ட்ரானிக்ஸ். | புகுமுக வகுப்பு அல்லது பி. டி. சி. பிசிகல் சயன்சுடன் அதற்குச் சமமான தகுதி. | 2 ஆண்டுகள். |

வயது வரம்பு: இதில் சேருவதற்கு வயது வரம்பு ஏதும் இல்லை.

**மனுக்கள் குறிப்புத் தொகுப்புகள் :**

முதல்வர், திரைப்படத் தொழில் நுட்ப நிறுவனம், சென்னை-20 அவர்களுக்கு எழுதி, சுய விலாசமிட்ட உறை (22 செ. மீ.× 9½ செ. மீ.) 50 காசு அஞ்சல் வில்லை ஒட்டப்பட்டு, அதனையும், ஒரு ரூபாய் கிராஸ் செய்யப்பட்ட போஸ்டல் ஆர்டர், சென்னை-20, திரைப்படத் தொழில் நுட்ப நிறுவன முதல்வர் அவர்கள் கணக்குக்கு வாங்கி அதனையும் உடன் வைத்தனுப்பி மனுக்களைப் பெறலாம். போஸ்டல் ஆர்டர் 15—9—71க்கு முந்திய தேதியிட்டதாக இருக்கக் கூடாது.

**சேர்த்தல் :**

மனுதாரர்கள் தங்கள் சொந்தச் செலவில் சென்னைக்கு நேர்முகப் பேட்டிக்கு வரவேண்டியிருக்கும்.

**கட்டணங்கள் :**

1. ஆண்டுக்கு ரூ. 180 கட்டணம்; இதை இரண்டு தவணைகளில் செலுத்தலாம்.
2. சேரும்போது தனிக் கட்டணம் ரூ. 40 செலுத்த வேண்டும்.
3. எச்சரிக்கைக் கட்டுத் தொகை ரூ. 10 செலுத்தப்படவேண்டும். படிப்பு முடிந்ததும் இது திருப்பித் தரப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட மனுக்கள் 9—10—71-க்குள் முதல்வர், திரைப்படத் தொழில் நுட்ப நிறுவனம், சென்னை-20 அவர்களுக்கு வந்து சேர வேண்டும்.

தொழில் நுட்பக் கல்வித் துறை இயக்குநர்.

சென்னை-25.

(த. 56)

## ஒப்பந்தப் புள்ளி

### திருச்சி வீட்டு வசதி நிலையம்

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினுடையது)

எண் 42/71-72

கீழே குறிப்பிட்டுள்ள வேலையை மேற்கொள்வதற்காக, உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் குறிப்பிட்டு, 27—10—1971 அன்று மாலை 3-00 மணிக்குள் கீழே கையொப்பமிட்டவருக்குக் கிடைக்குமாறு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| | |
|---|---|
| வேலையின் பெயர் .. .. | தமிழ்நாடு அரசு வாடகை வீட்டுவசதித்திட்டத்தின் கீழ், சாலை ரோடு திட்டத்தில் மூன்று மாடி (1-ல் 30) வாடகை பிளாட்டுகளை இரண்டு பிரிவுகளாகக் கட்டுதல். |
| ஒவ்வொரு பிரிவின் தோராய மதிப்பு. .. | ரூபாய் 1,50,900. |
| கட்டுத் தொகை .. .. | ஒவ்வொரு பிரிவுக்கும் ரூபாய் 2,270. |
| ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை (திருப்பித் தரப்படமாட்டாது). | ரூபாய் 10+ விற்பனை வரி 3½ சதவீதம். |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களைக் கோட்டக் கணக்காளரிடமிருந்து, எல்லா அலுவலக நாட்களிலும், காலை 11-00 மணிக்கும், மாலை 4-00 மணிக்கும் இடையில் மேற்கூறப்பட்டத் தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளி அட்டவணைகள் 1—10—1971 முதல் 26—10—1971 வரை விற்பனைக்குக் கிடைக்கும். வந்து சேர்ந்த ஒப்பந்தப் புள்ளிகள் 27—10—1971 அன்று மாலை 3-15 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஆர். வெங்கடாச்சார்,
நிருவாகப் பொறியாளர், மற்றும்
நிருவாக அலுவலர்.

திருச்சிராப்பள்ளி-1,
14—9—1971.

(த. 68)



# குறளகம் போவோமா?

**"என்ன பக்கத்து வீட்டு அம்மா, கொலு பார்க்க வர் றீங்களா?"**

"யார் வீட்டுக்கு?"

"வீட்டுக்கல்ல, கிராம கைத் தொழில் அங்காடி, குறளகம் இருக்கே, அங்கே கொலு வச்சிருக் காங்க"

"அப்படியா? அது எனக்குத் தெரியாதே!"

"ஆண்டுதோறும் அங்கே கொலு வைக்கறாங்களே! இந்த ஆண்டு அழகா அலங்காரம் பண்ணி, வண்ண விளக்குகளெல் லாம் போட்டு, பிரமாதமாக் கொலு வச்சிருக்காங்க".

"அப்படி என்னென்ன பொம்மைகள் இருக்கு?"

"அடடா.. அங்கு இல்லாத பொம்மையே இல்லே. மண்ணி னால் செய்து, வர்ணம் அடித்த பொம்மை, பேப்பரினால் செய்த பொம்மை, இப்படிப் பலவித மான பொம்மைகள் 30 காசிலிருந்து, ரூ. 200, ரூ. 250 வரை விலையுள்ள பொம்மைகள் இருக்கு."

"வழக்கமான பொம்மை களாகத் தானே இருக்கும்!"

"அதுநான் இல்லே. இந்த வருஷம் பல புது விதமான பொம்மை யெல்லாம் வந் திருக்கு. பாண்டியன் நெடுஞ் செழியன் அரண்மனையில் நீதி கேட்கும் கண்ணகியின் பொம்மை அரண்மனைக் காட்சியுடன் அமைச்சிருக்காங்க."

"அப்புறம், உழவர் நடுவது, அறுவடை செய்வது எல்லாம் ஒரு செட், கரகாட்டம், ஒரு செட், காவடியாட்டம் ஒரு செட்! இப்படிப் பலவித பொம்மைகளை செட்டு செட் டாக வைத்திருக்கிறார்கள். இவை தவிர, வழக்கமான எல்லாவிதமான பொம்மை களும் இருக்கின்றன, மற் றும், மூங்கில், மரம் ஆகியவை களால் செய்யப்பட்ட சின்ன சின்னப் பொம்மைகள் மைசூரி லுள்ள சென்னப் பட்டணத்தி லிருந்து வரவழைக்கப்பட்டுள் ளன. ரூ. 2, 2½க்கு, அழகழ கான பொம்மைகள் இருக்கின் றன. சாதாரணமாக வீடுகளை அலங்கரிக்கக் கூட இந்தப் பொம்மைகள் நன்றாக இருக் கும். போன ஆண்டு, இந்தக் கொலு பொம்மை மட்டும் நாற்பத்தெட்டாயிரம் ரூபாய்க்கு விற்பனையாச்சுதாம். இந்த ஆண்டு அதையும் மிஞ்சிவிடும் போலிருக்கு."

"இந்தக் கொலுப் பொம் மைக்காக யாராவது குறளகம் வரை போவாங்களா?"

"நீங்களே நேரில் வந்து பார்த்தால்தான் தெரியும். நாள்தோறும் ஐயாயிரம் பேருக்கு மேலே பார்க்க வர் றாங்க. இந்தக் கூட்டத்தை வேடிக்கை பார்க்கவே போக லாம்.



இங்கு பொம்மை மட்டும் அல்ல, நமக்கு வீட்டுக்கு வேண் டிய எல்லாப் பொருட்களும் அங்கே கிடைக்கின்றன. குறிப் பாக, திருமணங்கள் போன்ற விழாக்களுக்கு, நண்பர் யார் வீட்டுக்காவது, பரிசுப் பொருட் கள் வாங்கிட்டுப் போகனும்னு, எதை வாங்கறதுன்னு திகைக் கிறோமே, அங்கு ஏராளமான பரிசுப் பொருட்கள் உள்ளன. சந்தனக் கட்டையினால் செய் தவை, தந்தத்தினால் செய் தவை, பித்தளையினால் செய் தவை, இப்படிப் பலவித பரிசுப் பொருட்கள் அங்கே வைத் திருக்கிறார்கள்.

பட்டுத் துணியிலேயே அண்ணா படம், கலைஞர் படம், திரு வள்ளுவர் படம், ஆகிய படங் களை நெசவு செய்து பிரேம் போட்டு வைச்சிருக்காங்க. கையால வரைஞ்ச மாதிரி தத்ரூபமா இருக்கு.

நான் போகும்போது ரிக்ஷாக் காரன் நூறாவது நாள் விழாவுக் காக, நடிகர், நடிகைகளுக்குத் தரு வதற்காக ஆர்டர் கொடுத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். இந்தப் படம் தங்கநிற பிரேமும் சேர்ந்து ரூ. 110 முதல் 150 வரை ஆகுமாம். பிரேமுக்குத் தக்கபடி விலைகூடக் குறைவாக இருக்கிறது.

இம்மாதிரி ரூ. 30 லிருந்து 40 வரை, மெருகேற்றிய மரத்தில் அண்ணா படம் செய்து வச்சிருக்காங்க. அதுவும் பிர மாதமா இருக்கு.

தஞ்சாவூரிலிருந்து, நெட்டி யால் செய்த மீனாட்சி அம்மன் கோவில், தாஜ்மஹால், தஞ்சா வூர் கோவில் மாடல்கள் செய்து வைத்திருக்கிறார்கள். பார்த்தா அசல் தந்தம் மாதிரியே இருக்கு, விலையைக் கேட்டா, ரூ. 35 தான்! இந்த மாதிரி எல்லா நிகழ்ச்சிகளுக்கும் கொடுக்கத் தகுந்த மாதிரி பல பரிசுப் பொருட்கள் வைத்திருக் கிறார்கள். அதோட, வெளி யிலே விக்கிற விலையை விட, மிகக் குறைவான விலையிலே இங்கே தர்றாங்க".

"சேலை, துணி மணி கிடையாதா"?

"நல்லாக் கேட்டுங்க, போங்க. சின்னக் குழந்தை முதல், பெரியவர்கள் வரை, அனைவருக்கும் வாங்கப்படும் எல்லா விதமான துணி மணிகளும் கிடைக்கும். குறிப்பாக, சன்னல், கதவுகள், 'சோபா'க்களுக்குப் போடக் கூடிய துணிகளுக்கு, இதைவிட, வேறெங்கும், நல்ல துணிமணிகள் கிடைக்காது. அத்தனை புதுவிதமான டிசைன்கள் இங்கே வைச்சிருக்காங்க.

குழந்தைகளுக்கு ஏற்ற பலவித 'ரெடிமேட்' சட்டைகள் புதுப் புது வகையில் வைச்சிருக்காங்க, ரொம்பக் குறைஞ்ச விலையிலே! வெளிக் கடையில் 20 ரூபாய் மதிப்புள்ள துணி இங்கே பாதி விலையில் கிடைக்குது. தீபாவளி, பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு, காஞ்சிபுரம், தருமபுரம், ஆரணி, காசி முதலிய இடங்களிலிருந்து ஏராளமான பட்டுப் புடவைகள் வரவழைச்சிருக்காங்க. மலிவான விலையில் நல்ல தரமான பட்டுப் புடவைகளை இங்கே தேர்ந்தெடுக்கலாம்.

புடவையின் அழகு தெரியும் வண்ணம் ஒரு பொம்மைக்குச் சேலை கட்டி, அங்கே காட்சிக்காக வைத்திருக்கிறார்கள். வருகிறவர்களெல்லாம் அந்தப் பொம்மைக்கு உடுத்தியுள்ள சேலையையே கேட்டு வாங்குகிறார்கள். இதனால் அந்தப் பொம்மைக்கு ஒரு நாளைக்கு ஏழெட்டுப் புடவைகள் மாற்றும்படி இருக்கிறதாம். அங்குள்ள நிருவாகி இதை வேடிக்கையாகச் சொன்னார்."

"நீ சொல்றதைக் கேட்கக் கேட்க, அங்கே உடனே போய்ப் பார்க்கணும் போல இருக்கு".

"போகும் போது, எனக்கும் ஞாபகப்படுத்துங்க. நான் இன்னொரு முறை குடும்பத்தோடு வருகிறேன். எல்லாரும் சேர்ந்துபோய்ப் பார்த்துவிட்டுப் பொருட்களெல்லாம் வாங்கிட்டு வருவோம்."

## மொழிகள்

வறுமையில் அமிழ்ந்து கிடக்கும் மக்களுக்கு, வாழ்வின் இன்றியமையாப் பொருட்கள் தான் கண்கண்ட தெய்வம்! அதை வழிபடுவதற்கு வேளாண்மையே சரியான நெறி.

கற்களால் கட்டப்படும் கோயில்களை விட மனித உடல்களே உண்மையான கோயில்களாகும்.

மனிதன் செய்யும் சட்டம் எப்போது இயற்கையின் நியதிக்கு விரோதமாகிறதோ, அப்போதே அது செத்துப் போன சட்டமாகிவிடும்.

தீவிரமான சீர்திருத்தக்காரர்கள் மனிதத் தன்மையற்ற பழக்க வழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் உடைத்தெறிந்ததனால்தான் எந்தச் சீர்திருத்தமும் கொண்டு வரப்பட்டதே தவிர, சமூகம் அதற்குத் தயாராகும் வரை காத்திருப்பதனாலோ வேறு எந்த வழியினாலோ சீர்திருத்தம் வந்து விடவில்லை.



சீர்திருத்தத்தில் கவலை, சீர்திருத்தக்காரனுக்கே உண்டு; சமூகத்திற்கு இல்லை.

பொய்யை உண்மையாலும், விரோதத்தை அன்பாலும், ஆத்திரத்தைச் சகிப்புத் தன்மையாலும் வெல்லலாம்.

அன்பு ஒரு போதும் எதையும் கேட்பதில்லை; ஆனால் கொடுக்கிறது. அன்பினால் எப்போதும் தொல்லைகள் தான் விளைகின்றன. அது பற்றி அன்புடையார் வருந்துவதில்லை; பழிக்குப்பழி வாங்குவதுமில்லை. அன்புள்ள இடமே இறைவன் உறைவிடம்.

மனிதன் என்றால் வெறும் அறிவு மாத்திரமல்ல. அல்லது தூல உடலுமல்ல. உணர்ச்சி மட்டுமோ, அதுவும் அல்ல. அறிவு, உடல், உணர்ச்சி ஆகிய மூன்றும் அழகிய முறையிலே ஒன்று கூடினால் தான் மனிதன் ஆகிறான். இவை மூன்றையும் வளர்ப்பதே உண்மையான கல்வி முறையாகும்.

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு.
அச்சக எழுதுபொருள் இயக்குநரால் சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-2.